# சுடர்

## வ.உ.சி. மலர்

2067



(1964)

மலர்-13

தில்லித் தமிழ்ச் சங்கம்

1964

விலை
40 காசு

# A. & F. HARVEY LTD.,

MADURAI

S. INDIA

•

*MANAGING AGENTS*

*FOR*

## MADURA MILLS CO., LTD.,

COTTON YARNS OF ALL DESCRIPTION
TYRE CORD WARP SHEET AND OTHER INDUSTRIAL PRODUCTS

## PUNALUR PAPER MILLS LTD.,

ALL VARIETIES OF PAPER

## THE INDIAN TEXTILE PAPER TUBE CO., LTD.,

ALL TYPES OF PAPER CONES, TUBES, ETC., FOR TEXTILE INDUSTRY
ALL TYPES OF PAPER CONTAINER

## FENNER COCKILL LIMITED.

V-BELTS, TEXTILE RUBBER ACCESSORIES
OIL SEALS 'O' RINGS ETC., ETC.

SERVING THE NATION FROM 1932

**UNION DAIRY (Regd)**

97, BAIRD ROAD-NEW DELHI

*Leading Manufacturers of*

## FRESH AND PURE BUTTER AND GHEE

ALSO

## FRESH CREAM FOR FRUITS

AND

## COOKING CHEESE

*ALL OUR PRODUCTS ARE HIGHLY RELIABLE.*

Please ring up : **45263**

தில்லியில்

உயர்தர வெண்ணெய், நெய்,

புத்தம் புது 'கிரீம்'

தயாரிப்பாளர்கள்

**யூனியன் பால் பண்ணை,**

*97, பேர்டு ரோடு, புதுதில்லி.*

*Certified By:*

The Hon'ble Minister for Food & Agriculture, Government of India (1952), Commanders-in-Chief of Indian Army & The Navy, Royal Houses, High Government officials, Embassies, Clubs, Hotels & Schools.

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

## INDEX TO ADVERTISERS


| Name | Page | Name | Page |
|---|---|---|---|
| Amarjothi | ... 193 | Jay. Eng. | ... 154 |
| Ammapettai | ... 95 | Jayant | ... 193 |
| Amrutanjan | ... 201 | Jeewanlal | ... 81 |
| Anantaswami | ... 32 | Madras Govt. | ... 97 |
| Asia Eng. | ... 206 | Madras Hotel | ... 167 |
| Atlas Cycle | ... 170 | Mahomed Ebrahim | ... 27 |
| B. & C. Mills | ... 89 | Meenakshi Mills | ... 161 |
| Baidyanath | ... 68 | Metric Units | ... 150 |
| Balussery | ... 133 | Mettur Chemicals | ... 120 |
| Band Box | ... 156 | Mount Mettur | ... 25 |
| Bapalal | ... 3 | Narayanan S. | ... 47 |
| Bharathi stores | ... 110 | National Electrical | ... 28 |
| Bliss & Cotton | ... 148 | National S.I.C. | ... 90 |
| Britannia | ... 112 | Nestler | ... 141 |
| Calcutta Paper | ... 74 | Northern Ry. | ... 173 |
| Careways | ... 42 | Oriental Bldg. | ... 96 |
| Central News | ... 52 | P. & T. | ... 190 |
| Chennimalai | ... 146 | People's Publishing | ... 174 |
| D.G.L. | ... 59 | Pilot Pen | ... 197 |
| Dalmia | ... 152 | Podumjee | ... 78 |
| Dave, V. K. | ... 48 | Racmann | ... 207 |
| Delton | ... 102 | Royal Enfield | ... 162 |
| Dhirajlal | ... 41 | S. I. B. House | ... 53 |
| Dyer Meakin | ... 165 | Sakthi | ... 134 |
| East Asiatic | ... 54 | Sharda | ... 201 |
| Escorts | ... 64 | South India Viscose | ... 48 |
| Foton | ... 111 | Scindia | ... 181 |
| Gannon Dunkerley | ... 41 | Southern Structurals | ... 202 |
| Geep | ... 49 | Statesman | ... 65 |
| Gemini | 4th Cover | Swadesamitran | ... 198 |
| Gopalakrishnan | ... 16 | Swastik | ... 71 |
| Greater Delhi | ... 187 | Tamilnad Handloom | 3rd Cover |
| Harvey A. & F. | 2nd Cover | T. I. Cycles | ... 186 |
| Hindustan | ... 56 | Tata-Fison | ... 100 |
| Hoechst | ... 92 | Union Dairy | ... 1 |
| Imperial Tobacco | ... 126 | Venkatesa Mills | ... 137 |
| India Cements | ... 105 | Vijaya Productions | ... 121 |
| Indian Bank | ... 145 | Well-Wisher | ... 56 |
| Indian Overseas | ... 27 | Wheels (India) | ... 103 |
| Interads | ... 16 | White Horse | ... 164 |
| | | Zenith Tin | ... 158 |



**Edited** and **Published** by **Sri T. G. Anantaswami**, for *Delhi Tamil Sangam, New Delhi*. **Printed by T.N. Veeraraghavan**, at *The Thara Press, Nagapattinam*.

Phone : 32396 Grams : "NECKLACE"

With Compliments

from

# BAPALAL & Co.,

- DIAMOND MERCHANTS
- MANUFACTURING JEWELLERS
- GOLDSMITHS AND SILVERSMITHS

★

Foremost in the field for over half a Century

Appointed Valuers of Jewellery by Govt. of India.

RATTAN BAZAAR, MADRAS - 3.

# சுடர்

குரோதி ஹூ | மலர் 13 | 1964

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சமர்ப்பணம் | ஆசிரியர் ... | 5 |
| சிங்கம் சிதம்பரம் | கி. வா.ஜகந்நாதன் ... | 7 |
| சிதம்பரனார் பஞ்சகம் | பரலி. சு. நெல்லையப்பர் ... | 8 |
| மெய்யறிவு | வ. உ. சி. ... | 10 |
| வீர வணக்கம் | சி. சுப்பிரமணியம் ... | 11 |
| புகழ் மணக்கும் வாழ்க்கை | சாலை இளந்திரையன் ... | 12 |
| எங்கள் குடும்பம் | வ. உ. சி. சுப்பிரமணியம் ... | 29 |
| எது தேசீயம் ? | தி. ஜ. ர. ... | 43 |
| சில நினைவுச் சுடர்கள் | பி. ஸ்ரீ. ... | 50 |
| வ. உ. சி. ஒரு பதிப்பாசிரியர் | நாரண துரைக்கண்ணன் ... | 69 |
| மனம்போல வாழ்வு | வ. உ. சி. ... | 75 |
| கன்னாட்பிளேஸ் – ஏக் ஆத்மி | எஸ். ஸ்ரீநிவாசன் ... | 79 |
| கப்பலோட்டிய தமிழன் | 'ஸோமாஸ்' ... | 82 |
| வ. உ. சி. யைப் பற்றி | கனக சவுந்தரி ... | 91 |
| வ. உ. சித்ம்பரம் பிள்ளை | கே. ஆர். ஆர். சாஸ்திரி ... | 94 |
| வ. உ. சி. | 'நாணல்' ... | 98 |
| நியாயவாதி சிதம்பரம் | பரலி. சு. நெல்லையப்பர் ... | 101 |
| வ. உ. சி. சுயசரிதை | ... | 106 |
| நாடகத்தில் சிதம்பரனார் | அவ்வை தி. க. ஷண்முகம் ... | 113 |
| ...புகழ் பெற்ற அறிஞர் | பெ. நா. அப்புஸ்வாமி ... | 122 |
| அமரர் வ. உ. சி. | வெ. ஜெயப்பிரகாஷ் ... | 129 |
| பிரிந்தவர் கூடினால் | 'மாயாவி' ... | 130 |
| பக்குவம் | சியாமளா ராகவன் ... | 147 |
| பாரதிதாசன் | 'செயல்' ... | 155 |
| வடிவேல் முருகா | வி. அருணாசலம் ... | 157 |
| மண் அடுப்பும்... | ஆர். ஜயந்தி ... | 159 |
| பொய்யா மனிதரும்... | எம். வி. நாராயணன் ... | 163 |
| புதிய பாரதி | சுகி. சுப்ரமணியன் ... | 166 |
| விடாக்கண்டன் | பூர்ணம் விசுவநாதன் ... | 171 |
| கிழவியும் குமரனும் | ஜே. வி. ஆர். ... | 188 |
| கடிகாரம் | வண்ணைமுத்து ... | 196 |
| சைக்கிள் வண்டி | ,, ... | 199 |
| சான்றோன் வ. உ. சி. | அகிலன் ... | 200 |
| எலியும் உலர்த்திற்றாம் ! | தி. கோ. அனந்தசுவாமி ... | 203 |
| மழை | வண்ணைமுத்து ... | 205 |

# சமர்ப்பணம்

## திரு. வ. உ. சிதம்பரனர்

தோற்றம் : 5–9–1872 மறைவு : 18–11–1936

தென் நாட்டுத் திலகர் எனப் போற்றப் பட்ட 'வ. உ. சி' இன்று இருந்தால் 92 வயது நிறைந்தவராயிருப்பார்.

நாட்டு விடுதலைக்காக உழைத்த 'வ.உ.சி.' தாய்மொழியிலும் சிறந்த அறிஞர், புலவர்.

அவருக்குத் துணைவியாய் வெகு காலம் இருந்தவர் திருவாட்டி. மீனுட்சி அம்மையார்.

இருவரும் சேர்ந்திருக்கும் படத்தையே அட்டைப் படமாகப் போட்டுப் பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

சக்திக்கும் சிவத்துக்கும் ஒருங்கே அஞ்சலி செய்யும் வாய்ப்புத் தலைநகருக்கே கிடைத்தது.

இந்தப் படம் இதுவரை வெளிவராதது.

5—9—1964. தில்லித் தமிழ்ச் சங்கம்.

No. JE—3 (20)/62/4351

OFFICE OF THE COMMISSIONER OF INCOME TAX, DELHI & RAJASTHAN

Dated, New Delhi, the 28th June, 1962
5th Asadha, 1814 (S)

To

The Hon. Secretary,
Delhi Tamil Sangam,
M. G. 1/3038, Parliament Street,
Connaught Circus, New Delhi-1.

Dear Sir,

Sub : EXEMPTION UNDER SECTION 11 & 88 OF THE INCOME TAX ACT, 1961 TO THE DELHI TAMIL SANGAM

Donations made to "The Delhi Tamil Sangam, New Delhi" will be exempt under Section 88 of the Income-Tax Act, 1961 in the hands of donors subject to the limits and conditions prescribed in the said section.

Yours faithfully,
Sd. R. N. MUTTOO
*Commissioner of Income Tax.*

PS. Original of this Certificate bears the seal of the Commissioner of Income Tax, Delhi.

வ. உ. சிதம்பரனாரும் மீனாட்சி அம்மாளும்

வ. உ. சி. தோற்றம் : 5-9-1872 மறைவு : 18-11-1936

# சிங்கம் சிதம்பரம்

தேசபக்திக் கனல்கொளுத்தச் சிறைசென்ற பெரியோரில்
சிறப்புப் பெற்றோன்
மாசகற்றித் தன்சுகத்தைத் தியாகஞ்செய் தேநாட்டின்
வாழ் வுக்காக
ஆசைபெற்றுச் சுதந்தரமே குறிக்கோளாத் தினம்எண்ணி
அரிய தொண்டு
மிசுரமாச் செய்தபிரான் வ. உ. சி. எனத்தமிழர்
வியக்கும் செம்மல். (1)

பின்னாளில் சிறைசெல்லல் மிகஎளிதா யாகிவிட்ட
பெற்றி கண்டோம்;
அந்நாளில் சிறைசெல்ல விரும்புவார் யாருமிலை;
அன்னை நாட்டின்
இன்னுமை போக்குதற்குச் சிறைசென்று செக்கிழுத்தான்
என்றால் அன்னோன்
முன்னோன்என் றுரைசெய்யின் அதைமறுத்துப் பொய்யென்று
மொழிவா ருண்டோ. (2)

கடல்கடக்கக் கப்பல்தனி செலுத்துகலை மேற்கொண்டான்;
கலங்கள் செல்ல
விடலின்றிப் பிறர்தகைந்தும் விறுகொண்டு தன்கொள்கை
மேம்ப டுத்தான்;
தொடைகெழுமு தமிழ்ப்பாடல் பலபாடி உரைநடையில்
துலங்கு நூல்கள்
நடைவிளங்கத் தந்துயர்ந்தான், சிதம்பரனும் தேசபக்தர்
நாதன் அன்றே. (3)

வீரமவன் பேருள்ளம், வீரமவன் மிடுக்குரைகள்,
வீரம் செய்கை,
ஆருமவன் அந்நாளில் செய்தசெய்கை யினைவியந்தே
ஆ ஆ என்றார்;
ஏருடைய பாரதத்தின் விடுதலைக்கா அடிகோலி
எழுந்தார் பல்லோர்;
சீருடைய வ. உ. சி. அவருள்ளே மிகமுன்னும்
சிங்கம் அன்றோ? (4)

— கி. வா. ஜகந்நாதன்

# சிதம்பரனார் பஞ்சகம்

பரலி – சு. நெல்லையப்பர்.

❋

இதம் பெற நாட்டா ரெல்லாம்
எண்ணரும் தியாகம் செய்தாய்
விதம் பெறும் இன்னல் நீங்கி,
விடுதலை எய்தி நாட்டார்
பதம் பெறப் பெரிதும் நாடிப்
பல்விதத் துழைத்தல் செய்தாய்
சிதம்பரப் பெரியோய் உன்றன்
சீரினைப் போற்று கின்றோம். 1

நாட்டினில் வணிகம் ஓங்கி
நல்வாழ்வு பெருகு மாறே
ஓட்டினாய் நாவாய் அந்நாள்
உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்றாய்
புன்மையோர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் இட்டும்
மனம் தளராது நின்றாய் 2

தமிழ்மொழி ஓங்கி யென்றும்
தரணியில் சிறக்கு மாறு
தமிழ் நூல்கள் இயற்றித் தந்தாய்
தமிழ்க் குறள் போற்றி நின்றுய்
தமிழர்கள் புதுவாழ் வெய்தித்
தரணியில் ஓங்கு மாறு
தமிழர்கள் தலைவா நாளும்
தளர்விலா துழைத்தல் செய்தாய் 3

ஊக்கமும் வலியும் குன்றி
ஒளியிழந் துலகில் நீண்ட
தூக்கத்தில் வீழ்ந்த நாட்டைத்
துயில் எழச் செய்தாய் ஐய,
பாக்கியம் பெருகி நாட்டார்
பாரினில் ஓங்கு மாறு
தூக்கிய வினைகள் செய்தாய்
துணிவுமிக் குடைய கோவே. 4

பொற்சிலை வைத்திங் குன்னைப்
போற்றிட விரும்புகின் றேம்
கற்சிலை வைத்தும் இன்னும்
காண்கிலேம் கலைவ லோனே
நற்செயல் பெரிதும் செய்தாய்
நாட்டினை அகத்தில் கொண்டுன்
நற்பெயர் நிலவி நிற்கும்
ஞாலம்உள் ளளவும் வாழி. 5

# மெய்யறிவு

[வ. உ. சி. அவர்கள் கண்ணனூர் சிறையில் வதிந்த காலத்தில் கைதிகளுக்கு நல்லுபதேசம் செய்தார் கள். பிள்ளை அவர்கள் யாத்த மெய்யறிவு என்ற நூலிலிருந்து சில பாக்களை இங்கு தருகிறோம்.]

### விதியியல் அறிதல்

**விதிவிதியென் றாழ்கின்றார் வீணாகத் துன்பில்**
**விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு — பதியொருவ**
**னுண்டென்று நம்பி யொருசிலரிங் கன்னாரிற்**
**கண்டறியேன் பேதையரைக் காண்.**

க-ரை :– தன் விதியை விதிக்கும் தலைவன் தானே; இறைவன் அல்லன் என்பதாம்.

### மறங்களைதல்

**கொலைகளவு கள்காமம் பொய்யெள் ளளவு**
**மிலையுளத்து மென்றக்கா லென்று — மலையளவு**
**நோயும் பனிபோல நொந்தழியு மெய்ப்பொருளை**
**யாயு மறிவு மிகும்.**

க-ரை :– கொலை முதலிய பஞ்சமாபாதகங்களையும் ஒருவன் தனது நினைப்பினும் கொள்ளாது விடுவானாயின், அவனை அடுத்த பலவகைப் பிணிகளும் நீங்கும்; கடவுளை உணரும் அறிவும் அதிகரிக்கும்.

### அறம்புரிதல்

**அருளீகை யுண்மையறி வாசையின்மை வாய்மை**
**பொருளீயு மின்பமொடு போதத் — தெருளீயும்**
**விடியு மாணியு மெய்ப்பொருளி னெண்ணரிய**
**பீடியு மென்றுமிவை பேண்.**

க-ரை :– அருள் முதலிய ஐந்தும் பொருள் முதலிய ஆறையும் கொடுக்கும். ஆதலால் இவ்வைந்தையும் பேண்.

**அருளென்ப தெவ்வுயிர்க்கு மன்புபா ராட்டல்**
**தெருளொன்றி நிற்பாரைச் சேர்தன்—மருளொன் றிக்**
**காய்வார்க்கு நல்லறிவு காட்டிடுதன் மெய்ப்பொருளை**
**யாய்வார்க் கனைத்துமளித் தல்.**

க-ரை :– அருள் என்பது பல உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுதல் மாத்திரமன்று. அறிஞரோடு நட்புச் செய்த லும், அறிவில்லார்க்கு அறிவை அளித்தலும், கடவுளை விசாரிப்பார் வேண்டும் உதவிகளை எல்லாம் செய்தலும் அருளின்பால் படும்.

# வீர வணக்கம்

அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்

வீர வணக்கம் என்பது நம்முடைய நாட்டில் தொன்று தொட்டு வரும் பழக்கம். மக்களுக்குத் துன்பத்தைக்கொடுத்து வந்த தீயவர்களை அழித்து நல்லதை நிலைநாட்டியவர்களுக்கு நாம் இன்றும் விழா எடுத்துக் கொண்டாடி வருகின்றோம். இந்தப் பழக்கம் நம்முடைய நாட்டிற்கு மட்டுமல்லாமல் உலகம் அனைத்திற்கும் பொதுவாக இருக்கிறது. வீரர்களை வணங்காத நாடு வீரர்கள் நிறைந்த நாடாக இருக்காது. நாளடைவில் அந்த நாடு மற்றவர்களுக்கு அடிமைப்பட்டுவிடும். நம்முடைய நாட்டின் விடுதலைக்கு நம் முன்னோர்கள் பலர் வீரத்தோடு அன்னியர்களை எதிர்த்துப் போரிட்டனர். அவர்களுள் மிகவும் முக்கியமான வீரர் நம்முடைய வ.உ.சி. அவர்கள்.

அன்னியனைப் போராட்டத்தின் மூலமாக மட்டுமின்றி ஆக்க வேலைத் திட்டங்களின் வாயிலாகவும் முறியடிக்கலாம் என்பதைக் காந்தியடிகள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். அக் கொள்கைக்கு ஏற்ப நமது வ.உ.சி.யும் சுதேசிக் கப்பல் மூலம் வாணிகம் நடத்தி எதிரிகளின் வளத்தைக்குறைத்து நம்முடைய நாட்டின் வளத்தைப் பெருக்க முயன்றார். அந்தப் போராட்டத்தின் போது அவர் அடைந்த இன்னல்கள் அளவற்றன. ஆனால், அவைகளைக் கண்டு அவர் சிறிதும் கலங்காமல்,

"சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்; இனி அஞ்சிடோம்"

என்று முழங்கினர்.

வ.உ.சி. போன்ற பெரும் தலைவர் நடத்திய போராட்டத்தின் மூலமாகத்தான் நாம் இன்றைய தினம் சுதந்திரம் பெற்றுள்ளோம். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது சுதந்திரம் வாங்குவதைவிட மிகவும் கடினமான காரியம் ஆகும் அப்பெரும் பணியைச் சாதிப்பதற்கு நமக்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆற்றலையும் கொடுப்பது வீர வணக்கம். எனவே, வ. உ. சி. அவர்களின் தன்னலமற்ற தியாகத்தையும் நாட்டின் விடுதலைக்காக அன்னியர்களின் கையிலே அவர் பட்ட துன்பத்தையும் நாம் மறவாது இருப்போமாக; நமக்காக அவர் செய்த தன்னலமற்ற தொண்டிற்காக அவருக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

# புகழ் மணக்கும் வாழ்க்கை

சாலை இளந்திரையன்

ஒரு மனிதன், பிறந்தான், இருந்தான், இறந்தான் என்பதுதான் மனிதக் காதையின் சுருக்கம். ஆனால், 'அவன் எப்படி இருந்தான்? – எப்படி இறந்தான்?' என்பவைகளைக் கொண்டே அவனது காதையின் தார தம்மியத்தை நிர்ண யிக்கவேண்டும். புவியில் பிறக்கின்ற அனைவரின் வாழ்வும் முழு மலர்ச்சி பெற்றுவிடுவதில்லை; எல்லாருடைய வாழ் வும் புகழ் மணம் கமழ்வதாக அமைந்துவிடுவதும் இல்லை. காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பத், தனக்குக் கிடைத்த வாழ்நாளை உயர்பணிகளில் திட்டமிட்டுச் செலவிடுகின்றவ னின் வாழ்வே சீர்மை பெறுகிறது........

## 19-ஆம் நூற்றுண்டு

இன்றுபோல்தான் அன்றும் இந்தியப் பெருநாடு தன் மக்களுக்குப் பல்வேறு கடமைகளை அள்ளி ஏந்தி, பலருக்கும் புகழ் ஈட்டும் வாய்ப்பை நல்கிநின்றது. ஆனல் இன்றிருக் கும் வாய்ப்பு வேறு; அன்று கிடைத்த வாய்ப்பு வேறு....... நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது; சமுதாயம் பிளவு பட்டு நின்றது. நாட்டிலே ஆயிரமாயிரம் சாதி சமயச் சண்டை கள்; அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஏந்திய துப்பாக்கியுடன் யாவர் தலைமீதும் வெள்ளையர்கள். வீழ்ச்சி யுற்ற நாட்டைத் தட்டி எழுப்பவும், சோர்ந்த மக்களை ஊக்குவிக்கவும், "நீ வா, நீ வா!" என்று தன் மக்கள் ஒவ்வொருவரையும் வருந்தி வருந்தி அழைத்தாள் இந்தியத் தாய்.

அந்த வேதனைக் குரல் வந்து கேட்டு விடாதபடிக் காதைப் பொத்திக் கொண்டனர் பலர்; அதை ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டனர் சிலர்; அது நெஞ்சிலே தைத்தும், ஆட்சியாளரின் மிரட்டலுக்கு அஞ்சி வாளா இருந்தனர் சிலர். அந்தச் சூழ்நிலையில் "எதுவரினும் வருக

எமது அன்னை விடுதலை பெறுக" என்று ஏந்திய முழக்கத்தோடு தாய்க்குப் பணிசெய்ய முன்வந்தார்கள் சில தீர வீரர்கள். அவர்களிலே ஒருவர்தான் வ. உ. சிதம்பரம் பிள்ளை....அவரே தென்னாட்டுத் திலகர்; அவரே தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை; அவரே செக்கிழுத்த செம்மல்; அவரே தளபதி வ.உ.சி.; அவரே கப்பலோட்டிய தமிழன்....

## தித்திக்கும் திருவாழ்வு

பிள்ளையவர்கள் வாழ்வின் எந்தப் பகுதியைத் தொட்டாலும் அது தேசியத் திருவாழ்வாகவே தித்திக்கிறது. அரசியலில் அவர் தேசியத் தீவிரவாதி. காரணம், அந்த நாளில் தேசியப் படையணிக்கு ஆள் திரட்டும் வேலையே முதல் வேலை. மேடை நிறைய ஆட்கள் அமர்ந்து போராட்ட முறைகளை விவாதித்த காலம் அல்ல அது; போராட்டத்துக்கே ஆள் இல்லாத காலம். அந்நியருக்கு எதிரான படைக்கு ஆள் திரட்டிய அந்தக் காலத்தில் ஆவேசப் போக்கும் தீவிரமும் தேவைப்பட்டன. அந்தப் போக்கிலேயே செயல்பட்டார் வ. உ. சி. சமுகச் சீர்திருத்தத் துறையில் உபதேசிகள் அதிகமாக இருந்தார்கள்; உரைத்ததை வாழ்வில் கடைப்பிடிக்கும் துணிவுள்ளோர் தொகை மிக அருகியிருந்தது. அந்த நாளில் சமயப் பொறை காட்டி, தாழ்ந்தவர்கள் என்று தள்ளப்பட்ட 'சமுதாயப் பலி ஆடு'களைத் தமது வீட்டிலேயே வைத்துப் பேணி வளர்த்துச் சமுதாய ஏற்றத் தாழ்வு என்னும் மடமை தானாகவே பட்டு ஒழியச் செய்தார் வ.உ.சி. அதே போல், இடைக்காலச் சமயக் கொந்தளிப்புகளால் பழம் பெருந் தமிழ் நூல்கள் பலவற்றின் போக்கும் பொருளும் மாறி மயங்கிக் கிடந்தன. அவற்றைத் தூசிதட்டி எடுத்து அவற்றின் உண்மைக் கோலத்தை மக்களுக்குக் காட்டும் முயற்சியிலேயும் ஈடுபட்டார் வ.உ.சி.

இவ்வாறு துறைதோறும் அரும்பணி செய்ய முன்நின்ற அவரது வாழ்க்கைப்பாதை கரடு முரடாக இருந்ததில் வியப்பில்லை. அங்கே பலரின் தன்னலப் பள்ளங்களையும் அறியாமை மேடுகளையும் தாண்டியே ஆகவேண்டும். அந்தப் பள்ளம் மேடுகளில் ஒவ்வொரு முறையும் தட்டுண்டு விழுந்து எழும்போது நம் நெஞ்சிலே அரும்புகிறதே ஒரு வெற்றிப் புன்னகை, அதிலேதான் நம் வாழ்வின் மணம் கமழ்கிறது. அப்படி மணம் கமழ்ந்துகொண்டே இருந்தது,

என்றென்றும் இருப்பதுதான் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.யின் வீர வாழ்க்கை........

### பிறந்து மொழி பயின்று...

நெல்லை மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் என்னும் ஊரில், உலகநாதபிள்ளை பரமாயி அம்மாள் என்னும் தம்பதிகளின் குமாரராக, 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் பிறந்தார் சிதம்பரம். அக்கால முறைப்படி, சிதம்பரம் தமது தொடக்கக் கல்வியைத் திண்ணைப் பள்ளியில் பெற்றார். தொடர்ந்து ஆங்கிலப் பயிற்சி பெற்று 'மெட்ரிக்குலேஷன்' தேர்வில் வெற்றி பெற்றார். சில தலைமுறைகளாகவே இவருடைய முன்னோர் வக்கீல் தொழில் செய்து வந்தனர். ஆதலால் தந்தை உலகநாதப் பிள்ளையின் விருப்பப்படிச் சிதம்பரமும் வழக்கறிஞர் தேர்வில் வெற்றி பெற்று அத் தொழிலுக்குத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டார்.

வாக்குவன்மைக் கல்வியைப் பெற்றுவந்த காலத்திலேயே சிதம்பரம் வாழ்வு நலக் கல்வியாகிய தமிழ் இலக்கிய பயிற்சியிலும் ஈடுபட்டு வந்தார். ஆதலால் அந்த வயதிலேயே, உயர் நோக்கங்கள் கொண்டதான ஒரு வாழ்வு வேட்கை அவருள்ளே உருவாகி வந்தது.

### வாழ்க்கைத் துணை நலம்

அதற்கு உறுதுணையாக, அவரது இருபத்து மூன்றும் வயதில், திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளை என்பவரின் மகள் வள்ளியம்மையார் இவரது வாழ்க்கைத் துணைவியானார். இவ்வம்மையாரின் குணமேன்மை சிதம்பரனாருக்கு பேருக்கமாக நின்றது. இலக்கியம் கண்ட இல்லறம் நடத்த வேண்டுமென்று வேட்கையுற்று நின்ற பிள்ளையவர்கட்கு, அவர் மனமறிந்து மனைவியாக வந்து வாய்த்தார் வள்ளியம்மை. இவ்வம்மையின் சிறப்பை,

> "என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்
> என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான் – தன்னுடைய
> பெற்றோர் வந்தார்கள்ளனப் பேணி உபசரிப்பாள்
> கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு."

என்று பின்னால் மனம் நிறைந்து போற்றியுள்ளார் வ. உ. சி. தன் நோக்கங்களுக்கும் செயல் முறைகளுக்கும் தன் மனைவி

யின் மனமார்ந்த துணை இருக்கிறது என்று அறிவதைவிட ஒரு கணவனுக்கு ஊக்கமும் இன்பமும் வேறில்லை. வ.உ.சி. யின் வாழ்க்கை வண்டி தியாக வீரப் பாதையில் "ஜல் ஜல்" என்று வெற்றிநடை போட்டதற்கு அவர் மனைவியார் வள்ளியம்மை கொடுத்த முழு மனத்துணையே முதற் காரணம் என்று சொல்ல வேண்டும்.

அவ்வம்மையுடன் அமைந்த இனிய இல்லறத்தோடு தமது வக்கீல் தொழிலை, 1900 இல் தூத்துக்குடியில் தொடங்கினார் வ. உ. சி. ஆனால் சிதம்பரனாரின் இவ் இல்லறப் பெருவாழ்வு நீடித்து நிற்கவில்லை. 1901 லேயே வள்ளியம்மையார் காலமாகி விட்டார். ஆயினும், தமது குறுகிய குடும்ப வாழ்வில் அவ்வம்மை சிதம்பரனார் நெஞ்சில் மிக ஆழமாகப் பதிந்து விட்டார்.... காரணம், சிதம்பரனா ரின் சமுதாய சீர்திருத்த இலட்சியப் போக்கோடு அம்மை யாரின் போக்கு ஒன்றிக் கலந்திருந்தது:

கண்ணில்லாத துறவி ஒருவர் சிதம்பரனாரை நாடி வந்தார்; அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். சிதம்பரனார் அவரைத் தம் வீட்டிலேயே தங்கச் செய்து பராமரித்தார். துறவிக்குக் கண் பார்வை இல்லாததால் வள்ளியம்மையாரே அவருக்குத் தம்கையால் உணவூட்டுவது வழக்கம். வ .உ. சி. உயர் சாதியைச் சேர்ந்தவராகையால் அவருடைய சாதியாரும் ஊரிலுள்ள பிறரும் இதை விரும்ப வில்லை. சாதிவெறி தலைக்கேறி நின்ற அவர்கள் இதைப் பற்றிப் பலவாறு பழித்தும் இழித்தும் பேசலானார்கள்....

வ.உ.சி. இதை எல்லாம் முன்பே எதிர்பார்த்தவரென் றாலும், பழிப்புரையால் அவர் நெஞ்சம் சற்றுத் தளர்ந்தது. துறவியைப் போகச் சொல்லி விடலாமா என்று கூட எண்ணமிட்டார். இதை உணர்ந்த அறச்செல்வி வள்ளி யம்மை,

"இறைவன் படைப்பில் ஏற்றத் தாழ்வு ஏது? எல்லாமே இறைவனாக இருக்கையில் ஏற்றத்துக்கும் தாழ் வுக்கும் இடம் ஏது? ஊரார்க்கு வேறென்ன வேலை? — அவர்கள் சொல்வதைச் சொல்லட்டும்; நாம் நமது மனச் சாட்சியின்படி நடப்போம்" என்று கணவருக்குத் தெளிவு பகர்ந்தார். தளர்வுற்ற சிதம்பரம் அது நீங்கி நற்செயலில் ஊக்கம் ஓங்கினார்....

*With Best Compliments*

*from*

# INTERADS

4/5-B, ASAF ALI ROAD,
NEW DELHI.

Phones: 271382 & 272565

BOMBAY — CALCUTTA — JULLUNDUR & LONDON

*With the best compliments*

*of*

# Shri. K. S. GOPALAKRISHNAN

FILM PRODUCER, DIRECTOR
15, G. N. CHETTY STREET,
MADRAS-17.

தமது வாழ்க்கை நோக்கங்களுக்குப் பக்கத் துணையாக மட்டுமல்லாமல் உயிர்த்துணையாகவே விளங்கிவந்த அப் பெருமாட்டியிடம் கொண்ட ஈடுபாடு காரணமாக, அன்னாரை ஈன்றுதந்த குடும்பத்திற்கு நன்றி செலுத்துவது போல், மீண்டும் அவ்வம்மையின் குடும்பத்திலேயே மீனாட்சியம்மை என்பவரை மணம் செய்து கொண்டார் வ.உ.சி.

## வளரும் வ. உ. சி.

சிதம்பரனார் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் புரிந்து வந்த அக்காலத்திலேதான் நாடெங்கும் தேசியக் கிளர்ச்சி வலுவடைந்து வந்தது. வ.உ.சி.யின் சமுதாய நோக்கு அவரைத் தேசீய வாதியாக ஆக்கியிராவிட்டாலும், நீதி யின் காவலராகவும், ஏழை பங்காளராகவும் உருவாக்கிவிட் டிருந்தது. சிறந்த கிரிமினல் வக்கிலாக விளங்கிய அவர் ஏழை பாழைகளுக்காகப் பல வழக்குகளில் வாதாடி நல்ல பெயர் பெற்றிருந்தார்; போலீசாரின் அநீதிக்கு ஆளான பல ஏழைகளுக்கும் பரிந்துகொண்டு சென்று, அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்த நிகழ்ச்சிகளும் உண்டு. அன்றாடம் போலீஸ்காரர்களை நீதிமன்றத்தில் சந்தித்து வந்ததால் அவர்களின் அந்தப் போக்கும் அட்டூழிய நோக்கங்களும் அவருக்குத் தெள்ளத் தெளிய விளங்கலாயின. அந்த விளக்கம் ஆட்சியின்பால் மெல்லிய கசப்பாக அவர் நெஞ் சில் உருவாகி வந்தது....

இந்தக் கசப்பு நெஞ்சினுள் நீர்ந்து போய்விடவில்லை. "இதற்கெல்லாம் காரணம் அந்நிய ஆட்சியல்லவா? நம்ம வர்கள் ஒன்றுமற்றவர்களாக அந்நியக் கையை எதிர் பார்த்து நிற்பதல்லவா இதற்கெல்லாம் காரணம்?" என்று தீவிரமாகச் சிந்தித்தார் வ.உ.சி.

## கப்பலோட்டிய தமிழன்

இந்தத் தருணத்திலேதான் லார்டு கர்சானின் வங்காளப் பிரிவினையால் நாடெங்கும் எழுச்சி தோன்றி யது; அந்நியத் துணி பகிஷ்கார இயக்கம் காட்டுத் தீப் போலப் பரவியது. மக்கள் அங்கங்கே கூடி அந்நியத் துணி களைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். வ.உ.சி. யும் இந்தக் கிளர்ச்சியில் கலந்து கொண்டார். ஆனால், ஆக்க நோக்கில் செயல்பட நினைத்த வ. உ. சி. வெறும் துணி எரிப்போடு

திருப்திப்படவில்லை. ஆக்க பூர்வமான எதிர்ப்பு இருந்தால் தான் வெள்ளையரை வெளியேற்ற முடியும் என்பது அவர் நம்பிக்கை. அதன் விளைவாக அவர் நெஞ்சில் உருவான திட்டம்தான் "சுதேசிக் கப்பல் கம்பெனி" உருவாகக் காரணமாக இருந்தது.

"வெள்ளையரின் பலம் அவர்களின் வாணிபத்தில் இருக்கிறது. அதைத் தகர்த்தால்தான் வெள்ளை ஆதிக்கம் வீழும்" என்று கருதிய வ.உ.சி. வெள்ளையரின் கப்பல் கம்பெனிக்கு எதிரான ஒரு கம்பெனியை ஆரம்பிக்க விரும்பினர். அதே வேளையில் "வெள்ளைக் கம்பெனி இந்திய வணிகர்களுக்குப் போதிய வசதியளிப்பதில்லை" என்ற வெறுப்புணர்ச்சியும் இந்திய வியாபாரிகளிடையே பரவி வந்தது. அவர்கள் வ.உ.சி. யின் திட்டத்தை விரும்பி வரவேற்ருர்கள். அதன் விளைவாக "சுதேசிக் கப்பல் கம்பெனி 1906 ஆம் ஆண்டில் உருவாயிற்று. உருவான கம்பெனி உலையாமல் இருப்பதற்காக, வடநாட்டு முதலாளிகள் பலரை நேரில் சந்தித்து அவர்களின் ஆதரவையும் தேடினர் வ.உ.சி. கிழக்குக் கடலில் ஆங்கிலக் கப்பல்களுக்குப் போட்டியாகச் சுதேசிக் கப்பல்கள் கம்பீரமாகச் சென்றன. தேசாபிமான வீறுகொண்ட மக்களின் ஆதரவிருந்ததால் சற்றுத் தெம்பாகவே மிதந்தன அக்கப்பல்கள்....

## பொருமை

வ. உ. சி. யின் செயல்த் திறனும் தேசாபிமானமும் அவருக்குப் புகழ் சேர்த்தன. ஏற்கெனவே தூத்துக்குடியில் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தி அவர்களுக்கு வெற்றி தேடித் தந்ததும் வ. உ. சி. யின் புகழ் ஓங்குவதற்கு காரணமாயிற்று. இவ்வாறு, ஒரு தமிழன் புகழ்மேல் புகழ் பெறுவதை மற்ருெரு தமிழன் பொறுப்பானு? கப்பல் கம்பெனிக்கு முதல் போட்ட தமிழ் வணிகர்கள் பொருமையால் மனம் புகையலானுர்கள். பல தொல்லைகளையும் ஏற்படுத்தினுர்கள். வெந்த புண்ணில் வேல் பாய்வது போல, "நீங்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியிலிருந்து விலகிக்கொண்டால் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் தருகிருேம்" என்று லஞ்சம் கொடுத்து ஆளை வாங்க முயன்றது வெள்ளைக் கம்பெனி!

### தேசாபிமானமென்னும் தீ!

அத்தனையையும் தீரமிக்க நெஞ்சிலே தாங்கிக்கொண்டு அந்தப் புண்களுக்கெல்லாம் தேசாபிமானம் என்ற ஒற்றடம் கொடுத்துக்கொண்டே, நாட்டில் தேசிய உணர்ச்சியை விதைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். வ. உ. சி. மக்களிடையே நாட்டுப் பற்றெனும் நன்னீரைப் பாய்ச்சு வதற்கு வாய்ப்பாக 1908 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் தேசாபிமானச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இந்த நல்ல தருணத்திலேதான், தேசாவேச வீறுகொண்ட இளந்துறவி சுப்பிரமணிய சிவா நெல்லைக்கு வந்தார். தேசாபிமான சங்கத்தார் அவரைப் பல கூட்டங்களில் பேசச் செய்தார்கள் வ.உ.சி., சிவா ஆகியோரின் உணர்ச்சிமயமான புயல் பேச்சு மக்களிடையே தேசியக் கனலைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. அதனோடு பாரதியாரின் எழுச்சிக் கவிதையும் சேரவே, நெல்லை நாடே எழுச்சியுற்றுக் கிளர்ந்து நின்றது.

இந்த எழுச்சிக்கு எழுச்சி ஊட்டுவதாக அமைந்தது, வங்கப் பிரிவினைக் கிளர்ச்சியில் சிறை சென்ற விபினசந்திர பாலரின் விடுதலை. அவருடைய விடுதலை தினத்தை விழா வாகக் கொண்டாடத் திருநெல்வேலித் தேசிய அன்பர்கள் திட்டமிட்டார்கள். ஏற்கெனவே வ. உ. சி. மீது அதிருப்தி கொண்டிருந்த சுதேசிக் கப்பல் கம்பெனி பங்குதாரர்கள், தம்முள் ஒன்று கூடி, "சிதம்பரம் பிள்ளை அரசியலில் தீவிர மாக ஈடுபடுவது கம்பெனிக்கு ஆபத்து" என்று தீர்மானித் தார்கள். இச்செய்தி வ.உ.சி.-க்கும் எட்டியது. ஆயினும் அவர், ஏற்கனவே திட்டமிட்டபடி விபினர் விழா நடத்து வதில் தயக்கம் ஏதும் காட்டவில்லை. 1908 மார்ச் 9-ஆம் தேதி விழா சிறப்பாக நடந்தது; சிவாவும் வ. உ. சி.-யும் அதில் கலந்துகொண்டு வீர உரை ஆற்றினர்கள்.

### வ. உ. சி. கைது

தேசிய ஆர்வம் எங்கும் பொங்கித் ததும்புவதைக் கண்ட நெல்லைக் கலெக்டர், வ. உ. சி.-யையும் அவரோடு சேர்ந்த வர்களையும் எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று கருதி, தம்மை வந்து உடனே காணுமாறு அவர்களுக்குச் செய்தி அனுப்பினர். அதைப் பெற்ற சுப்பிரமணிய சிவா, பதுமனுபன், வ. உ. சி. மூவரும் (1908 மார்ச் 12-ஆம் தேதி) நெல்லை சென்று கலெக்டரைச் சந்தித்தார்கள். அதிகார

பலத்தால் அவர்களை மிரட்டிப் பணிய வைத்துவிடலா மென்று கருதிய கலெக்டர், "உங்கள் பேச்சும் போக்கும் நாட்டிலே குழப்பத்தை விளைவிக்குமென்று நான் கருது கிறேன், ஆகையால் நீங்கள் நன்னடத்தை ஜாமீன் கொடுக்க வேண்டும்" என்று கேட்டார். சட்டம் தெரிந்த வ. உ. சி. யும் அவர் நண்பர்களும் இந்த அநீதிக்குத் தலைவணங்க மறுத்தார்கள். உடனே வெகுண்டெழுந்த கலெக்டர், அங்கேயே அவர்களைக் கைது செய்தார்.

### *புரட்சித் தீ!*

ஏற்கெனவே கொதித்து நின்ற நெல்லை நகரம் இந்த நிகழ்ச்சியால் மேலும் குமுறிக் கொந்தளித்தது. ஊரெங் கும் ஊர்வலம், கடையடைப்பு, ஆர்ப்பாட்டம், எங்கும் ஒரே அமளிதுமளியாயிற்று. போலீசார் கண்மண் தெரியா மல் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டார்கள். கலெக்டரே நேரில் வந்து கலகக்காரர்களைச் சுட்டுத் தள்ளி னார். நான்கு பேர் மாண்டார்கள்; பலர் காயமடைந்தார் கள். அதனால் மண்டிக் குமுறிய குழப்பம் மூன்றுநாள் வரை நீடித்தது. முக்கியமான ஊர்களை எல்லாம் தண்டப் போலீஸ் ஆக்கிரமித்தது.

### 20 ஆண்டு தீவாந்தரம்

இந்த அல்லோல கல்லோலம் ஆட்சியாளருக்கும் வெள்ளைக் கம்பெனி முதலாளிகளுக்கும் ஒரு நல்ல வாய்ப் பாக அமைந்தது. எல்லாக் குழப்பங்களுக்கும் சிதம்பரம் பிள்ளையே காரணம் என்று குற்றப் பத்திரிகை தயாரித்தார் கள்; அவர், முன்பு பேசிய பேச்சுக்களைத் திரட்டி ஆதாரம் சேகரித்தார்கள். அழகான குற்றச்சாட்டுக்களைச் சோடித்து, மே மாதத்தில் விசாரணை நாடகத்தை அரசாங்கத்தார் தொடங்கினார்கள்.

அரச நிந்தனை, அதாவது ஆங்கிலேய சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்க முனைந்தார்; அந்தமாதிரி நோக்கங்கொண்ட சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்தார். இவை சிதம்பரனார் மீது சாட்டப்பட்ட குற்றங்கள். போலீஸ்காரர் களும் ஆங்கிலக் கப்பல் கம்பெனியைச் சார்ந்தவர்களுமே இதற்கெல்லாம் சாட்சிகள்! வழக்கு நெல்லை செசன்சு கோர்ட்டில் சுமார் இரண்டு மாதம் நடந்தது. 1908 ஜூலை 7-ஆம் தேதியன்று, எதிர்பார்த்தபடியே இரண்டு குற்றங்

களும் மெய்ப்பிக்கப்பட்டதாகக் கூறி, ஒவ்வொன்றிற்கும் பப்பத்து ஆண்டு வீதம் 20 ஆண்டு தீவாந்தர தண்டனை வழங்கியது அரசாங்கம். இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி, தமது தீர்ப்புரையில், பிள்ளையவர்களைப் பற்றிப் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:

"பிள்ளை பெரிய ராஜத்துரோகி; அவருடைய எலும்புக் கூடு கூட இராஜ விசுவாசத்துக்கு விரோதமானது!"

சரியான கணிப்பு. ஆனால் எவ்வளவு ஆழமான கசப்பு! அவர்மீதிருந்த எத்தனையோ கோபங்களும், வெள்ளை முதலாளிகளின் தூண்டுதலுமே உச்சத் தண்டனை வழங்கியதற்குக் காரணம் என்பது வெளிப்படை. அந்நாளில் இத்தீர்ப்பின் கொடுமையை எல்லாப் பத்திரிகைகளும் (ஆங்கிலேயரின் பத்திரிகைகளும் கூட) வன்மையாகக் கண்டித்து எழுதின. அப்போது இந்திய மந்திரியாயிருந்த லார்டு மார்லி கூட இக் கொடுமையை ஆதரிக்கவில்லை.

## தண்டனை குறைந்தது

தீர்ப்பைக் கேட்டு எல்லோரும் துடித்தார்கள். வ. உ. சி. சிறிதும் கலங்கியதாகத் தெரியவில்லை. நீதியின் மேல் அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது. "அஞ்சாதீர்கள், ஐக்கோர்ட்டில் அடித்துத் தள்ளிவிட்டு வந்துவிடுகிறேன்!" என்று நண்பர்களுக்கு ஆறுதல் கூறினார் வ. உ. சி. எதிரிகளின் அனல் மூச்சு வீசுகின்ற இடத்தைவிட்டு மாறினால் நீதி நிமிர்ந்து நிற்கும் என்று எதிர்பார்த்தார் போலும்; ஆனால், அவர் எதிர்பார்த்தபடி முழு விடுதலை கிடைக்கவில்லை. ஐக்கோர்ட்டில் ஆறு ஆண்டு தீவாந்தரமாகக் குறைந்த தண்டனை, பிரிவி கவுன்சிலில் ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனையாக மாற்றப்பட்டது.

## செக்கிழுத்த செம்மல்

அதன்மேல் தான் கப்பலோட்டிய தமிழனின் வீர வரலாறு உச்சக் கட்டத்தை நோக்கி நடந்தது. ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனை பெற்றுச் சிறைசென்ற வ. உ. சி. அன்றுவரை யாரும் அனுபவித்திராத சிறை இன்னல்களை எல்லாம் அனுபவித்தார். அன்னை நாட்டின் மேல் அன்பு கொண்ட ஒரே "குற்றத்"துக்காக சிறையில் அவருக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல.

அறிவு ஏர் உழவராகிய அவ்வீரரைக் கடுமையான உடல் உழைப்புக்கு உள்ளாக்கினர். சிறையதிகாரிகள்; உண்ண உணவும் உட்காரச் சரியான இடமும் கூடத் தராமல் கொடுமைப் படுத்தினார்கள். கொலையாளிகளுக்கும் அரசியல் கைதியாகிய அவருக்கும் வேறுபாடே காட்டப்பட வில்லை. கல் உடைக்கவும் செக்கு இழுக்கவும் செய்து அவருடைய உறுதியைக் குலைக்க முனைந்தனர் சிறையாளர் கள். கண்ணீர் மல்க, கைகள் சிவந்து கொப்புளிக்க வீர சிதம்பரம் செக்கிழுத்த வேதனைக்காட்சி நல்லோர் நெஞ்சங் களைக் கரைந்துருகச் செய்தது. தம் நண்பர் படும் வேதனை யைக் கேட்டுச் சகிக்கமாட்டாத தேசியக் கவி பாரதியார், உலகில் முறையிட்டுக் கொள்ள ஆளும் நல்ல ஆட்சியும் இல்லாததால்,

> "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
> நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ!...
> மாதரையும் மக்களையும் வன்கண்மை யால்பிரிந்து
> காதலிளைஞர் கருத்தழிதல் காணாயோ!"

என்று இறைவனிடமே முறையிட்டார். ஆனால் சிதம்பர ஞர் பட்ட துன்பம் வீண்போகவில்லை. அவரது துன்பம் ஒவ்வொன்றும் நமது வீர சுதந்திர மாளிகையின் ஒவ்வொரு வெற்றிக் கல்லாக ஏறியது.

## வெளியே பலாத்காரம்

அடக்குமுறைக்கும் ஓர் அளவு வேண்டும். அந்த எல்லை மீறினால் அடக்கப்பட்டவர்கள் கொடுமைகளைக் கடைப் பிடிக்கத் தொடங்கி விடுவார்கள். சிதம்பரச் சிறை என் னும் கொடுமை நாட்டில் பயங்கர வாதத்தையே ஊக்குவித் தது. நேரான வழிகளில் போராட அரசாங்கம் விடாது என்று தெரியவே, இரத்த வெறி கொண்ட மறைமுகக் கிளர்ச்சிக்குக் களம் தயாராகி வந்தது. வீர வெறிகொண்ட பல இளைஞர்கள் கூடினார்கள்; ஆட்சியின்மேல் அவர்கள் கொண்ட வெறுப்பு ஆங்கில அதிகாரிகளின்மேல் திரும்பி யது. அதன் விளைவாக வெள்ளைக் கலெக்டர் ஆஷ் என்பவர் ஓர் இளைஞரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த இளைஞர் அங்கேயே தம்மைச் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துக் கொண்டாலும், அவருடைய இரகசிய இயக்கத்தைச் சேர்ந்த பலரும் பிடிபட்டுப் பலவகையான கொடுந்தண்டனை களுக்கு ஆளானார்கள்.

## உணர்ச்சியற்ற நெஞ்சங்கள்

இத்தனைக்கும் மத்தியில், அந்நியர் செய்த அட்டூழியங்களைவிட நம்மவர்கள் செய்த கோழைச் செயல்களே சிதம்பரனாரை மிகவும் வருத்தின. தேசிய எழுச்சியில் குளிர் காயலாம் என்று கப்பல் கம்பெனிக்குப் பங்குதாரர்களாயிருந்த இந்திய முதலாளிகள் சிதம்பரனார் சிறை சென்றதும் கம்பெனியையே கலைத்துவிட்டார்கள். அம்மட்டோ! வெள்ளைக் கம்பெனிக் கப்பலுக்கு எதிராக ஓடிய 'சுதேசிக் கப்பலை' அந்த வெள்ளைக் கம்பெனிக்கே விற்றுவிட்டார்கள் 'தேசியமாவது புடலங்காயாவது' – அவர்களைப்பொறுத்த வரை சுதேசிக் கப்பல் கம்பெனி ஒரு போட்டி வியாபாரம். அது பணம் பணமாய்க் காய்க்கும் என்று எதிர்பார்த்தார்கள். எண்ணம் நிறைவேறாமல் போகவே, அந்நியன் காலிலேயே சரணடைந்தார்கள்.

அத்தோடும் விடவில்லை அத்தீயவர்கள்; கம்பெனி முறிந்ததற்குச் சிதம்பரம் பிள்ளையே காரணம்: ஆதலால், நட்டம் முழுவதையும் அவரே ஏற்க வேண்டும் என்றும் பேசினார்கள். ஆனால் வீரச் சிதம்பரம் பிள்ளை இது கண்டு மனம் ஒடிந்துவிடவில்லை. "தன்னைத் தின்னவருஞ் சிறு தவளையை ஒரு சீயம் சிரித்தருள் செய்தல்போல்", "அவர்கள் யாரும் அஞ்சவேண்டாம், அனைத்துக் கடன்களையும் நானே ஏற்கிறேன், – நான் வரும்வரை பொறுத்திருக்கச் சொல்லுங்கள்" என்று நண்பர்களுக்குக் கடிதம் எழுதினார். தீர நடையிட்டுச் செல்லும் வீரச் செம்மல் இந்த மேடுபள்ளங்களைக் கண்டு ஏன் கலங்கப்போகிறது? இன்று அவர்களெல்லாம் செத்தைகளாய் அழுகிப் போயினர்; செக்கிழுத்த செம்மலின் புகழன்றோ சீர்மணங் கமழ்கிறது!

## வீரர் விடுதலை

கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைக் கொடு நிழல்களிலே தமது தண்டனைக் காலத்தைக் கழித்து 1912 டிசம்பர் மாதத்தில் விடுதலை பெற்றார் வ. உ. சி. எழுந்து திமிறிவிட்டு, மீண்டும் சொத்து சுகம் விரும்பிச் சுதந்திரத்தை மறந்து தூங்கிவிட்ட தமிழகத்தில், விடுதலை பெற்ற வீரரை வரவேற்கக் கூட சுப்பிரமணிய சிவா ஒருவரைத் தவிர வேறு ஆளே இல்லை. அதுதான் எக்காலத்திலும் பாமரர் நிலை; அதை ஏற்றுக் கொண்டுதான் அவர்களுக்குத்

தொண்டு செய்ய வேண்டும். புகழின்விலை அவ்வளவு அதிக மானது, – கொடுமையானது!

அரச நிந்தனைக் குற்றத்துக்குத் தண்டிக்கப் பட்டதால் "வக்கில் சன்னத்து" பறிமுதலாயிற்று. சிறைவிட்டு வெளி வந்த தென்னாட்டுத் திலகரை வறுமை இரு கை நீட்டி வரவேற்றது. ஆயினும் வருவாய் தளர்ந்தும் மனம் தளரா மல் சிறுசிறு வியாபாரங்கள் செய்துகொண்டு சிலகாலம் சென்னையில் வாழ்ந்தார். வ. உ. சி. அப்போதும் பொதுப் பணித் தினவெடுத்த அவர் உள்ளம் அவரைச் சும்மாஇருக்க விடவில்லை. பெரம்பூர் ரெயில்வேத் தொழிலாளர் சங்கத் தில் சேர்ந்து அவர்கள் நலனுக்காக உழைத்து வந்தார். இதற்கிடையில் நீதிபதி வாலஸ் உதவியால் வக்கீல்சன்னத்து மீண்டும் கிடைத்தது. கோயில்பட்டியிலும் தூத்துக்குடியி லும் அத் தொழிலை மீண்டும் தொடங்கி நடத்தி வந்தார். ஆனால் தொழிலில் தீவிரமாக ஈடுபட, சிறையில் குன்றிய அவர் உடல் இடந்தரவில்லை.

## அரசியல் துறவு

1920 ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரசுக்கு சென்றி ருந்த வ.உ.சி. மிகுந்த வெறுப்புடன் திரும்பி வந்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கை காங்கிரசில் செல்வாக்குப் பெற்றது; தீரத் திலக நெறியில் சென்ற சிதம்பரனாருக்கு அக்கொள்கைகளில் உடன்பாடு இல்லை. ஆகவே அதுபற்றிய தமது நிலையை விளக்கி ஓர் அறிக்கை வெளியிட்டுக் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார். லோகமான்ய பால கங்காதர திலகர், அரவிந்த கோஷ், சுப்பிரமண்ய சிவா, சுப்பிரமணிய பாரதி, வ. வே. சு. அய்யர், விபின் சந்திர பாலர், லஜபதிராய் முதலியோரின் தீவிர வாதக் கட்சியைச் சேர்ந்தவர் வ. உ. சி. இந்தத் தலைவர்கள் அனைவரும் வ.உ.சி. யிடம் உயர் மதிப்புக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல, அக்காலத்தில் "தென்னாடு முழுவதிலும் சிதம்பரம் பிள்ளை ஒருவர்தான் வீரர் என்பது திலகரின் கருத்து!" பின்னர், 1927 ல் மீண்டும் காங்கிரசில் சேர்ந்தும் ஏனோ, அதில் அவர் தீவிரப் பங்கு எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

## தமிழ்த் தொண்டு

சிதம்பரனார் அரசியலைத் துறந்து நின்றாலும் பொதுப் பணியை அவரால் மறந்து இருக்க முடியவில்லை. இளமை

யிலும், சிறைவாசத்தின்போதும் அவர் கற்ற தமிழ் நூல்கள் இப்போது அவரது கவனத்தை ஈர்த்தன. தம்மை வளர்த்து இலட்சிய நெறிக்கு உயர்த்திய அந்த நூல்கள் காலத் துருவேறி உருமாறிக் கிடப்பதைக் கண்டு அவர் நெஞ்சம் பதைத்தது. அவைகளில் படிந்த அழுக்குகளை அகற்றவேண்டுமென்று முடிவு செய்தார். அவரே மெய்யறிவு, மெய்யறம், மனம்போல வாழ்வு, வலிமைக்கு மார்க்கம், சுயசரிதை போன்ற நூல்களைச் சுயமாகவும் ஆங்கில நூல்களைத் தழுவியும் செய்திருந்தார். இருந்தும் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய தமிழரின் பெட்டகங்களைத் துலக்கிக் கொடுக்கவேண்டியதே அக்காலத்திற்கு வேண்டிய பணி என்று அவர் நெஞ்சம் கருதிற்று. ஆகவே தொல்காப்பிய – இளம்பூரணர் உரையையும், திருக்குறள் –


**DEPENDABLE PHARMACEUTICAL SPECIALITIES**

●

| | |
|---|---|
| LIVO-PROTEIN 12 | — Liver, Amino Acids, Lysine Vitamin B Complex and B 12 Syrup. |
| METAZYME | — Combination of all the three digestive enzymes with lipotropic factors. |
| MULVIT DROPS & SYRUP | Multivitamin with Lysine and B 12. |
| MOUNT MALT | — Malt with Iron and Vitamins A, D and B-Complex. |
| PROTEINOSOL (Regd. Trade Mark) | — Palatable Protein Hydrolysate of Animal Origin. |
| TERPECOL (Regd. Trade Mark) | — Dependable Cough Remedy. |

AND WIDE RANGE OF TRANSFUSION FLUIDS AND TABLETS

●

*Manufactured by:*

**MOUNT METTUR PHARMACEUTICALS PRIVATE LTD.**

**3, GREENWAYS ROAD, – MADRAS - 28.**

Grams: "PHARMLAB" Phone: 73170

மணக்குடவர் உரையையும் ஆராய்ந்து பதிப்பித்தார். இவை இரண்டுமே இந்த நூல்களுக்குச் சீரான உரைகள் என்பது வ. உ. சி.-யின் கருத்து.

"நாடோறும் வ. உ. சி.-யின் இல்லத்தில் மாலை நேரத்தில் இலக்கிய விருந்து நடைபெறும். வள்ளுவர் வருவார்; கம்பர் கவி பாடுவார்; மெய்கண்ட தேவநாயனார் சிவஞான போதம் செய்வார். இறுதியில், இளைஞர்கள் சிதம்பரனாரின் சிறு பிராயத் தீரச் செயல்கள் பற்றித் திறந்தவாய்மூடாது கேட்டு வியப்புறுவர். தமிழன், தமிழ் என்று சொல்லிக் கொண்டு வருவோர் போவோர்க்கெல்லாம் வ. உ. சி.-யின் வீடு சொந்த வீடு.

## இறுதி மூச்சு

சமுதாய உணர்வோடு வாழ்வைத் தொடங்கித் தேசிய ஆவேசத்தால் அதனை ஒளியிட்டுத் துலக்கித், தமிழ்ப்பணியால் அதை அணிசெய்துகொண்ட கப்பலோட்டிய தமிழனின் வாழ்வு 1936 நவம்பர் மாதம் 18-ஆம் தேதி இரவு நிறைவுபெற்றது. ஓயாத உடல் ஓய்ந்தது; அதன் உள்ளார்ந்த கனல், வருகின்ற பரம்பரையின் நெஞ்சங்களை நாடிப் பறந்து சென்றது........

போகுந்தருணத்திலும் சிதம்பரத்தேசிய ஆவி, "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்!" என்ற குரலை எழுப்பிக் கொண்டே சென்றது; அதனோடேயே, "**கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்திய நாடு சுதந்திரம் எய்துவது திண்ணம்**" என்று, தனக்கும் பிறருக்கும் தீர்க்கதரிசன நம்பிக்கைக் குரல் கொடுத்துக் கொண்டே சென்றது. ஓரிடத்தில் ஒரு செயலில் குவிந்து நின்ற சிதம்பரத் தீரம் இன்று பல்வேறு செயல்களுக்குப் பல்வேறு இடங்களில் அடிஊக்கமாக நிற்கிறது. அந்தப் புகழ் வாழ்வின் மணம், இறவா மணம்; இனிமை மாறாத மணம்.......

---

குறிப்பு: "வ.உ.சி. சுயசரிதை" ம. பொ. சி.-யின் "கப்பலோட்டிய தமிழன்" ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது.

THE HOUSE OF REPUTE THAT SERVED YOU FOR 35 YEARS OFFERS YOU THE FOLLOWING PRESTIGE PRODUCTS

MURPHY Radio
KAMCOS 16mm Projectors & Water Heaters
KHIRA Steel & Wooden Furniture
EVEREST Sewing Machines
DUNLOPILLOW Cushions & Mattresses
Electrical Appliances
Mecom Intercom sets

AHUJA Amplifiers
FOLDELUXE Steel Folding Furniture
RALLIS Fans
PRESTIGE Presure Cookers
HIMALUX refrigerators
Gramophones and Records
Radio Parts

**MAHOMED EBRAHIM & Co. (Pvt) Ltd.**

7/8, Mount Road, MADRAS-2.
113-H, Brigade Road. BANGALORE.
Abid Road, HYDERABAD.

DO YOU HAVE A SAVINGS ACCOUNT WITH

**THE INDIAN OVERSEAS BANK?**

- WE OFFER FRIENDLY, HELPFUL & EFFICIENT SERVICE
- YOU CAN START WITH AS LITTLE AS Rs. 5/- NO ACCOUNT IS TOO SMALL FOR US
- YOUR MONEY EARNS INTEREST AT 3% PER ANNUM
- YOU CAN WITHDRAW MONEY THRICE A WEEK

*Call today for full particulars from your nearest branch*

M. CT. MUTHIAH
*Chairman.*

K. M. NANJAPPA
*General Manager.*

*With the best compliments of*

# THE NATIONAL ELECTRICAL INDUSTRIES LTD.

❋

*MAKERS OF*

POWER & DISTRIBUTION TRANSFORMERS
ELECTRIC MOTORS, BENCH & PEDESTAL
GRINDERS

**The Industrial Estate, Lalbaug,**
**BOMBAY - 12.**

❋

*DELHI OFFICE:*

32-34, INDRA PALACE LODGE, CONNAUGHT CIRCUS,
NEW DELHI-1.

Phone : 45737 Grams : 'Natelin'

# எங்கள் குடும்பம்

வ. உ. சி. சுப்பிரமணியம்

வற்றாத அருள் செல்வம் படைத்த எங்கள் குடும்பத்தில் மக்கள் செல்வத்துக்கும் குறை யில்லை என்றே சொல்ல வேண் டும். எனது தந்தையார் வ. உ. சி. அவர்கள் மறைவு (18–11–1936) வரையில் நிறைவாக இருந்த எங்கள் குடும்பத்தில் அவர்கள் காலஞ் சென்ற பின்பு, சில ஆண்டு களுக்குள்ளாகவே பல பெரிய இழப்புக்கள் நேரிட்டன; நினைக்கவே வேதனையாக இருக்கிறது.

என்னுடன் பிறந்தவர்கள் பற்றியும், அவர்கள் பெற் றுள்ள மக்கள் செல்வங்கள் பற்றியும் சுருக்கமாக இக் கட்டுரையில் சொல்வேன்.

எம் அன்னையார் மீனாட்சி யம்மைக்கும் எந்தையார் வ.உ.சி.–க்கும் பிறந்த நாங் கள் மொத்தம் எட்டுப் பேர்; இதில் பாதி ஆண்கள். தந்தை யார் சிறை செல்லும் முன்பு பிறந்தவர்கள் இரு ஆண் மக்கள்: மற்றையோரெல் லாம் சிறை மீண்ட பின்பு பிறந்தவர்களே. இன்று எங்க ளில் உயிர் வாழ்பவர்கள் பெண் ஒருத்தியும் ஆண்கள் மூவருமே. இனி, என் உடன் பிறப்புக்கள் பிறந்த வரிசை யில் அவர்களது பெயர்களும் பிற விவரமும் கூறுவேன்.

**உலகநாதன் :–** குடும்பத் தலை மகன். சைவ வேளாளர் மரபுப்படி எந்தையார் தம் தந்தையார் பெயரைச் சூட்டி மகிழ்ந்த இந்நன்மகன் இளம் வயதிலேயே இவ்வுலகிலிருந்து மறைந்து விட்டார். வ.உ.சி. வாழ்ந்திருந்த காலத்தில் குடும் பத்தில் ஏற்பட்ட பேரிழப்பு இது ஒன்றே. ஏறத்தாழ இருபது ஆண்டுகளே வாழ்ந்த இவர் சிறு வயதிலேயே சொற் பெருக்காற்றலிலும், சொற் போரிலும் வல்லவராக விளங் கியதோடு, தம் படிப்பு முத லிய செலவுகளுக்குத் தாமே பணம் ஈட்டும் ஆற்றலும் பெற்றிருந்தவர். திலகர் மகா னிடம் பேரன்பும் பெருமதிப் பும் கொண்ட இவர் தமது பதினொருண்டுப் பிராயத்துக்கு முன்பே திலகர் பல்பொடி, திலகர் சவுக்காரம், தேள்கடி மருந்து போன்ற அன்றாடம் பயன்படு பொருள்களைத் தாமே செய்து, விற்றுத் தமக்கு வேண்டிய பொரு ளினைத் தேடிக் கொள்வாராம். தம் ஆற்றலில் பெரும் பகுதி யும் தம் தலைமகனிடம் விளங் கியதாகவும் அவரது மறைவு தம் ஆயுளையே குறைத்து

விட்டது என்றும் எந்தையார் தம் நண்பர்களிடம் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

**ஆறுமுகம் :—** தூத்துக்குடியில் இருந்த வணிகப் பெருமகனும் எந்தையாரின் உற்ற நண்பருமான திரு சி. த. ஆறுமுகம் பிள்ளையவர்கள் திருப்பெயரைத் தமது இரண்டாவது புதல்வருக்குச் சூட்டினார். வ. உ. சி. சுதேசிக் கப்பல் கம்பெனி தோன்றவும், வணிகர்களின் ஆதரவு கிடைக்கவும் காரணமாக இருந்தவர் சீனா, தானா, ஆவன்னா, அண்ணா ஆறுமுகம் பிள்ளையவர்கள் தமிழக அரசாங்கத்தில் நெடுநாள் கூட்டுறவு இலாகாவிலும், பின்னர் நாட்டுப் புறச் சீரமைப்பு, தொழிலாளர்நலத் துறைகளிலும் அதிகாரியாகப் பணியாற்றி விட்டுச் சில ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்றார்; விளாத்திகுளம் அருகில் இன்னூரில் தங்கி வாழ்ந்து வருகிறார். இவர்கள் குடும்பம் பெரிது. நான்கு பெண் மக்களும் நான்கு ஆண் மக்களும் உண்டு. பெண்கள் அனைவருக்கும் திருமணமாகி விட்டது. ஆண்களில் இருவருக்குத் திருமணமாகியுள்ளது. இவர்கள் இருவருமே எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ளனர். மூத்தவன் ஷண்முக சுந்தரம்; "நவசக்தி" நாள் இதழில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்து வருகிறார். அடுத்தவன் மீனாட்சி சுந்தரம் (எனது சிறிய தந்தையார் பெயர்); இப்போது இளங்கோவன் என்னும் பெயரில் எழுத்துப் பணியாற்றுகிறார்; இவர் ஒரு நல்ல கவிஞர். 'இளவேனில் இரவுகள்' என்னும் தலைப்பில் இவரது கவிதை நூல் ஒன்று வெளிவந்திருக்கிறது. "நவ இந்தியா", "தமிழ் நாடு" ஆகிய நாளிதழ்களிலும் பணியாற்றியிருக்கிறார்.

**ஞானம்பிகை :—** குடும்பத் தலைமகள். எந்தையார் சிறை மீண்டபின், கோவை மாவட்டத்திலுள்ள பேரூர்த் தலத்தில் தங்கியிருக்கையில் அங்கிருந்த ஞானம்பாள் திருக்கோயிலைப் புதுப்பித்து, விழா எடுத்த ஆண்டில் இவள் பிறந்தமையால், அம்பாளின் பெயரையே தலைமகளுக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள். தமிழக அரசாங்கத்தில் கூட்டுறவுத்துறையில் அதிகாரியாக இருந்த திரு ச. திருஞான சம்பந்த மூர்த்தியா பிள்ளை அவர்களின் வாழ்க்கைத் துணைவியான ஞானம்பாள் ஒரு மகனையும் இரு பெண் மக்களையும் பெற்று விட்டுச் சிறு வயதிலேயே காலமாகி விட்டாள். எந்தையார் மறைந்த சில ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட முதல் பெரும் நஷ்டம் இது. மைத்துனர் மூர்த்தியா பிள்ளை அவர்களும் சில ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டார்கள். பிள்ளைகளுக்கெல்லாம் திருமணமாகி அவர்கள் இல்லறம் நடத்தி வருகிறார்கள்.

**வேதவல்லி :-** இரண்டாவது மகள்; குடும்பத்தின் நான்காவது குழந்தை. தென் ஆப்பிரிக்க நாட்டில் வாழ்ந்து, வணிகம் செய்துவந்த பெரி

யார் தில்லையாடி வேதியப் பிள்ளை அவர்கள் தமக்குச் செய்த உதவிகளுக்கு நினைவாக அவரது பெயரை இந்த மகளுக்குச் சூட்டினார்கள், எந்தையார். கப்பல் கம்பெனிக்குப் பங்குகள் திரட்டுவதிலும் பின்பு தந்தையார் மீது வழக்கு நடைபெறுகையில் அதற்கு உதவத் தென் ஆப்பிரிக்காவில் மகாத்மா காந்தி அவர்களுடன் சேர்ந்து நிதி திரட்டுவதிலும் பெரும் பணியாற்றியவர் பிள்ளை அவர்கள். கொழும்பு நகரில் வணிகம் செய்து வந்த திரு. அனவரதம் பிள்ளை அவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட இந்தத் தமக்கையும் இரு புதல்வர்களைப் பெற்றுக்கொடுத்துவிட்டு சிறு வயதிலேயே — தந்தை மறைந்த பின்னர்தான் – காலமாகி விட்டாள். இராமையா, சிதம்பரம் என்னும் அவ்விருவரும் தமிழக அரசாங்கத்தில் சிறு அதிகாரிகளாகப் பணியாற்றி வருகிறார்கள். இருவருக்கும் திருமணமாகி விட்டது.

**ஆனந்தவல்லி :—** இன்று வாழ்ந்து வரும் எனது ஒரே தமக்கை திரு. மு. வள்ளிநாயகம் பிள்ளை அவர்களது வாழ்க்கைத் துணைவியாக விளங்கும் இந்த அம்மாளுக்கு ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள். மகளுக்குத் திருமணமாகி விட்டது. மகனும் தந்தையும் நெய்வேலியில் வேலைபார்த்து வருகிறார்கள். திரு. வள்ளிநாயகம் பிள்ளை எந்தையார் பிறந்த ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்தவர். அரசாங்க வேலையிலிருந்து விலகி, வாணிபம் செய்து, அது 'கையைக் கடித்து விட்டதால்' இன்று பெயருக்கு ஒரு சாதாரணமான வேலை பார்த்து வருகிறார். மகளின் கணவர் திரு. ந. சூரிய நாராயணன், தூத்துக்குடி ஹார்வி ஆலையில் குறுக்கெழுத்தாளராகப் பணிபுரிகிறார். இவருக்குக் குழந்தைகள் உண்டு.

**மரகதவல்லி :—** இன்று மதுரையில் ஹார்வி ஆலையில் துணைத் தலைமைக் கணக்கராகப் பணியாற்றி வரும் திரு. டி. எம். சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக விளங்கிய இந்த மங்கை நல்லாள் மூன்று ஆண் மக்களைப் பெற்றுவிட்டு, 'வாழ வேண்டிய வயதில் காலன் கயிற்றுக்கு' இலக்காகி விட்டாள். பிள்ளைகள் படித்து வருகிறார்கள். தந்தையார் மறைவுக்குப் பின்பு குடும்பத்துக்கே தூண் போல நின்று, ஆண் மகன்போல உழைத்த இத் தமக்கை மறைவால் – எத்தனையோ இடர்ப்பாடுகளையும் கல்மனத்துடன் தாங்கி வந்த – எம் அருமை அம்மை மீனாட்சியம்மாள் 1951-இல் திடீரென மறைந்து விட்டாள். அவர்கள் காலமாகும் போது, வயது ஏறத்தாழ அறுபது இருக்கும்.

**சுப்பிரமணியம் :—** சிறையில் தந்தை இருக்கையில் ஏற்பட்ட ஒரு சிறைக் கலகத்தில் அவருக்காகத் தோன்றி நீதி மன்றத்தில் வாதாடி வெற்றி கண்ட கோவைச் சைவப் பெரியார் திரு. சி. கே. சுப்பிரமணிய

முதலியார் அவர்கள் திருப்பெயர் எனக்கு எந்தையால் சூட்டப்பெற்றது. தந்தையார் வெளியிட்டு வந்த நூல்களின் அச்சுப் படிகளை என் சிறுவயதிலேயே திருத்தி வந்த பழக்கத்தால் எழுதப் புறப்பட்ட நான் இன்று ஒரு மொழி பெயர்ப்பாளனாக இருந்து வருகிறேன். தமிழ் எழுத்துலகின் நற்பேறு! "தினசரி" இதழில் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் பத்திரிகைத் துறையில் புகுந்த நான் திரு. ஏ. என். சிவராமன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட "தினமணி" நாள் இதழில் ஆசிரியர் குழுவில் ஒரு 'மாமாங்கத்துக்கு மேல்' பணியாற்றிவிட்டு, இன்று அமெரிக்க அரசாங்கத் தகவல் நிலையத்தில் பத்திரிகைப் பணித் தமிழ்ப் பிரிவுத் தலைவராக இருந்து வருகிறேன். மொழி பெயர்த்து வெளியிட்ட புத்தகங்கள் சில உண்டு.

எனக்கு நான்கு புதல்விகளும், இரு புதல்வர்களும் இருக்கிறார்கள்; எல்லோரும் சிறு பிள்ளைகள்.

**வாலேஸ்வரன் :–** என் தம்பியும், கடைக் குட்டியுமான இவன் தமிழக அரசாங்கத் தொழிலாளர் நலத் துறையில் ஒரு சிறு அதிகாரியாக மதுரை மாவட்டத்திலுள்ள போடி நாயக்கனூரில் பணியாற்றி வருகிறான். திருமணமாகி ஒரு மகன் இருக்கிறான்.

முதலில் எந்தையார் வ. உ. சி. அவர்களுக்குத் தண்டனை வழங்கி, பின்பு நண்பராகி, சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக விளங்கிய ஜஸ்டிஸ் வாலஸ் என்னும் ஆங்கிலேயப் பெருமகன் சிறையிலிருந்து வந்தபின் எந்தையார் மீண்டும் வழக்கறிஞராகப் பணியாற்ற 'ஸன்னத்' என்று சொல்லப்படும் அத்தாட்சி முத்திரையைப் பெற்றுத் தந்தார்! 'மாற்றான் பெயரை மகனுக்கு' இட்டு நன்றி பாராட்டும் தமிழ்ப் பண்பு வழியில் மகனுக்கு வாலேஸ்வரன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள் தந்தை.


Send notices, marriage invitations
and horoscopes of boys
to

T. G. ANANTASWAMI,

Regd. Trade Marks Agent,

38/Vth Trust Cross Street, MADRAS - 28.

## விளக்கம்

பக்கம் 34

வ. உ. சி. 1894-ல் இரண்டாவது தர வழக்கறிஞர் தேர்வில் வெற்றி பெற்றதற்கு சென்னை உயர்நீதி மன்றம் அளித்த சான்று. வக்கீல் தொழில் புரியும் உரிமையை 1908-ல் இழந்து பல வருடங்களுக்குப் பிறகு திரும்பவும் பெற்றார்.

பக்கம் 35

மதுரையில் நாலாவது தமிழ்ச் சங்கம் நிறுவிய துங்கர் பாலவநத்தம் ஜமீந்தார் திரு. பாண்டித்துரை தேவர் வ. உ. சி.-க்கு எழுதிய வந்தனக் கடிதம். திரு. பாண்டித் துரை தேவர் சுதேசிக் கப்பல் கம்பெனிக்குத் தலைவராகவும் இருந்தார்.

பக்கம் 36

பிரபல தேசிய ஆங்கிலப் பத்திரிகை, கல்கத்தா அம்ருத பஜார் பத்திரிகை. அதன் ஆசிரியர் திரு. மோதி லால் கோஷ் கண்ணனூர் ஜெயில் அதிகாரிக்கு எழுதியது. அதில் "காரணமின்றி ஜெயிலில் தவிக்கும்" சிதம்பரனார் சீக்கிரமே வெளியில் வருவாரென்று எழுதியிருந்ததால் கடிதம் வ. உ. சி.-யிடம் கொடுக்கப்படவில்லை. 1912 இல் விடுதலையான பிறகு கொடுக்கப்பட்டது.

பக்கம் 37

திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வ. உ. சி. அறுபதாண்டு நிறைவு விழாவைப்பற்றி அறிந்து எழுதிய வாழ்த்துக் கடிதம். "நீங்கள் படாடோபமின்றி தேசத் துக்குச் செய்த சேவைக்குப் பொது ஜனங்கள் கைம்மாறு எத்தனை செய்தாலும் போதாது" என்பது கடிதத்தின் ஸாரம்.

பக்கம் 38

ஒரு மணமகனை வாழ்த்தும்போதும் வ. உ. சி. தேசத்தை மறந்தாரில்லை. "இல்லறம் இனிது நடாத்தி புகழ்நிறீ இத் தேச மேம்பாட்டிற்கு உழைத்துவரும்படியாக எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவானாக" என்பது அவர் ஆசி.

# High Court of Judicature, Madras.

## Pleadership Examination.

Certificate No. 178

This is to certify that V O Chidambaram Pillai who was a candidate for the Pleadership Examination held at Tinnevelly in February 1894, has been declared by the Examination Board to have passed the *Second Grade* Pleadership Examination.

HIGH COURT, MADRAS,
10th April 1894.

R. Forbes
*Secretary,*
*Examination Board,*

உ

ஸ்ரீ சிற்றம்பலம்

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

12- 5 1905.

மகா-௱-௱-ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளை

அவர்களுக்கு.

ஐய,

தாங்கள் இச்சங்கத்தின் கல்வியங்கத்தினருள் ஒருவராயமர்ந்து செந்தமிழ்ப் பாஷாபி விர்த்திக்கு வேண்டுவனவற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்த சம்மதபத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வெய்தினேன். இவ்வாறு அன்புகூர்ந்து முன்வந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்,

பாண்டித்துரை

அக்கிராசனாதிபதி.

Dear Sir,

I was deeply affected to read Mr. Chidambaram's letter. He forgot his own sorrow for the moment and came to sympathise with mine! This is worthy of him. Please convey my sincere thanks to him for his condolence. Tell him that I and my——had shed bitter tears over his sad fate. God however never forsakes those who have served their fellows disinterestedly and he will get his reward in due course. I trust one of the coronation boons will be the release of political prisoners and we shall ere long see him come out of the jail * where he is rotting without rhyme or reason.

Yours truly,
M. L. Ghose.
1-9-11.

* Objectionable (Initials of Jail Supt.,)

R.K. SHANMUKHAM CHETTY, M.L.A.

INDIA HOUSE,
LONDON, W.C. 2.

16th September 1932.

My dear Friend,

I have just seen in the Indian papers that you have celebrated your sixtieth birthday. Allow me to offer my most respectful congratulations on this occasion. It was a matter of great pleasure to me to find in the papers that our friend Dr. P. Varadaragulu is doing something to show the public appreciation of your life of sacrifice for the cause of the country. Nothing that the public can do will be an adequate compensation for what you have done in a quiet way for our people. I have admired your courage and patriotism ever since I was a boy in school. I pray that you will be spared for very many years to come.

You may probably have known that I came to London about four months ago in connection with the Imperial Conference at Ottawa. I returned to London last week from Ottawa. I am leaving for home on the 22nd September, and expect to arrive at Madras on the 5th October.

With kind regards,
Yours sincerely,
R.K. Shanmukham

௳

வ. உ. சிதம்பரம் பிள்ளை.
வக்கீல்.

53-57, தெற்குராதவீதி, மேலவூர்,
தூத்துக்குடி, 3. 12. 1933

அன்பார்ந்த நண்பர் அவர்களே,

நலம். நலமே விழைகின்றேன். தங்கள் திருமண அச்சு அழைப்பும், கையெழுத்துக் கடித அழைப்பும் வரப் பெற்றேன். தங்கள் திருமணம் சிறப்பாக நடந்தேறும் படிக்கும், தாங்களும் தங்கள் உயர்த்துணையாரும் இன்பம் துய்த்துப் பல நன் மக்கள் பெற்று இல்லறம் இனிது நடாத்தி நீடு புகழ் நிறீஇத் தேசசேவைப் பாட்டாற்று உழைத்து வரும்படியாக எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

திருச்சி, சென்னை முதலிய இடங்களுக்கு ஒரு காரியமாகப் போய் விட்டு 28-11-33 மாலை யான் தூத்துக்குடி வந்து சேர்ந்தேன். அன்று 5-12-33 முதல் தேகஸ்வஸ்தம் கெட்டிருக்கிறபடியால், தங்கள் திருமணத்தை நேரில் கண்டு களித்து மணமக்களை வாழ்த்திக் கொள்ள முடியாததற்காக வருந்துகிறேன். வணக்கம். தங்கள் அன்பன், வ. உ. சிதம்பரம் பிள்ளை.

## சுதேசிக் கப்பல் கம்பெனியின் குறிக்கோள்

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும், கம்பெனியார் தீர்மானித்திருக்கும் மற்ற இடங்களுக்கும் நீடித்தும் சௌகரியமாகவும் கப்பல்கள் போகவரச் செய்து பிரயாணத்தையும் வியாபாரத்தையும் சௌகரியப்படுத்தல்.

இந்தியர்களையும், இலங்கையர்களையும் மற்றும் ஆசியா கண்டத்துச் சாதியார்களையும் கப்பல் நடத்தும் தொழிலில் பழக்குவித்து அதனால் வரும் நற்பலன்களை அடையும்படிச் செய்தல்.

இந்தியர்களுக்கும், இலங்கையர்களுக்கும், மற்றும் ஆசியா கண்டத்துச் சாதியார்களுக்கும் கப்பல் செலுத்துவதற்கும் கப்பல் கட்டுவதற்கும் பயிற்சியளித்தல்.

இந்தியா, இலங்கை மாணவர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து மாணவர்களுக்கும் கப்பலோட்டும் தொழிலையும், கப்பல் கட்டும் தொழிலையும் தொழிலியல் முறைப்படி கற்பிக்கக் கலாசாலைகள் ஏற்படுத்தல்.

கப்பல் நடத்துவதிலும் வாணிபம் செய்வதிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியா கண்ட வாசிகளிடையே ஐக்கியத்தை உண்டுபண்ணி முன்னேறச் செய்தல்.

பற்பல வியாபார நிலையங்களில் உள்ள வாணிபங்களுக்குரிய கொள்வன கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா, இலங்கை முதலிய ஆசியா கண்டத்து நாட்டினரை ஏஜண்டுகளாக நியமித்தல்.

கப்பல்கள், இயந்திரப் படகுகள் முதலியன நிர்மாணிப்பதற்கும் அவற்றைச் செப்பனிடுவதற்கும் துறைகள் ஏற்படுத்தல்.

# தேசபக்தர்கள் வழக்கு எதிரொலி

திருநெல்வேலி, தூத்துக்குடி மனிதர் (சுப்பிரமணிய சிவா, சிதம்பரம் பிள்ளை) இருவருக்கும் விதித்துள்ள தண்டனையைச் சிறிதும் ஆதரிக்க இயலாது. அடுத்த மெயிலில் அத்தீர்ப்பு என் பார்வைக்கு வரும். அத்தண்டனைகள் நிலைக்கா. கொடுமையான இக்காரியங்களை எக்காரணம் கொண்டும் நான் ஆதரிக்க முடியாது. இந்தப் பிழைகளையும், முட்டாள்தனங்களையும் நீங்கள் உடனே கவனிக்கவேண்டும். ஒழுங்கை நாம் நிலைநாட்ட வேண்டியதுதான். ஆனால், கொடுமை மிதமிஞ்சிவிடின், ஒழுங்கென்பது நிலைக்குமோ? மற்றும் வெடிகுண்டுக்கு அதுவே மார்க்கமாகும்.

— இந்தியா மந்திரி லார்டு மார்லி.
ராஜப்பிரதிநிதி லார்ட் மின்டோவுக்கு எழுதிய கடிதம்.

◇ ◇ ◇

தேசபக்தர் சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயத்திற்கும், சட்டத்திற்கும் விரோதமானது. பிள்ளையவர்களின் தியாகம் மகத்தானது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின்பால் நல்லெண்ணம் உள்ளவர்கள் கூட, இந்தக் கொடுந்தண்டனையை வரவேற்கமாட்டார்கள்.

— வெள்ளையர் பத்திரிகை ஸ்டேட்ஸ்மன்.

◇ ◇ ◇

பிள்ளையவர்களுக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையால் பிரிட்டிஷ் நீதி அதிகாரத்திற்கே அபகீர்த்தி உண்டாகிவிட்டது. விடுதலை வேட்கையை வெளியிட்டதற்காக இரண்டு ஜென்ம தண்டனை! இந்த அநீதி பிள்ளையைத் தவிர உலகில் வேறு எந்த மனிதருக்கும் நேர்ந்திராது. அந்த வீரப் பெருமகனுக்குத் தலை வணங்குகிறோம். நீதிபதி பின்ஹேயின் கருத்துப்படி, பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பதிலாக சுதேச ஆட்சியை விரும்புவதே அரச நிந்தனை! பிள்ளையைப் போன்று துன்பம் அனுபவிக்கும் ஒவ்வொருவரும் எதேச்சாதிகாரத்தின் பிரேதப் பெட்டியின் மேல் ஒவ்வொரு ஆணியை அறைகின்றனர்.

— கல்கத்தா அமிர்த பஜார்.

◇ ◇ ◇

இவ்வளவு கொடிய தண்டனை விதிக்கப்படுமென்று நாம் கனவிலும் கருதவில்லை. இந்த குற்றத்திற்கே இதற்குமேல் தண்டனையில்லை! நீதிபதி, சட்டபடியுள்ள அதிகாரம் முழுவதையும் பயன்படுத்திவிட்டார். தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளைக்கு நேர்ந்துள்ள துன்பத்தைக் கேட்டுஇந்தியா முழுதும் துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. நினைக்கையிலேயே மயிர்க்கூச்சரிக்கிறது; கை கூசுகிறது. இந்தத் துக்கத்தைத் தென்னிந்திய மக்கள் எப்படிச் சகிப்பார்கள்?.......... தேசாபிமானங்கொண்டு பொதுஜன நன்மைக்காக உழைத்தது அவருக்குக் கேடாய் முடிந்தது.

— சுதேசமித்திரன்.

Messrs. **DHIRAJLAL & COMPANY**

15, NEW QUEENS ROAD,

BOMBAY-4

Approved State Trading Corporation's Associates for Ball, Roller and Taper Roller Bearings, and also Dealers of well-known makes like NBC, ABC, SKF and FAG.

Sole Distributors for M/s. Steyr Daimler Puch AG., Steyr, (Austria), and Industriewerk Schaeffler Hersogenaurach WR., Nurenburg, (West Germany), for Needle Roller Bearings

TELEGRAM : 'VITOPUS' MADRAS TELEPHONE : 83561 (4 LINES)

**GANNON, DUNKERLEY & CO. (MADRAS) PRIVATE LTD.**

CIVIL, SANITARY & CONSTRUCTIONAL ENGINEERS

*Registered Office:*

**GDC Building, Cathedral Road, MADRAS-6.**

*SPECIALISTS IN*

DESIGN & CONSTRUCTION OF R.C.C. AND PRESTRESSED CONCRETE STRUCTURES TUNNELS, RESERVOIRS, BRIDGES, INFILTRATION GALLERIES, SEWAGE DISPOSAL AND OTHER WATER SUPPLY AND DRAINAGE SCHEMES, SANITARY INSTALLATION ETC.

*Managing Agents for:*

**Associated Industrial & Engineering Corporation Ltd.**

*GOING PLACES?*

*LEAVE IT TO*

# CAREWAYS (TRAVEL AGENTS)

*THEY TAKE GOOD CARE OF YOU*

●

*OFFICE:*
M-97, CONNAUGHT CIRCUS,
NEW DELHI-I.

*CALL: 43222*
*42709*

●

RECOGNISED BY INTERNATIONAL AIR TRANSPORT ASSOCIATION

# எது தேசீயம்?

தி. ஜ. ர.

கொஞ்ச நாளைக்கு முன் ஒரு கூட்டம் நடந்தது. தேசிய இலக்கியம் தோன்றவும் வளரவும் என்ன வழி என்பது பற்றி ஆராயத்தான் அந்தக் கூட்டம். நண்பர்கள் அவரவர்களுக்குத் தோன்றிய யோசனைகளைச் சொன்னார்கள். ஆனால், அடிப்படையான ஒரு விஷயத்தை யாரும் தொடவேயில்லை. அதாவது தேசிய இலக்கியம் என்றால் என்ன? அதுவா? அதுதான் எல்லோருக்குமே தெரியுமே. தேச பக்தர்களின் சரித்திரத்தை எழுதுவது; தேசத்தின் விடுதலைப் போரைப் பற்றி எழுதுவது; தியாகிகளைப்பற்றி எழுதுவது; தேசத்தின் பெருமைகளைப் பற்றி எழுதுவது – இவ்வளவுதானே! – இப்படியெல்லாம் கருத்துரைத்தார்கள்.

'தேசீயம்' என்ற சொல்லை முதலில் எடுத்துக் கொள்வோம். 'நேஷனலிஸம்' என்ற ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பே இது. அந்த ஆங்கிலச் சொல்லுக்குப் பல தொனிப் பொருள்கள் உண்டு. சில நல்லவை; சில அப்படி அல்ல. 'நேஷனலிஸம்' (அதாவது தேசீயம்') என்ற சொல்லின் சில பொருள்களை இங்கே பாருங்கள் :

1. அளவிறந்த தேசபக்தி; நாட்டின் சுயேச்சையிலே ஆர்வம்.
2. ஒரு நாட்டுக்கே உரிய தனி நோக்கும் தனிப் பண்புகளும்.
3, 'அயல் நாடெல்லாம் எக்கேடு கெட்டாலும், அயல் நாடுகளைக் கெடுத்தாவது, என் நாடு லாபம் அடைய வேண்டும்' என்ற ஆர்வம் கொள்வது.
4. ஸோஷலிஸத்தின் முதல்படியாக உடைமைகள் அனைத்தையும் அரசாங்க உரிமையாக்குவது.
5. 'என் நாட்டு மக்களே உலகம் முழுவதற்கும் முதன்மை வகிக்கக் கடவுளால் நியமிக்கப் பெற்றவர்' என்ற எண்ணங்கொள்வது.

அடிமைப்பட்ட நாடுகள், சோர்ந்து மங்கி விடுகின்றன. அவற்றுக்குத் தன்னம்பிக்கை போய்விடுகிறது. மற்றவரைப் பார்த்து அவை 'ஆ' என்று அங்காந்து நிற்கின்றன. தம் இழி நிலைக்கு மாற்றே கிடையாது என்ற திக்கற்ற உணர்ச்சி கொள்கின்றன. தம் பண்பாட்டிலும் இலக்கியத்திலும் ஆற்ற லிலும் வரலாற்றிலும் மதிப்பிழந்து விடுகின்றன. மக்களுள் ஒற்றுமை சிதைகிறது. இந்த நிலையிலே விடுதலை இயக்கம் தோன்றுகிறது. அது தேசபக்தியைத் தூண்டுகிறது. மக்கள் மெல்ல மெல்ல ஒற்றுமைப்படுகிறார்கள்; தன்னம்பிக்கைக் கொள்கிறார்கள்; பெருமை உணர்ச்சி கொள்கிறார்கள்; பண்பாட்டை வளர்க்கிறார்கள். வீரத்தையும் தியாகத்தையும் சமத்துவ உணர்வையும் 'தேசியம்' தூண்டுகிறது.

— இந்தக் கட்டம் வரையில், 'தேசியம்' என்பது சிறந்த பயனைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது.

ஆனால், இது குறிக்கும் நற்பலன்களோடு, சில அபாயங் களும் வளர்கின்றன. சிலருக்கு இந்த 'தேசபக்தி' என்பது சுயநலத்துக்கான ஒரு போர்வையாகிவிடுகிறது - சுலபமான போர்வை. 'தேசபக்தி' என்பதில் இங்கே 'இனப்பற்று' 'வகுப்புப் பற்று' 'சாதி சமயப்பற்று' இந்த எல்லாவற்றை யுமே சேர்த்துக்கொள்ளலாம். "பரம அயோக்கியன் புகலடை யும் இறுதியான போர்வை "தேசபக்தி" என்று டாக்டர் ஜான்ஸன் என்னும் பேரறிஞர் கூறியிருக்கும் வசனந்தான் பிரசித்தமாயிற்றே. தேசபக்தர் திருக்கூட்டத்திலே 'பசுத் தோல் போர்த்திய புலிகள்' எளிதிலே இடம்பெற்று விடுவது எங்கும் என்றும் நடக்கும் காரியம்.

தேசபக்தி ஆவேசம் வலுக்க வலுக்க, மனம் குறுகிவிடத் தொடங்கி விடுகிறது. குறுகிய தேசியம், நம்மைப் பரந்த உலகினின்றும் வேறுபிரித்துக் கிணற்றுத் தவளையாக்கி விடுவது மட்டும் அல்ல; வெறுக்கத்தக்க பண்புகள் சிலவற்றையும் நம்மிடம் தோற்றி வளர்க்கிறது. சூரியப் பிரகாசத்தைக் காணக் கண்மூடி இருண்ட வீட்டில் புகுந்து, கைவிளக்கொன்று வைத்துக்கொண்டு நிலைக்கண்ணாடியிலே நம்மைநாமே அழகு பார்த்துக்கொள்வதா? ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்ற உணர்சிமிக்க நூலாசிரியர் ஒரு பாட்டிலே சொல்கிறார்: "எங்கே எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங் கள்: அங்கே உள்ள தேசபக்தனின் தற்பெருமை ஒன்றே ஒன்றாய்த்தான் இருக்கிறது. 'உலகிலே முதன்மையான நாடு, மிகச் சிறந்த நாடு, என் தாய் நாடே' என்றுதான் அவன் பெருமை பேசுவான்." இந்த எண்ணத்தை அஸ்திவாரமாகக் கொண்டவனுக்கு உண்மை துலங்குமா? தயாளம் இருக்குமா?

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கவிஞனின் நோக்கு எங்கே, இது எங்கே? மலையும் மடுவுமாக இல்லையா?

ருஷ்ய ஞானி டால்ஸ்டாய், தேசபக்தியை 'மோசமான — கேடான — உணர்ச்சி; மூடத்தனமான கொள்கை' என்று பழிக்கிறார். காரணம் என்ன? "உலகில் தாங்களே சிறந்த மக்கள் என்றும், தங்கள் நாடே சிறந்தது என்றும் ஒவ்வொரு நாட்டினரும் நினைப்பார்களானால், அது வெறும் மன மயக்கம் என்பதுதான் வெள்ளிடையாய் புலப்படுகிறதே" என்று அவர் சொல்கிறார்.

'நாங்களே உயர்ந்தவர்; பிறர் சார்பற்றுத் தனித்தியங்க வல்லவர் நாங்களே; வடக்கையும் தெற்கையும் கிழக்கையும் மேற்கையும் வென்றவர் நாங்களே' என்பதுபோலெல்லாம் பேசும் உணர்ச்சிகொண்ட தேசியத்தை இன்னொரு பெரியவர் — அரசியல் நிபுணர் — குறைகூறும்போது, ஓர் உண்மையை எடுத்துக் கூறுகிறார். இத்தகைய தேசியம் சுத்த அபத்தம் என்பது அவருடைய கருத்து. இந்தத் தேசியத்தின் ஆதார உணர்ச்சியே மனித இனத்தின் வலுவாயிருக்குமானால், மக்கள் மாக்களாய்த் தான் இன்றும் இருந்து வருவார்கள். இந்தத் தேசியம் வெறும் அகம்பாவ உணர்ச்சி. ஆதி மனிதர் இருவர் இந்த உணர்ச்சியே

திரு. சி. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களது உருவப்படத்தைத் திறந்து வைத்து அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசுகிறார்.

கொண்டிருந்து, "நான் உன்னோடு சேரேன்; நீ என்னோடு சேராதே. எதற்காகக் கூட்டுச் சேரவேண்டும்? தன்னந் தனித்து வாழ எனக்கு வழிவகை தெரியும்; தன்னந் தனியாய் தற்காத்துக் கொள்ள எனக்கு வலிமை உண்டு" என்று ஒருவருக்கொருவர் சொல்லியிருப்பார்களானல் அன்றே மூலையிலேயே மனித குலம் அழிந்திருக்கும்; இன்றைய மனித சமுதாயம் பரிணமித்திருக்காது. இணையற்ற வலிமையும், மதி நுட்பமும் யுக்தியுமா மனித சமுதாயத்தின் மூலாதாரம். மனிதனைவிட வலிமை அதிகம் உடைய பிராணிகள் பல இருக்கின்றனவே; மதி நுட்பமோ இல்லையோ — யுக்தியில் மிகச் சிறந்த பிராணிகளும் எத்தனையோ இருக்கின்றனவே. அன்பும் கற்பனையும் சகிப்புமே மனிதனைக் கூட்டுறவு கொள்ளச் செய்தவை. இதை நாம் மறக்கலாமா? தனித்தியங்கும் வல்லமையும் இயல்புமே 'தேசியம்' என்றால், மனித சமுதாயத்தின் அடிப்படைக்கே உலைவைப்பதாகுமே அது. இது சரியா?

அப்படியானல், தேசியமே கூடாதா? அல்ல; அது வேண்டியதுதான். சர்வதேசக் கூட்டுறவின் — மனித குல இணைப்பின் சகோதரத்துவ உணர்ச்சியின் — வேற்றுமையிலே ஒற்றுமை காணும் மனப்பாங்கின் — அடிப்படையிலே எழுந்த தேசியம் வேண்டும். நம் நாட்டுத் தலைவர்களை மட்டும் உதாரணங் காட்டினல், காந்தி, டாகுர், நேரு இவர்களின் 'தேசியம்' நமக்கு வேண்டும். ஆண்டானும் அடிமையுமாயிருக்கும் கூட்டுறவைத்தான் அவர்கள் வெறுத்தார்கள். ஆண்டான் — அடிமை உறவு, ஆண்டானையும் கெடுக்கிறது; அடிமையையும் கெடுக்கிறது. ஆண்டான் அகம்பாவியாகிறன்; அடிமை வெறுப்பிலே மூழ்குகிறன்.

இந்தியா சுதந்திரம் பெற்றது குறித்துக் காந்தியை ஓர் ஆங்கில அறிஞர் இப்படிப் புகழ்ந்தார்: "காந்தி இந்திய நாட்டை விடுவிக்கவில்லை; எங்களையே — பிரிட்டிஷாரையே — விடுவித்தார். அகம்பாவத்திலுல் — சாம்ராஜ்ய வெறியால் — நாங்கள் அழிவதிலிருந்து எங்களை அவர் மீட்டார்" காந்தியை உலக மனுக் குலத்துக்கே உரிய உத்தமர் என்று உலக நாடுகள் அன்றே கொண்டாடத் தொடங்கி விட்டன. உலகின் பல மூலைகளிலிருந்தும் வந்த மாணவர்களுக்குப் போதிக்கும் அபூர்வமான கல்லூரியை டாகுர் நிறுவி நடத்தினர். காமன் வெல்த் கூட்டுறவில் இந்தியாவைச் சம பங்காளியாக்கி, உலகம் முழுவதிலும் சமாதானம் நிலவப் பாடுபட்ட பெருந்தலைவராய் விளங்கினர் ஜவஹர்லால் நேரு.

நமக்குத் தேசியம் வேண்டும். ஆனல், அதுபொய்யிலே, வீண் மயக்கத்திலே, வெறுப்பிலே, அகந்தையிலே பிறந்ததாக இருக்கக்கூடாது: உண்மையிலே, தெளிவிலே, அன்பிலே, பணிவிலே பிறந்ததாயிருக்கவேண்டும். நம் குறைகளைப்

பற்றிப் பேச அஞ்சக்கூடாது; அவற்றை விலக்கப் பாடுபட ஆவல் வேண்டும். பிறர் பெருமையைப் போற்ற வேண்டும். நமக்கு வாழ்வும் வலிவும் அறிவொளியும் நல்கும் கலை இலக்கியங்கள் மேலும் மேலும் தோன்ற வேண்டும். நமது பழமையோடும் ஒட்டி, உலகத்தோடும் ஒட்டி உயரும் பண்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது புது இலக்கியம் தன்மையிலே தேசியமாய், நோக்கிலே உலக இணைப்பாய்த் துவங்க வேண்டும். இத்தகையதுதான் உண்மையான தேசிய இலக்கியம்.

'தர்மமே ஒரு நாட்டை உயர்த்துகிறது' என்று பைபிள் நீதி மொழிகளுள் ஒன்று கூறுகிறது.

தர்மமே தேசத்தின் ஆத்மா.

சத்தியமே சிறந்த தேசபக்தி.

"தர்மத்தைச் செய்; சத்தியத்தைப் பேசு" என்பது நம் வேதவாக்கு.


★

எப்பொழுதும்

'கொரில்லா பிராண்ட்'

ட்ரை கலர்கள்

கோபால் வார்னிஷ்

லின்ஸீட் ஆயில்

டர்பென்டைன்

என்று

கேளுங்கள்

★

உற்பத்தியாளர்:

S. நாராயணன்,

19, வெங்கடாசல முதலி தெரு, சென்னை-3.

தந்தி: 'ஸேஃப்கார்ட்' தொலைபேசி: 33533.

*For all varieties of Inadian Raw Wool*
*Make on inquiry at*

**V. K. D.**

Phone: 63051 Grams: CHANDWOOL

**Messrs. V. K. DAVE & SONS,**

CARPET WOOL EXPORTERS,
177/79, KALBADEVI ROAD,
LAXMI HOUSE, 4th FLOOR,
**BOMBAY - 2.**

*Head Office:*
M/s VITHALBHAI K. DAVE & Co.,
BEAWAR.

*Agencies:*
M/s. RAMESHCHANDRA
HARSUKHLAL
BIKANER.
Also at Pali, Dessa (Joria)

MAN MADE FIBRES

FOR QUALITY YOU CAN COUNT ON

**SOUTH INDIA VISCOSE PRODUCTS**

RAYON YARN — Rated among the best - comparable to imported yarn. Available in 75, 100, 120 & 150 Deniers Bright. Cones, Hanks & Cakes.

STAPLE FIBRE — Superb in quality 1·5 D X 1·5"

The uniform excellence of South India Viscose Products is the result of collaboration with one of the world renowned producers, SNIA VISCOSA, ITALY; upto date machinery; and latest manufacturing technique.

*For further particulars contact:*

**SOUTH INDIA VISCOSE LIMITED,**

RACE COURSE, COIMBATORE-1.

PHONE: 3206 & 3207 SECY.: 3208 GRAMS: "VISCOSE"

STERLING-GF-138

# வ. உ. சி.

## சில நினைவுச் சுடர்கள்

பி. ஸ்ரீ.

மாணுக்கனுக இருந்த காலத்திலே வீரத்தமிழர் சிதம்பரம் பிள்ளேயின் ஆவேச அரசியல் கிளர்ச்சியை நன்கறிந்திருந்தேன். இவர் நாட்டுக்கு அரசியல் விடுதலையும் பொருளாதார விடுதலையும் ஒருங்கே தேட விரும்பினர். தமிழகத்தின் முடிசூடா மன்னராகவும், தென் இந்தியாவின் திலகராகவும் திகழ்ந்து, தேசியத்திற்கும் பரிபூரண சுதந்திரத்திற்கும் அஸ்திவாரக்கல் நாட்டிய பெரியாரிடம் எங்களுக்கு விசேஷ பக்தி ஏற்பட்டிருந்தது.

திருநெல்வேலி ஹிந்து கலாசாலேயில் ஹெர்பெர்ட் சாம்பியன் தலேவராக இருந்த காலம் அது. அவரிடம் நாங்கள் ஷேக்ஸ்பியர் நாடகம் முதலிய ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் கற்றதுடன், பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகை வாயிலாகத் தேச நாடகத்தையும் உலக நாடகத்தையும்கூட ஒருவாறு உணர்ந்து கொள்ளத் தொடங்கினேம். சாம்பியன் துரை அளித்துவந்த அறிவுப் பயிற்சியின் பயனுகப் பகுத்தறிவை உபயோகித்துப் பரிசிலனே செய்யும் ஆற்றலும் சமூகச் சீர்திருத்த விருப்பமும், சமுதாய சேவையில் ஆர்வமும் எங்களுக்கிடையே அதிகரித்தன. இத்தகைய மாணுக்கர்களுக்கு, வாழ்க்கையென்ற பெரிய கலாசாலேக்கு ஒரு வழிகாட்டியாகக் காட்சியளித்தார் செயல்-திறமைக்கும் தளராத ஊக்கத்திற்கும் ஒருவராகத் திகழ்ந்த சிதம்பரனுர்.

கலாசாலேயில் பேசும் கலேயையும் வாதமுறையையும் (ஆங்கில மொழியில்தான்) நாங்கள் கற்று வந்ததுடன், எங்களில் சிலர் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் ஆவல் கொண்டிருந்தனர். அதனுல், அந்தக் காலத்தில் பொதுக் கூட்டம் கூட்டிப் பேசும் முறையைப் பிரசித்தமாக்கி, அரசியல் - பணியை இன்றியமையாத சமுதாயப் பணியாகக் காட்டிய சிதம்பரனுர்* என்னேப் போன்ற மாணுக்கர்களுக்கு ஒரு லட்சிய புருஷராகத் திகழ்ந்ததில் அதிசயமில்லே.

* தாய் மொழியில் பேசிய இவரது வீரப் பேச்சும் நேர்மை — உணர்வும் தேச பக்தியைத் தூண்டியதுடன் என் தமிழ்க் காதலேயும் தீவிரமாக வளர்த்து விட்டது. எனினும், அந்த நாளில் இவரை நாங்கள் ஆங்கில சம்பிரதாயப்படி "வி. ஓ. சி." (V. O. C.) என்றுதான் குறிப்பிட்டு வந்தோம்.

1905-ம் ஆண்டில்—அதாவது வங்காளப் பிரிவினை நடந்து அரசியல்கிளர்ச்சி ஓங்கியிருந்த அந்த ஆண்டிலே சிறுவனாக இருந்த நான் வக்கீல் சாது கணபதியின் அலுவலகத்தில் சிதம்பரம் பிள்ளையை முதல் முதல் பார்த்தேன். சிந்தையின் துணிவும் செம்மையும் முகத்திலும் கண்களிலும் குதிகொண்டன. அப்போது அங்கே நடந்து கொண்டிருந்த சம்பாஷணையின் பயனாக, தேசபக்தியைக் காட்டிலும் வேதாந்த பக்தியே இவருள்ளத்தைக் கவர்ந்திருப்பதாய் ஊகித்துக் கொண்டேன்.

ஆனால், இவரது வேதாந்தம் அந்த நாளில் நம்மவர் பேசிக் கொண்டிருந்த போலிவேதாந்தம் அன்று. விவேகானந்தர் சுட்டிக்காட்டிய வீர வேதாந்த நெறியிலே சமுதாயப் பணியும் நாட்டுப் பணியும் புரிவது தான் நல்லதென்று எங்களுக்கும் இவர் புத்தி சொன்னார்.

விரைவில் இந்த 'வேதாந்தி' யின் பகீரத முயற்சிகளால், வங்க நாட்டிலே அரவிந்தரும், விபினசந்திரரும் நடத்திவந்த தேசியக் கிளர்ச்சியும், புனாவில் திலகர் தலைமையில் நடந்த அரசியல் கிளர்ச்சியும், தமிழ் நாட்டின் தென்கோடியிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மற்றத் தமிழ் ஜில்லாக்களைக் காட்டிலும் அதிகமாய்ப் பரவி விட்டன. பிள்ளையின் தேசபக்தி விவேகானந்த வேதாந்தத்தில் வேரூன்றி, திலகரின் அரசியல் ஞானம் என்ற நீர் பாய்ச்சப் பெற்று, ஒரு மதா வேசம்போல வளர்ந்துவிட்டது. அந்தத் தேசிய வெறியினால், தூத்துக்குடியும் திருநெல்வேலியும் கடல் கொந்தளிப்பதுபோல் கொந்தளிக்கத் தொடங்கி விட்டன. அந்தக் கொந்தளிப்பிலே சுக்கான் இழந்த கப்பல்போல் திரிந்தது மாணாக்கர்களின் உள்ளம்.

தமிழ் நாட்டிலே அந்நாளில், 'சுயராஜ்யம்' என்ற சொல்லை உச்சரிக்கவும் பயம்தான். 'சுதந்திரம்' என்றாலே 'ராஜநிந்தனை' என்று கருதிய விநோதப் பிறவிகளும் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்பட்டார்கள். 'ராஜபக்தி' என்றால் ஆறுயிரம் மைலுக்கு அப்பாலுள்ள ஆங்கில மன்னர் மீதும், அவரது சிங்காதனத்தின் மீதும் பக்தி விசுவாசம் என்பது மட்டும் அல்ல; இந்தியாவில் அந்நிய ஆதிக்கம் சட்டப்படி மிகவும் நியாயமாகவே ஏற்பட்டுநடைபெறுகிறது என்ற நம்பிக்கையும் கூட! இந்த நம்பிக்கையோடு, 'வெள்ளையர்களெல்லாம் தெய்வப் பிறவிகள்' என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறுவதும் சேர்ந்தது முழுராஜபக்தி!

அத்தகைய காலத்திலே, 'ஓட்டை உடைசல்' இல்லாத ராஜாங்க விசுவாசம். வெள்ளை அதிகாரிகள் என்றால் சிம்மசொப்பனமாக இருந்த நாளிலே — வெள்ளையருக்குச் சிம்மசொப்பனமாகி விட்டார் விரசிதம்பரனார்! 'வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே!' என்ற

*With Best Compliments*

*from*

**CENTRAL NEWS AGENCY**

CONNAUGHT CIRCUS

NEW DELHI-1

Telephone: 44762, 46516

பாரதி பாட்டைப் பாடிக் கொண்டே சிதம்பரம் பிள்ளை பேசும் கூட்டங்களுக்கு நாங்கள் போவதுண்டு.

சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனி ஆரம்பித்த காலத்தில் 'சர்வஜன மித்திரன்' என்ற ஒரு தமிழ்ப் பத்திரிகை திரு. எஸ். வேதமூர்த்தி முதலியாரால் நடத்தப்பெற்று வந்தது. அதில் என்னைப் போன்ற சிற்சில மாணுக்கர்களும் எழுதத் துணிந்து, எங்கள் கலாசாலைத் தலைவரின் அரசியல் — கருத்துக்களையும், உதவித் தலைவரான திரு. சீதாராமையரின் அரசியல் பிற் போக்கையும் கண்டித்துக் கட்டுரை வரைந்ததும் உண்டு. 'சர்வஜனமித்திரன்' பத்திராதிபரான வேதமூர்த்தி முதலியாரைத்தான் சிதம்பரம் பிள்ளை பிரான்சு தேசத்திற்கு அனுப்பி இரண்டு கப்பல்கள் வாங்கிவரச் செய்திருந்தார்.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே ஓடத் தொடங்கிய இந்தக் கப்பல்கள் பொதுமக்களுக்குத்தான் பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் எவ்வளவு நம்பிக்கையைப் பளிச் சென்று ஊட்டிவிட்டன! அக்காலத்து அதிகாரக் கோட்டையில்தான் எவ்வளவு பயத்தை மூட்டிவிட்டன!

கப்பலேறுவாயோ ?—அடிமை !
கடலைத்தாண்டு வாயோ ?

என்றும்,

ஓட்டம்நாங்கள் எடுக்கஎன்றே —
கப்பல்
ஓட்டினுய், பொருள் ஈட்டினுய் !

என்றும், கலெக்டர் விஞ்சு துரையின் கூற்ருகப் பாரதியார் முழக்குகிருரே, அந்த வாக்கில் வெள்ளை வியாபாரிகள். அதிகாரிகளின் பொருமையையும் உள் நடுக்கத்தையும் காண்பதுபோல், பொது மக்களின் பெருநம்பிக்கையையும் இதய ஆசையையும் காணத்தான் செய்கிருேம்.

அந்த இரண்டு கப்பல்களில் ஒரு கப்பல் ஓட்டை; மற்றதும் பின்பு ஓடவில்லை. அதனுல் திரு. சிதம்பரம் பிள்ளைக்கும் திரு வேதமூர்த்தி முதலியாருக்கும் இடையே நட்பு மாறி மனக்கசப்பும் ஏற்பட்டதாகக் கேள்விப்பட்டேன். எனினும், 1908-ம் ஆண்டில் பிள்ளை அவர்கள் ராஜத்துவேஷ வழக்கில் தண்டிக்கப் பெற்றபின்,

திரு. வேதமூர்த்தி முதலியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் திரு. சிதம்பரம் பிள்ளையின் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றைச் சென்னை மாநகரில் வெளியிட்டார்.

கப்பல் கம்பெனி விஷயமாகத் தமக்கும் பிள்ளைக்கும் இடையே ஏற்பட்டிருந்த மனஸ்தாபத்தையும் மறந்து, பிள்ளைக்குக் கிடைத்த கொடிய தண்டனையை நினைத்து நெஞ்சுருகி அந்தத் தியாகவாழ்வின் ஒரு நினைவுக் குறியாக இரு நூல்களை வெளியிட முன்வந்த திரு. முதலியார் அப்புத்தகம் ஒன்றிலும் தம் பெயரை ஆசிரியராக வெளியிட்டுக் கொள்ளவில்லை. நண்பர் பரலி. நெல்லையப்பர் மூலமாகத்தான் அந்த வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களின் ஆசிரியர் திரு. எஸ். வேதமூர்த்தி முதலியார் என்பது என்னைப் போன்றவர்களுக்குத் தெரிய வந்தது.

சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து விடுதலை பெற்றுச் சென்னைக்கு வந்ததும், அப்போது இங்கே தங்கியிருந்த திரு. வேதமூர்த்தி தம் பழைய நண்பரை ஆர்வத்துடன் போய் நேரில் சந்தித்தார். ஆனல், அவர்கள் ஒருமித்த கருத்துடன் முன்போல் பெரும் பணி ஒன்றும் புரிய முற்படவில்லை. சுதேசிக் கப்பல்களைப் போல் திரு. வேதமூர்த்தியின் பத்திரிகைக் கப்பல்களும் சரியாக ஓடவில்லை! ஆம்; திரு. வேதமூர்த்தி தமது சொந்த ஜில்லாவாகிய திருநெல்வேலியிலே இரண்டு வாரப் பத்திரிகைகள் நடத்திப் பார்த்தார். ஒன்று ஆங்கிலப் பத்திரிகையான 'பீபில்ஸ் கார்டியன்' (People's Guardian); மற்றது 'சர்வஜனமித்திரன்'. ஆங்கிலப் பத்திரிகை நின்ற பிறகு தமிழ்ப் பத்திரிகை ஆரம்பித்தார் என்று ஞாபகம்.

'திருநெல்வேலிப் பாலம்' என்று அந்நாளில் அழைக்கப்பட்ட திருநெல்வேலி ஜங்ஷனில் பெரிய ரஸ்தாவிலே இருந்தது 'சர்வஜனமித்திரன்' அலுவலகம். அந்த விலாசப் பலகையைப் பார்க்கும் போதெல்லாம், முதலியாரின் நினைவுகளும் சிதம்பரம் பிள்ளையின் நினைவுகளும் சேர்ந்து வரும் என் உள்ளத்திலே. வேதமூர்த்தியின் பத்திரிகைத் தமிழில் **வேகம்** உண்டு; ஆங்கில


**VISITING DELHI?**

*THEN*

*REMEMBER US FOR*

Excellent Boarding and Lodging in

SOUTH INDIAN STYLE

**The South Indian Boarding House**

*AND FOR*

Clean, Wholesome, Delicious North and Souh Indian Dishes

**Modern Coffee House**

(Opp. TELEPHONE EXCHANGE)

**Connaught Circus, New Delhi**

PHONE NO. 48188 GRAMS: 'SIBHOUSE.

நடையில் அழகு உண்டு; இரண்டிலும் ஆழம் உண்டு. வீர சிதம்பரனாரின் பேச்சுத் தமிழோ ஆழமும் வேகமும் உள்ள ஓர் ஆறு கரை புரண்டு வெள்ளமிட்டு வரும் அபாய அழகை நினைவூட்டும்!

### பாரதி பாட்டில் சிதம்பரனார்

1908-ல் சிதம்பரம் பிள்ளை மீது ஜாமீன் வழக்கு நடக்கும் போது, திருநெல்வேலி ஜில்லா கலெக்டராக இருந்த விஞ்சு துரைக்கும் இவருக்கும் நடந்த வாதங்களைக் குறித்து நாங்கள் கேள்விப் பட்டதையெல்லாம் திருநெல்வேலி ஆற்றங்கரை மணலில் உட்கார்ந்து கொண் டும் படுத்துக் கொண்டும் எங்கள் மனோபாவம் தோன்ற, வெகு உற்சாகமாய் விவ கரித்துக் கொண்டிருப்போம். 'சிதம்பரம் பிள்ளை மீது நன் னடத்தை ஜாமீன் வழக்கா? விஞ்சுதுரை போன்ற அன்னி யரல்லவா நன்னடத்தைக்கு ஜாமீன் கட்ட வேண்டும்?' என்று விகடமாய்ப் பேசுவதும் உண்டு.

நாங்கள் கச்சேரிக்கும் போய் விசாரணையைக் கவனித் ததும் உண்டு. திரு. சிதம்பரம் பிள்ளையுடன் சுப்பிரமணிய சிவா மீதும் இவ்வழக்கு நடை பெற்றது. முதல் முதல் விஞ்சு துரை தேசபக்தர்களுக்கு மரி யாதையாக ஆசனம் அளித்து விசாரணை நடத்தி வந்தார். எத்தனையோ சாதி சண்டை களும் சமயச் சண்டைகளும் மலிந்து, ஒற்றுமையும் அரசி யல்-ஞானமும் புயவலிமையும்


With the Compliments

of

THE EAST ASIATIC COMPANY (INDIA)

PRIVATE LIMITED

BOMBAY — MADRAS — DELHI — CALCUTTA

குன்றிப் போயிருக்கும் ஒரு நாட்டிலே சுயராஜ்ய முயற்சி வீண்தானே, அபாயம்தானே! என்று பொருள்பட ஜில்லா மாஜிஸ்திரேட் தம் விசாரணையினிடையே கூறியதுண்டு.

'வந்தேமாதரம்' என்ற யுத்த கோஷத்தைக் கொண்டு ஏழைகளையும் கோழைகளையும் சுயராஜ்யப் போர் வீரர்களாக்க இவர் உள்ளபடியே பெருமுயற்சி செய்து பார்த்தார் என்பது தெளிவாகிவிட்டது. திரு. சிதம்பரம் பிள்ளை கப்பலோட்ட முயன்றதால் தூத்துக்குடி வெள்ளையர்களின் கப்பல் வியாபாரம் கெட்டுப் போகுமே என்ற அச்சமும் கலெக்டர் துரைக்கு ஏற்பட்டது. பாதி அரசனும் பாதி வணிகனுமான ஒருவனை நரசிங்கமல்லவா பிரிட்டிஷ் சிங்கம்?

திரு. சிதம்பரம் பிள்ளையோ விஞ்சு துரையின் விநய எச்சரிக்கைகளுக்கும் அஞ்சவில்லை; சிங்க முகத்தின் பயமுறுத்தல்—கர்ஜனைகளுக்கும் கலங்கிப் போகவில்லை. இந்த நிலைமையைத்தான் பாரதியாரின் கவியுள்ளம் தமிழ்ப் பொதுஜன உள்ளத்திற்கு உகப்பான 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை' மெட்டுகளில் சம்வாத ரூபமாகப் பாடி வைத்திருக்கிறது.

இதனால் அந்த விசாரணைக்குத் தென் இந்திய அரசியல் சரித்திரத்தில் மட்டுமல்ல, தற்காலத் தமிழ் இலக்கியத்திலும் ஓர் இடம் கிடைத்துவிட்டது.

தொண்டுசெய்யும் அடிமை
உனக்குச்
சுதந்திர நினைவோடா ?

என்று தொடங்கும் பாடல்களும் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை'களைப் போல் நாடெங்கும் பரவி, எத்தனை தேசபக்த உள்ளங்களில் சுதந்திரக்கனலை மூட்டியிருக்கிறது!

கலெக்டர் துரைக்கும் தேசபக்த சிதம்பரனாருக்கும் இடையே நடந்த விவகாரம் பாரதியாரின் மனோபாவத்திலே கிடந்து அந்த இதய ஒலிபரப்பாக இன்றும் முழங்குகிறது.

சாதிச்சண்டை போச்சோ ? —
உங்கள்
சமயச்சண்டை போச்சோ ?

என்று விதேசி விஞ்சு 'சுதேசி' வீரரைக் கேட்டதாக அமைந்திருக்கும் அந்தக் கேள்வியில், அக்காலத் திருநெல்வேலி மாவட்டத்தின் எதார்த்த நிலையைப் பாரதியார் குறிப்பிடுகிறார் என்பதில் ஐயமில்லை. போலி ஆராய்ச்சிகளும் சாதி சமயப் பூசல்களை எங்கள் ஜில்லாவில் மூட்டிவந்த காலம் அது.

திரு. சிதம்பரம் பிள்ளையின் வீர சுதந்திரப் பேச்சுக்களால் சிறுமைக் குணங்கள் சற்றுப் பதுங்கிக் கிடந்தன. இவர் தண்டிக்கப் பெற்றுக் கோவை சென்றதும், எங்கள் மாவட்டத்தில் சோம்பல், சோர்வு, அச்சம், போலிவேதாந்தம், போலி ஆராய்ச்சி முதலான சிறுமைகளெல்லாம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்து

With Best Compliments

from

*

*

*

**HINDUSTAN MOTORS LIMITED**

With Compliments

from

A WELL WISHER

OF

DELHI TAMIL SANGAM

விட்டன. அந்தப் பிற்கால நிலையையும் ஆருடம் போல் பிரதிபலிக்கிறது பாரதி வாக்கு.

சேர்ந்து வாழு விரோ? — உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?
சோர்ந்து விழ்தல் போச்சோ?
உங்கள்
சோம்பல் துடைத்திரோ ?

என்ற விஞ்சு துரையின் கேள்வி யிலே.

ஆங்கில அதிகாரிக்கும் திரு. சிதம்பரம் பிள்ளைக்குமிடையே நிகழ்ந்த சம்வாத ரூபமாகப் பாரதியார் அமைத்திருக்கும் பாடல்கள் இந்தத் தேசபக்த மாவீரரின் ஒரு நினைவுக்குறி யாக நீண்ட காலம் விளங்கும் என்பதில் ஐயமில்லை. திரு சிதம் பரம் பிள்ளை 1908-ம் ஆண்டு ஜூலை மாதம் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றதும், மேலே சொன்ன பாடல்களைப் பகிரங்கமாய்ப் பாடுவதற்கு எங்களுக்குப் பயம்தான். எனினும், இந்தப் பாடல்களே பாடப் புத்தகங் களிலுள்ள பாடல்களைக் காட் டிலும் எங்களுக்குச் சுவை யுள்ளனவாகத் தோன்றின. இப்பாடல்களைப் பாடிப்பாடி வ. உ. சி. யின் வீரப் பேச்சுக் களையும், அந்த வீரத் திருமுகப் பொலிவையும், அந்தப் பேரன்பு ததும்பிய பார்வை யையும், நரகவாசம் போன்ற அந்தக் கொடிய சிறைவாசத் தையும்* நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்திருக்கிறேன்.

ஆயுள் – தண்டனை ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட் டதும், தாம் விரும்பியபடி தமிழ் நூல் எழுதச் சிறையில் இவருக்கு வசதி கிடைத்ததும், தேசபக்தர்களின் உள்ளத் திற்கு ஒருவாறு ஆறுதல் அளித்தன. **ஜேம்ஸ் ஆலன்** என்பவரின் புத்தகங்களை 'மனம்போல வாழ்வு' 'அகமே புறம்' என்ற அழகான தலைப் பெயர்களுடன் இவர் சிறை யிலே தமக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் மொழி பெயர்த்திருக்கிறார். பிள்ளை அவர்கள் மொழிபெயர்த்தவை என்று இந்த ஜேம்ஸ் ஆலன் புத்தகங்கள் மீது எனக்கு ஒரு வகைப் பற்று உண்டு.

வேறுவகையிலும் திரு. சிதம் பரம்பிள்ளை சிறையிலே தமிழ்த் தொண்டு புரிந்திருக்கிறார். திருக்குறள் ஆராய்ச்சியையும் அங்கே விசேடமாகச் செய் திருக்கிறார். திருக்குறளுக்கு மணக்குடவர் என்ற பழைய உரையாசிரியர் எழுதியிருந்த உரையை வ. உ. சி. புதிதாக

* திரு. சிதம்பரம் பிள்ளை கோயம்புத்தூரில் சிறைவாசம் செய்த காலத்திலே சுமார் ஓராண்டு நானும் கோயம்புத்தூரில் தங்க நேர்ந்தது. எனக்குக் கலாசாலைத் தலைவராக இருந்து பிறகு கல்வி இலாகா அதிகாரியாகி விட்ட ஹெர்பெர்ட் சாம்பியன் முதலானவர்களுக்கு நான் தமிழாசிரியனாக இருந்த காலம் அது. கோயம்புத்தூர்ச் சிறையில் பிள்ளை அவர்கள் மாடு போலச் செக்கு இழுத்துக்கொண்டிருந்த அந்தக் கோர நிகழ்ச்சியை அறிந்து நாடு திடுக்கிட்டது. 'சிறைக்குள்ளே தள்ளுவேன், பழி கொள்வேன்!' என்று பாரதியார் பாட்டிலே விஞ்சு துரை சொல்லுகிறபடி 'ஐயோ, பழி கொண்டாரே!' என்று துடித்தேன்.

அச்சிட்டு வெளியிட்டதும், அந்த உரையையும் நானும் ஆவலாகப் படிக்கத் தொடங்கினேன். இவர் சொந்தமாக குறளுக்கு எழுதிய உரையும் வள்ளுவர் கல்வியில் மேலும் மேலும் பயிற்சி பெற்று ஆராய்ச்சி நடத்த எனக்கு ஒரு தூண்டுகோலாகத் தோன்றியது. தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையை இவர் வெளியிட்டபின், நானும் பொருளதிகாரத்தை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினேன்.

## பிள்ளையின் குழந்தையுள்ளம்

சிதம்பரம் பிள்ளை சிறை புகுந்த காலத்தில், சிறைவாசம் என்றால் எல்லாருக்கும் ஒரே நடுக்கம்தான் என்பது மட்டுமல்ல; அது ஒரு பயங்கரமான சமூக அவமதிப்பும்கூட! பின்னாளில் காங்கிரஸ்காரர்கள் அனுபவித்த சிறைவாசம் அன்று வ. உ. சி. அன்று சிறை புகுந்து அடைந்த நரகவாசம்! தங்கள் ஆட்சிக் கொடுமையை ஒழிக்கத் துணிந்தவரை அநாகரிகக் கொடுமையுடன் தண்டித்துச் சிறையிலும் வேண்டுமென்றே மிகவும் கொடுமையாக அதிகாரிகள் நடத்தி வந்தார்கள். ஆனால் அத்தனை கஷ்டங்களும் இவர் உடலை வருத்தினவே அன்றி, வீர உள்ளத்தைக் கெடுத்து விடவில்லை. இந்த வீர உள்ளம் ஸாராம்சத்தில் ஒரு ஞானக் குழந்தை யுள்ளம் தான்!

'இன்னிலை' என்ற ஒரு நூலைப் பதினெண்கீழ்க்கணக்குகளில் ஒன்று என்று இவர் வெளியிட்டிருக்கிறார். அதன் கையெழுத்துப் பிரதியைப் பழைய ஏட்டின் பிரதியென்று ஒரு பண்டிதர் இவர் கையில் கொடுத்தார். அவரை நம்பித்தான் சிதம்பரனார் அதை வெளியிடலானார். உண்மையில் அந்தப் பிரதி ஒரு விசுவாமித்திர சிருஷ்டிதான்! அதற்காக அவர் சிதம்பரனாரிடம் பணம் பெற்றுக்கொண்டார். அதே போலிப்புலவர் பேரறிஞர் வ.வே.சு. ஐயரையும் ஒரு தடவை ஏமாற்றிவிட்டார்!

பிள்ளையின் குழந்தையுள்ளத்திற்கு இன்னும் ஓர் உதாரணம் நினைவிற்கு வருகிறது. ரஸிகமணி டி. கே. சி. கம்பன் பாடல்களைத் திருத்தி வருகிறாரென்று, திரு. சிதம்பரம் பிள்ளையும் திருக்குறளையே திருத்த ஆரம்பித்துவிட்டார்! ஒரு சமயம் என் நண்பர்களில் ஒருவரிடம் சிதம்பரம் பிள்ளை தமது திருத்தங்களில் சிலவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவரும் ஒரு சீடரைப் போல் அந்தத் திருத்தங்களைக் குறித்துக் கொண்டிருந்தார். திரு. சிதம்பரம் பிள்ளை விடை பெற்றுச் சென்றபின், அந்த நண்பர் என்னை நோக்கித் தாம் அந்தப் பாட பேதங்களை ஒப்புக்கொள்ளவில்லையென்றும், அந்தப் பெரியாரின் பொன்னான குழந்தையுள்ளத்தைப் புண்ணாக்க வேண்டாமென்றே அத் திருத்தங்களை எழுதிக் கொண்டதாகவும் சொன்னார்!

*With Compliments from*

# DGL PRIVATE LIMITED

*Manufacturers of*

COMPLETE RANGE OF
FIRE FIGHTING EQUIPMENT &
APPLIANCES, INCLUDING FIRE ENGINES

CENTRALISED LUBRICATION EQUIPMENT

GARAGE SERVICE STATION EQUIPMENT

LIGHT ENGINEERING STORES

*Registered Office:*

14, M-BLOCK, CONNAUGHT CIRCUS,
NEW DELHI-1.

PHONE: 45028-29 GRAMS: GARAGE

*Branch:*

10, SHAHNAJAF ROAD, HAZRAT GANJ,
LUCKNOW.

*Factory Unit No. 1*
19-A, Najafgarh Road,
New Delhi-15.
Phone: 51116

*Factory Unit No. 2*
Delhi Mathura Road,
14.6 Mile Stone,
Faridabad.
Phone: 82-240

திரு. சிதம்பரம் பிள்ளையின் தமிழ்க் காதலையும், ஆராய்ச்சித் திறனையும்கூட லேசாக மதிப்பிடுவது சரியன்று. சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் இவர் வறுமைக்கு உட்பட்டிருந்தார். தமிழ்நாடு இவருக்கும் இவரது முயற்சிகளுக்கும் ஆதரவு தரவில்லை. அப்படியிருந்தும், தமிழ்க் காதலிலே, தமிழ் ஆராய்ச்சியிலே தமது துயர்களை மறக்க முயன்றார்.

## நெருங்கிப் பழகினேன்!

திரு. சிதம்பரம் பிள்ளை ஜஸ்டிஸ் கட்சியை அபிமானித்து அந்தச் செல்வாக்கினால் கோயில்பட்டியில் வழக்கறிஞராக இருக்கிறார் என்று கேள்விப்பட்டுப் பார்க்கப் போனேன். பாரதியார் இறந்து போன மறுவருஷம் என்று ஞாபகம். மாணாக்கனாக இருந்த காலத்தில் நான் இவரைத் தூத்துக்குடியின் பிரபல வழக்கறிஞராகவும் தேசப் பெருந் தலைவராகவும் பார்த்திருந்த கண்களால் கோயில்பட்டியில் சாதாரண வழக்கறிஞராக உழைத்து வந்ததையும் பார்த்தேன். என் பிள்ளைப் பிராயத்தில் அரசியல் குருவாக என்னால் மதிக்கப் பெற்றிருந்த பெரியார் சற்றும் கூச்சமின்றி என்னை ஒரு தோழனாக மதித்துப் பழகத் தொடங்கிவிட்டார். நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களானோம்.

இந்த நிலைமையிலும் பிள்ளை அவர்க்கு வகுப்புப் பகைமையாவது வகுப்பு வாத உணர்ச்சியாவது சிறிதும் கிடையாது. தேசிய உணர்ச்சியைக் காட்டிலும் இலக்கிய உணர்ச்சி அதிகமாக இருந்தது என்று சொல்லலாம். நான் பார்த்தபோதெல்லாம் திருக்குறளும் கையுமாயிருப்பார். கம்பராமாயணத்திலும் விசேஷ விருப்பம் உண்டு.

அப்போது நான் கோயில்பட்டியில் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் செய்தேன். திரு. சிதம்பரம்பிள்ளை தவறாது வருகை புரிந்து சிறப்பித்தார். தலைமை தாங்கிச் சிறப்பித்ததும் உண்டு. வள்ளுவரையும் கம்பனையும் தமிழர் அனைவரும் கற்க வேண்டுமென்று இவர் அந்த நாளில் அடிக்கடி நண்பர்களிடம் கூறுவதுண்டு. '**அது** தர்ம சாஸ்திரம்; **இது** சகோதர தர்ம சாஸ்திரம்; அதன் விளக்கம் இது என்று கூறுவார்.

ஒரு சமயம் ராவணனுடைய கிங்கரர்கள் அனுமனால் வதம் செய்யப்பட்டதை வருணிக்கும் கருவியைப் பிரசங்கத்திநிடையே குறிப்பிட நேர்ந்தது. 'அவர்கள் கூட்டங் கூட்டமாக அவிந்து போனார்கள்' என்பதற்குக் கவிஞன் உபமானம் காட்டுகிறான். ஒரு நீதிமன்றம். அங்கே சாட்சிக் கூட்டில் நிற்கிறான் ஒருவன், அஞ்சாமல் நெஞ்சறியப்பொய் சொல்லுகிறான் ஏதோ, லாபம் கிடைத்துவிடும் என்று. ஆனால் கிடைப்பதென்ன? 'ஐயோ, வம்ச நாசமாகப் போகிறானே!' என்று ஒரு காட்சியை அகக் கண் முன் காட்டி, அப்படிக் கூட்டங் கூட்டமாக அவிந்து போகிறார்கள். போர்க்களத்

திலே சிங்கரர்கள் என்பதை உணர்த்துகிறுன் கவிஞன் இப்படிப் பாட்டை நான் விளக்க முயன்றதும் திரு. சிதம்பரம் பிள்ளை மாலைமாலையாகக் கண்ணீர் வடித்தார் ?

நானும் மற்றவர்களும் அதிசயமாய் இவரை உற்று நோக்கினேம். தழ தழத்த குரலில் இவர் எங்களை நோக்கி 'சாட்சிகள் மட்டுமா? வக்கீல்களாகிய நாங்களும் அப்படித்தானே சில சமயங்களில் நெஞ்சாரப் பொய் சொல்லவும் துணிகிறோம். நீதிக்கோயிலிலே!' என்று சொன்னர். 'என்ன தங்கமான இதயம்!' என்று நான் திகைத்து, 'இன்று இவரைப் புதிதாக அறிந்து கொண்டோம்' என்று எண்ணமிடலானேன்.

பிரசங்கம் முடிந்ததும் திரு. பிள்ளை அவர்கள் என்னைத் தம் இல்லத்திற்கு அழைத்துக் கொண்டுபோனர். 'நீங்கள் சொன்ன அந்தப் பாட்டைக் கேட்டபிறகு இந்த வக்கீல் தொழிலும் பாவமானதுதான், விட்டுவிடலாமா என்றே தோன்றுகிறது என்ருர். திருக்குறளை ஓதி ஓதிப் பண்பட்டிருந்த உள்ளத்தை அந்தக் கம்பன் பாட்டு அந்தப் பாடுபடுத்தியதில் அதிசயமில்லை என்று எண்ணினேன்.

சில ஆண்டுகளுக்குப் பின்பும் நான் இவரைச் சந்தித்தது உண்டு. மறுபடியும் சுதந்திர உணர்ச்சியும் அதிகரித்திருக்கக் கண்டேன். நாடோ அந்தக் கடைசிக் காலத்திலும் இவரை உள்ளபடி உணர்ந்து கௌரவிக்கத் தவறிவிட்டது என்றே நினைக்கிறேன்.

1936-ம் ஆண்டின் இறுதியில் திரு. சிதம்பரம்பிள்ளை இறந்ததைக் கேள்வியுற்றதும் இளமைப் பருவத்திலிருந்து நான் இவரால் அடைந்திருந்த நன்மைகளை நினைத்து நினைத்து வருந்தினேன். தமிழ்க்காதலிலும் தேசக்காதலிலும் எத்தனையோ பெரியோர்களுக்குக் கடன் பட்டிருக்கிறேன், பாரதியாருக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறேன். எனினும் பிள்ளை அவர்களுடன் பழகியது போல் பாரதியாருடனும் நான் நெருங்கிப் பழகியதில்லை.

தமிழ் நாட்டிலே தேசிய இயக்கம் நிலைபெறுவதற்கு ஒரு பெருங்காரணமாகமிருந்த திரு. சிதம்பரம் பிள்ளைக்கு என் வாழ்க்கையை உருவாக்கியதிலும் ஒரு முக்கியமான பங்கு உண்டு. ✲

---

**வரும்பொருள் உரைத்தல்**

பிள்ளையவர்கள், இம்மண்ணுலகை விட்டுப் பிரியுந் தருவாயில், அதாவது 1936-ஆம் ஆண்டிலேயே, "கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்திய நாடு சுதந்திரம் எய்துவது திண்ணம்" என்று கூறிப் போனர். இவரது ஆழ்ந்த அரசியல் அறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென்று கூறுவது !

— 'கப்பலோட்டிய தமிழன்' என்ற நூலில் ம. பொ. சி.

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## செயற்குழு - 1964

*

| | |
|---|---|
| தலைவர் : | திரு கே. வி. வெங்கடாசலம் |
| துணைத் தலைவர் : | திரு ஆர். வேங்கடேசன் |
| நிருவாகத் துணைத்தலைவர்: | திரு சாலை இளந்திரையன் |
| பொதுச் செயலாளர் : | திரு சு. ஜெயராம் |
| இணைச் செயலாளர் : | திரு வே. பார்த்தசாரதி |
| பொருளாளர் : | திரு எஸ். குருஸ்வாமி |
| வட்டாரச் செயலாளர்கள்: | |
| கரோல்பாக் பகுதி : | திரு கே. அருணாசலம் |
| விநயநகர்ப் பகுதி : | திரு பி. பி. ஜீவன்ராவ் |

(கன்னாட் பிளேஸ் தலைமை நூலகம், விநயநகர், கரோல்பாக் கிளை நூலகங்கள்)

| | |
|---|---|
| நூலக நிர்வாகிகள் : | திரு எஸ். சங்கரன்<br>திரு சேது கிருஷ்ணமூர்த்தி<br>திரு வேங்கடகிரி<br>திரு எஸ். சுப்பிரமணியன் |
| உறுப்பினர்கள் : | திரு வி. வைத்தியநாதன்<br>திருமதி அம்புஜம் கிருஷ்ணமூர்த்தி<br>திரு டி.வி.நாராயணஸ்வாமி<br>திரு ஆர். எஸ். வேங்டேசன்<br>திரு கே. பி. பாலன்<br>திரு ஆர். விசுவநாதன் |
| கணக்குத் தணிக்கையாளர்கள் : | திரு எஸ். எஸ். வெங்கடராமன்<br>திரு கே. கே. சுந்தரமூர்த்தி |
| 'சுடர்' நிருவாக ஆசிரியர்: | திரு தி. கோ.அனந்தசுவாமி |

* தலைநகரில் வாழும் தமிழ் அன்பர்களை ஒன்றுகூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை அனுபவிக்கச் செய்கிறது.
* தமிழகக் கவிஞர்களையும் ஏனைய பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.
* பொங்கல், புத்தாண்டு போன்ற தமிழ் விழாக்களைக் கொண்டாடுகிறது.
* சத்தியமூர்த்தி நினைவு நூல்நிலையம், இலவச வாசகசாலை, இலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது.
* ஆண்டுதோறும், **'சுடர்'** மலரை உயர் கலை மலராக வெளியிடுகிறது.
* தலைநகர மக்களுக்கு நல்ல தமிழ்நூல்கள் கிடைக்க வசதி செய்கிறது.
* அவ்வப்போது, கருத்தரங்குகள் மூலம் தமிழ் மொழி, தமிழரைப் பற்றிப் பிற மொழியினரும் அறிந்து கொள்ள வழி செய்கிறது.
* பிற மொழிகளின் இலக்கியச் செல்வங்களை தமிழ்ப் பெயர்ப்பு நூல்கள் மூலம் அறிந்து கொள்ள வகை செய்கிறது.

PRODUCTS
OF
DISTINCTION
KNOWN
THROUGHOUT
THE WORLD
MAHLE
PISTONS
Known for their reliability, efficiency, durability and high performance
ORIGINAL
GOETZE
PISTON RINGS AND
CYLINDER LINERS
Engineered to outperform and outlast all other rings and cylinder liners
SÜKO
PISTON PINS
Manufactured under licence:
Sole Selling Agents:
ESCORTS LIMITED
AUTOMOTIVE DIVISION, BLOCK H,
CONNAUGHT CIRCUS, NEW DELHI
FALCON/AMD/304

*You Cannot*

*afford to miss*

# The Statesman

◆◆◆◆

FOR NINE CONSECUTIVE YEARS
WINNER OF THE GOVERNMENT
AWARD FOR EXCELLENCE IN
PRINTING.

1872 செப்டம்பர் 5–வ. உ. சிதம்பரம் பிறப்பு.

1895 வ. உ. சி. – வள்ளியம்மையார் திருமணம்.

1900 தூத்துக்குடியில் வக்கீல் தொழில்.

1901 வள்ளியம்மையார் மறைவு.

1906 சுதேசிக் கப்பல் கம்பெனி தோற்றம்.

1907 சூரத் காங்கிரசில் வ. உ. சி.

1908 நெல்லை தேசாபிமான சங்கம்.

1908 மார்ச் 9 ஆம் தேதி நெல்லையில் பிபின்சந்திரபாலர் விடுதலை விழா.

1908 மார்ச் 13 ஆம் தேதி – நெல்லை எங்கும் கடையடைப்பு, ஊர்வலம்.

1908 மார்ச் 23 ஆம் தேதி – நெல்லையில் வ. உ. சி. மீது அரச நிந்தனை வழக்கு.

1908 மார்ச் 12 ஆம் தேதி – சிதம்பரனுர், சிவா கைது.

1908 ஜுலை 7 ஆம் தேதி – நீதிபதி பின்ஹே வழங்கிய தீர்ப்பு: அரச நிந்தனைக்குப் பத்து ஆண்டு; சிவாவுக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்குப் பத்து ஆண்டு – ஆக இருபதாண்டு தீவாந்தர தண்டனை.

1908 அக்டோபர் 13 ஆம் தேதி– உயர்நீதிமன்றத்தில் அப்பீல்.

1908 நவம்பர் 4 ஆம் தேதி – நீதிபதிகள் மன்றோ, ஆர்னல்டு ரைட் வழங்கிய தீர்ப்பு; அரச நிந்தனைக்கு – 6 ஆண்டு; சிவாவுக்கு உடைந்தை 4 ஆண்டு; (ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும்) – ஆக 6 ஆண்டு தீவாந்தர தண்டனை. (பிரிவு கவுன்சில்) அப்பீலில் தீவாந்தர தண்டனை 6 ஆண்டுக் கடுங் காவல் தண்டனையாக மாற்றப்பட்டது.)

1911 ஜுன் 17 ஆம் தேதி – நெல்லை கலெக்டர் ஆஷ் துரை மணியாச்சியில் கொலை.

1912 டிசம்பர் – வ. உ. சி. விடுதலை.

1920 வ. உ. சி. பங்கு கொண்ட கல்கத்தா காங்கிரஸ் (இதன் பின் கொள்கை வேறுபாடு காரணமாகக் காங்கிரசி லிருந்து விலகினுர் வ. உ. சி.)

1927 மீண்டும் காங்கிரசில் சேருதல்.

1934 " திருக்குறள் – வ. உ. சி. விருத்தியுரை " திருச்செந்தூரில் அரங்கேற்றம்.

1936 செப்டம்பர் – வ. உ. சி. நோய்வாய்ப்படுதல்.

1936 நவம்பர் 18ஆம் தேதி புதன்கிழமை பின்னிரவு – வ.உ.சி. யின் வாழ்வு நிறைவு.

1939 சென்னை இராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தில் வ.உ.சி. முக உருவச்சிலை திறப்பு.

1945 பிப்ரவரி 9ஆம் தேதி – வ.உ.சி.யின் பெயரால் அமைந்த கப்பலின் (தூத்துக்குடி – கொழும்பு) போக்குவரத்துத் தொடங்கியது.

பாரதி விழாவையொட்டி நடைபெற்ற நினைவுத் திறனுப்வுப் போட்டியில் பரிசுபெற்ற சிறுவன் வாசுவுக்கு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பரிசு வழங்கினர்.

*With Compliments*

Shree

# BAIDYANATH AYURVED BHAWAN PRIVATE LTD.

**CALCUTTA - PATNA - JHANSI - NAGPUR - ALLAHABAD**

**Baidyanath Chyavan Prash**
**Basant Kusumakar Rasa**
**Sidha Makar Dhwaj**

**Baidyanath Drakshasava**
**Ashokarishta**
**Janam Ghuti**

Leading Ayurvedic and Patent Medicines Manufacturers in India.

# வ. உ. சி. ஒரு பதிப்பாசிரியர்

நாரண - துரைக்கண்ணன்

வ. உ. சி. ஒரு சிறந்த **தேச பக்தர்** என்பதுதான் தமிழக மக்களுக்குத் தெரியும். வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கிய வ. உ. சி. நாட்டுப் பற்று கொண்டிருந்ததுபோலவே, தாய் மொழிப் பற்றுங்கொண்டிருந்தார்; தம்முடைய வாழ்க்கை வரலாற்றைக் கவிதையிலே பாடக் கூடிய அளவுக்குத் தமிழ் இலக்கியத்தில் அவருக்குப் பெரும் புலமை இருந்தது. அவருடைய நண்பரான **பரலி. சு. நெல்லையப்பர்** வெளியிட்டுள்ள **வ. உ. சிதம்பரம் பிள்ளையின் சுய சரிதை'** என்ற கவிதை நூல் ஒன்றே இதற்குப் போதிய சான்று பகரும். இதுவன்றி, அவர் தம் தந்தைக்கும் அருமை மனைவிக்கும் நண்பர்களுக்கும் கடிதங்கள் எழுதுகையிலும் கவிதையைக் கையாண்டிருக்கிறார். முதல் மனைவியின் பிரிவாற்றுமையைத் தெரிவிக்கையிலும் இவர் கவிதையிலேயே வெளிப்படுத்தியிருக்கிறார்.

வ. உ. சி. **மெய்யறம், மெய்யறிவு** என்ற பெயர்களில் நீதி நூல்களை இயற்றியிருக்கிறார். 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று மகாகவி பாரதியார் பாடுவதற்கு முன்பே இவர் **ஜேம்ஸ் ஆலன்** என்ற ஆங்கில அறிஞரின் நூல்களை, **'அகமே புறம்', 'மனம் போல வாழ்வு', 'வலிமைக்கு மார்க்கம்'** என்ற தலைப்புகள் தந்து தமிழாக்கித் தமிழ்மக்கள் படித்துப் பயன் பெறுமாறு செய்திருக்கிறார்.

இராஜாஜி முதலியோருக்குத் **'திருக்குறள்'** முதலிய சிறந்த தமிழ் நூல்களை வ. உ. சி. பாடஞ் சொல்லித் தமிழ் இலக்கிய அறிவைத் தமிழ் நாட்டில் பரவ வைத்திருக்கிறார்.

இவ்விதம் தேச பக்தரான இவர் தமிழ் இலக்கியத் தொண்டு செய்திருப்பது தமிழ் மக்கள் ஒரு சிலருக்குப் பரவலாகத் தெரிந்திருக்கலாம்.

ஆனல், இவர் ஒரு பதிப்பாசிரியர் என்பது பலருக்குத் தெரியாது. அதுவும், திருக்குறள், தொல்காப்பியம் போன்ற தமிழிலக்கியங்களிலேயே தலைசிறந்த நூல்களைப் பழைய உரைகளுடன் பதிப்பித்திருக்கிருர் என்ற உண்மையைப் பெரும்பாலார் அறிய மாட்டார்கள்.

பொதுவாக, தமிழ் நூல் பதிப்பாசிரியர் என்ருல், மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்களை எல்லோர்க்கும் தெரியும். அடுத்தபடியாகத்தான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களை, தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் உள்ளவர்களுக்குத் தெரியும். ஆறுமுக நாவலர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை, சேற்றூர் ரா. சுப்பிரமணியக் கவிராயர், யாழ்ப்பாணம் சாமிநாதப் பிள்ளை, குமார சாமிப் பிள்ளை, வை. மு. சடகோபராமாநுஜாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், தி. த. கனக சுந்தரம் பிள்ளை முதலிய அனேக பேரறிஞர்கள் சங்கத்தமிழ் இலக்கியங்களையும் பிற நூல்களையும் பதிப்பித்திருந்தாலும், சாமிநாத ஐயரவர்களுக்கு இத்துறையில் ஏற்பட்டுள்ள பெரும் புகழ் மற்றவர்களுக்கு ஏற்படவில்லை. இந்நிலையில் வ. உ. சி. தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் என்று தமிழ் மக்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

வ. உ. சி. முதன் முதலாக, திருக்குறள் நூலுக்கு உரை எழுதிய பதின்மரில் பரிமேலழகருக்கு அடுத்தபடியாகப் பாராட்டப்பட்டுவரும் மணக்குடவர் என்பாரின் பழைய உரையை (அறத்துப் பாலுக்கு மட்டும்) பதிப்பித்து வெளியிட்டிருக்கிருர். இப்பதிப்பைப் பதிப்பிக்கும் விஷயத்தில் இவர் சிருஷ்டி, திதி, சம்மாரம் ஆகிய முத்தொழிலையும் செய்திருப்பதாகத் தாம் எழுதிய பதிப்புரையில் குறிப்பிட்டிருக்கிருர்.

வ. உ. சி. தம் கடைசி காலத்தில் தொல்காப்பியம் என்ற தமிழ்ப் பேரிலக்கண நூலுக்கு இளம்பூரணர் என்ற பழைய உரையாசிரியரின் உரையை நல்ல முறையில் பதிப்பித்துப் பல பகுதிகளாக வெளியிட்டிருக்கிருர். பழம் பெருந் தேசபக்தரும் 'தமிழ் நாடு' என்ற பழைய தினசரிப் பத்திரிகையின் ஆசிரியருமாயிருந்த டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் உதவியுடன் வ. உ. சி. பதிப்பித்து

வெளியிட்டுள்ள தொல்காப்பியம் இளம்பூரணர் உரை பதிப்பு பல வகையிலும் சிறப்பு மிக்க பதிப்பாகும்.

ஆகவே, வ. உ. சி. பழம்பெருந் தேச பக்தர் என்பதைவிட, சுதேசிக் கப்பல் கம்பெனியொன்றை ஏற்படுத்தி, கரிகாலன் என்ற சோழ மன்னனுக்குப் பின் திரை கடலில் கப்பல் ஓட்டிய தமிழன் என்பதைவிட, தமிழ் நூலாசிரியன், மொழி பெயர்ப்பாசிரியன் என்பதைவிட, திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய முதல் பெருநூல்களைப் பதிப்பித்து வெளிட்ட பதிப்பாசிரியன் என்பதே எம் போன்றாரின் கருத்தைக் கவர்வதாகவும், பாராட்டுப் பெறுதற்குரிய தொன்றாகவும் இருக்கிறது. தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படுகையில், வ. உ. சி. புரிந்துள்ள தமிழ் இலக்கியப் பணிகளில் திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய வைகளைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் பணிதான் முக்கிய மாகக் குறிப்பிடப்படும் என்பது திண்ணம்.

★


ரிஜிஸ்டர்டு நெ. 111866.

தந்தி : ஸ்வஸ்திக்
போன்: நெ. 2.

எல்லோரும் விரும்புவது

**ஸ்வஸ்திக் வேதாரண்யம்**

ஸ்பெஷல்

**15 நயாபைசா பிளாஸ்டிக் பொட்டலங்கள்**

ஜி. டி. ஈரண்ணு,
ஸ்வஸ்திக் புகையிலை
கேன்வாஸிங் ஏஜண்டு,
மைசூர் ஸ்டோர்ஸ்,
நெ. 20 நியூ முனிசிபல்
மார்க்கெட், லோடி காலனி
நியூ டெல்லி – 3.

சேல்ஸ் டெப்போ,
559 பூந்தமல்லிஹைரோடு,
மதராஸ்–3.

போன் : நெ. 34913.



1963 டிசம்பரில் நடைபெற்ற பாரதி விழாவில், கவியரசரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து திரு. நேரு பேசுகிறார்.




பாரதி விழாவில் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் வரவேற்புரை ஆற்றுகிறார்.



வ. உ. சி. நினைவு மண்டபம்
ஒட்டப்பிடாரம்

*With the best compliments*

*from*

# THE CALCUTTA PAPER INDUSTRIES

*Complete service in*

PAPER PACKAGING AND PRINTING

*Manufacturers of*

QUALITY BOXES, CORRUGATED BOARDS, GUMMED TAPES, TELEPRINTER PAPER ROLLS AND PRINTERS.

121, Chittaranjan Avenue,

**CALCUTTA - 7**

# மனம் போல வாழ்வு

'மனம்' என்பதும் 'நினைப்பு' என்பதும் ஒரே பொருளைக் கொடுக்கும் சொற்கள். "மனம் போல வாழ்வு" என்பது 'மனிதனது நினைப்புக்குத் தக்கவாறு அவனுடைய வாழ்வு அமைகின்றது' என்பதே. மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே ஆகிறான்; மனிதன் எவ்வாறு நினைக்கிறானோ அவ்வாறே அவனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் நிலைமையும் அமைகின்றன. மனிதன் எதை நினைக்கிறானோ அதே ஆகிறான்; அவனது நினைப்புக்களின் தொகுதியே அவனுடைய ஒழுக்கம்.

பூமியில் மண்ணுள் மறைந்து கிடக்கும் வித்தினின்றே மரம் உண்டாகின்றது. அதுபோல மனிதனுடைய அகத்துள் மறைந்து கிடக்கும் நினைப்பினின்றே அவனது ஒவ்வொரு செயலும் உண்டாகின்றது. வித்து இல்லாமல் மரம் உண்டாதல் இல்லை. அதுபோல, நினைப்பு இல்லாமல் செயல் உண்டாதல் இல்லை. மனதாரச் செய்கின்ற செயல்களைப் போலவே, தாமேயாகவும், சுபாவமாகவும் நிகழ்கின்ற செயல்களும் நினைப்பினின்றே உண்டாகின்றன.

செயல்கள் நினைப்பின் மலர்கள்; இன்பமும் துன்பமும் இவ்வாறாக, மனிதன் தனது சொந்த வேளாண்மையின் தித்திப்பும் கசப்புமுள்ள கனிகளை உண்டுபண்ணிக் கொள்கிறான்.

மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாலேதான். நினைப்பாகிய உலைக்களத்தில் சில படைக்கலங்களைச் செய்து அவற்றால் தன்னை அழித்துக் கொள்கிறான்; அவ்வுலைக்களத்திற்றானே சில கருவிகளைச் செய்து, அவற்றால் வலிமை, மகிழ்ச்சி, அமைதி என்னும் திவ்வியமான அரண்களைத் தனக்குக் கட்டிக் கொள்கிறான். மனிதன் நல்ல நினைப்புகளைக் கைக்கொண்டு நல்ல வழிகளில் செலுத்துவதனால் தெய்வத்தன்மை அடைகிறான். கெட்ட நினைப்புகளைக் கைக்கொண்டு கெட்ட வழிகளில் செலுத்துவதனால் மிருகத்தன்மை அடைகிறான். அதிஉயர்வும் அதிதாழ்வுமான இந்த இரண்டுக்கும் இடையிலே உள்ளன மற்றைய ஒழுக்க வேறுபாடுகளெல்லாம். அவைகளை இயற்றும் கர்த்தாவும் மனிதனே; ஏவும் கர்த்தாவும் மனிதனே.

வ. உ. சிதம்பரனார்.

# தலைநகரிலே தமிழ்க்கோயில்

தமிழ்ப் பெருமக்கள் திருமுன்......

அன்பும் அறமும் பாடி, இன்பமும் ஏற்றமும் காட்டி, துன்ப இருளகற்றி நம் நெஞ்செல்லாம் தூய ஒளி பரப்பும் தமிழைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் நாம்.

அந்தத் தமிழின் பேரால் கடந்த பதினேழு ஆண்டுகளாகத் தில்லி மாநகரிலே இயங்கி, தன்னலான தமிழ்ப்பணியைச் செய்து வருகிறது தில்லித் தமிழ்ச் சங்கம். அந்தப் பதினேழு ஆண்டுகளில், டாக்டர் கிருஷ்ணன் போன்ற பெருந்தமிழர்களின் ஆதரவாலும், ஆர்வம் மிக்க இளைஞர்களின் உழைப்பாலும் சங்கம் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்துள்ளது.

சங்கத்தில் 400 – 500 உறுப்பினர்கள் இருந்து வருகின்றார்கள். சங்கத்தில் உள்ள நூல் நிலையமே தில்லியில் பெரிய தமிழ் நூல் நிலையம்; இதில் உள்ள பழைய, புதிய, அரிய, இனிய தமிழ்ப் புத்தகங்களின் தொகை சுமார் 5,000. கடந்த சில ஆண்டுகளில், தலைமை நூலகம் ஒன்றும் கிளை நூலகங்கள் இரண்டுமாகத் தமிழ்ச் சங்கத்தின் புத்தக உதவிப்பணி விரிவடைந்துள்ளது. தமிழில் எந்தப் புத்தகத்துக்கும், தமிழைப் பற்றிய செய்திகளுக்கும் இங்குள்ள தமிழரும் மற்றவர்களும் தமிழ்ச் சங்கத்தையே நாடி வருகின்றார்கள்.

தமிழகத்தின் அரும்பெரும் அரசியல்வாணரான சத்தியமூர்த்தி அவர்களின் பேரால் படிப்பகம் ஒன்றையும் சங்கம் நடத்தி வருகிறது. தமிழில் உள்ள நாள், வார, மாத, இதழ்கள் அனைத்தையும் நாள்தோறும் இங்கே வந்து யாவரும் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஆங்கில, இந்தி, உருது இதழ்கள் சிலவும் இப்படிப்பகத்திலே உண்டு.

தமிழ்ப் பெருவிழாக்களையும், தமிழறிஞர் — தமிழ்ப் பெரியோர் விழாக்களையும் சங்கம் வெகு விமரிசையாகவும் மிக உயர்ந்த முறையிலும் தவறாமலும் கொண்டாடி வருகிறது. தமிழகத்திலிருந்து இங்கு வரும் தமிழ்ப்பெரியோர் யாவருக்கும் உரிய வகையில் வரவேற்பளித்து, அவர்கள் தில்லித் தமிழ் மக்களோடு அளவளாவ ஏற்பாடு செய்து வருகிறது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்திறத்துத் தமிழையும் போற்றி வளர்த்துப் பரப்பும் பணியைத் தமிழ்ச் சங்கம் அயராது செய்து வருகின்றது.

சுருக்கமாகச் சொன்னால், தில்லியிலே தில்லித் தமிழ்ச் சங்கம் ஒரு தமிழ்க் கோயிலாகவே திகழ்கிறது. அதன் ஒவ்வொரு பணியும், நிகழ்ச்சியும் தமிழ்க் கோயிலின் மணியோசையாக, அதன் தமிழ் நாதமாகத் தமிழ் நெஞ்சங்களிலே ஒலிக்கிறது. 'இராமன் இருக்கிற இடம் அயோத்தி' என்னுமாப் போல், 'தமிழ்ச் சங்கம் இருப்பதால் தில்லிமாநகரம் தமிழகமே' என்று தமிழ்மக்கள் நாளும் நாளும் எண்ணும் வகையிலே இயங்கி வருகிறது தில்லித் தமிழ்ச் சங்கம்.

இத்தனை அரிய பெரிய தமிழ்ப்பணிகளை இடையறாது செய்துவரும் தமிழ்ச் சங்கம், எடுத்த காரியம் யாவினும் வெற்றிக் கொடி நாட்டி வந்தாலும், அதன் நீண்ட நாள் கனவு ஒன்று இன்னும் நனவாகாமலே இருந்து வருகிறது. "தமிழ்ச் சங்கத்திற்கென ஒரு சொந்தக் கட்டிடம் வேண்டும்" என்பது இதனோடு தொடர்பு கொண்டு உழைத்துவரும் தமிழ் அன்பர்களின் நீண்டநாள் கனவு. அந்தக் கனவும் நனவாகும் காலம் வந்துவிட்டது. சுமார் 22,000 ரூபாய் விலையில் தமிழ்ச் சங்கக் கட்டிடத்திற்குரிய நிலம் வாங்கப்பட்டுள்ளது. அதிலே தமிழ்ச் சங்கக் கட்டிடத்தைத், தமிழின் மாண்புக்கேற்ற வகையிலே, கட்டி எழுப்ப வேண்டியது நமது கடமை. வானை முட்டும் கோபுரங்களை எழுப்பிய தமிழ்த்தோள்கள் சூம்பிப்போய் விடவில்லை, அந்தத் தமிழ் நெஞ்சம் சுருங்கிப் போய்விடவில்லை என்பதை மெய்ப்பிக்க நமக்கு நல்லதோர் தருணம் வாய்த்திருக்கிறது. தருணத்தை நழுவ விடாமல், தலைநகரிலே தமிழ்ச் சங்கக் கட்டிடம் என்னும் தமிழ்ப் பெருங்கோயிலை எழுப்ப நாம் ஒவ்வொருவரும் முன்வருவோம்; நம்மாலான எல்லா உதவிகளையும் செய்வோம்.

**வாழ்க தமிழ்ப் பணி! எழுக தமிழ்க்கோயில்!!**

DELHI TAMIL SANGAM (Regd.) PARLIAMENT STREET, NEW DELHI.

★

GREASEPROOF, AMMUNITION

OTHER SPECIALITY

PAPER & BOARDS

★

*Manufacturers :*

PODUMJEE PAPER MILLS PRIVATE LTD.,

60, FORBES STREET,

BOMBAY - 1.

★

# கன்னுட் பிரேஸ் – ஏக் ஆத்மி!

S. ஸ்ரீநிவாசன்

[டோங்கா வண்டிக்காரர்களும், 'ஃபட்ஃபடி' என்று தில்லி மக்கள் குறிப்பிடும் விசைஊர்திகளை ஓட்டுபவரும் தனித்தனி நபர்களை விளித்து சவாரி சேர்த்துக்கொண்டு செல்வது வட இந்தியா மக்கள் அறிந்த செய்தியே. அதுவும் கூட்டம் இல்லாத சமயத்தில், இவர்கள் போட்டி போட்டிக்கொண்டு, கட்டணத்தைக் குறைத்து, உரத்த குரலில் 'ஏக் ஆத்மி, ஏக் ஆத்மி' என்று கூவி ஆள் சேர்ப்பது வேடிக்கையாக இருக்கும். இம்மாதிரி ஒரு கூத்து, இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் தூத்துக்குடியில் நடந்தது].

தென்னுட்டுக் கரையோரங்களிலுள்ள பட்டினங்களைக் கப்பல் போக்குவரத்தால் இணைத்து, தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தனர் ஆங்கிலேயர்கள். தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு மட்டுமின்றி, அக்கம் பக்கத்திலுள்ள கரையோரப் பட்டினங்களுக்குப் பெரிய அளவில் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அங்கிருந்து அதே அளவில் பண்டங்கள் இறக்குமதியும் ஆயின. ஆகவே கரையோரக் கப்பல் வியாபாரமானது ஆங்கிலேய கப்பல் கம்பெனிகளின் ஏகபோக உரிமையாய் இருந்து வந்தது.

ஏற்றிச் செல்லும் பண்டங்களின் மேலும் இறக்குமதியாகும் சரக்குகளின் மேலும் அவர்கள் விதித்ததுதான் வரி. இந்த பாகப்படாத உரிமையினுல் அவர்கள் கொள்ளை லாபம் அடித்தனர். இந்த எட்டாத கட்டண உயர்வை இந்திய வியாபாரிகள் தாங்குவதாக இல்லை. இந்த வரிச்சுமையைத் தாங்கி அவர்கள் தலை நிமிர முடியவில்லை.

இந்த சமயத்தில்தான் கரையோரக் கப்பல் வியாபாரத்தில் நம் நாட்டவரும் பங்கு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் சிதம்பரம் பிள்ளை அவர்களுடைய மனத்தில் உதித்தது. ஆகவே 1906-ஆம் ஆண்டு தென்னுட்டிலுள்ள சில தொழில் அதிபர்களின் பேருதவியைக் கொண்டு 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை துவக்கினுர், இந்தக் கம்பெனி பத்து லட்ச ரூபாய் முதலுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியக் கடற்கரைக் கப்பல் வியாபாரத்தை முன்னணிக்குக் கொண்டு வருவதுதான் சிதம்பரனுருடைய நோக்கம்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கம்பெனி பல நாட்களாக இதே துறையில் ஈடுபட்டு வந்திருந்த பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குப் போட்டியாக உருவாகி வருவதைக் கண்டு ஆங்கில வியாபாரிகள் மனம் சலித்தனர். எனவே பிறந்து உருவாகி வரும் இந்த இந்தியக் கம்பெனியை எம்முறையிலும் நசுக்கி விடுவது என்று அவர்கள் தீர்மானித்தனர். சுதேசிக் கப்பல் கம்பெனியின் வசம் இருந்தது இரண்டே நீராவிக் கப்பல்கள்தான். பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியாரிடத்திலோ பல கப்பல்கள் இருந்தன. அவைகளைக் கொண்டு இந்த சுதேசிக் கம்பெனியை முறியடிப்பது அவர்களுக்கு எளிதாகத் தோன்றியது.

இரு கப்பல் கம்பெனிகளுக்குமிடையே ஏற்பட்ட இந்தப் போட்டி ஒரு விசித்திரமானப் போக்கைக் கொண்டது. தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கொழும்புவிற்கு ஆள் ஒன்றுக்குக் கட்டணம் ஐந்து ரூபாய். ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து இந்தக் கட்டணத்தைச் சரிபாதியாக குறைத்தனர் பிரிட்டிஷ் கம்பெனியார். இயற்கையாகவே சில நாட்களுக்கு, பண்டங்களும் பிரயாணிகளும் சுதேசி கம்பெனியை நாடி வரவில்லை.

சிதம்பரம் பிள்ளை இப்போட்டியில் தானும் தீவிரமாக ஈடுபட முனைந்து, சுதேசிக் கப்பலின் கட்டணத்தையும் ஆள் ஒன்றுக்கு ரூபாய் இரண்டரையாக்கினார்.

இதைக் கண்ட பிரிட்டிஷ் கம்பெனியார், "இலங்கைக்கு ஓராள்! — ஒண்ணேகால் ரூபாய்" என்றனர்.

சிதம்பரம் பிள்ளை பின் வாங்கவில்லை. "ஓராள்! ஓராள்! ஒரு ரூபாய்" என்றார்.

" பிரிட்டிஷ் கம்பெனியார், "ஆள் ஒன்றுக்கு அரை ரூபாய்" என்றனர்.

சிதம்பரனார், "சுதேசிக் கப்பலில் ஏறுங்கள்! இலவசமான இலங்கைப் பிரயாணம்!" என்றார்.

பெருவலி படைத்த பிரிட்டிஷ் கம்பெனியார், "எங்கள் கப்பலில் வாருங்கள்! இலவசமாக இலங்கையைப் பாருங்கள்!! ஆளுக்கு ஒரு குடை இனம்!!!" என்றனர்.

இலவசப் பயணமும் இலங்கைக் குடையும் யாரைத்தான் ஈர்க்காது!

இந்த அசுரப் போட்டியில் சுதேசிக் கம்பெனியால் எவ்வளவு நாள் ஈடு கொடுக்கமுடியும்? சிறிது காலத்தில் சிதம்பரம் பிள்ளை தோல்வியை ஏற்க வேண்டியதாயிற்று. நம் நாட்டுக் கப்பல் தொழிலைத் தலைதூக்க விடாமல் அடித்து விட்டனர் ஆங்கிலேயர். 1910-இல் மடிந்த இந்த தேசியக் கடற்கரை கப்பல் வியாபாரம், நாடு விடுதலை பெற்ற பிறகுதான் தலைதூக்க முடிந்தது. அதற்கு அடிகோலிய பெருமை திரு. சிதம்பரம் பிள்ளை அவர்களையே சாரும்.

*With Best Compliments from*

*Manufacturers of*

PURE ALUMINIUM + THE CROWN +

**ALUMINIUM WARES & ANODISED ARTICLES**

**For any specification, any size, any quantity,**

**If it is of Aluminium, you can RELY ON US**

# JEEWANLAL (1929) LIMITED.

**CROWN ALUMINIUM HOUSE**

**23, BRABOURNE ROAD,**

**CALCUTTA-1.**

**ADEN BOMBAY DELHI MADRAS RAJAHMUNDRY**

# கப்பலோட்டிய தமிழன்

"ஸோமாஸ்"

"முதன் முதலில்நான் தேசபக்தர் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைப் பார்த்தது மதுரையில். பாரதி என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார். அவருடைய தேசபக்தியை விடத் தமிழ் பக்தி என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது வெறும் பக்தி மட்டும் அல்ல. தமிழ் இலக்கியங்களையெல்லாம் படித்து, ரஸித்து, சிந்தித்துப் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதி வளர்ந்த பக்தி. முதன் முதலில் அவரது ஆவேசமான மேடைப்பேச்சை மதுரையில் தான் கேட்டேன். நான் அப்போது எழுதி வெளியாகியிருந்த தமிழ் நூல்களையெல்லாம் அவரிடம் கொடுத்தேன். அவைகளையெல்லாம் அன்போடு வாங்கிக் கொண்டார். அப்பொழுது முதல் என்னிடம் அவருக்கு அளவு கடந்த அன்பு..." என்று என் தந்தையார் என்னிடம் ஒரு முறை கூறியிருக்கிறார்.

தேசபக்தர், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களை நேரில் தரிசிக்கும் பாக்கியம் நான் சிறுவனாக இருந்தபோது எனக்குக் கிடைத்தது. (1930-ஆம் ஆண்டு என்று நினைவு.) சென்னை, வாடியா பார்க் மைதானத்தில் சொற்பொழிவாற்ற வந்திருந்தார். மேடைக்கு வருமுன்பே என் தந்தை (வரகவி சுப்பிரமணிய பாரதி) அவரை எதிர்கொண்டு வரவேற்றார். பிள்ளையவர்கள் என் தகப்பனாரை இறுகத் தழுவிக் கொண்டு "சௌக்யமாயிருக்கிறீர்களா" என்று மிகவும் அன்போடு கேட்டார். அப்பா என்னைப் பற்றி அவரிடம் சொன்னதும் என்னை வாரித் தழுவிக் கொண்டு "என்னைத் தெரியுமா உனக்கு" என்று கேட்டார். எனக்கு மெய்யெல்லாம் சிலிர்த்து விட்டது. "தங்களைப் பற்றி அப்பா நிறையச் சொல்லியிருக்கிறார். கப்பலோட்டிய தமிழன் தாங்கள் தானே...!" என்றேன், பிள்ளையவர்கள் சிரித்துக் கொண்டே எனக்கு ஆசி கூறினார்கள். பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் அந்த நிகழ்ச்சி என் மனதில் பசுமையாய்ப் பதிந்திருக்கிறது. நினைக்கும் போதெல்லாம் என் அகக் கண்முன் அந்த வீரத்திருமகனின் உருவம் தோன்றுகிறது. மிகப் பெரிய தேசபக்தரை நேரில் பார்த்

தோம் என்ற எண்ணமே என்னுள் நிறைந்து என்னைப் பரவசப்படுத்துகிறது.

வடநாட்டு மக்களிடம் உள்ள இனந் தழுவி நிற்கும் உணர்ச்சி தமிழகத்தில் இல்லாதது பெருங்குறை. ஓரிருமுறை மறியலில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து சிறை புகுந்தவர்களுக்கெல்லாம் வடநாட்டில் பெரிய மதிப்பு இருக்கிறது. தமிழ் மண்ணின் துர்ப்பாக்கியந்தானோ என்னவோ! நம் நாட்டுத் தியாகிகளை நாம் போற்ற வேண்டிய வழியில் போற்றவில்லை.

மகாகவி பாரதியார் இது விஷயமாக என் தந்தையிடம் பலமுறை மனம் நொந்து பேசியிருப்பதாகத் தந்தை என்னிடம் கூறியிருக்கிறார்.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு எதிராகத் திரு சிதம்பரம் பிள்ளையவர்கள் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியைத் தொடங்கிக் கப்பல் விட்டு வெள்ளையர்களையெல்லாம் திகைக்க வைத்துப் பின்னர் சிறைபுக நேர்ந்தது தமிழகத்தையே கலங்க வைத்துவிட்டது.

"பாரதி, இதைப் பார்த்தாயா? நம் சிதம்பரம் பிள்ளைக்குத் தீவாந்திர சிக்ஷை விதித்து அதை அப்பீலில் ஆறு ஆண்டு சிறைவாசமாகக் குறைத்து விட்டதுபற்றி ஒரு பத்திரிகை திருப்திப் பட்டு எழுதியிருக்கிறது. பொங்கியெழுந்து போர்க்கோலம் பூண்டு அதிகாரவர்க்கத்துடன் போரிட வேண்டிய தருணத்தில், நம் நாட்டில் எப்படித்தான் இவ்வளவு கோழைத்தனம் படிந்திருக்கிறதோ! வடநாட்டில் உள்ள ஒரு லாலாவோ, ஒரு தேசாயோ நம் பிள்ளையவர்களைப்போல் தேச விடுதலைப் போருக்கு உகந்த காரியத்தைச் செய்து சிறை புகுந்திருந்தால் அதற்குத்தனி மதிப்பு இருக்கும். நம்மவர்களே அவர்களுடன் சேர்ந்து கொண்டு கூத்தடிக்க ஆரம்பித்து விடுவார்கள். நம் தமிழகத்துக்கு ஒரு பெரிய குறை இனப்பற்று இல்லை..." என்று கூறிக் கவிஞர் பெருமான் உள்ளம் குமுறினாராம், என்தந்தையிடம்.

தேச பக்தியோடு விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களில் பலர்அந்தநாளில்வாய்ச்சொல் வீரர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். மேடைப் பிரசங்கத்திலும், பிரசார வேலைகளிலும் காட்டிடும் ஆர்வத்தைச் சிறிதும் செயலில் காட்ட விரும்பாதவர்கள் அவர்கள். ஆனால் வ. உ. சி. அவர்கள் தேசத்துக்காக எதையும் துறக்கத் தயாராயிருந்த உண்மைத் தேசபக்தர், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டுமானால், வெறும் கூச்சல் போடுவதனாலும், பத்திரிகைகளில் கண்டபடி சர்க்காரைத் தாக்கி எழுதுவதனாலும் அதைச் சாதித்துவிட முடியாது. பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு நம்மை ஆண்டு கொண்டிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு நம் உள்ளத்து

உணர்ச்சியை வெளிப்படுத்தி இங்கு நாம் செயலாற்ற வேண்டும். நம் தேசபக்தியும், விடுதலை ஆர்வமும் அவர்களுக்குச் சரியானபடி விளங்கவேண்டும் அப்பொழுதுதான் நாம் விடுதலை பெற வழி உண்டு...'' என்று பிள்ளையவர்கள் பல பொதுக் கூட்டங்களில் வலியுறுத்திப் பேசி இருக்கிறாராம். இதை அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன்.

1906-ஆம் ஆண்டு தூத்துக்குடியில், சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. 1908-ஆம் ஆண்டு ஜூலை 7ந் தேதி பிள்ளையவர்கள் பிரிட்டிஷ் சர்க்காரின் விரோதியாகக் கருதப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். அப்பீல் செய்து கொண்டதில் அவரது ஆயுள் தண்டனை ஆறு ஆண்டுச் சிறைவாசம் மிகக் கொடுமையானது. திருட்டு, கொலை முதலிய பாதகச் செயல்களைச் செய்த குற்றவாளிகளைப் போலவே அரசியல் கைதிகளையும் ஈனத்தனமாக நடத்திக் கொடுமைப்படுத்தியது அந்நாளைய அன்னிய ஆட்சி.

'' தன்மானம் உள்ளவன் சிறை புகுந்தால் ஒன்று ஞானியாக வெளியே வருவான். அல்லது மிருகப் பிராயமாக மனிதத் தன்மையை இழந்து வெளியேறுவான்...'' என்று பிள்ளையவர்கள் கூறுவாராம். என் தகப்பனார் கூறியிருக்கிறார். அத்துடன் அவருக்கு ஒரு காலில் விலங்கு பூட்டியிருந்ததையும் கூறி வருந்தியிருக்கிறார்.

வ.உ.சி. கைதுசெய்யப்பட்ட விஷயம் காட்டுத் தீப் போல நாடு நகரம் முழுவதும் பரவியது. விசாரணை நடந்து அவருக்குத் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது பத்திரிகையில் வெளியானதும் ஊர் முழுவதும் அதே பேச்சாயிருந்தது.
பாரதியாரை என் தந்தை சந்தித்தபோது, அவர் பதறிக் கொண்டிருந்தாராம்.

''பார்த்தாயா, நம் நாட்டு மக்களுக்குத் தேசபக்தி உணர்ச்சியே இல்லை! நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட ஒரு நல்ல மனிதருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதென்று அறிந்ததும் அதை எதிர்த்துப் பலர் பொங்கியெழ வேண்டாமோ...'' என்று கேட்டுப் பொருமினாராம்.

கவிஞர் பெருமானின் உள்ளப் பொருமல் கவிதையாகப் பெருக்கெடுத்தது. வெள்ளைக்காரன் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களைப் பார்த்து ஆணவத்தோடு பேசியதாகவும், அதற்குப் பிள்ளையவர்கள் வீரத்துடன் பதில் கூறியதாகவும் அமைத்து வீரம் ததும்பும் பாடலைப் பாடியிருக்கிறார்:

'' நாட்டிலெங்கும் சுதந்திர
வாஞ்சையை
நாட்டினாய்; – கனல் – மூட்டினாய்
வாட்டி உன்னை மடக்கிச்
சிறைக்குள்ளே
மாட்டுவேன் – வலி –
காட்டுவேன்.

கூட்டங்கூடி வந்தே மாதரமென்று
கோஷித்தாய் – எமைத் –
தூஷித்தாய் ;
ஓட்டம் நாங்களெடுக்க வென்றே
கப்பல்
ஓட்டினாய்;–பொருள்–ஈட்டினாய் "

இதற்கு மறுமொழியாகப் பிள்ளையவர்கள் கூறியதாக மகாகவி எழுதியிருக்கும் வரிகளையும் பார்ப்போம் :

" சொந்த நாட்டிற் பரர்க் கடிமை
செய்தே
துஞ்சிடோம் – இனி அஞ்சிடோம்;
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ ? தெய்வம் –
பார்க்குமோ "

உதாரணத்துக்காகச் சில வரிகளையே எடுத்துக் காட்டியிருக்கிறேன். பாட்டு முழுவதையும் படித்துப் பார்த்தால் பாரதியார் எவ்வளவு தூரம் உள்ளம் குமுறியிருக்கிறார் என்பது விளங்கும்.

இந்தப் பாட்டை பாரதியார் என் தந்தையிடம் ஆவேசத்துடன் படித்துக்காட்டினாராம். இதை என் தகப்பனார் பல முறை என்னிடம் சொல்லி மகாகவியின் தேச பக்தியை வியந்திருக்கிறார்.

பாரதியார் பாடிய இந்தப் பாட்டைப் பிரசுரிக்கக்கூடப் பத்திரிகைகள் தயங்கினவாம். அதிகார வர்க்கத்தினரிடம் அத்தனை பயம்!

* * *

தேசபக்தர் சிதம்பரம் பிள்ளையவர்கள் கப்பலோட்டி, சிறைபுகுந்தது வரலாற்றில், பொன்னெழுத்தில் பொறித்து வைக்கவேண்டிய நிகழ்ச்சி. தமிழகத்தின் தன்மான உணர்ச்சியை உயர்த்தும் வரலாறு.

" பிள்ளையவர்கள் வெறும் வழக்கறிஞர் மட்டுமல்ல; நல்ல தமிழறிஞருங்கூட. சிறந்த ஆராய்ச்சியாளர். சிறையில் அவர் ராட்டையில் நூல்நூற்கவில்லை ; ஆனால் இலக்கியமதிப்பில் உயர்ந்த பல கவிதை நூல்களை இயற்றினார். திருக்குறள் மணக்குடவர் உரைக்கு விரிவுரையும் ஆராய்ச்சியும் எழுதினார்.அது இன்னும் சிறந்த திறனாய்வு நூலாகக் கருதப்படுகிறது. அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதும், முதலில் கோயம்புத்தூர் சிறைக்கு அனுப்பப்பட்டார். அதன் பிறகு கண்ணனூர் சிறைச்சாலை. இவ்விரு சிறைச்சாலைகளிலும் தங்கியிருந்த காலத்தில் பிள்ளையவர்கள் மேற்கூறிய ஆராய்ச்சி நூல்களை எழுதினார். திருக்குறளிடம் பிள்ளையவர்களுக்கு இருந்த ஈடுபாடும், மதிப்பும் சொல்லி முடியாது. ஒவ்வொரு தமிழனும் திருக்குறள் படித்தேயாக வேண்டும். உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, உடம்பைத் தூயதாக வைத்துக் கொள்வதற்கும் வழிகாட்டும் நூல் திருக்குறள்...என்று அழுத்தமாகக் கூறுவார் பிள்ளையவர்கள். ஏழைகளுக்கு இரங்கியும், கைம்மாறு கருதாமல் எளியவருக்காக வாதாடியும் பிறருக்காக உழைத்து வந்தார் அவர். சொல் ஒன்று செயல் ஒன்று என்று வாழ்ந்தவரில்லை அவர். பிரிட்டிஷ்

கம்பெனிக்கு எதிராகக் கப்ப லோட்டிக் கடும் சிறை புகுந்த காலத்தும் அவர் இம்மியளவும் ஆண்மை குன்றினரில்லை. வீடு வாசலையும், நல்ல ஊதியம் தந்த வழக்கறிஞர் பதவியை யும் உதறிவிட்டு, உற்றுரை யும் உறவினரையும், பெற்ருே ரையும், குழந்தைகளையும் துறந்து சிறை புகுந்தபோது 'இதுவே உடலெடுத்த பயன்' என்று உலகறியக்கூறிய உத்த மன் அவர்...'' என்று ஒரு முறை கப்பலோட்டிய தமிழ னைப் பற்றி என் தந்தையார் ஒரு பொதுக்கூட்டத்தில் கூறினர்.

இந்தப் பேச்சு என் மனத் தில் நன்கு பதிந்து விட்டது. பிள்ளையவர்களைப் பற்றி அவர் கூறியது எவ்வளவு பெரிய உண்மை.

சிறை வாழ்க்கையைப் பய னுள்ளதாக்கிக் கொண்டார் வ.உ.சி. அவர்கள். தம் சுய சரிதையைத் தமிழ்ப் பாட் டாக இயற்றினர். இதைத் தவிர, "மெய்யறிவு," "மெய்யறம்" என்னும் தத்துவ நூல்களை எழுதினர்.

இன்னும் "மனம் போல வாழ்வு", "அகமே புறம்", "வலிமைக்கு மார்க்கம்" முத லிய நூல்களையும் எழுதினர்.

என் தந்தை ஒரு முறை வ. உ. சி.யைப் பற்றிக் குறிப் பிடுகையில், "அன்னிய ஆட் சிக்கு எதிராகக் கப்பலோட்டிய வீரதேசபக்தர் சிறை புகுந் தது மல்லாமல், அங்கு செக்கு இழுத்து, கல் உடைத்து, களி தின்று சொல்லொணு அவதி களை அனுபவித்தார். தன் னலங் கருதாத அந்தத் தவப் புதல்வருக்கு எவ்வளவோ மதிப்பும், மரியாதையும் கிடைப்பதற்குப் பதிலாக மேற்கூறிய அல்லல்களே பரி சாகக் கிடைத்தன...'' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

1912 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வ. உ. சி. விடுதலை யானர். விடுதலையான பிறகு சிறிது காலம் தூத்துக்குடியில் இருக்கவில்லை பிள்ளையவர்கள். சென்னையில் சிந்தாதிரிப் பேட் டை, மயிலாப்பூர், பிரம்பூர் முதலிய இடங்களில் வசித்து வந்தார். பிரம்பூரில் பிள்ளை யவர்கள் வசித்து வந்த காலத் தில், பல மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு இலவச மாகத் தமிழ் போதித்தார். தமிழ் இலக்கியங்களில் பல ருக்கு ஆர்வம் உண்டாகும் வண்ணம் செய்தார். அவர் பிரம்பூரில் இருந்த காலத்தில் என் தகப்பனர் ராயப்பேட் டையில் இருந்தார். அடிக்கடி வ.உ.சி.யைச் சந்தித்து அள வளாவி வந்தார். இதெல் லாம் தந்தையார் கூறி எனக் குத் தெரியும்.

தீவிர வாதியான வ. உ. சி. அஹிம்சை மார்க்கத்தை நம்பாதவர். காந்தியடிகளின் அறப்போர் மார்க்கம் அவர் உள்ளப்பாங்குக்கு ஒத்ததாகத் தோன்ருததில் வியப்பில்லை. அரசியல் உலகம் அந்த அறப் போர் வழியில் ஒருமுகமாக ஈடுபட்டிருப்பதைக் கண்டு

அரசியலிலிருந்து விலகி நிற்கலானார்.

வ. உ. சி. யைப் பற்றிய நினைவு வரும்போதெல்லாம், என் தந்தை ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை அடிக்கடி கூறி வருந்துவார். அதை இப்பொழுது நினைத்தால் கூட என் மனசுக்கு வேதனையாயிருக்கிறது.

1932 ம் ஆண்டு வ.உ.சி.க்கு அறுபதாண்டு நிறைவுற்றது. அதை விழாவாகக் கொண்டாடச் சிலர் முயற்சி செய்தனர். என் தந்தையாரும் அவர்களில் ஒருவர். பிள்ளையவர்களுக்கு ஒரு நிதி திரட்டி வழங்க ஏற்பாடுகளைத் தொடங்கினர். அம் முயற்சி சரியானபடி வெற்றி பெறவில்லை. அதாவது போதிய அளவு நிதி சேரவில்லை. இது மிகவும் வருந்தத் தக்க உண்மை. இதை வெளிப்படையாகக் கூறுவது மனசுக்குச் சிறிது கஷ்டமாயிருக்கிறது. தேசத்துக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக யிருந்த ஒரு தேசபக்த திலகத்துக்குத் தமிழகத்தில் சரியான முறையில் கௌரவப்படுத்த முடியாமற் போனது வருந்தத்தக்கது என்று கூறினார் என் தகப்பனார். அடிக்கடி சொல்லி வருந்துவார். இப்பொழுது உள்ளது போல் அப்பொழுது வசதியுள்ள பெரிய கலைஞர்கள் யாரும் இல்லை. இருந்திருந்தால் ஏதாவது கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து உதவி நிதி திரட்டி அந்த வீர தேசபக்தத் திருமகனுக்கு அளித்து அவரையும் அவர் குடும்பத்தினரையும் வாழவைத்திருக்கலாம்.

"வட நாட்டைச் சேர்ந்த தியாகிகளை அவர்கள் என்றும் நிராதரவாகக் கைவிட்டதில்லை. நாம் வேற்றுமை மனப்பான்மை ஒரு சிறிதுமின்றி நம் தமிழகத்தில், நந்தவனங்களுக்கும், தெருக்களுக்கும், வீதிகளுக்கும் வடநாட்டுத் தேசத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி வந்திருக்கிறோம். ஆனால் இதேமாதிரி தமிழகத்துத் தியாகிகள் விஷயத்தில் வடநாட்டார் நியாயஉணர்ச்சியோடு நடந்து கொள்ளவில்லை. தேசபக்தர் ஸ்ரீ சுப்பிரமணிய சிவா, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி., மகாகவி பாரதியார், ஆகியவர்களின் பெயர்களைக் கூட அங்கெல்லாம் காணமுடிவதில்லை......" என்று கூறி என் தகப்பனார் பல முறை வருந்தியிருக்கிறார்.

வ. உ. சி. நல்ல திடகாத்திர சரீரங் கொண்டவராயினும், நாலரையாண்டு சிறை வாழ்க்கை அவர் உள்ளத்தைச் சிறிதும் தளர்த்தவில்லையென்றாலும், உடம்பை மிகவும் தளர்த்தி விட்டது. நல்ல ஊதியம் கொடுத்துவந்த வழக்கறிஞர் பதவியையும் உதறி விட்டமையால், உடல் நலம் குன்றியதோடு வறுமையும் சேர்ந்துகொண்டது. 1922ஆம் ஆண்டு வறுமையைப் புறங் காணவும், குடும்பம் நடத்தவும் மீண்டும் வழக்கறிஞரானார் வ. உ. சி. வக்கீல்கள்

சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றால் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்காடும் உரிமை பறிபோய்விடும். வ. உ. சி. அவர்களுக்கும் அந்நிலை ஏற்பட்டது. உயர்நீதி மன்றத்துக்கு மனுச் செய்து கொண்டு மீண்டும் அவ்வுரிமையைப் பெற்றார்.

சிந்தையில் தூய்மையும், நடத்தையில் நேர்மையும், வாக்கில் வாய்மையும் கொண்டு தேசபக்தியிலும், தமது இலட்சியத்திலும் தளராது நின்று இறுதிவரையில் உறுதியோடு இருந்த கப்பலோட்டிய தமிழனைப் பற்றிக் கூறும்போதெல்லாம் என் தந்தை வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியாருக்குக் கண்களில் நீர் மல்கும். "தேசபக்தர்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும் அவர்கள் இறந்த பிறகு கொண்டாடுவதென்னும் இழிநிலை மாறவேண்டும்..." என்று மனமுருகிக் கூறுவார்.

புது டில்லியிலிருந்து பல ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டாற்றிவரும் **"சுடர்"** பத்திரிகையின் ஆண்டுமலரில் தேசபக்தர் வ. உ. சி.-யைப் பற்றி எழுதும்படியான வாய்ப்புக் கிடைத்ததை அரிய பேறாகக் கருதுகிறேன்.

வ. உ. சி.-யின் நினைவு மலரில் அந்த மகாபுருஷரைப் பற்றிய கட்டுரையை என் தந்தையாரின் ஞாபகங்களோடு பிணைத்து எழுத நேர்ந்ததை முருகனின் அருட் பிரசாதமாகக் கருதுகிறேன்.

வாழ்க சுடர்! வளர்க தமிழ்! "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

*

## வ. உ. சி.-யின் சமயநெறி

சிதம்பரனார் நாத்திகர் அல்லர்; பழுத்த ஆத்திகர். ஆனால் ஆளுக்கொரு தெய்வம், நாளுக்கொரு சடங்கு என்ற போலிச் சமயவாதிகளின் கொள்கை அவருக்கு உடன்பாடன்று. அவர் கண்ட சமயம், மக்கள் சமுதாயம்; அவர் போற்றிய வேதம் திருக்குறள்; அவர் கடைப்பிடித்த சமய நெறி, எம்மதத்தையும் சம்மதமாகக் கொள்ளும் சன்மார்க்க நெறி. மற்றும் ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதே இறைவனுக்குச் செய்யும் வழிபாடாகக் கருதினார் வ. உ. சி.

— 'கப்பலோட்டிய தமிழன்' என்ற நூலில் ம. பொ. சி.

## அலுவலுக்கோ ஆட்டத்திற்கோ



# பின்னியின்
# WB 275 X டிரில்

## எப்போதும் நல்வசதிக்கு ஒரு முதலீடே

THE BUCKINGHAM & CARNATIC CO. LTD.
REGISTERED USER
·SANFORIZED·
REGISTERED TRADE MARK
CLUETT, PEABODY & CO. INC., U.S.A.

தேர்ந்தெடுத்த பருத்தியினின்று நெசவாகும் WB 275 X டிரில் பார்வைக்கும் கவர்ச்சியானது; பல்லூண்டுகள் உழைக்கக் கூடியது. மீண்டும் மீண்டும் சலவைகளைத்தாங்கி, எக்காலமும் தனது புத்தழகுடன் பொலிகிறது; சிறந்ததையே வேண்டுவோர் விரும்புவது.

BINNY'S FABRICS
BINNY & CO. LIMITED, MADRAS

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் அனுமதிபெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கு வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்.
பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ். ஸ்தாபனத்தின் ஒரு கிளை

*Are you a small industrialist?*

## LET GOVERNMENT HELP YOU
## THROUGH N. S. I. C.
## FOR

| | |
|---|---|
| MACHINES | on easy instalment payment basis |
| PRODUCTION | of prototypes of machinery and machine tools and |
| TRAINING | to skilled and unskilled workers at the Prototype & Production Centres at Okhla (Delhi,) Rajkot and Howrah. |
| CONTRACTS | asistance from D. G. S. D. and Railways for supply of stores |
| EXPORT | assistance for export marketing through Footwear Procurement Centres at Agra, Delhi and Bombay. |
| DISTRIBUTION | of Radio and Transistor Valves manufactured by M/s Bharat Electronics Ltd., to small radio manufacturers |
| PUBLICITY | by displaying small scale industries' produucts in major exhibitions in the country and abroad. |

*For further particulars, you are welcome to call on or write to:*

**THE NATIONAL SMALL INDUSTRIES CORPORATION LTD.**

(A GOVT. OF INDIA CONCERN)
RANI JHANSI ROAD,
NEW DELHI.

# வ. உ. சி. யைப் பற்றி...

கனகசவுந்தரி இளந்திரையன்

வ. உ. சி. அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களிலே ஒருவர். ஆயினும் காங்கிரஸில் காந்தியடிகளின் செல்வாக்கு ஓங்கி, அவருடைய கொள்கைகள் வலுப் பெற்றபோது திலகர் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதியாகிய வ. உ. சி. அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் பொது மக்களுக்கு மட்டுமல்லாமல் பிற்காலக் காங்கிரஸ்காரர்களுக்கே கூட அவருடைய தியாக மாண்பு தெரியாமல் இருந்தது. இந்த நிலையை மாற்றி, அப்பெருமகனுர்க்கு வீரவணக்கம் செய்யும் படையணியாகத் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பியவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள். சென்னையில் வ. உ. சி. யின் உருவச்சிலையைத் திறந்துவைத்தும், தமிழக அரசியல் மேடையெங்கும் கப்பலோட்டிய தமிழனின் புகழை எடுத்துச் சொல்லியும், "கப்பலோட்டிய தமிழன்" என்னும் வரலாற்று நூலைத் திறம்பட எழுதியும், மங்கிநின்ற வ. உ. சி. யின் புகழைத் துலக்கிய பெருமை ம. பொ. சி. அவர்களுக்கே உரியது.

இப்போது வ. உ. சி. அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பல வசதிகள் ஏற்பட்டுள்ளன. வ. உ. சி. அவர்களின் 'சுய சரிதை' பல ஆண்டுகளுக்கு முன்பே புத்தகமாக (அவருடைய குமாரர் சுப்பிரமணியம் அவர்களால்) வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்ப்பெரியார் 'திரு. வி. க.' அவர்களின் 'வாழ்க்கைக் குறிப்பில்' வ. உ. சி. அவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை ஆகியோர், வ. உ. சி. யின் புகழ்வாழ்வைப் பாராட்டிக் 'கவிதைகள்' புனைந்துள்ளார்கள். 'பாரதியார் கவிதை'களில் வ. உ. சி. யைப் பற்றித் தொடர்பாகச் சில பாடல்கள் இருப்பது யாவரும் அறிந்ததே. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் "கடற்கரையிலே" என்ற நூலில் சிதம்பரனுரைப் பற்றிப்

புதுமையான் ஒரு கட்டுரை உள்ளது. திருநெல்வேலி வ. உ. சி. பதிப்பகத்தார் 'வ. உ. சி. நினைவு மலர்' ஒன்று வெளியிட்டுள்ளார்கள். அம்மலரில் பி. ஸ்ரீ., கி. ஆ. பெ. விசுவநாதம் போன்ற மூதறிஞர்கள் வ. உ. சி. யோடு தங்களுக்கிருந்த தொடர்பை விவரித்துள்ளார்கள். அதே போல் பம்பாய்த் தமிழ்ச்சங்கமும் நாவலர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை ஆகியோரின் கட்டுரைகளுடன் 'வ. உ. சி. மல'ரொன்றை வெளியிட்டுள்ளது. நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியுள்ள "தேசபக்தர் மூவர்" என்ற நூலில் வ. உ. சி.யின் வரலாறு முதன்மை இடம் பெற்றுள்ளது. ம. பொ. சிவஞானம் அவர்கள் எழுதியுள்ள "சுதந்திரப் போரில் தமிழகம்" என்னும் நூலிலும் வ. உ. சி. யின் வீரதிரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் எழுதியுள்ள "வீர சிதம்பரனார்" என்னும் நூல் அவருக்கே உரிய உணர்ச்சிமயமான நடையில் அமைந்துள்ளது. இன்னும், பாடப் புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் அவ்வப்போது

*Remedia*

**»HOECHST«**

**A great tradition in medicine**

**HOECHST**
PHARMACEUTICALS LTD.
Backbay Reclamation, Bombay 1

Calcutta: 6, Ganesh Chandra Avenue
Madras: 67, Dr Alagappa Chettiar Road
New Delhi: 3/10 & 11, Asaf Ali Road
Ahmedabad: People's Bank Bldg., Karanj (

HC. 10-361

பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. வ. உ. சி. அவர்களோடு தொடர்புகொண்டு தேசீயப் பணியிலீடுபட்ட 'பரலி. சு. நெல்லையப்பர்' அவர்களும், வ. உ. சி. யின் குமாரர் வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்களும் பத்திரிகைகளில் வ. உ. சி. யைப் பற்றிக் 'கட்டுரைகள்' வரைந்துள்ளார்கள். நெல்லையப்பர் அவர்கள் 'வ. உ. சி.' யைப் பற்றிய 'சிறிய நூல்' ஒன்றையும் வெளியிட்டுள்ளார்கள். பெரியோர்களைப் பற்றிய தொகுப்பு நூல்களைச் சிறப்பாக வெளியிட்டுவரும் திரு. முல்லை முத்தையா அவர்கள் "தளபதி வ. உ. சிதம்பரனார்" என்னும் நூலைச் சிறப்பாக வெளியிட்டுள்ளார். இப் புத்தகம் வ. உ. சி. அவர்களைப் பற்றிய பன்முக விவரங்களையும் ஒருங்கே கொண்டு திகழ்வது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் நாடகக் கலைச்செல்வர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் வ. உ. சி. யின் வாழ்க்கைக் காவியத்தைப் பகுதி பகுதியாகவும் முழுமையாகவும், 'வானொலி' யிலும் மேடைகளிலும் 'நாடக'மாக நடத்தி, அப்பெருமகனாரின் புகழ் தமிழ்மக்களின் நெஞ்சங்களிலே பரவிப் படியும் படிச் செய்தார்கள். அதைத் தொடர்ந்து ஆர்வமிக்க சினிமாத்துறை அன்பர்கள் சிலரால் (பத்மினி பிக்சர்ஸ்) வ. உ. சி. யின் வாழ்க்கை திரைப்படமாகவும் எடுக்கப் பட்டுள்ளது.

இவை தவிர, வ. உ. சி. யின் பெயரை நமக்கு நினைவூட்டுவனவாக 'சிதம்பரம்பிள்ளை மண்டபம்' என்று பெயரிட்டுள்ள வேலூர் நகராண்மைக் கழக மண்டபத்தையும், வங்கக் கடலில் இன்று கம்பீரமாக இயங்கும் "வி. ஓ. சிதம்பரம்" என்ற கப்பலையும், தூத்துக்குடியில் எழுந்து சிறந்து நிற்கும் 'வ. உ. சி. கல்லூரி' யையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். வ. உ. சி. யின் பேரால் கலை, இலக்கிய, நாடக மன்றங்களும் படிப்பகங்களும் சிற்சில ஊர்களில் உண்டு.

இவை யாவற்றுக்கும் மேலாக, வ. உ. சி. யின் புகழுக்கு உணர்ச்சிமயமான நினைவுச் சின்னமொன்று இந்தியாவின் தலைநகராகிய தில்லி மாநகரிலே உள்ளது. இங்கு வந்து வாழும் தமிழ் மக்களிலே ஒரு பகுதியினர் தாங்கள் குடிசைகள் அமைத்து வாழும் பகுதிக்கு, தங்கள் அருமந்த தலைவரின் பெயரை மறவாமல், "வ. உ. சி. காலனி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

# வ. உ. சிதம்பரம் பிள்ளை

பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி

என் மாமன் ஸ்ரீ கே. ஆர். வெங்கடராமய்யர் வழக்கறிஞராக பிரசித்தி யடைந்தது முதலில் தூத்துக்குடியிலேயே.

வ. உ. சிதம்பரனார் அடிக்கடி என் மாமனுடன் கலந்து பேசி காரியங்களை நடத்தினார். அந்த சுதேசிய இயக்கத்தில் வெகு ஈடுபட்டு பங்கெடுத்து சிதம்பரம் பிள்ளைக்கு ஊக்கம் கொடுத்தார் என் மாமன்.

வெள்ளைக்கார சர்க்கார் இவர்களிருவர் பேரிலும் இ.பி.கோ. மூலம் நடவடிக்கை ஆரம்பித்து இவர்களை சிறையில் வைக்க ஏற்பாடு செய்தனர்.

ஆனால், ஏ. ஆர். காக்ஸ் ஐ. ஸி. எஸ். முன் என் மூத்த மாமனாகிய, பிரசித்திபெற்ற கே. ஆர். குருஸ்வாமி அய்யர் ஆஜராகி தனது தம்பியை ஜாமீன் நடவடிக்கையிலிருந்து நீக்க வெற்றிகரமாக வாதாடினார்.

சிதம்பரம் பிள்ளை ஓர் தேசபக்த சிகாமணி. இந்தியன் தனது புராதன தொழிலாகிய படகோட்டும் தொழிலை ஏன் கைக்கொள்ளசுதந்திரம் கிடையாது? என்ற பெரு முயற்சியிலீடுபட்டார். ஆங்கிலேயக் கம்பெனி கொழும்புக்கு ஜனங்களை மிகக் குறைந்த சார்ஜில் கொண்டு போய் "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" யின் கப்பலுக்கு வரும்படி வராது கெட்ட போட்டியிட்டது ஒருபுறம்.

* * *

ஒருகாலம் திருநெல்வேலிச் சீமையில் பாஞ்சாலங்குறிச்சி வீரபூமியாக விளங்கிற்று. 1907-ல் தூத்துக்குடியும் ஒட்டபிடாரமும் சுதேசிய இயக்கத்தில் முன்னணியிலிருந்தன. அந்த இயக்கத்தில் வ. உ. சிதம்பரம் பிள்ளை அஞ்சாத வீரராக முன்னணியில் நின்றார். லோகநாதய்யர், வ. வெ. சு. அய்யர், சுப்பிரமணிய சிவா முதலியோர் அவருடன் இந்த இயக்கத்திலீடுபட்ட தேசீயத் தொண்டர்கள்.

பின்பு சிறையில் சிதம்பரம் பிள்ளை வெகு கஷ்டங்களுக்கு ஆளாக்கப் பட்டார்.

என்ன இடையூறுகள் வரினும் தளராநெஞ்சத்துடனும், மனோ தைரியத்துடனும் தியாகம் செய்த மகான் சிதம்பரனார்.

★

போன் : நெ. 2433 தந்தி "சொஸைட்டி" ஸ்தாபிதம்: 1938.

சிறந்த கைத்தறி ஜவுளிகளுக்கு

# சேலம் அம்மாப்பேட்டை சொஸைட்டி ஜவுளிகள்

★ புதுப்புது டிசைன் சேலைகள்

★ சோலி பீஸ் ரகங்கள்

★ வேட்டிகள், குண்டஞ்சு, பாவாஞ்சு

★ ஜரிகை அங்கவஸ்திரங்கள், ஜரிகை வேஷ்டிகள்

★ நவீன பெட்ஷீட் ரகங்கள்

மற்றும் உங்களுக்குத் தேவையான கைத்தறி ஜவுளிகள் எல்லாவித மான டிசைன்களிலும், எல்லா கெஜங்களிலும் கிடைக்கும்.

சென்னை தியாகராயநகர் விற்பனை டெப்போ,
9, உஸ்மான் ரோடு, தி. நகர்,
சென்னை – 17.

விற்பனை டெப்போக்கள்

1. சேலம் டெப்போ,
69. பி. முதல் அக்ரஹாரம்,
சேலம்–1.

2. செவ்வாய்ப்பேட்டை டெப்போ,
85-பி. கன்னரத் தெரு,
சேலம்–2.

3. ஆத்தூர் டெப்போ,
268, கடை வீதி, ஆத்தூர்.

4. அரூர் டெப்போ,
151, கடை வீதி, அரூர்.

5. திருச்சி டெப்போ,
35-பி. சின்னக்கடை வீதி,
திருச்சி–2.

6. ஈரோடு டெப்போ,
292, அக்ரஹார வீதி,
ஈரோடு.

7. திருநெல்வேலி டெப்போ,
103-87, மேல ரத வீதி,
திருநெல்வேலி டவுன்.

8. திருப்பத்தூர் டெப்போ,
22, ஜின்னு ரோடு,
திருப்பத்தூர்.

9. நெய்வேலி டெப்போ,
கடலூர் மெயின் ரோடு,
நெய்வேலி-2.

10. நெய்வேலி டவுன்ஷிப் சென்ட்ரல் பஜார்,
பிளாக் நெ. 19,
ஷாப் நெ. 6,
நெய்வேலி–1.

11. ஸ்கூட்டர் (M S W) 5602.

12. தள்ளுவண்டி.

ஏ. மாரியப்பன்,
தலைவர்.

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிமிடெட்,
எண். 532, அம்மாப்பேட்டை, சேலம்-3.
(தமிழ் நாடு)




**ORIENTAL BUILDING & FURNISHING CO. PVT. LTD.**

H BLOCK, CONNAUGHT CIRCUS, NEW DELHI. Phone 48202, 44615 & 47944 Grams: DECORATION

ORIENTAL

# அழகிய தமிழகம்

பண்டைய நாகரிகத்தின் தொட்டில் – இருபதாம் நூற்றாண்டில் எழிலொடு ஆதிச் சிறப்புகளும் அழியாமல் காத்து வரும் காவல் மதில் – பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம், தமிழ்நாடு.

சிதம்பரம், தஞ்சாவூர், மதுரை, ராமேஸ்வரம், திருச்செந்தூர் ஆகிய திருத்தலங்களில் உள்ள ஆலயங்கள் தெய்வ மணம் வீசுகின்றன. மாமல்லபுரத்தில் உள்ள சிற்பங்கள் சிற்பக் கலையின் புகழ் பேசுகின்றன.

மலை அரசி எனத் தற்காலத்தில் போற்றிப் புகழப்படும் உதகமண்டலம் – கோடையிலே இளைப்பாறுவதற்கேற்ற கோடைக்கானல் – ஐந்தருவி வீழும் அழகிய குற்றாலம். இவை தமிழ் நாட்டின் இன்பப் பொழில்கள்.

## அற்புதமோ அற்புதம்

உலகத்தின் நாற்றிசைகளிலுமுள்ள வண்ணப் பறவைகள் வந்து போகும் வேடந்தாங்கல் - "காதல் மடப்பிடியோடு களிறு" திரியும் முதுமலை. இவையெலாம் தமிழ் நாட்டின் எழில் குலுங்கும் சில பகுதிகள்.

"குன்று தோறாடி வரும்" ஆறுகளிலிருந்து மின்சாரம் எடுப்பதற்கு ஒரு குந்தா – இயற்கை மலைகளோடு செயற்கை மலைகளாக எழும்பி வரும் பரம்பிக்குளம், ஆளியாறு அணைகள் – நிலத்தை வெட்டி நிலக்கரி எடுப்பதற்கு ஒரு நெய்வேலி. இவை ஐந்தாண்டுத் திட்டங்கள் செய்த அற்புதங்கள்.

காட்சி இன்பம் தேடி இவைகளைக் காண வருவோர் கோடி.

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை நெறியாளர் வெளியிட்டது)

# வ. உ. சி.

'நாணல்'

*

வாழிய தாய்த் திரு நாடென்ன
வாழ்த்தவும் அஞ்சி வகையற்றுக்
கூழுக்கும் சிறு மனிதரையே
கும்பிட் டோய்ந்து குலைவுற்றோம்.
ஊழிவரினும் நிலை பெயரா
உள்ளம் தந்தான், உயிர்தந்தான்;
ஏழமை வீட்டிய கனலானுன்
எங்கள் தலைவன் வ. உ. சி. 1

அக்கரைச் சீமைக் காடுறையும்
அங்காடிப் பேய் ஆளுவதோ ?
விக்கி எம் மக்கள் வீடுவதோ ?
வீர பாரதம் வாடுவதோ ?
இக்கணம் அடிமைத்தளை எறிவோம்
என்றே எழுந்தான் எமக்காகச்
செக்கும் இழுத்தான் சிறையிருந்தான்
செம்மல் எங்கள் வ. உ. சி. 2

ஒப்புக்காக நீதி முறை
ஒழுங்கில் நிற்பார் போற்பேசி
செப்புக் காசும் இந்நாட்டில்
சேராவண்ணம் பொருளை யெல்லாம்
அப்பால் ஏற்றி அடுசூறை
ஆடிய மிண்டர் தலைகவிழக்
கப்பல் ஓட்டி நாட்டுவளம்
காக்க முனைந்தான் வ. உ. சி. 3

இங்கே புகுந்த ஆட்சிமொழி
இடரில் உழன்றோம். இளைத்திட்டோம்;
சங்கத் தமிழை மறந்துவெறும்
சாவி யானோம், சருகானோம்.
துங்க மரபும் பண்பாடும்
தொகுத்த தமிழிங் கமுதமெனச்
சங்க நாதம் செய்தினத்தின்
சாவு தவிர்த்தான் வ. உ. சி. 4

வீரத் தமிழர் பரம்பரையின்
விளக்காய் நின்றான் தமிழ்ப்புலமை
ஆரப் பெற்றான், தமிழ் வாழ்வின்
அரணாய் நின்றான். அன்பொன்றே
வாரமாகத் தமிழ் நாடு
வாழ்க என்ற வான்குரலில்
பாரதம் வாழ்க வாழ்கவெனப்
பாடிய சான்றோன் வ. உ. சி. 5

அன்னியர் தமையும் அணைக்கின்ற
அன்பே படையாய் அரசியலை
என்றுமுள வோர் மெய்ந் நெறியில்
இணைக்கக் காந்தி எழுந்திடவும்
தன்னே ரில்லாத் தலைமையினைத்
தானே துறந்தான் வழிவிட்டான்;
தன்னை எண்ணாத் தகைமையினான்
தலைவன் எங்கள் வ. உ. சி. 6

**TATA-FISON** *are happy to be with you this evening*

# நியாயவாதி சிதம்பரம் பிள்ளை

பரலி. சு. நெல்லையப்பர்

கப்பலோட்டிய தமிழன் என்று நாடெங்கும் போற்றப் படும் தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ஆம் தேதி நம்மை விட்டுப் பிரிந்தார். அவரது திருநாளை இன்று நாடெங்கும் கொண்டாடு கிருர்கள். சிறந்த தேசபக்தர் என்றும் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரரென்றும் சிறந்த பேச்சாளர் என்றும் சுமார் ஐந்தாண்டுகள் சிறைக் கோட் டத்திலிருந்த தியாகியென்றும் மட்டும் கப்பலோட்டிய சிதம் பரம் பிள்ளையைப் பற்றி நாட்டு மக்கள் நன்ருய் அறி வார்கள்.

### சிறந்த நியாயவாதி

ஆனல் அவர் அந்தக் காலத் தில் "மெட்ரிக்குலேஷன்" பரீட்சை மட்டும் பாஸ் செய்து இரண்டாவது வகுப்பு வக்கீ லாக இருந்த போதிலும் வழக்குகளை நடத்துவதில் திரு நெல்வேலி ஜில்லாவில் பேர் பெற்ற நியாயவாதியாக விளங்கினுர் என்பதைப் பலர் அறியார்கள். அந்தக்காலத்தில் அவருக்குப் பெரிய பேரையும் புகழையும் உண்டு பண்ணிய ஒரு வழக்கைப்பற்றித் திரு நெல்வேலி ஜில்லாவில் வயது முதிர்ந்த பெரியோர்கள் நினை வில் வைத்திருக்கிருர்கள்.

சிதம்பரனர் பெரும்பாலும் கிரிமினல் வழக்குகளில் எதிரி பக்கம் வக்கீலாகத் தோன்றி வாதிப்பது வழக்கம். குறுக்கு விசாரணை செய்வதில் பிள்ளை யவர்கள் பெரிய நிபுணர். சம யோசிதமான கேள்விகள் கேட் பதில் அவருக்கு நிகரான வக்கீல் அந்தக் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் எவ ரும் இல்லை. எத்தகைய சாட்சி களும் அவரது குறுக்குக்கேள்வி களில் திணறி விடுவர்.

### கொலை வழக்கில் விடுதலை

சிதம்பரனர் நடத்திய ஒரு கொலை வழக்கு இன்று குறிப் பிடத் தக்கது. குலசேகரநல் லூர் என்ற சிறு ஊரில் ஓர் ஆச்சாரி கொலையுண்டதாக வழக்கு. ஆச்சாரி பெரிய போக்கிரி. அவனை ஒரு வைக் கோல் போர் உள்ள களத்தில் துரத்தியடித்து வேட்டையாடி கொலை செய்ததாக வழக்கு. அதில் எதிரிகள் எழுவர். ஆறு எதிரிகள் முன்னரே அகப்பட்டு பல ஆண்டுகள் சிறைவாச தண்டனை அடைந்தனர்.

### ஆறுமுகத் தம்பிரான்

ஆனல் முதலாவது எதிரி அகப்படவில்லை. அவர் ஆறு

முகத் தம்பிரான் என்ற சாமி யார். போலீசாரின் விண்ணப்பத்தில் அழகப்பப் பிள்ளை என்று அவர் பேர் கண்டிருந்தது. கொலை நடந்தவுடன் அவர் தம்மீது அநியாயமான பழி ஏற்படுமென்று அஞ்சி திருவாவடுதுறை மடத்தில் சேர்ந்து சாமியாராகி ஆறுமுகத் தம்பிரான் என்ற பேருடன் சிதம்பரத்தில் உள்ள திருவாவடுதுறை மடத்தின் தலைவராய் விட்டார்.

**1903** ஆம் ஆண்டு மே மாதத்தில் கொலை நடந்தது. ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒட்டப்பிடாரம் போலீஸ் பெரிய கான்ஸ்டேபிள் சிவசிதம்பரம் பிள்ளை யென்பவர் மணியாச்சி ஸ்டேஷனில் தம்பிரானைக் கைது செய்தார். கைதி ஒட்டப்பிடாரம் சப் ஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட்டார். அந்தக் காலத்தில் அங்கே பஞ்சாபகேசஐயர் பி.ஏ.பி.எல். என்பவர் சப் மாஜிஸ்டிரேட்டா யிருந்தார். அவர் மிகவும் திறமைசாலி. ஆனால் லஞ்சப் பழக்கம் இல்லாதவரா யிருந்தால் அவர் பெரிய பதவிகளை அடைந்திருப்பார். கொலை வழக்கு இந்த பஞ்சாபகேச ஐயரிடம் விசாரணைக்கு வந்தது. போலீசாரைத் தவிர மற்ற எல்லோரும் தம்பிரானை நிரபராதி என்று சொன்னார்கள். அவ்வாறிருந்தும் அவர் தம்பிரானை ஜாமீனில் விடுதலை செய்ய மறுத்துவிட்டார். அதற்குக் காரணம் அந்தக் காலத்தில் பலவாறாகச் சொல்லிக் கொண்டார்கள்.

With
the compliments
of

DELTON CABLE COMPANY
DELHI GATE, DELHI-6
DELTON
INDIA

### சிதம்பரனார் தோன்றல்

தம்பிரான் சிதம்பரனாரின் உறவினர். மைத்துனர் முறை. மேலும் பஞ்சாபகேச ஐயர் மற நெறியில் செல்லாது அற நெறியில் ஒழுகுமாறு செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது. அந்த வழக்கை நடத்த வேண்டுமென்று தம்பிரானின் உறவினர் ஒருவர் சிதம்பரனாரை வேண்டிக் கொள்ள அவர் அதற்கு இணங்கினார். ஜில்லா மாஜிஸ்டிரேட்டான கலெக்டரிடம் மனுக் கொடுத்ததில் அவர் அதனை தூத்துக்குடிக்கு ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டிற்கு மாற்றிவிட்டார்.

### வாலேஸ் துரையின் நேர்மை

அப்பொழுது தூத்துக்குடிச் சப் கலெக்டராக இருந்தவர் ஈ. எச். வாலேஸ் எம்.ஏ., ஐ.ஸி.எஸ். அவர் சிதம்பரனாரின் சொந்த ஊரான ஓட்டப்பிடாரத்தை அடுத்த புதியம்புத்தூரில் வழக்கை விசாரணை செய்யத் தொடங்கினார். இரண்டு பக்கம் கட்சிக்காரர்களும் சாட்சிக்காரர்களும் உறவினர்களும் நண்பர்களுமாகச் சேர்ந்த கூட்டம் ஒரு திருவிழாப் போலிருந்தது. சர்க்கார் பக்கத்தில் மதுரை வக்கீல் ரங்காச்சாரியும் திருநெல்வேலி வக்கீல் பழனியாண்டி முதலியாரும் ஸ்பெஷல் பப்ளிக் பிராசிக்யூட்டர்களாகத் தோன்றி வாதித்தனர். வாதிப் பக்கம் சாட்சி விசாரணை தொடங்கியது. அவர்களை சிதம்பரனார் குறுக்கு விசாரணையில் திணற அடித்தார். போலீசார் கூடக் குறுக்கு விசாரணையில் தைரிய

*With Compliments from*

**WHEELS INDIA LIMITED**

PADI, MADRAS - 50

மாகப் பதில் சொல்ல முடியாமல் விழித்தார்கள். ஒன்றிருக்க ஒன்றைச் சொன்னார்கள்.

விடுதலை

வாலேஸ் துரைக்கு வழக்கின் போக்கு தெரிந்து விட்டது. எதிரி பக்கம் சாட்சி விசாரணை இல்லாமலே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. தம்பிரானும் விடுதலை அடைந்தார். இந்த வழக்கை ஆதி முதல் கவனித்துக் கொண்டிருந்த உதவிப் போலீஸ் சூப்பிரிண்டெண்டெண்ட் பிளாக்ஸ்டான் சிதம்பரனாரின் நியாய வாதத்தையும் வாக்குவன்மையையும் கண்டு வியந்து அவரது கையைப் பிடித்துக் குலுக்கித் தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

அந்தக் காலத்தில் பெருங் கிளர்ச்சியை விளைத்திருந்த இந்தக் கொலை வழக்கின் முடிவு சிதம்பரனாரின் புகழை திருநெல்வேலி ஜில்லாவில் அதிகப் படுத்தியது. தூய வெண்ணீறு அணிந்து, ஆகத்தில் அக்க மணி புனைந்து, உருவின் மிக்க உடம்புகொண்ட சடைமுடித் தம்பிரான் சுவாமிகள் சில ஆண்டுகளுக்குப் பின்னர் தமக்கு நன்றி செய்த சிதம்பரனாருக்குச் சிதம்பரத்தில் ஒரு சிறந்த விருந்து அளித்தார். பிற்காலத்தில் சிதம்பரனார் சிறை புகுந்து விடுதலை அடைந்து சென்னைக்கு வந்தபொழுது அவரைப் பரிவுடன் வரவேற்று அவருக்குப் பொன்னுடை புனைந்து போற்றியவரும் இந்த ஆறுமுகத் தம்பிரானே யாவார்.

மேற்கூறிய கொலை வழக்கை விசாரணை செய்து நீதி புரிந்த வாலேஸ் துரைதான் பிற்காலத்தில் சிதம்பரனார் மீது ராஜத்துவேஷ வழக்குகள் ஏற்பட்டபொழுது அவற்றை விசாரித்து 'கமிட்' செய்த ஜில்லா மாஜிஸ்டிரேட் ஆவார். பின்னும் பல ஆண்டுகள் கழித்து இதே வாலேஸ் துரை சென்னை உயர் நீதி மன்றத்தில் ஒரு நீதிபதியாக அமர்ந்திருந்தார். அப்பொழுது சிதம்பரனார் சிறைக் கோட்டதிலிருந்து விடுதலையடைந்து சென்னை வந்தார். பிழைப்புக்கு வேறு வழியில்லாமையால் உத்தியோகத்தையே திரும்பவும் நாடினர். அரசாங்கத்தை எதிர்த்து சிறைசென்ற ஒருவருக்கு மீண்டும் வக்கீல் பதவி கிடைப்பது கஷ்டமாயிருந்தது. ஆனல் சிதம்பரனாரின் விண்ணப்பத்தைக் கண்ட வாலேஸ் துரை அதனை அனுதாபத்துடன் ஆதரித்து அவருக்கு வக்கீல் உத்தியோகம் கிடைக்கும்படிச் செய்தார். அந்த வாலேஸ் துரையின் பேரைத் தமது மைந்தர்களில் ஒருவருக்கு இட்டு, பிள்ளையவர்கள் தமது பெரு நன்றியை விளங்கச் செய்தார். பிள்ளையவர்களின் கடைசிப் புதல்வரும் வாலேஸ் துரையின் பேர் கொண்டவருமான வாலேஸ்வரன் இன்று அரசாங்கத்தில் சேவை செய்து வருகிறார்.

★

நவ பாரதத்தின்
நிர்மாண வேலைகளுக்கு
சிறப்புற பணி ஆற்றுவது

**சங்கர் பிராண்ட்**

**சிமெண்ட்**





**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், மதராஸ்-2**

# வ. உ. சி. சுயசரிதை

— ஒரு குறிப்பு

'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் ஒரு சிறந்த தேசியத் தலைவர், உயர்ந்த தியாகி என்பதை நாடு அன்றும் அறிந்திருந்தது; இன்றும் தெரிந்து போற்றி வருகிறது. ஆனால் அவர் ஒரு நூலாசிரியர் என்ற செய்தி நாட்டில் அவ்வளவாகப் பரவவில்லை.

வ. உ. சி.யின் நூல்களில் தொல்காப்பியம் – இளம்பூரணர் உரைப்பதிப்பும், திருக்குறள்-மணக்குடவர் உரைப் பதிப்பும் தமிழ் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் உதவக்கூடியவை; ஆங்கில நூல்களைத் தழுவி அவர் எழுதிய அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மனம்போல வாழ்வு முதலிய நூல்கள் யாவரும் பொதுவாகப் படித்துப் பயன் பெறத் தக்கவை. இவை யாவற்றினும் வேறுபட்டதும் அவருடைய சொந்தப் படைப்பாக விளங்குவதுமான "**வ. உ. சி. சுய சரிதை**" பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ளது.

வ. உ. சி. சுய சரிதையின் மூலம் ஒரு சிறந்த தேசபக்தத் தீரரின் வரலாறு நமக்குக் கிடைத்துள்ளது என்பது உண்மையே. ஆனால் அந்த நூல் அவர் வாழ்வைச் சொல்லுவதாக மட்டும் அமைந்திருக்கவில்லை. 'நெல்லுக்கு இரைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்பது போல, கப்பலோட்டிய தமிழனின் காலத்திய தமிழக அரசியல் சமுதாய நிலைகளும், அக்காலத் தமிழ்-தமிழர் நிலைகளும், குறிப்பாகச் சிறைச்சாலை என்றால் என்ன என்ற விவரமும் இந் நூலில் அங்கங்கே தெள்ளிதின் விளக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு வ. உ. சிக்கு முன்பும் பலப்பல வடிவில் நிகழ்ந்துள்ளது. ஆயினும் திட்டமிட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பை முதலில் தொடங்கி முன்நின்று நடத்தியவர் வ. உ. சி. என்றே சொல்லவேண்டும். புலித்தேவன், கட்டபொம்மன் போன்றவர்கள் தங்கள் ஆட்சி உரிமையைக் காக்கவே முனைந்தனர்; அது ஆங்கிலேயருக்கு எதிரான சண்டையாக வந்து முடிந்தது. அவர்கள் கருதிய உரிமையைவிட வ. உ. சி. கருதிய உரிமை விரிவானது; அவர் அந்த உரிமையைக் கருதியே, தரும சங்க நெசவுச் சாலை, சுதேசிய நாவாய்ச் சங்கம், சுதேசியப் பண்டகசாலை என்னும் நிறுவனங்களை

அமைத்தார். அவை வெற்றி பெறுவதற்குக் காரணம், அதில் பங்குதாரராகச் சேர்ந்தவர்களில் பலருக்கும் அந்த உயர் நோக்கம் எதுவும்இருக்கவில்லை. இந்தத் தொழில் அமைப்புக் களைத் தேசியப் போராட்டக் கருவிகளாகக் கருதினார் வ. உ. சி. மற்றவர்கள், அவற்றை இலாபந்தரும் தொழில்கள் என்ற அள விலேயே செய்ய முன் வந்தார்கள். இச் சங்கங்கள் தொடங்கித் தளர் நடையிட்டு வந்த நாளில்,

'' இலாபம் தருமோ இத்தொழில் இந்நாள்
கலாபம் முன்னர் காகம் ஆடுதல்
போலாம் சுதேசியம் !''

என்று பழிக்கப் பலர் தயங்கவில்லை. அதனால், —

'' முன் பணம் கொடுப்பதா மொழிந்த பலரின்
மன்னிதி யாவும் வாரா தொழிந்தன;
நன்னய மொடுமுன் நல்கிய சிலர்தாம்
பொருளினைக் கேட்டுப் பொன்னெனக் கொண்டனர்!''

அக்காலத்தில் தூத்துக்குடியில் புகழ்வாய்ந்த வக்கிலாகத் திகழ்ந்தார் வ.உ.சி. வெள்ளையரின் கப்பல் கம்பெனி வியாபாரம் செழிப்பாக நடந்து வந்தது. இதற்குப் போட்டியாக ஒரு கப்பல் கம்பெனி தொடங்கி, அதற்கு திறமைவாய்ந்த வ. உ. சி. செயலாளராக அமைந்தால் தங்கள் வியாபாரம் செழிக்கும், பொருள் திரட்டலாமென்பதே சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பணம் தந்த இந்தியர்களின் எண்ணம். ஆனால் நிலைமையோ முற்றிலும் மாறுபட்ட வளர்ச்சி காட்டிற்று. தொடக்க நிலை யாதலால் கப்பல் கம்பெனி போதிய இலாபத்தில் ஓடமுடிய வில்லை. அன்னியக் கம்பெனியின் போட்டியும் வலுத்தது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு அல்லும் பகலும் உழைத்து வந்த வ.உ.சி.யின் புகழ் மக்களிடையே கொடிவீசிப் படர்ந்தது. நம்முடைய பணத்தை வைத்துக் கம்பெனி நடத்தி இவன் புகழ் தட்டிக் கொண்டு போகிறானே !' என்ற வழக்கமான பொறு மைப்புகை பணம் போட்ட இந்திய முதலாளிகளின் மண் டையை வட்டமிட்டது. இதை, —

'' பொருள்தந்த சிற்சிலர் பொறாமை மேற்கொளீஇ
நம்மில் எளியவன் நம்மில் சிறியவன்
நம்மினும் புகழினை நண்ணுதல் என்னே !
அவனை ஒழித்து எலாம் ஆள்வேம் என்றே
எமனவர் போலே என்மேல் வந்தனர்.''

என்று தெளிவாக விளக்கிக் குறித்துள்ளார் வ. உ. சி. புகழ் கிடைப்பது பொருளுக்காக மட்டுமல்ல; இதயத்து நேர்மைக் கும் இளைப்பிலா உழைப்புக்குமே உரியது புகழ் என்பதை

இனி வருவோராயினும் உணரவேண்டும் என்பது போல், சுய சரிதையில் இதைக் குறித்துள்ளார் வ. உ. சி.

தென் தமிழ் நாட்டில் 19-ம் நூற்றுண்டிலும் (20-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் கூட) பழைய திண்ணைப் பள்ளிகள் இருந்தன. ஆயினும் ஆங்கிலம் படித்து 'தவிட்டுக்குச் சேவித்தாலும் சர்க்காருக்குச் சேவிக்க வேண்டும்' என்ற மனப்பான்மையும் ஆழமாக வேரூன்றிவிட்டது.

> '' அறிவரிச் சுவடி, ஆத்தி சூடி
> செறிவுறக் கேட்டுச் சிந்தையும் கொண்டேன்;
> எண்ணின் சுவடி, எழுதும் சட்டம்,
> கண்ணுறக் கொண்டு கருத்தொடு பழகினேன்
> உலக நீதி ஒழுக்க இயல்பு
> பலமுறை கேட்டுப் பண்பொடு பயின்றேன்;
> கொன்றை வேந்தன், குழியின் பெருக்கம்,
> வெற்றி வேற்கை, வெண்பா மூதுரை
> இயற்றிய ஆன்றோர் எண்ணிய பொருளுடன்
> பயிற்றிய வண்ணம் பண்புறக் கேட்டேன் ''

இப்படி, தமக்கு அளிக்கப் பட்ட திண்ணைப் பள்ளிக் கல்வியைப் பற்றிக் குறிப்பிடுகிருர் வ. உ. சி. திண்ணைப்பள்ளிப் படிப்பு முடிந்ததும், அக்கால முறைப்படி வ. உ. சி. ஆங்கிலம் பயிலத் தொடங்கினர். ஆனல் அவருக்கு ஆங்கிலம் கற்றுத் தந்த ஆசிரியர் விரைவிலேயே வேறு ஊருக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அவ்வூரில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்றுத் தரக் கூடிய ஆசிரியர் அவர் ஒருவரே. ஆகையால் அவர் போனதும் எட்டயபுரத்திலிருந்த ஆசிரியர் ஒருவரை வரவழைக்க ஏற்பாடு செய்து, ஒரே நாளில் பள்ளியைக் கட்டி முடித்து விட்டாராம் வ. உ. சி. யின் தந்தை !

> '' அவமாக் கிடந்த அழகிய நிலத்தில்
> கட்டிடம் ஒன்று கட்டுவித்து, அதிலொரு
> பட்டப் பகற்குளே பள்ளியை அமைத்தனன் ''

என்று, தந்தையின் இச்செயலைப் பாராட்டிக் கூறுகிருர் வ. உ. சி. பிள்ளையின் படிப்பு, – அதுவும் ஆங்கிலப் படிப்பு, – தடைப்பட்டுவிடக் கூடாதென்று அவருக்கு அத்தனை அக்கறை.

தமிழ் நாட்டுத் தேசிய விளையாட்டு என்று சொல்லத் தக்கதாக நம்மிடையே இன்று ஒன்றிரண்டு கூட இல்லை. சுதந்திரம் வந்த பிறகும்கூட கிரிக்கெட்டுக்கு உள்ள முக்கியத்துவம் நம் ஊர் மட்டைப் பந்துக்கும் கிளியந்தட்டுக்கும் நாம் கொடுக்கவில்லை. சடுகுடு போன்ற ஒரிரு விளையாட்டுகள் மீண்டும் உயிர்

பெற்று வந்தாலும், விளையாட்டில்கூட நாம் பெரிதும் 'விதேசி' களாகிவிட்டோம் என்பதை மறுப்பதற்கில்லை.

வ. உ. சி. தமது சுய சரிதையில் அவர் ஆடிய விளையாட்டுக்களைப் பற்றி ஒரு நீண்ட பட்டியலே தந்துள்ளார். சுவர் மேல் நடத்தல், மரம் ஏறுதல், கால்திரி எறிதல், சடுகுடு, கிளியந் தட்டு, நீர் விளையாட்டு, நெட்டோட்டம், கம்புசுற்றுதல், கத்தி வீச்சு முதலியன அக்காலத்துக் கிராமியத் தமிழ் விளையாட்டுகள்.

சிறைச்சாலை என்றால் என்ன ? குற்றம் செய்த மனிதனைச் சமுதாயத்திலிருந்து சில காலத்துக்குப் பிரித்து வைக்கும் இடமே சிறைச்சாலை. அந்தத் 'தனிப்பாடு' தவிர அவனுக்குத் துன்பம் ஒன்றும் அங்கே இழைக்கப்படுதல் ஆகாது. இதுவே அறிவுடையோர் சிறைச்சாலை அமைத்ததன் நோக்கம், அதற்குத் தரும் விளக்கம். ஆனால் கல்லாரையும் பொல்லாரையும் சிறை அதிகாரிகளாக நியமித்துச் சிறைப்பட்டவர்களைத் துன் புறுத்துவதே அரசாங்க நடைமுறையாக இருந்துவந்துள்ளது. அங்கும் லஞ்சம் ! அங்கும் ஏற்றத் தாழ்வுகள் ! அந்தோ மனித சாதியே !......

சிறைக் கொடுமைகளை மனம் நொந்து வருணிக்கிறார். வ. உ. சி.

**'' எந்தச் செய்தியும் இயம்பினால் அடிவிழும்**
**அடியும் வெற்றடி அன்று, கம்பளம் போர்த்து**
**அடியும் மிதியும் அநேகர் தருவது**
**அடிப்பவர் கைதிகள், அடிக்கச் சொல்லுவோர்**
**ஜெயிலினை ஆளும் ஜெயிலர் ஆதியோர்**
**எவன்தான் அஞ்சான் இக்கம்பள அடி ''**

இது மட்டுமல்ல. கைதிகளில் யாரும் பண வசதி உள்ளவர்கள் என்று தெரிந்தால், அவர்களை நயமாக நடத்தி அவர்களிடம் லஞ்சம் பெறுவதும் அவர்களை நன்றாக நடத்துவதும் அங்குள்ளவர்களின் வழக்கம். தூத்துக்குடிச் சுதேசிக் கப்பல் கம்பெனி வ. உ. சி. யினுடையது என்றும், அதன் மூலம் அவர் கோடிக்கணக்காகப் பணம்திரட்டி வைத்திருப்பதாகவும் சிறையிலுள்ள ஆபிசரிடம் ஒருவன் சொல்லியிருக்கிறான். அதை நம்பிய அந்த அதிகாரி, வ. உ. சி. யை நன்றாக நடத்தினால் லஞ்சம் கிடைக்கும் என்ற ஆசையில்,

**'' தினமும் வந்து சிரித்துப் பேசி**
**தின்பன கொடுத்துப் பண்புகள் செய்தான் ''**

ஆனால், பாவம், அவன் எதிர்பார்த்தபடி அவரிடமிருந்து பொருள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் ஜெயிலரிடம்

அவரைப் பற்றிக் கோள் சொல்லி, அவருக்கு எந்த உதவியும் கிடைக்காதபடிச் செய்துவிட்டான்.

இவைபோன்ற எத்தனையோ செய்திகளை நமக்குத் தருகிறது வ. உ. சி. சுய சரிதை. இதை வ. உ. சி. இரண்டு பகுதியாக இரண்டு வேறு சூழ்நிலைகளில் எழுதினார். ஆயினும் தன் வரலாறு என்ற போக்கில் தட்டுத் தடங்கலின்றி இந்நூல் செல்லுகிறது. சிறையிலிருந்த காலத்தில் அவர் எழுதிய பகுதியில் ஓரிடம் நகைச்சுவை ததும்ப அமைந்துள்ளது.

வ. உ. சியும் அவரது தோழர்களும் கைது செய்யப்பட்டு விஞ்சு துரையிடம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவர்கள் தீவிரப் புரட்சிவாதிகள் என்று கருதியதால் இவர்களுக்கு முன்னும் பின்னும் போலீசார் அணியணியாகப் பாதுகாப்புச் செய்து சென்றார்கள். அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்டு இவர்கள் தங்களை முடிசூடா மன்னர்கள் என்று எண்ணிக் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார் வ. உ. சி. இவர்கள் போலீஸ் அதிகாரிகள் புடைசூழச் செல்ல மக்கள் இருபக்கமும் நின்று வாழ்த்தி வணங்க,—

**"பன்னிரு கான்ஸ்டபிள் பயனெட் வெடியொடும்**
**முன்னொரு ஏட்டு முகந்தெரிவா னொடும்**
**தயாராய் நின்று சலியூட்டுச் செய்தனர்**
**தயாராய் நாங்கள் சலியூட்டை ஏற்றோம்"!**

மேலே விவரித்த கொடுமைகள் மலிந்த சிறைச் சாலையிலும் நகைச்சுவை இயல்பினராக இருந்துள்ளார் என்றால், வ. உ. சி. யின் மனத்திண்மைக்கு வேறு சான்றே வேண்டியதில்லை.

**"அன்பினும் அருளினும் அளவு கடந்தேன் ;**
**இன்பினும் மகிழ்வினும் இயல்பு கடந்தேன்"**

என்பது அவரைப் பற்றி அவரே செய்துள்ள விமர்சனத்தில் ஒரு பகுதி.


தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு வாழ்த்துக்கள்

**பாரதி ஸ்டோர்ஸ்**

4/69 W E A

கரோல் பாக், புது தில்லி

now

# FOTON

MADE IN POLAND

BRIGHTER WHITE

PHOTOGRAPHIC PAPER

●

- RICH CONTRAST
- PACKED IN FOIL SEAL PACKING
- FOTON SUPER ROLL FILMS
  with Extraordinary latitude of exposure
  to ensure sure snaps

INSIST ON FOTON For Photographic requirements

●

*For further Particulars, please contact :*

**CHOKSHI BROTHERS PRIVATE LTD.**

Western India House,
P. M. Road, Fort, Bombay-1.

66, Ganesh Ch. Avenue.
Calcutta - 13.

5/17, Mount Road,
MADRAS - 2.

*with the compliments of*

# BRITANNIA

*makers of*

*Better Biscuits*

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

# நாடகத்தில் சிதம்பரனர்

அவ்வை தி. க. ஷண்முகம்

'தேசபக்தனும், ஆங்கிலேயனும்' என்னும் தலைப்பில் மகாகவி பாரதி ஒரு தர்க்கப் பாடல் புனைந்துள்ளார். அப்பாடல் தேசபக்தர் வ. உ. சிதம்பரனருக்கும், திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் விஞ்சு துரைக்கும் நடைபெற்ற உணர்ச்சிமிக்க சம்வாதம். சிதம்பரனர் விஞ்சு துரையைச் சந்தித்தபோது அவர்களுக்குள் எவ்வாறு வாதம் நடைபெற்றிருக்கும் என்பதைப் பாரதி தம் மனக் கண்ணுல் கண்டு எழுச்சியோடு பாடிய பாடல் அது. ஒரு இசை நாடகமாகவே அப்பாடல் அமைந்துள்ளது.

'நாட்டில் எங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினய் கனல் மூட்டினய்'

என்கிருன் விஞ்சு துரை மகன். அதற்கு நம் வீரர் பெருமகனர்,

'சொந்த நாட்டில் பரர்க் கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்'

என்று பெருமித உணர்ச்சி பொங்க விடையளிக்கிருர்.

இந்தப் பாடல் முழுவதையும் படிக்கும்போது அன்று நடைபெற்ற நிகழ்ச்சி எப்படியிருந்திருக்கும் என்பதை இன்றும் நம்மால் உணர முடிகிறது.

1952-ஆம் ஆண்டில் தமிழகத் தலை நகராகிய சென்னையிலே செப்டம்பர் 12-வது நாள் பாரதி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கச்சாலீஸ்வரர் ஆலயத்தின் முன் அமைக்கப்பெற்றிருந்த சிறிய அரங்கில் பாரதியின் அந்த இசை நாடகத்தையும் 'சத்திரபதி சிவாஜி' என்னும் தலைப்பில் பாரதி பாடியுள்ள மற்ருெரு இசை நாடகத்தையும் நாங்கள் நடித்தோம். ஆம். அமரர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னின்று நடத்திய பெருவிழா அது.

வீரர் வ. உ. சி. அவர்களை நேரில் கண்டு உரையாடும் பேறு பெற்ற பெருமக்கள் சிலர் அன்றைய விழாக் கூட்டத்தின் முன்னணியிலே வீற்றிருந்தனர்.

நான் சிதம்பரனாராக வேடம் புனைந்து நின்றேன். நாடகத்தில் உரையாடல் எதுவுமில்லை. பாரதியின் பாடல் மட்டுந்தான். வீரச் சிதம்பரமாக நானும், விஞ்சு துரையாக எங்கள் குழுவின் நடிகர் ஒருவரும் ஆவேசத்தோடு பாடி நடித்தோம்.

மகாகவி பாரதியின் பாடல்களுக்குச் சிலர் உரிமை கொண்டாடியதை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்று, அப்பாடல்களை நாட்டின் பொதுச் சொத்தாக்கிய பிறகு நடைபெற்ற முதல் விழா அது. அந்த வெற்றியிலே எங்களுக்கும் பங்குண்டல்லவா? எனவே, நாங்கள் அந்த வெற்றிப் பெருமிதத்தோடு நடித்தோம்.

செப்டம்பர் 11, 12 தேதிகளில் அதே அரங்கில் பாரதி விழா நடைபெற்றது. திரு. ம. பொ. சி., திரு. ஜீவானந்தம் முதலிய பல்வேறு பேரறிஞர்கள் உணர்ச்சி நிறைந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தி அவையோரை பாரதியோடு ஒன்று படுத்தி வைத்திருந்தனர்.

நாடகம் தொடங்கியது. நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றிய அறிவிப்புச் செய்யப் பெற்றது. திரை விலகியது. வீரச் சிதம்பரனாரையும், விஞ்சு துரையையும் மேடையில் பார்த்ததும் பெரும் திரளாகக் கூடியிருந்த அவையோர் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். நான் உணர்ச்சிப் பிழம்பாக நின்றேன்.

இருவரும் பாடத் தொடங்கினோம். ஆம்: சொந்தக் குரலிலேயே ஆவேசத்தோடு பாடினோம். விஞ்சு துரையின் கண்டனங்களுக்கு வீரர் சிதம்பரம் உடனுக்குடன் விடையளித்தபோது அவையோர் பல முறை கை தட்டி வரவேற்றனர். சில அடிகளைப் பாடி முடித்த பிறகு இறுதியாக,

கூட்டம் கூடி வந்தேமாதரம் என்று
கோஷித்தாய் ! எமை தூஷித்தாய் !!
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் ! பொருள் ஈட்டினாய் !!

என்று அழுத்தமாகப் பாடினார் விஞ்சு துரை. உடனே நான் (சிதம்பரம்) ஆவேசத்தோடு,

'வந்தே மாதரம் '!

என்று உச்சஸ்தாயியில் குரல் எழுப்பினேன். விஞ்சு துரை ஆத்திரத்தோடும் கோபத்தோடும் கண்களை அகல விழித்தார். நான் மீண்டும் அழுத்தமாக அதற்கும் மேல் ஸ்தாயியில்,

'வந்தே மாதரம் '!

என்று முழக்கி நிறுத்தினேன். மீண்டும் விஞ்சு துரை கண்களில் கனல் கொப்பளிக்க உருட்டி விழித்தார். நான் மேலும் அழுத்தமாக ஆவேசத்தோடு,

'வந்தேமாதரம் '!

என்று உச்சஸ்தானத்தில் குரலை எழுப்பி நீண்ட பார்வையோடு பெருமுழக்கம் செய்தேன்.

என்ன வியப்பு! எதிரில் உணர்ச்சி வடிவாக வீற்றிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெறி பிடித்தவர்கள் போல என்னோடு சேர்ந்து —

'வந்தே மாதரம், ! வந்தே மாதரம் '!!

என்று கோஷித்தனர். அவையின் முன்னணியிலே வீற்றிருந்த சில பெரியவர்கள் துள்ளி எழுந்து கரங்களை உயர்த்தியவாறு 'வந்தே மாதரம்' என்று முழக்கியதை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

காட்சி ஐந்து நிமிடங்கள்தான் நடைபெற்றது. 'வந்தே மாதரம்' என்று சிதம்பரனார் கோஷிப்பதோடு காட்சி முடிகிறது. பெரும் திரளான மக்கள் அந்த மாமந்திரத்தை எதிரொலித்து முழக்கிய உணர்ச்சிவேகம் அடங்க மேலும் ஐந்து நிமிடங்கள் பிடித்தன.

ஆம்; சிதம்பரனாரை நாங்கள் மேடை நாடகமாக உருவாக்குவதற்கு அன்றைய பாரதி விழாவில் நடைபெற்ற இந்த இசை நாடகம்தான் வித்தாக இருந்தது என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதன் பிறகு வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் சிதம்பரனார் வரலாற்றை மேடை நாடகமாக ஆக்கித் தரும்படி பல எழுத்தாள நண்பர்களிடம் கேட்டுக் கொண்டேன். ஒரு சிலர் எழுதவே தயங்கினார்கள். நிகழ்ச்சிகள் பெரும்பாலும்

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் நடைபெற்றவை; 1936-ஆம் ஆண்டு வரையில் நம்மோடு வாழ்ந்து மறைந்த மாவீரர் வ. உ. சி., அவரோடு நாட்டுப் பணி புரிந்தவர்கள் பலர் வயோதிகர்களாக இன்னும் நம்மிடையே வாழ்கிறுர்கள்; அவருடைய குடும்பத்தினரும் வாழ்ந்து வருகின்றனர்; இந்நிலையில் வ. உ. சி. யின் வரலாற்றை நாடகமாக்கினுல் நாடகச் சுவைக்கென்று கற்பனை நிகழ்ச்சிகள் எதையும் கண்டபடி புகுத்த இயலாதல்லவா ? இதனை எண்ணியே எழுத்தாளர்கள் தயங்கினுர்கள்.

என்றுலும் நாங்கள் எங்கள் ஆர்வத்தை விடவில்லை. வ. உ. சி. யின் வீர வரலாற்றில் நாடகத்திற்குத்தேவையான ஒரு உயிரோட்டம் இருக்கிறது. பாரத விடுதலைப் போரில் பைந்தமிழ் நாடு கிளர்ந்தெழுந்து முன்னணியில் நின்ற சிறப்பினை உணர்த்தும் அவ்வீர வரலாற்றை எப்படியாவது மேடையேற்றிவிட வேண்டும் என்ற துடிப்பு எங்களுக்கிருந்தது.

1955-ஆம் ஆண்டில் திடீரென்று ஒரு நாடகம் என் பார்வைக்கு வந்தது. நாடகத்தின் பெயர் 'தளபதி சிதம்பரனுர்' ஆவலோடு படித்தேன்; என் மதிப்பிற்குரிய தலைவர் ம. பொ. சி. அவர்களிடமும் காண்பித்தேன். ம. பொ. சி. யின் 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் வரலாற்று நூலை அடிப்படையாகக் கொண்டுதான் நண்பர் சித்தராசன் நாடகம் புனைந்திருந்தார். அவரோடு நான் கடிதத் தொடர்பு கொண்டேன். நாடகத்தை மீண்டும் திருத்தியமைக்க வேண்டிய வழி வகைகளையெல்லாம் அவருக்கு எழுதினேன் – சில ஆண்டுகள் கடந்தன.

14-4-58 இல் அந் நாடகச் சுவடியைக் குறுக்கி 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் தலைப்பில் சென்னை வானெலியிலே நாங்கள் நடித்தோம். வானெலி நாடகத்தைக் கேட்டு ரசித்த அன்பர்கள் பலர் எங்களை மிகவும் பாராட்டி உற்சாகப் படுத்தினுர்கள். மீண்டும் மேடை நாடக முயற்சியைத் தொடர்ந்தோம். நாடக ஆசிரியர் சித்தராசன் ஒரு மாத காலம் எங்கள் இல்லத்திலேயே வந்திருந்து நிகழ்ச்சிகள், உரையாடல்கள் யாவற்றையும் திருத்தியும், மாற்றியும் எழுதிக்கொடுத்தார். தம்பி பகவதி, நண்பர் புத்தனேரி சுப்பிரமணியம், ஆசிரியர் சித்தராசன் இவர்கள் மூவரோடும் தனித்திருந்து சில நாட்கள் நன்கு விவாதித்து இறுதியாக ஒருவாறு நாடகத்தை எழுதி முடித்தோம்.

மகாகவி பாரதியின் வாக்குகள் பலவற்றை நாடக பாரதியின் உரையாடல்களிலே புகுத்தினும். வ. உ. சி.யின் 'மெய்யறிவு', 'அகமே புறம்', 'மனம் போல வாழ்வு', 'வலிமைக்கு மார்க்கம்' முதலிய நூல்களிலே உள்ள சிறந்த கருத்துக்களை நாடக வ. உ. சி யின் உரைகளிலே சேர்த்தோம். தலைவர் ம. பொ. சி அவர்களிடம் நாடகத்தைப் படித்துக் காட்டினேம். அவர்களும் சில அரிய யோசனைகள் கூறி நாடகத்திற்கு மெருகேற்றியதோடும் நாடகம் கச்சிதமாக அமைந்து விட்டது' என்று நற்சான்றும் தந்தார்கள். வ. உ. சி. அவர்களின் குமாரர் வ. உ. சி. சுப்பிரமணியம் எங்கள் நெருங்கிய நண்பர். அவர் வானெலி நாடகத்தைக் கேட்ட நாள் முதல் எங்களை உற்சாகப் படுத்திக் கொண்டேயிருந்தார். அவரிடமும் மேடை நாடகத்தைப்பற்றிக் கூறினேன். நாடக அமைப்புமுறை சரியாக உள்ளதென அவருங் கூறினர்.

வேடம் புனைவதற்காக ஆடையணிகளைத் தயாரிக்க முனைந்தபோதுதான் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டன. நாடகப் பாத்திரங்கள் நம் காலத்தில் வாழ்ந்தவர்களல்லவா? பார்த்துப் பழகியவர்கள் இருக்கிருர்களே; அவர்கள் உள்ளம் ஒப்பவேண்டுமே என்று அஞ்சினேன். நமக்குக் கிடைத்துள்ள புகைப்படங்கள் பல வற்றிலும் வ. உ. சி தலைப்பாகையுடனேயே காணப்படுகிருர். ஆனல் நாடகத்தில் அவர் தலைப்பாகையில்லாமல் வரவேண்டிய காட்சிகளும் இருக்கின்றன. எனவே, பாகையில்லாத சமயம் அவர் எப்படியிருந்தார் என்பதை அறிய முயன்ருேம். அவரோடு நெருங்கிப் பழகிய அன்பர்கள் சிலரிடம் விசாரித்தோம். வ. உ. சி. சைவ வேளாளர் மரபின்படி பின்குடுமி வைத்திருந்தார் என்பது மட்டும் தெரிந்தது. ஓரளவு கற்பனையாகவே யூகித்து ஒரு 'பொய்ச் சிகை' தயாரித்தோம்.

பின்னல் நாடகமேடையில் தம்பி பகவதியை வ. உ. சி. வேடத்தில் பார்த்த முதியவர்கள் சிலர் 'வ. உ. சி. சாட்சாத் இதேபோலத்தானிருந்தார்' என்று பாராட்டினர்கள்.

வ. உ. சி. அவர்களுடன் நெருங்கிப் பழகிய நம் தலைவர் ராஜாஜி அவர்கள் நாடகத்தைப் பார்த்து விட்டு மேடையில் பாராட்டியபோது அவர்கள் வாயால்,

> 'மேடையில் தோன்றிய சிதம்பரம் பிள்ளை, பாரதி, சிவா முதலிய பாத்திரங்கள் எல்லாம் தத்ரூபமாகவே இருந்தார்கள்.'

என்று சொன்னபோது எங்கள் எல்லோருக்கும் ஆறுதல் ஏற்பட்டது.

மகாகவி பாரதியின் பாடல்கள் சில இந்த நாடகத்தில் பொருத்தமாக அமைந்தன. எனவே, அப்பாடல்களையே பயன்படுத்திக் கொண்டோம்.

தீரர் சுப்பிரமணிய சிவாவாக நான் நடித்தேன். அவருடைய பாடல் ஒன்று பழைய புத்தகத்திலிருந்து கிடைத்தது. அதையும் பயன் படுத்தினேம். ஏனைய பாடல்களை நெல்லை மாவட்டத்தையே சேர்ந்த புத்தனேரி சுப்பிரமணியம் சொற்சுவை, பொருட் சுவையோடு மிக அருமையாக அமைத்துத் தந்தார். ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவைப் பாடல் ஒன்றும் அருமையான கட்டத்தில் இடம் பெற்றது.

இத்தனைச் சிறப்புக்களுடன் 'தேசபக்தர் சிதம்பரனர்', வ. உ. சி. அவர்களை ஈன்றெடுத்த நெல்லை மாவட்டத்தில், அவர் போர்க்கொடி உயர்த்திய திருநெல்வேலியில் நகர மன்ற பொருட்காட்சி அரங்கில் 1960 ஜூலை முதல் தேதியன்று 'ஜாம் ஜாம்' என்று அரங்கேறியது.

இந்த நாடகத்தில் பாரதியாராக நடிப்பதற்குப் புதிதாக ஒருவரைத் தேர்ந்தெடுத்தோம். அவருடைய கண்கள் பாரதியின் கண்களைப்போல் ஒளி பெற்று விளங்கின. அவரது இயற்கையான துடிப்பும், பேச்சும் ஒரு கவிஞனுக்குரிய முறையில் காட்சியளித்தன. முன்னதாகவே அவருக்கு வேடம் புனைந்து பார்த்தபோது அவர் அசல் பாரதியாராகவே தோற்றமளித்தார். சென்னையில் சிதம்பரனர் நாடகத்தைக் காண பாரதியாரின் புதல்விகள் தங்கம்மாள் பாரதியும், சகுந்தலா பாரதியும் வந்திருந்தார்கள். அவர்கள் மிகுந்த உணர்ச்சியோடு,

> 'எங்கள் தந்தையார் இப்படித்தான் பேசுவார்; இப்படித்தான் துள்ளித் துள்ளி நடப்பார்.'

என்று சொல்லிப் பாராட்டிய போது எங்கள் உள்ளம் நிறைவு பெற்றது.

இன்னெரு முக்கியமான செய்தியைக் கூறுவிட்டால் இக்கட்டுரை பூர்த்தி பெறுது. எனவே, அதையும் சொல்லி விடுகிறேன்.

சப் கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்று தன்னையும் மாய்த்துக் கொண்ட புரட்சி வீரன் வாஞ்சிநாதன் நாடகத்திலே ஒரு முக்கிய பாத்திரமாக வருகிறார். அவரைப்பற்றிய வரலாறு எதுவும் எங்களுக்குத் தெரியாது. அதைப் பற்றித் தெரிந்துகொள்ள நாங்கள் பெருமுயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. நாடக ஆசிரியர் வாஞ்சிநாதனுக்கு ஒரு மனைவியைப் படைத்து அவள் மூலமாக நாடக உணர்ச்சிகளை உருவாக்கியிருந்தார். இறுதியாக வாஞ்சிநாதன் கருவுற்றிருந்த மனைவியை ஏமாற்றிவிட்டு இரவில் புறப்படுகிறான். இவ்வாறு நாடகம் ஆக்கப் பெற்றிருந்தது. நாங்கள் சென்னையில் நாடகத்தைநடத்தியபோது சாட்சாத் வாஞ்சிநாதன் மனைவியே உயிரோடிருக்கிறார் என்பதும், அதுவும் சென்னையிலேயே இருக்கிறார் என்பதும் தெரிய வந்தது. ஆக்கூர் அனந்தாச்சாரியார் உதவியோடு அந்த அம்மையாரைச் சென்று பார்த்தேன்; வணங்கினேன். அவர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட குறிப்பான செய்திகளை அறிய முன்றேன். அவர்களும் வந்து நாடகத்தைப் பார்த்தார்கள். மறு நாள் அவர்களைக் கண்டு 'தங்களைப் பற்றிய காட்சியில் ஏதாவது தவறு இருக்கிறதா' என்று கேட்டேன். அவர்கள் அமைதியாகக் கண்ணீர் விட்டார்கள். 'எல்லாம் நடந்ததுபோலவே இருக்கிறது' என்று நாத் தழுதழுக்கக் கூறினார்கள். எங்கள் மனம் சாந்தி அடைந்தது.

மற்ற நாடகங்கள் எல்லாவற்றையும்விட இந்த நாடகத்தை உருவாக்குவதில் நாங்கள் அதிகப்படியான சிரமத்தையெடுத்துக் கொண்டோம். எங்கள் உழைப்பு வீண் போகவில்லை. இந்நாடகத்தின் வெற்றிக்கு ஒத்துழைத்த நண்பர்கள் எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள். இந்த மேடை நாடக வெற்றிதான் "கப்பலோட்டிய தமிழன்" என்னும் பெயருடன் ஒரு அற்புதமான திரைப்படத்தை உருவாக்கக் காரணமாயிருந்தது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள எனக்கு உரிமையுண்டு.

தேசபக்தர் சிதம்பரனாராகவும், சுப்பிரமணிய சிவாவாகவும், மகாகவி பாரதியாகவும் நாடகமேடையில் தோன்றுவதற்கு எங்களுக்குக் கிடைத்த நற்பேற்றினை எண்ணும்போது இன்னும் மெய் சிலிர்க்கின்றது.

வாழ்க சிதம்பரனார்!

---

# தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு
# எங்கள் வாழ்த்துக்கள்

★

தி மேட்டூர் கெமிகல் அண்ட் இன்டஸ்டிரியல்
கார்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை. ஆர். எஸ்.
சேலம் ஜில்லா.

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்:
சேஷஸாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி.

★

தில்லி பிரதிநிதி:
ரா. சக்கரவர்த்தி, M.A., B.L.,
3/1, இராணி ஜான்ஸி ரோடு,
புது தில்லி – 1.

தொலைபேசி எண்: 40622
தந்தி: "காமதேனு"

தபால் பெட்டி
எண்: 89.

*

*With Best Compliments*

*from*

# MESSRS. VIJAYA PRODUCTIONS PRIVATE LTD.

MADRAS-26.

*

# காலம் தாழ்த்திப் புகழ்பெற்ற அறிஞர்

பெ. நா. அப்புஸ்வாமி

வ. உ. சி.யை எப்பொழுது நான் முதலில் சந்தித்தேன் என்று எவ்வளவோ நினைத்துப் பார்த்தேன். நினைவுக்கு வரவில்லை. அவர் இவ்வளவு புகழுக்கு உரியவர் ஆகப் போகிறார் என்றோ, நான் அவரைப் பற்றி ஒரு சிறிது எழுதப் போகிறேன் என்றோ, சுட்டும் ஒரு முற்குறியும் அப்போது இல்லை. தெரிந்திருந்தால், சில நிகழ்ச்சிகளையேனும் குறித்து வைத்திருந்திருப்பேன். ஒன்று மட்டும் நினைவிருக்கிறது. அவரை அப்போது சாதாரணமாக வ. உ. சி. என்றோ, வி.ஓ.சி. என்றோ, சுருக்கமாக ஒருவரும் சொன்னதைக் கேட்டதில்லை. அவரை அவருடைய நண்பர்கள் பலரும் சிதம்பரம் என்றோ, சிதம்பரம் பிள்ளை என்றோ தான் கூறக் கேட்டிருக்கிறேன். புகழ் விரியப் பெயர் சுருங்கி விட்டது. இது ஒரு வியப்பு அன்று.

### தொடக்க நினைவுகள்

நான் முதலில் அவரைச் சந்தித்தது திருநெல்வேலியில். என்னுடைய தந்தை நாராயணய்யர் அப்போது அங்கே டாக்டராக இருந்தார். அவருடைய நண்பர்களில் சிலர், சின்ன அண்ணுசாமி ஐயர், பி. எல். வெங்கு ஐயர், கே. ஆர். வெங்கட்ராம ஐயர், எஸ்.வி. விசுவநாத ஐயர், சோமசுந்தர பாரதி, வி. ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகியோர் தூத்துக்குடியில் வக்கீல்களாக இருந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். தங்களையும் மற்றவர்களையும் பற்றிப் பேசுவார்கள் – அநேகமாக ஒருமையில். அவர்கள் அனைவரும் நெருங்கிப் பழகிவந்த நண்பர்கள். பல கருத்துக்களில் ஒற்றுமைப்பட்டவர்கள் – வக்கீல் தொழிலில் ஒருவருக்கொருவர் போட்டியாக வாதாடி வந்தாலும் கூட, இவை ஓரளவு தெளிவாகவே உள்ள நினைவுகள்.

இந்த நண்பர்கள் அனைவருமே தம்தம் அளவிலும், தம்தம் முறையிலும், தேச பக்தர்கள். அந்த அளவுக்கு

ஏற்ப கப்பல் ஓட்டும் முயற்சியிலும் ஈடுபட்டவர்கள் - சிலர் நேர்முகமாகவும், சிலர் மறைமுகமாகவும், அவர்களுடைய ஈடுபாட்டுக்குத் தக்கபடி நண்பர்கள், உறவினர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் அறிவுரைகளையோ, பாராட்டுக்களையோ, பொல்லாப்புக்களையோ பெற்றவர்கள். அவர்கள் எல்லோரும் இப்போது காலமாகி விட்டார்கள். ஆகையால் நான் சொல்வதை ஒப்பவோ, மறுக்கவோ மாட்டாதவர்கள்.

இவர்களுள் எஸ். வி. விசுவநாத ஐயரைப் பற்றிச் சிறிது சொல்ல விரும்புகிறேன். அவர் பின்னர் மற்றொரு வகையாகவும் தேசத் தொண்டு புரிய விரும்பினர். அவரது தொண்டைப் பற்றி, எனது சிறிய தகப்பனுரான அ. மாதவையர், தாம் இயற்றிய **பொது தர்ம சத்கீத மஞ்சரி** என்னும் சிறிய பாடல் - தொகுதியின் முன்னுரையில் 1914-இல் (அதாவது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்) பின் வருமாறு கூறியிருக்கிறுர்:

"சாதாரண ஜனங்கள் பாடும் நாடோடிப் பாடல்களை உண்டுபண்ணும் சுதந்திரம் மட்டும் ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், அந்நாட்டுச் சட்ட திட்டங்களை நியமிப்பவர் யாரென்று அவன் கவனிக்க வேண்டியதில்லை', என்பது ஆங்கிலேய மேதாவி ஒருவர் வாக்கு. அவ்விதப் பாட்டுக்கள் ஜனங்களின் மனப்போக்கு நடவடிக்கைகளை மேலாடி வசிகரித்துத் தம் கருத்தின் வழிபடுத்த வல்லன என்பது அவர் குறிப்பு. சிங்கார ரசமும் பக்தி ரசமும் செறிந்துள்ள பாட்டுக்கள், தமிழராகிய நமக்குள், அமோகமாயுள ; நாடு நகர மடாலய ஜன சமூக தர்மங்களைக் கூறும் கீதங்களோ நரிக் கொம்பே. பொது நன்மைக்காக உழைத்துவரும் எனது நண்பர் ப்ரும்மஸ்ரீ எஸ். வி. விசுவநாதையர், இக்குறையை நீக்கக் கருதி, இந்தியாவின் அருமை பெருமைகளையும், சாமானியக் கல்வியும், கைத்தொழில்களாகிய தற்கால நாகரிகங்களும் தழைத்து, நாம் அபிவிருத்தியடைவதற்கான சாதனங்களையும் பற்றி, எளிய நடையில், யாவர்க்கும் பயன்படும் வண்ணம் இயற்றப்படும் தமிழ்ப் பாட்டுக்களுக்கு, இரானடே, கோக்கலே என்னும் தேசாபிமானிகள் பேரில் ரூ. 300 வரைப் பரிசுகள் கொடுப்பதாகப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார். அவ்விளம்பரப்படி வந்த கீதங்

களில், இப்புத்தகத்தில் உள்ள இந்தியக் கும்மி, தக்க மத்தியஸ்தர்களால் இரானடே தலைப் பரிசு அளிக்கப்பட்டது.

இப் பரிசுப் போட்டியில் (சி. சுப்பிரமணிய) பாரதியும் கலந்துகொண்டார். அவர் அனுப்பிய பாட்டு பரிசு பெற வில்லை. மாதவையர் எழுதிய பாட்டு அதனினும் மேலாகக் கருதப்பட்டு பரிசளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. இம்முடிவை வாசகர்கள் ஒப்பலாம் அல்லது மறுக்க லாம். ஆனால் இது உண்மை.

### திருநெல்வேலிக் கலகம்

நான் வ. உ. சி.யை முதலில் தெரிந்து கொண்ட சில ஆண்டுகளுக்குப் பின், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் எப். ஏ.-யில் 1908 ல் படித்துக் கொண்டிருந்தேன். அதற்கு முந்திய ஆண்டு, 1907 ல் நான் சென்னையில் படித்து வந்த போது, பிபின் சந்திர பால், திருவல்லிக்கேணிக் கடற்கரை யில், பெரு முழக்கப் பேருரைகளை நிகழ்த்தக் கேட்டேன். வங்காளப் பிரிவினை காரணமாகக் கொதித்தெழுந்தவர் களுள்ளும் சுதந்திரத் தீயைப் பற்றி எழச் செய்தவர்களுள் ளும் அவர் ஒருவர். 'சுதேசி' 'அயல் நாட்டுப் பண்ட பகிஷ்காரம்' என்னும் கூச்சல்கள் தமிழ் நாட்டிலும் எழத் துணை செய்தவர். இந்த உணர்ச்சி தென்னாட்டில் எங்கும் அத்தகைய மனப்போக்கு உடையவர்களிடையே பரவிற்று. வ. உ. சி.யும் அவர்களில் ஒருவர். அவர் செய்த சிற்சில செயல்களின் காரணமாக 1908 ம் ஆண்டில் அவர் சிறைப் படுத்தப்பட்டார்.

அதைக் கேட்ட திருநெல்வேலி மக்களில் பலர் ஆவேசங் கொண்டார்கள். பெருங் கூட்டமாகத் திரண் டார்கள். கடைகளை அடைக்கச் செய்தார்கள். கற்களை வீசினார்கள். இந்துக் கல்லூரி வாயிலில் பெருங்கூட்டம் திரண்டது. கல்லூரிக்கு சைக்கிளில் ஏறி வந்து கொண் டிருந்த ஹெர்பெர்ட் சாம்பியன் (இவர் பின்னர், சைதாப் பேட்டை ஆசிரியர் கல்லூரித் தலைவராகவும், அதன் பின்னர் கல்வித்துறை நெறியாளராகவும் பணிபுரிந்தார்) 'பாரி அன்ட் கம்பெனி' அலுவலகத்திற்கு விரைந்து சென்று, கூட்டத்திலிருந்து தப்பவேண்டி யிருந்தது. அன்று அக் கூட்டத்தார் அனைவரும் சிதம்பரம் பிள்ளையின் பெயரை முழங்கினார்கள். அவ்வாறு முழங்கிய வண்ணம், தெருக் களில் உள்ள விளக்குகளை எல்லாம் உடைத்தார்கள்.

திருநெல்வேலி டவுனில் உள்ள நகராட்சி அலுவலகத்தையும் (அப்பொழுது அது முனிசிப்பாலிட்டி என்றே வழங்கப்பட்டது). போலீஸ் ஸ்டேஷனையும் தீக்கு இரையாக்க முயன்றார்கள். நகராட்சி அலுவலகம் பற்றி எரிந்து, தீக்கு இரையாகி விட்டது. போலீஸ் ஸ்டேஷன் தப்பிற்று.

அக் கலகக்காரர்கள் எங்கள் கல்லூரி வாயிலில் கூச்சலிட, கல்லூரித் தலைவர் தப்பி ஓடிவிட, கல்லூரியின் கீழ் அதிகாரிகள் – கூட்டத்தின் விருப்பத்துக்கு, உத்தரவுக்கு, இணங்க – அதை மூடிவிட்டார்கள். நாங்கள் அச்சத்தோடு வீடு சென்றோம். ஒவ்வோர் வீட்டின் வாயிற் கதவும் அடைக்கப்பட்டது. நான் அப்பொழுது வீரராகவபுரத்தில் இருந்தேன். எனது தந்தையின் மிக நெருங்கிய நண்பர் பி. என். வெங்கடாசலம் ஐயரின் வீட்டு இரண்டாவது மாடியில் ஏறி, அவருடைய மகனும், என்னுடைய நண்பரும் நீதிபதியாக இருந்து இப்போது ஓய்வு பெற்றிருப்பவருமான பி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருமாக ஒன்றரை மைலுக்கு திருநெல்வேலியில் எரியும் கட்டடப் புகையைக் கண்டோம். எங்கும் கூட்டமாகச் சென்று, ஆரவாரம் செய்யும் ஓசை காதில் விழுந்தது. அன்று மாலையில் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியிருந்தது என்றும், அதனால் சிலர் இறந்தனர் என்றும் கேட்டு வருந்தினோம். அவ்வாறு நடக்கப்போகிறது என்று வ. உ. சி. கருதவே இல்லை என்பது எங்களுக்கு நிச்சயம். அறியா மக்கள் (கூட்ட வெறியில்) செய்த அட்டூழியங்களே இவை என்பது அப்போதும் எங்களுடைய மனத்தில் பட்டது. அந்த நினைவுகளை ஒருநாளும் மறக்க முடியாது.

### மொழி பெயர்ப்பாளர்

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நான் சென்னையில் பி.ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது வ.உ.சி. சிறைச்சாலையில் இருந்தார். அங்கே அவர் ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்கள் சிலவற்றை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் எனது தந்தையார் ஜேம்ஸ் ஆலனின் ஆங்கில நூல்களை வாங்கி அனுப்புமாறு எனக்கு எழுதினார். நானும் அவற்றை வாங்கி, விரைவில் படித்துவிட்டு அனுப்பினேன். இப்படி என் தந்தைக்கு ஆலன் மீது ஏற்பட்ட ஈடுபாடு, தனியாக – சிதம்பரம் பிள்ளைக்குப்போல் – தோன்றியதா அல்லது சிதம்பரம் பிள்ளையின் முயற்சியைக் கேள்வியுற்று எழுந்ததா, என்பது

எனக்கு நிச்சயம் இல்லை. அந்நூல்கள் முதலில் மொழி பெயர்த்து எப்பொழுது வெளிவந்தன என்பதும் நினைவில்லை. வ.உ.சி. ஒரு மொழிபெயர்ப்பாசிரியர் என்று அவர் மீது எனக்கு பிற்காலத்தில் (நானும் ஒரு மொழிபெயர்ப்பாளனாக இருந்துவரும் காரணத்தால்) மதிப்பு நிறைய ஏற்பட்டது. அதற்கு முன்னரே வேறு சில மொழிபெயர்ப்பாளர்களையும் நான் கண்டு வியந்ததுண்டு. உதாரணமாக, மில்டன் எழுதிய **சுவர்க்க நீக்கத்தை** அகவலாக மொழி பெயர்த்த (இதை ஜி. யூ. போப் பாராட்டியுள்ளார்.) வெ. ப. சுப்பிரமணிய முதலியார்; ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் எழுதிய **கல்வி விளக்கத்தை** மொழி பெயர்த்த (1899)


MORE PEOPLE
SMOKE SIMLA THAN ANY
OTHER FILTER CIGARETTE




ISSUED BY
THE IMPERIAL TOBACCO COMPANY OF INDIA LIMITED

கள்ளப்பிரான் பிள்ளை, அப்பாவு பிள்ளை, சுப்பிரமணிய முதலியார் ஆகியோர்கள்; ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோவை மொழிபெயர்த்த (1902) அ. மாதவையர் என்பவர்களைக் குறிப்பிடலாம். அவ்வாறே பிறநாட்டுச் செல்வங்களைக் கொணர்ந்திங்கு சேர்த்த' வ. உ. சி. யையும் நான் பாராட்டினேன்.

## கதவடைத்த பாடல்

திருநெல்வேலியில் அம்மன் சன்னதித் தெருவில் நாங்கள் இருந்தபோது ஒரு நாள் கொட்டாரம் சங்கரையர் (கொட்டாரம் என்பது திருநெல்வேலியின் அருகில் உள்ள ஓர் ஊர்) அங்கே வந்தார். அவர் தடித்த மேனியர், சிரித்த முகத்தினர், இனிய குரலினர், பாரதியின் நண்பர். 'கலெக்டர் விஞ்சு துரைக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் பேச்சு நடந்ததாகப் பாரதி பாடியிருக்கிறானே, அதை ஒரு புது முறையில் அமைத்திருக்கிறேன். பாரதியிடம் பாடிக் காட்டினேன். அவனே நன்றாயிருக்கிறது என்றான்' என்றார். இந்தப் பாட்டுத்தான் முன்னால் வெளிவந்த பாரதி நூல் பதிப்புக்களில் 'ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது' என்றும், 'தேசபக்தன் ஆங்கிலேயனுக்கு மறுமொழி' என்றும் அச்சிடப்பட்டது. 'எங்கே அதைப் பாடுங்கள் கேட்போம்' என்றோம். உடனே சங்கரையர், 'வாசற்கதவைச் சாத்துங்கள். எனக்குக் கேப்பைக் களி பிடிக்காது' என்றார்.

திருநெல்வேலியில் பல வீடுகள் திருடருக்கு அஞ்சி பெட்டி போலவும், நீண்ட குழாயைப் போலவும் கட்டப் பட்டிருக்கும். அவ் வீட்டுக் கதவுகளின் நீளம் கனம் இரண்டு அங்குலத்துக்குக் குறைவில்லை. கதவைச் சாத்தி விட்டால், சிற்றொலியும் வெளியே கசியாது. அப்படி 'ஒலி அடக்கமாக' எங்கள் வீட்டைச் செய்து கொண்டு, அவர் பாடக் கேட்டோம். முதலில் விஞ்சு துரை சொல்லியதாக ஒரு பாட்டும், பிறகு அதற்கு வ. உ. சி. விடை கூறியதாக ஒரு பாட்டுமாக மாறி மாறிப் பாடி முடித்தார். தனித் தனியாக இரண்டு பாட்டுக்களையும் படிப்பதை விட, அப்படிப் பாடக் கேட்டது, இன்னும் உணர்ச்சி ஊட்டுவதாக இருந்தது. மார்லோவும், ஸர் வால்டர் ராலியும், தனித் தனியே பாடிய 'காதல் மிக்க ஆயனது' பாடலும், 'கன்னியின் விடையும்' இவ்வாறு பாடப் பாடக் கேட்டிருக்கிறேன். பழைய நினைவுகள், கலகம், நெருப்பு முதலியவை அப்போது நினைவுக்கு வந்தன.

## தமிழ்ப் பதிப்பாசிரியர்

வ. உ. சி. சில தமிழ் நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். அவற்றுள் ஒன்று குறள். அது நல்ல பதிப்பு. மற்றொன்று தொல்காப்பியம், இளம்பூரணரின் உரையுடன். இதன் எழுத்ததிகாரப் பதிப்போடு (1928) நானும் சிறிது தொடர்பு கொண்டிருந்தேன். அந்த நூல் சென்னையில் அச்சேறி வந்தது. நண்பர் வையாபுரிப் பிள்ளை அதை அச்சேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 'ஒருவர்க்கு இருவர் மேல்' என்ற முறையிலும், நூலில் உள்ள ஈடுபாட்டின் காரணத்தாலும், நானும் வையாபுரிப் பிள்ளையோடு இருந்து இருவருமாகப் 'புரூப்' பார்த்து வந்தோம். பிள்ளையவர்களுக்கு அதைச் சீராகப் பதிப்பிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தது. அது மிகவும் கடினமான வேலை. மெல்லிய காகிதம், மழுங்கிய அச்சு, ஊறும் மை, எளிதில் பொருள் விளங்காச் சொற்களும், பிற வேலைகளின் இடையே கவனிப்பு. இவ்வாறு அதைப் புரூப் பார்த்து வரும்போது, முன்னால் வெளிவந்த அதிகாரங்களைப் பிரதி செய்து அச்சிட வ. உ. சி. தனியாக எவ்வளவு பாடுபட்டிருக்க வேண்டும் என்பதை நாங்கள் ஒவ்வொரு படியிலும் கண்டோம்.

அப்போது சிற்சில சமயங்களில் வ. உ. சி. சென்னைக்கு வருவார். அப்போதெல்லாம் என்னையும் வந்து காண்பதுண்டு. அந்நாளில் எல்லாம் தமிழுலகம் அவரை அவ்வளவு பாராட்டியதில்லை. ஆனால், உண்மை உழைப்பாளிகள், பாராட்டை நாடி உழைப்பதில்லை; பாராட்டை உதறித் தள்ளாவிட்டாலும் கூடப் பாராட்டின் பொருட்டாகவும் உழைப்பதில்லை. ஆயினும், தன்னோடு பழகும் மக்கள் தன்னை உணர்ந்து பாராட்டுகிறார்கள் என்று தெரிந்தால், எத்தகைய மனமும் பூரித்து மகிழும், மேன்மேலும் செயல் புரிய ஊக்கம் பெறும். பாராட்டு இல்லாமையும் பொருட்படுத்தா அத்தகையவரைப் பாராட்டுவது நமது கடமை—காலம் தாழ்த்தியதால் நிரம்பப் பாராட்டுவது தகும்.

தம் வாழ்நாளில் அத்துணை இல்லாவிட்டாலும் பிற்காலத்திலேனும் – பாரதியின் நிலையும் இத்தகையதே – வ. உ. சி. நன்கு பாராட்டப் படுகிறார் – அரசியல் துறையில் செய்த செயல்களின் பொருட்டு. இலக்கியத் துறையில் அவர் செய்துள்ள செயல்களின் பொருட்டும் அவரை நாம் பாராட்டுவோமாக.

---

# அமரர் வ. உ. சி.

வே. ஜெயப்பிரகாஷ்

அடிமையா மிருளில் நாடே
  அழகொழிந் திருந்த நாளில்
மடிதுயில் போக்க எண்ணி
  மாந்தரை அழைத்தாய் எந்தாய்!
கடமையே தளையை நீத்தல்
  கண்ணியம் உயிராய் ஏத்தல்
மடமையே மாற்றார் வேட்டல்
  மனிதரா யிருப்பீர் என்றாய்!
தூங்கிய தமிழோர் கேட்டார்
  துள்ளியே உணர்வைப் பெற்றார்
எங்குமே உரிமை வேட்கை
  எழுந்தது அனலாய் அம்மா!
தாங்கிடத் தரணி தன்னைத்
  தக்கவர் நாங்கள் என்றே
பொங்கிய வெள்ளை ஆட்சி
  போட்டது புலியைச் சிறையில்
வெஞ்சிறை தன்னில் வெந்தாய்
  வேகுதே நெஞ்சம் இன்றும்
கொஞ்சமோ தியாகம் செய்தாய்
  குலமணி! இழுத்தாய் செக்கும்!
சிறையினில் செம்மல் பிள்ளை
  செய்தநல் தவத்தின் மேன்மை,
இறையுறை கோயிற் புனிதம்
  இன்றது பெற்ற துண்மை!
பொங்கிடும் கண்ணீர் ஊற்றில்
  போனது அடிமை அவலம்.
இங்கிவர்க் குண்டோ இணைதான்
  என்றபேர் பெற்றோம் உன்னால்!
சுதந்திரம் உயிர்மூச் சாகும்
  சொல்லதும் செயலு மாகும்
இதந்தரும் கனவை நனவாய்
  இல்லைநீ காண இன்றே!
அழிவென்ப துன்வரை அழியும்
  அழியுமோ உன்பேர் நெஞ்சில்!
வழிவழி நிலைத்து வையம்
  வ. உ. சி. நினைவைப் போற்றும்!

❖ ❖ ❖

வாழிய தமிழே எங்கள்
  வள்ளலைப் பாடி என்றும்!
வாழிய, சங்கம்! வாழ்க,
  வளமிகுத் தமிழர் இனிதே!

# பிரிந்தவர் கூடினால்...

*"மாயாவி"*

சென்ற ஆண்டில், விடுமுறையைக் கழிக்க ஊருக்குப் புறப்பட்ட போது, பம்பாய் நண்பர் கன்யாலாலும் என்னுடன் வருவதாகச் சொன்னார். "மிஸ்டர் ராமு, தாயத்து அளித்திருக்கும்குறிப்பிலிருந்து எனது பூர்விகத்தைப் பற்றி ஏதேனும் அறிய முடியுமாவென்று விசாரிக்க விரும்புகிறேன். உங்கள் ஊருக்கு அருகிலே குற்றாலம் இருப்பதும், தமிழ் அறிந்த நீங்கள் உடன் இருப்பதும் இம்முயற்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்" என்றார் அவர்.

கன்யாலால் வராவிட்டாலும் நானே அக்காரியத்தை இவ்விடுமுறையில் கவனிக்க வேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன். இப்போது அவரும் புறப்பட்டு விட்டார். 'பல ஆண்டுகளாக அவரின் மனத்தைக் குடைந்து கொண்டிருக்கும் வேதனை இந்தச் சந்தர்ப்பத்திலேனும் தெளிந்துவிடாதா'? என்ற நம்பிக்கையோடு அவருடன் ஊருக்குப் பிரயாணமானேன்.

* * *

கன்யாலாலை எனக்கு ஏழெட்டு ஆண்டுகளாகத் தெரியும். நான் வேலை பார்க்கும் காரியாலயத்தை அடுத்தே அவருடைய காரியாலயமும் இருந்தது. 'சிமென்லால் தேசாய்' என்பவர்கள் பம்பாயில் பிரபல மோட்டார் வியாபாரிகள். அந்தக் கம்பெனியின் சொந்தக்காரரான சிமன்லாலின் வளர்ப்புப் பிள்ளை கன்யாலால்.

நெடு நாட்களாகக் குழந்தைகளில்லாதிருந்த சிமன்லாலும், அவர் மனைவியும், இருபத்து எட்டு ஆண்டுகளுக்கு முன், க்ஷேத்திராடன யாத்திரை ஒன்று புறப்பட்டனர். தென்னெங்கும் சுற்றி விட்டுக் கடைசியாக, அவர்கள் ராமேசுவரத்துக்குச் சென்றனர். அங்கிருந்து சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, மதுரைச் சந்திப்பில் ரயில் மாறி, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறி அமர்ந்தார்கள்.

அவர்கள் ஏறிய இரண்டாவது வகுப்பு வண்டியில் மூன்று வயதுடைய ஆண் குழந்தை ஒன்றுடன் வேறொரு தமிழர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் சிமன்லாலுடன் ஆங்கிலத்தில் சரளமாகப்

பேசிப் பழகினர். பேச்சினூடே குழந்தை யார் என்று விசாரித்தார், சிமன்லால். தமது சகோதரியின் மகனென்றும், பிறந்ததுமே பெற்றோரை விழுங்கிவிட்ட அந்த அதிர்ஷ்டம் கெட்ட குழந்தையைத் தாம் பாதுகாக்க நேரிட்டதென்றும், ஆனால், அதன் துரதிர்ஷ்டம் தம்மையும் சூழ்ந்து பற்பல வாழ்க்கைத் தோல்விகளை ஏற்படுத்தி விட்டதால் சென்னையிலிருக்கும் அநாதை விடுதி ஒன்றில் சேர்த்துவிடும் நோக்கத்துடன் புறப்பட்டுச் செல்வதாகவும் சொன்னார். அவர்.

குழந்தையின் பால் வடியும் வதனத்தையும், களங்கமற்ற தோற்றத்தையும் பார்த்த சிமன்லாலுக்கு, அவர் கூறுவது உண்மையாக இருக்குமாஎன்ற ஐயம் தோன்றியது. அதோடு 'இந்தக் குழந்தையையா அநாதை விடுதியில் விடுவது? என்னிடம் தந்தால் வளர்த்து வருவேனே' என்ற நினைவும் எழுந்தது.

சிமன்லாலின் ஐயம், நினைவு எல்லாவற்றிற்கும் சாதகமாகவே காரியங்கள் நடந்து விட்டன. வண்டி திண்டுக்கல்லைத் தாண்டியபதும், பிரயாண அலுப்பினல், சிமன்லாலும் அவர் மனைவியும் அயர்ந்து நித்திரை போய் விட்டனர். மறுநாள் காலையில் செங்கற்பட்டை விட்டு ரயில் கிளம்பிய பிறகுதான், அவர்கள் விழித்தெழுந்தனர். எழுந்த போது வண்டியில் அந்த ஆசாமியைக் காணவில்லை; குழந்தை மட்டும் தூங்கிக் கொண்டிருந்தது. அதன் அருகில் கிடந்த ஒரு சிறு காகிதத்துண்டு, அந்தப் பிரயாணி, குழந்தையைக் கைவிட்டுப்போய் விட்டதை அவர்களுக்கு அறிவித்தது. அதில் ஆங்கிலத்தில் எழுதியிருந்தது.

நண்பர் சிமன்லாலுக்கு,

''மாலையில் நான் உங்களிடம் கூறியவற்றில் ஒன்றுகூட உண்மையல்ல; பணத்துக்கு ஆசைப்பட்டு இக் குழந்தையைக் கொல்ல ஒப்புக்கொண்டு தூக்கி வந்தேன். பிறகு என் மனம் சபலமடைந்து விட்டது. அதைக் கொல்வதைவிட அநாதை விடுதியில் விட்டுவிடுவதென்று தீர்மானித்தேன். இப்பொழுது அந்தச் சிரமங்கூட இல்லாமற்போய்விட்டது. நீங்களோ குழந்தைகளற்றவர்கள். எனவே உங்கள் குறையை இக்குழந்தை போக்குவான். பேசாமல் இவனை எடுத்துச் சென்று வளர்த்துக் கொள்ளுங்கள். குழந்தையின் நலனுக்காக வேறொரு விஷயமும் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். அவன் கழுத்தில் அணிவிக்கப் பட்டிருக்கும் தாயத்தை எந்த நிலையிலும் அகற்றிவிட வேண்டாம். அதில்தான் அவன் உயிர் பிணைக்கப்பட்டிருக்கிறது.

* * *

சிமன்லால் குழந்தையைக் கொண்டுவந்து வளர்த்தார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அதன் பெயரென்ன என்பதை அவர் கேட்டறியவில்லை. எனவே, அந்தக்

குழந்தைக்குக் கன்யாலால் என்ற குஜராத்திப் பெயரைச் சூட்டிக் குஜராத்திக் குழந்தை யாகவே வளர்த்தார். கன்யா லால் அழகிய வாலிபனுக வளர்ந்து, நிறையப் படித்து, இப்போது தமது வளர்ப்புத் தந்தையின் மோட்டார் கம் பெனியைத் திறமையாக நிர் வகித்து வந்தார்.

கன்யாலால் முதல் முதலாக எனக்கு அறிமுகமானபோது, அவர் தென்னுட்டில் பிறந்து வடநாட்டுச் சூழ்நிலையில் வளர்ந்து வருபவர் என்ற செய்திகூட என்னை வியப்பில் ஆழ்த்தவில்லை. ஆனுல், அந்த நாகரிக இளைஞர், கழுத்தில் தாயத்தொன்றைப் பளிச் சென்று தெரியும்படி அணிந் திருந்ததைக் கண்டுதான் வியப்படைந்தேன். சில நாட் களுக்குப் பிறகு அதுபற்றி அவரிடம் கேட்டேன்.

அவர் சொன்னுர்: "எனக் கும் இதை அணிவதற்கு வெட்கமாகவே இருக்கிறது, மிஸ்டர் ராமு; ஆயினும் அதைக் கழற்றி விட்டால், ஏதாவது நோய் நொடி என்னை விடாப்பிடியாகப் பற்றிக் கொள்ளுவதும், திரும்ப அணிந்துகொண்ட பிறகே அது மறைவதும் அனுபவபூர்வமான நிகழ்ச்சிகளாக யிருக்கின்றன; என்ன செய்வது சொல்லுங் கள்?"

'இதென்ன விசித்திரம்? இப் படியும் ஓர் அபூர்வத் தாயத்து உண்டா?' என்று நான் வியந் தேன். ஆனுல், சென்ற வாரம் அதன் வல்லமையைக் கண் டேன். அப்போது ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்றுதான், கன்யா லாலின் முன் வாழ்க்கையைப் பற்றி ஒரு சிறு துப்பையும் எங்களுக்குத் தந்தது.

சென்ற வாரத்தில் அந்தத் தாயத்தின் ஒரு பக்கத்தை அடைத்திருந்த பொன்மூடி இற்றுக்கீழே விழுந்துவிட்டது. கையோடு அதற்கு வேறு ஒரு மூடியிடுவதற்காக நானும் கன்யாலாலும் அண்டையி லிருந்த பொற்கொல்லரிடம் போயிருந்தோம். கன்யாலால் அதைக் கழற்றியதுமே வழக் கம்போல் கடுஞ்சுரம் வந்து, அவர் அங்கேயே படுத்துக் கொள்ளும்படி ஆகிவிட்டது. இத்தனை சக்தி வாய்ந்த அத் தாயத்துக்குள் என்னதான் இருக்கிறது என்பதைக் கண்டு விட வேண்டுமென்ற ஆவல் எனக்கு எழுந்தது. பொற் கொல்லரிடமிருந்து அதை வாங்கிப் பரிசோதித்தேன். உள்ளே சில எழுத்துக்களும் சக்கரம் பொறிக்கப்பட்ட செப்புத் தகடும் மட்டுமே காணப்பட்டன. பூதக்கண்ணுடி கொண்டு அவ்வெழுத்துக்களை ஆராய்ந்தேன். அதில் வட மொழியில் ஏதோ சில மந்திரங் களும், தமிழில் கீழ்க்கண்ட விவரமும் தென்பட்டன.

"இந்தத் தாயத்து பிங்கள வருடம் ஆனித் திங்கள் ஆரும் நாளில் திருக்குற்றுலத்துச் சோமசுந்தரப் பராதீனரால் சக்தி மந்திர உச்சாடனத் துடன் அணிவிக்கப்பட்டது — ஓம் சக்தி!"

எங்கள் சேவை

உங்களுக்குத் தேவை

*

# பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு பிரைவேட் லிமிடெட்

" பாலுஸேரி பில்டிங்ஸ் "

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ 414

மதராஸ்-5.

தந்தி : " EVERMANS " போன் : 85834

*

தில்லி கிளை அலுவலகங்கள் :

(1) " கான்ஸன் ஹவுஸ் "
1/24, அஸப் அலி ரோட், புது தில்லி-1.

(2) " பாலுஸேரி பில்டிங் "
14-A/4, W.E.A., கரோல் பாக்
புது தில்லி-5.

(3) 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி,
புது தில்லி-3.

போன் நெ: 171. டெக்ஸ் மார்க் நெ: 3642.
தந்தி: சக்தி.

## ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

தபால் பெட்டி நெ: 36,

பொள்ளாச்சி

★

ஸ்ரீ சக்தியின் NF. 17 – 34 – 52 – 68 ரகங்களும்
NF. 2/17 முறுக்கு நூல் ரகங்களும்
NF. 38–52 கோன் நூல் ரகங்களும்
தனிச் சிறப்புடையவை.

★

அவை முறையே

★ நெசவிற்கு நயமும்
★ பாவிற்கு ஏற்ற உறுதியும்
★ இழைபலமும் பெற்றுள்ளதால்

கைத்தறி நெசவாளர்களும் வியாபாரிகளும்
விரும்பி வாங்குகின்றனர்.

இதை நான் தமிழ் தெரியாத கன்யாலாலுக்கு, குஜராத்தியில் மொழிபெயர்த்துச் சொல்லிவிட்டு, "சக்தி மந்திரமா? அப்படியானால் இது மகத்தான தாயத்துத்தான்; சந்தேகமேயில்லை" என்றேன்.

ஆனால், கன்யாலாலுக்கு சக்தி மந்திரத்தைப் பற்றியோ தாயத்தின் மகிமையைப் பற்றியோ கவலை ஏற்படவில்லை. அவர் மனம், இந்தக்குறிப்பிலிருந்து தமது பூர்வீகத்தைப் பற்றிய செய்தி எதையேனும் அறிய முடியுமா என்ற சிந்தனையில் மூழ்கிவிட்டது.

ரயிலில் ஊருக்குச் சென்று கொண்டிருந்த போது கூடக் கன்யாலால் அதைத்தான் சொன்னார். "இந்தக் குறிப்பு கிடைத்திருப்பது ஒரு சுப நிகழ்ச்சிக்கு அறிகுறி என்றே எனக்குத் தோன்றுகிறது, மிஸ்டர் ராமு. ஊர் பேர் தெரியாமல் வாழ்வது எவ்வளவு துன்பகரமானது என்பதை அனுபவித்துப் பார்த்தவர்களே உணருவார்கள். அறிவு வந்த பிராயத்திலிருந்து என் உள்ளத்தை அரித்துவரும் இந்த மர்மம் மட்டும் இப்போது விளங்கி விடுமானால்..."

ஆனால், கன்யாலாவின் துரதிர்ஷ்டம், குற்றாலத்தில் நாங்கள் பத்து நாட்கள் சுற்றியும், அந்தச் சாமியாரைப் பற்றி ஒரு தகவலும் சேகரிக்க முடியவில்லை. அவரைப் பற்றியே அறியாமற் போன பிறகு, எவ்வாறு கன்யாலாலின் பிறப்பைப்பற்றி அறிய முடியும்? பாவம்! கன்யாலால் மனம் சோர்ந்து விட்டார். எவ்வளவோ நம்பிக்கையுடன் வந்த அவருக்கு இது ஒரு பெரிய ஏமாற்றமாயிற்று. அந்த ஏமாற்றத்தைக் குற்றாலத்திலே அனுபவித்துக் கொண்டிருக்க அவர் விரும்பவில்லை. உடனே பம்பாய்க்குத் திரும்பிவிடவேண்டும் என்றார். ஆனால், நான்தான், "இவ்வளவு தூரம் வந்தீர்கள். இங்கு பார்க்க வேண்டிய தேனருவி, சம்பகாதேவி, ஐந்தருவி முதலிய இடங்களைப் பார்த்து விட்டுப் பிறகு போகலாம்" என்று கூறி அவரை நிறுத்தி வைத்தேன்.

உற்சாகமின்றி என்னைப் பின்பற்றி ஒருநாள் தேனருவி, சம்பகாதேவியைப் பார்த்து வந்தார் கன்யாலால். மறு நாள் நாங்கள் ஐந்தருவிக்குச் சென்றோம்.

குற்றாலத்திலிருந்து மூன்று மைல்கள் வடமேற்கில் இருக்கிறது இந்த அருவி சுமார் முப்பதடி உயரத்திலிருந்து கிளைகளாகப் பிரிந்து ஐந்து நீர் வீழ்ச்சிகள் 'சோ' வென்ற பேரிரைச்சலுடன் கீழே விழும் காட்சி பார்க்க ரம்மியமாக இருக்கும். சுற்றிலும் மலைகள்; வானளாவி நிற்கும் மரங்கள். நீர் வீழ்ச்சியை அடைந்துவிட்டால், பிரமாண்டமான கோட்டைக்குள்ளே இருப்பதுபோன்ற தோற்றம் ஏற்படும்.

ஆனால், நாங்கள் போன சமயம், சாரல் காலமாக

இல்லாததால், அருவிகள் எல்லாவற்றிலும் தண்ணீர் வழிந்து கொண்டிருக்கவில்லை. நடுவிலுள்ள ஒரே ஒரு கிளையில் மட்டும் ஓரளவு தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அதில் குளித்துவிட்டுக் கையில் கொண்டுவந்திருந்த சாப்பாட்டைப் புசித்தோம். உள்ளத்தைக் குளிர வைக்கும் மலைக் காற்று 'ஜில்' லென்று வீசிக் கொண்டிருந்தது. சற்று நேரம் இளைப்பாறிவிட்டு, வெயில் தணிந்ததும் குற்றாலத்துக்குத் திரும்புவது என்று வசதியான இடத்தை தேடலானோம். அருவிக்குச் சிறிது தூரத்தில் குகைபோன்ற இடம் தட்டுப்பட்டது. அங்கே போய்க் களைப்பாறலாம் என்று சென்றோம்.

ஆனால், அந்தக் குகையில் யாரோ ஒரு சாமியார் உட்கார்ந்து கொண்டிருந்தார். அங்கேயே அவர் வசித்து வருவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. எனவே, வேறு இடத்துக்குப் போகலாம் என்று திரும்பியபோது, அந்தச் சாமியார் புன்சிரிப்புடன், "வாருங்கள் ஐயா! சும்மா வாருங்கள்" என்று எங்களை அழைத்தார்.

"இல்லை; சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று வந்தோம். உங்களை சிரமப்படுத்த விரும்பவில்லை. வேறு எங்காவது போய்ப் படுத்துக் கொள்ளுகிறோம்" என்றேன் நான்.

"அதனாலென்ன? இங்கேயே படுத்துக் கொள்ளலாமே; சும்மா உள்ளே வாருங்கள்" என்று கனிவோடு கூப்பிட்டார், அவர்.

அந்த அன்பு அழைப்பை மறுக்க முடியாமல் குகைக்குள்ளே சென்றோம்.

சாமியாரை யாரோ பைராகி என்றுதான் முதற்பார்வையில் நினைத்தேன். ஆனால் அவருடைய இருப்பிடத்தை ஒருமுறை சுற்றி நோக்கியதும், அவர் ஒரு பெரிய 'யதீசுவரர்' என்பது புலனாயிற்று. ஆம், குகைக்குள்ளே ஹோமகுண்டங்களும் பூஜைப் புறைகளும், தர்ப்பாசனங்களும், பழைய ஓலைச்சுவடிகளும் காணப்பட்டன. ஹோம குண்டத்தில் தீ இன்னும் அணையாமல் எரிந்து கொண்டிருந்தது. பூஜைப் புறையில் பாலகிருஷ்ணனின் உருவப்படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதற்கு காட்டுமலர்களாலான மாலைகளை அவர் சாற்றியிருந்தார். மண் அகல் விளக்கொன்று வாடா விளக்காக ஒளியிட்டுக் கொண்டிருந்தது.

எங்களை உள்ளே அழைத்துச் சென்ற அத்துறவி, தர்ப்பைப் பாய்கள் இரண்டைத் தந்து அமரச் செய்தார். பிறகு, "நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் ஐயா?" என்று அன்பொழுக வினவினார்.

"எனக்குச் சொந்த ஊர், இதோ அடுத்திருக்கும் மேலகரம் என்ற கிராமம், ஸ்வாமி; இவர் என் பம்பாய் நண்பர். குற்றாலத்தைப் பார்க்க வந்திருக்கிறார்" என்றேன்.

# ஸ்ரீ வெங்கடேச மில்ஸ் லிமிடெட்

(நிறுவனம் : 1933)

❋

நூற்பிலும், நெசவிலும் சிறந்து விளங்கும்

ஒரு தென்னிந்திய பஞ்சாலை

❋

பதிவான அலுவலகம் :

பழனி ரோடு, வெங்கடேச மில்ஸ் போஸ்டு,

உடுமலைப்பேட்டை.

(கோவை மாவட்டம்)

❋

நிர்வாகப் பொறுப்பினர் :

G. V. கோவிந்தசாமி நாயுடு & கோ

❋

பொது நிர்வாகி :

R. முத்துசாமி, B.A., B.Sc. (Tech.) A.T.I.

❋

கிளை ஆலை : ரெட்ஹில்ஸ், மதராஸ் - 52.

"அதுதான் பார்த்தேன் — அவர் வட நாட்டுக்காரர் மாதிரி இருக்கிறாரேயென்று" எனக் கூறிய அத்துறவி கன்யாலாலை உன்னிப்பாக நோக்கினார்.

"ஸ்வாமி, நீங்கள் எந்த ஊர்? இங்கே எவ்வளவு நாட்களாக வசிக்கிறீர்கள்?" என்று நான் வினயமாக கேட்டேன்.

"துறவிக்கு ஊரேது, வாசலேது, அப்பா? இதோ, என் மாயக்கண்ணன் பற்பல லீலைகள் புரிந்து சுமார் முப்பது ஆண்டுகளாக என்னை இங்கே வசிக்கச் செய்திருக்கிறான்" என்று அவர் புறையிலிருந்த கண்ணன் படத்தைச் சுட்டிக் காட்டினார்.

நாங்கள் தமிழில் பேசியதால் கன்யாலாலுக்கு எதுவும் விளங்கியிராது. மேலும், அவர் எங்கள் உரையாடலைக் கவனித்தவராகவும் தெரியவில்லை. குகைக்குள்ளே வசதியான ஓர் இடத்தில் தமது பாயை விரித்துப் படுத்துவிட்டார்.

எனக்குத் தூக்கம் வரவில்லை. அத்துறவியிடம் பேசிப் பொழுதைத் தள்ள நினைத்தேன். எனவே உரையாடலைத் தொடர்ந்து, "ஸ்வாமி, இந்த நடுக்காட்டில் வசிப்பது தங்களுக்குக் கஷ்டமாக இல்லையா?" என்று கேட்டேன்.

"துறவிகள் கஷ்டங்களைப் பொருட்படுத்தலாமா அப்பா? காடு — வீடு எல்லாவற்றிலும் ஒரே நிலையுடன் வாழ்பவன் தானே முற்றும் துறந்த துறவி! ஆயினும் என்னை அப்படி ஒரு முற்றும் துறந்த ஞானியென்று சொல்லிக் கொள்ள முடியாது. முப்பது வருடங்களாக என் மனதில் ஒரு பாச வெள்ளம் அலை மோதிக் கொண்டுதானிருக்கிறது. அது என் ஆயுளளவும் வடியவே வடியாது. எனினும் வாழ்வில் துன்பங்களை அனுபவித்த நான், நாட்டு வாழ்வை விடுத்து இக் காட்டு வாழ்வை மேற்கொண்டதால் ஓரளவு மனச் சாந்தியுடன் இருக்கிறேன்."

எப்பொழுதுமே, எனக்குக் கதை கேட்பதென்றால் ஒரு தனி விருப்பம். அதிலும் பூடகமான செய்தி எதையேனும் எவராவது கூறிவிட்டால், அதன் மூலத்தைக் கிளறி அறிந்தாலன்றி, என் மனம் அமைதி அடையாது. இந்தத் துறவியின் பேச்சும் அன்று அவ்வாறுதான் என் ஆர்வத்தைக் கிளப்பியது. மேலும் பேச்சுக் கொடுத்து அவருடைய வாழ்க்கைக் கதையை அவர் வாய் வழியே வரச் செய்துவிட்டேன்.

அந்தத் தபோதனர் கூறிய கதை இது தான்:

* * *

சில காலத்துக்கு முன் தஞ்சாவூரில் கேசவராவ், அனந்தராவ் என்ற இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் பாட்டனார் சரபோஜி மன்னரிடம் ஆஸ்தானக் கவிஞராக இருந்து செல்வமும் புகழும் திரட்டியவர். இந்தச் சகோதரர்களின் தந்தை, அதாவது ஆஸ்தான கவிஞரின் ஒரே

பிள்ளை, இவர்களுடைய குழந்தைப்பிராயத்திலேயே இறந்து விட்டார். கணவனைப் பிரிந்த சோகத்தில், இவர்கள் அன்னையும் விரைவில் உயிர் நீத்தாள். எனவே இந்தக் குழந்தைகளைப் பாட்டனாரே வளர்த்து வந்தார்.

அவர் ஆசாரசிலர். இசையிலும், சாஸ்திரங்களிலும் விற்பனர். மிக உன்னதமான லட்சியங்களும், உத்தமமான குணங்களும் நிரம்பப் பெற்றவர். அவர் கவனத்தில் வளர்ந்த குழந்தைகள் இருவரும் நற்குண நற்செய்கைகளுடையவர்களாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் — சுவை நிறைந்த பழமரம் ஒன்றில் கிளைகள்தோறும் காய்கள் தோன்றுகின்றன. ஆயினும் அவை அனைத்துமே இனிய பழங்களாகக் கனிந்து விடுவதில்லை ; ஒன்றிரண்டு அழுகியும் போய் விடுகின்றன அல்லவா ? அவ்வாறே, உத்தம குலத்தில் தோன்றி, பரமோத்தமர் ஒருவரால் வளர்க்கப் பட்ட அவ்விருவரில் மூத்தவனை கேசவராவ், – ஆம் அவர்தான் இந்தத் துறவி!–நன்முகத் தலையெடுக்க, இளையவன் அனந்தராவ் அழுக்கடைந்த வாழ் வெடுத்தான்.

பாட்டனார், தமதுவாழ்நாள் முழுவதும், கெட்ட நடவடிக்கைகள் குடிகொண்ட அனந்தனைத் திருத்தப் பெரும்பாடு பட்டார். அவரால் இயலவில்லை. பையன் வளர்ந்துவிட்டான். கன்றுயிருக்கும்போதே வசப்படாத மாடு, பெரிதானால் உழவுக்குப் பணிந்துவிடுமா? அனந்தன் திருந்தவில்லை. எனவே கிழவர் சாகும்போது, தமது சுய சம்பாத்தியமான சொத்து முழுவதையும் கேசவனுக்கே எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார்.

அனந்தன் பெரிய சூதாடி ; மனைவியும் ஒரு குழந்தையும் இருந்து தாசி லோலனாகத் திரிந்து வந்தான். மூத்தவனான கேசவராவுக்குக் குழந்தைகளில்லை. இளமைப் பிராயத்திலேயே அவருடைய மனைவி இறந்துவிட்டாள். ஆனால் அவர் இரண்டாம் தாரம் கட்டிக்கொள்ளவில்லை. இளையவன் மகனையே தம் மகனாகக் கருதி அன்பு பூண்டிருந்தார். எனவே சொத்துக்கள் முழுவதும் அவருக்குப் பிறகு அக் குழந்தையையே சாரும். என்றாலும் அனந்தனுக்கு அது போதுமா? அவன் தீய செயலுக்குப் பணம் வேண்டுமே? அதற்காக அவன் அண்ணன் மீது ஒரு வழக்குத் தொடுத்தான் — பாட்டனார் மரணப் படுக்கையிலிருந்த போது அவரை ஏமாற்றி, குடும்பச் சொத்து முழுவதையும் அண்ணன் வஞ்சனையாக எழுதி வாங்கிக் கொண்டான் என்று.

எவ்வளவுதான் தம்பி கெட்டவனாகஇருந்தாலும், அவனுக்குச் சொத்தே இல்லாமல் செய்துவிட வேண்டுமென்பது கேசவராவின் முடிவன்று. எனவே இப்போது அந்தச் சொத்தின் காரணமாகத் தாம் கோர்ட்டு வாசலை மிதிக்க விரும்பவில்லை. ஆனால் சொத்

தைப் பிரித்துக் கொடுத்தால் அதை அவன் நிமிடத்தில் அழித்துவிடுவானே? அதற்காக அவர் தந்திரம் செய்தார். இருந்த சொத்தில் சரி பாதியை அனந்தனின் மனைவி பெயருக்கு, ரிஜிஸ்தர் செய்து கொடுத்துவிட்டார்.

ஆனால், அவர் இப்படிச் செய்தது, பாவம், அந்தப் பெண்ணின் உயிருக்குத்தான் ஆபத்தாக வந்து முடிந்தது. அண்ணனையே மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற அனந்தன், மனைவியிடமிருந்து பணம் பிடுங்கத் தயங்குவானா? அவனுடைய அடி – மிதிகளுக்குப் பயந்து அப்பெண் அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் கொடுத்துத்தான் வந்தாள். ஆனால் குடத்தோடு குடிக்க விரும்புகிறவனுக்கு சில துளிகள் எந்த மூலைக்குக் காணும்? அவன் சொத்து முழுவதையும் தன் பெயருக்கு மாற்றிவிடவேண்டுமென்று மனைவியைத் துன்புறுத்தலானான். அவள் அதற்கு மறுத்து விடவே, ஒருநாள் குற்றுயிராக அடித்துப் போட்டுவிட்டான். ஏற்கனவே கணவனிடம் பட்டுவந்த துன்பங்களால் மனம் ஒடிந்து, உடல் ஒட்டிக் காய்ந்திருந்த அப்பெண், இந்த மரண அடியினால் ஜன்னிகண்டு பிராணனை விட்டாள்.

நல்லதென்று ஒரு காரியத்தைச் செய்ய, அது இப்படி முடிந்தது கண்டு கேசவராவ் உள்ளம் நொந்து போனார். ஆனால் அனந்தனோ, மனைவியின் முடிவினால் தன் வசம் சிக்கிய சொத்துக்களைக் கரைத்துக் களிப்பில் மூழ்கிக் கிடந்தான். அச்சொத்துக்களோடு அவன் தொலைந்து போகட்டும் என்று விட்டுவிட்டுக் கேசவராவ், தாயற்ற அவன் மகனை தாமே எடுத்து வளர்த்து வந்தார்.

மனைவியைக் கொன்று அடைந்த சொத்துக்களை ஒரே ஆண்டில் தொலைத்துவிட்டான் அனந்தன். ஆட்ட ஓட்டங்கள் ஓய்ந்ததும், மீண்டும் அண்ணனிடம் வந்து துன்புறுத்தத் தலைப்பட்டான். மனைவியைப் போல் இவனையும் ஒழித்துவிட்டால், இச் சொத்துக்களையும் மனம் போனபடி கரைத்து வரலாமே என்று ஏங்கினான்.

இந்த நினைவுதான் அவனுக்கு ஏற்படுமென்பது கேசவராவுக்கும் தோற்றமளித்துவிட்டது. சொத்துக்களைக் குழந்தைக்கு எழுதிவைத்தால், இந்தப் பாவி குழந்தையைக் கொன்றாலும் கொன்று விடுவான்: இல்லாவிட்டால் தன்னைக் கொன்று சொத்தை அபகரிக்கப் பார்ப்பான்.

'என்ன செய்வது?' என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தபோதுதான், அவருக்கு ஒரு நல்ல செய்தி கிடைத்தது — குற்றாலத்தில், சோமசுந்தரப்பராதீனர் என்று ஒருவர் இருக்கிறார்; அவர்...''

* * *

பொழுது போக்குக்காக நிலத்தைக் கிளறிக் கொண்டிருக்க புதையலொன்று அகப்

*With Best Compliments*

*from*

**NESTLER BOILERS PRIVATE LTD.,**

LOVE LANE, BYCULLA,

BOMBAY - 27.

பட்டால், எவ்வளவு எதிர் பாராத களிப்புத் தோன்றுமோ, அத்தகைய களிப்புத் தான் சோமசுந்தரப் பராதீனரின் பெயரை இத்துறவி கூறக் கேட்டதும் எனக்கு ஏற்பட்டது.

"யார்? என்ன பெயர் சொன்னீர்கள்? சோமசுந்தரப் பராதீனரா?" என்று ஆவல் மிகைப்பட அவசரத்துடன் வினவினேன்.

"ஆமாம், அவர்தான். நீ அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? மெய்தானே, அவரை அறியாதவர் எவர் தாம் இருக்க முடியும்? தென்னாடு எங்கும் அவருடைய சக்தித் தாயத்தின் மகிமை பரவிப் போயிருந்ததே! அதைப் பற்றித்தான் எங்கள் ஊர்க்காரர் ஒருவர் அன்று என்னிடம் சொன்னார்: 'ஏன் சஞ்சலப்படுகிறீர்கள் கேசவ ராவ்? பேசாமல்சோமசுந்தரப் பராதீனரிடம் சென்று சக்தித் தாயத்து ஒன்றைக் குழந்தைக்குக் கட்டச் செய்து விடுங்கள். பிறகு அதற்கு எந்த ஆபத்தும் ஏற்படாதவாறு தேவி பராசக்தி துணை நிற்பாள்' என்றார்.

"உடனே நான் குழந்தையுடன் இங்கே வந்தேன். பராதீனரைத் தரிசித்து என் சங்கடத்தை எடுத்துரைத்தேன். அவர் சொன்னார்: 'தாயத்து மந்திரித்துக் கட்டுகிறேன். அது சக்தியின் பிரசன்னமுள்ளது. எனவே அதை ஒரு போதும் குழந்தையிடமிருந்து அகற்றக் கூடாது. அதை அணிந்திருக்கும் வரையில் தேவியின் சக்தி எவ்வாறு குழந்தைக்குக் காவலாக இருக்குமோ, அவ்வாறே அதைக் கழற்றிவிட்டால், அதன் உயிரை விழுங்கிவிடவும் செய்யும்' என்று எச்சரித்தார்.

"நான் எதற்காக அத்தனை மகத்துவம் பொருந்திய தாயத்தைக் கழற்றப் போகிறேன்? அதிலும் அதுதான் குழந்தையை அதனுடைய அப்பனிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்று இருக்கும்போது? எனவே பராதீனரிடம் அவ்வாறே உறுதி கூறினேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு பராதீனர் தாயத்தை மந்திரித்துக் குழந்தைக்கு அணிவித்தார். ஒரு பெரிய கண்டத்திலிருந்து அச்சுதனை — அதுதான் குழந்தையின் பெயர் — காப்பாற்றி விட்டேன் என்று ஆறுதல் அடைந்தேன். ஆனால்......

"மறுநாள் நான் ஊருக்குப் புறப்பட இருந்தேன். அன்று காலையில் குளிப்பதற்காக அருவிக்குச் சென்றேன். நாள் தோறும் குழந்தை அச்சுதனையும் உடன்அழைத்துச்சென்று, முதலில் அவனைக் குளிப்பாட்டி ஓரிடத்தில் உட்கார்த்திவிட்டு, அருகிலேயே நானும் குளித்து விட்டுத் திரும்புவது வழக்கம்.

"அன்றும் அப்படித்தான் அச்சுதனைக் குளிப்பாட்டி உட்கார்த்திவிட்டு நான் குளிக்கக் கிளம்பினேன். அப்போது அங்கே நாகரிகமாக உடை அணிந்த ஒருவன் வந்தான். குழந்தையை விட்டுவிட்டு

இரண்டோர் அடிகள் நடந்த என்னிடம் அவன், 'என்ன சார், குழந்தையைத் தனியாகவா விட்டுவிட்டுக் குளிக்கப் போகிறீர்கள் ?' என்று கேட்டான்.

"பரவாயில்லை, அவன் எங்கும் எழுந்து போகமாட்டான்' என்றேன் நான்.

"நன்ருகச் சொன்னீர்களே. துள்ளித் திரியும் குழந்தையை வழுக்கல் பாறைகள் நிறைந்த இந்த இடத்தில் தனியே விட்டுப் போவது எப்போதும் அபாயமானது, சார். இன்று நான் அவனைப் பார்த்துக் கொள்ளுகிறேன். அதோ என் உடைகளை உலரப் போட்டிருக்கிறேன். அவை உலரும் வரையில் நான் இங்கேதான் இருப்பேன். போய், சீக்கிரம் குளித்துவிட்டு வாருங்கள்' என்று கூறி விட்டு அவன் குழந்தையின் அருகே உட்கார்ந்து அதனோடு பேச்சுக் கொடுத்து விளையாடத் தொடங்கினன்.

"சரியான காவல் இருக்கிறது என்ற மிதப்பில் அன்று நான் அருவிக்கே சென்று ஆற அமரக் குளிக்கத் தொடங்கினேன். குளித்துவிட்டுத் திரும்பியபோது அங்கே குழந்தையையும் காணேம்;; அந்த மனிதனையும் காணேம். எனக்கு எத்தகைய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும் நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். 'அச்சுதா ! அச்சுதா !' என்று அலறியவாறு குற்ருலம் முழுவதும் தேடினேன். கண்டவர்களிடமெல்லாம் விசாரித்தேன். ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

"அந்தப் பொன் தாயத்தைத் தவிரக் குழந்தையின் மீது வேறு நகைகள் ஒன்றும் இல்லை. ஆதலால் நகைகளுக்கு ஆசைப்பட்டு அந்த மனிதன் அச்சுதனை அபகரித்துச் சென்றிருக்க முடியாது. அவன் நிச்சயமாக என் தம்பி அனந்தனின் கையாளாகத்தான் இருக்கவேண்டும். அனந்தனின் ஏவலால் குழந்தையைத் தூக்கிச் சென்று கொன்றிருப்பான். அப்படியாளுல் அத்தத் தாயத்தின் மகிமை என்ன ஆயிற்று? அது அவனுடைய உடலில் இருக்குமட்டும் உயிருக்கு ஒருவித அபாயமும் ஏற்படாது என்று பராதீனர் சொன்ருரே !

"அன்றிரவு நான் பராதீனரிடம் சென்று நடந்ததை அறிவித்துக் கதறினேன். அவர் சொன்ஞர்: 'குழந்தையை யார் திருடிச் சென்றிருந்தாலும் அதை மனம் ஒப்பிக் கொல்லும் துணிவு அவர்களுக்கு ஏற்படாது. அதுதான் என் சக்தித் தாயத்தின் மகிமை. ஆகவே இயல்பான இறப்பையன்றி செயற்கை மரணம் உன் குழந்தையை அண்டவே அண்டாது. அவன் எங்கேனும் உயிரோடுதான் இருப்பான்' என்று சமாதானம் செய்தார்.

"ஆனல் பறிகொடுத்த மனம் சட்டென்று சமாதானம் அடைந்து விடுகிறதா? எதற்கும் ஊருக்குச் சென்று பார்க்கலாம் என்று மறுநாள் இரவு தஞ்சையை வந்தடைந்தேன். அங்கே அனந்தன் மட்டுமே

இருந்தான். ஒன்றும் அறியாதவன்போல் குழந்தை எங்கே என்று கேட்டான். நடந்ததைச் சொன்னதும், அந்தப் பாவி நான்தான் குழந்தையைக் கொன்று விட்டேன் என்று பழிக்கத் தொடங்கினன்.

"என் மனம் விண்டு போயிற்று. வாழ்வே கசந்தது எனக்கு. எந்தச் சொத்துக்காகத் தன் சொந்தக் குழந்தையை கொல்லத் துணிந்தானே, அந்தச் சொத்தை அந்தப் பாவிக்கே ஈந்துவிட்டு இங்கே வந்து விட்டேன். அன்று முதல் இந்த வனத்தை என் இருப்பிடமாகவும், இதோ இருக்கும் பாலகிருஷ்ணனையே குழந்தை அச்சுதனுகவும் கொண்டு மன அமைதியுடன் வாழ்ந்து வருகிறேன்" என்று முடித்தார் அந்தத் துறவி.

* * *

துறவி கூறிய கதையின் பிற்பகுதி வந்ததுமே, ஒருகால் கன்யாலால்தான் இவர் குறிப்பிடும் அச்சுதனுக இருப்பானே என்ற ஐயம் எனக்கு எழுந்தது. இப்போது அது மேலும் வலுப்பட்டு விட்டது. இருந்தாலும் கேட்டேன்: "ஆமாம், அச்சுதனின் கழுத்தில் இருந்த பராதீனர் அணிவித்த தாயத்துக்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான அடையாளம் ஏதாவது உண்டா?"

"விசேடமான அடையாளம் ஒன்றும் கிடையாது. சாதாரணக் குழல் தாயத்தைப் போலவே அதுவும் இருந்தது. ஆயினும் பராதீனர் அணிவிக்கும் தாயத்து ஒவ்வொன்றிலும், அது அணிவிக்கப்பட்ட நாளும், பராதீனரின் பெயரும் பொறிக்கப்பட்ட செப்புத் தகடு ஒன்று சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அச்சுதனுக்குத் தாயத்து அணிவிக்கப்பட்ட நாள் உங்களுக்கு நினைவிக்கிறதா?"

"நன்ருக. பிங்கள வருஷம் ஆனித் திங்கள் ஆரும் நாளில் அது அணிவிக்கப்பட்டது."

"என்ன?"

"ஏன் இப்படி வியப்படைகிருய் அப்பா? நான் நல்ல நினைவோடுதான் சொல்லுகிறேன். தாயத்து அன்றுதான் அணிவிக்கப்பட்டது."

"அப்படியானல் ஸ்வாமி, இதோ படுத்திருக்கும் என் நண்பன் கன்யாலால்தான் உங்கள் அச்சுதன்."

"ஆ! எப்படி? எப்படி அப்பா?"

நடந்த கதைகள் அனைத்தையும் நான் அவருக்கு விளக்கினேன். பிறகு?

பிறகு என்ன? பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ?

# இந்தியன் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்
இந்தியன் சேம்பர் பில்டிங், எஸ்பிளனேட்,
சென்னை – 1.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 1,00,00,000 |
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 88,60,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 88,46,215 |
| ஷேர் பிரீமியம் | ரூ. | 14,57,300 |
| ரிசர்வ் நிதி | ரூ. | 78,34,584 |
| டிபாசிட்டுகள் (31–12–63) | ரூ. | 49,88,26,272 |

சேர்மன்:

டாக்டர் ராஜா ஸர். M. A. முத்தையா செட்டியார்,
செட்டிநாடு, B. A., D. Litt. M. L. C.

இதர டைரக்டர்கள்:

டாக்டர் பி. வி. ராஜமன்னார், D. Litt., L.L.D. M.L.C.
திரு. T. செங்கல்வராயன், B. A., B. L. M. P.
ராவ்பஹதூர் T. S. கச்சாபிகேச முதலியார், B. A.
குமார ராஜா M. A. M. முத்தைய செட்டியார்,
செட்டிநாடு, B. A.
திரு. O. M.SP. L. M. மெய்யப்ப செட்டியார்
திரு. ராம்தாஸ் புருஷோத்தம்தாஸ்
திரு. D. C. கோத்தாரி
திரு. K. பாலசுப்ரமணிய அய்யர், B. A., B. L. M. L. C.
திரு. L. அழகுசுந்தரம் செட்டியார்
திரு. P. V. RM. குழந்தையன் செட்டியார்
திரு. A. நாகப்ப செட்டியார்

செக்ரடரி: G. S. சுந்தரம்.

தந்தி : சென்டெக்ஸ் போன் : 32 & 38

# சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

## சென்னிமலை.

★

## சென்டெக்ஸ்

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள் தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், அழகான கெட்டிச்சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் சிறந்தவை.

★

---

சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில் தங்க மெடல் சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

---

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.
தலைவர்.

# பக்குவம்

*சியாமளா ராகவன்*

ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய கணவனைக் கூடக் கவனிக்காமல் புடவைத் தலைப்பைத் தூக்கிச் செருகியபடி வேலை செய்து கொண்டிருந்தாள் சங்கரி.

"என்ன விசேஷம், சங்கரி? இது என்ன ஏற்பாடெல்லாம் பிரமாதமாக இருக்கிறதே? புதிதாக சிநேகிதை யாராவது இன்று விஜயமா?" என்று அடுக்கிக் கொண்டே போனார் சர்மா.

"ஆமாம், உங்களுக்கு எப்போதும் கேலிதான்! இதைப் படித்துப் பாருங்கள்" என்றபடி, மேஜை டிராயரைத் திறந்து ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

படித்து முடிந்ததும், சர்மா, "ஆமாம். இதற்கென்ன, நாணு பம்பாயிலிருந்து அடுத்த வாரம் வருவதாக எழுதியிருக்கிறான். இதற்குப் போய் இத்தனை அமளியா?" என்றார்.

"பாவம், தம்பி ஐந்து வருஷங்களுக்கு பிறகு வருகிறான். அதுவும் அவனைக் கல்யாணத்தின்போது பார்த்ததுதான். அவனுக்குக் குழந்தை குட்டியென்றும் ஆகிவிட்டது."

"சரி, சரி, நீ தான் அருமை மன்னி மைத்துனனைக் குடும்பத்துடன் வரவேற்க ஒரு வாரம் முன்பிருந்தே தயாராகி விட்டாயே."

"உங்களுக்குத்தான் எப்போதும் லீவு கிடைப்பதில்லை என்ற ஏற்பாடு, சொந்த மனிதர்களைக் கூடப் போய்ப் பார்க்க முடியாமல்" என்றாள் சங்கரி.

"யாரும்மா வரா. சித்தப்பாவா, பம்பாயிலிருந்தா?" என்றான் விளையாட்டிலிருந்து திரும்பிய பாலு.

"டேய் பாலு, சித்தப்பா வருவது இருக்கட்டும் உன் அசட்டுத்தனத்தை அம்பலப் படுத்தாதே. அம்மா தயார் பண்ணும் போதே, நீயும் அதையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிடு" என்றார் சர்மா.

மைத்துனன் வருவதாக எழுதியதிலிருந்து சங்கரி, தரையில் கால் பாவாமல் ஓடி ஓடி ஏற்பாடுகள் பல செய்து கொண்டிருந்தாள். தன் சொந்த மாப்பிள்ளை வந்தால் கூட அப்படி வரவேற்பு நடக்குமா என்று நினைக்கலானார் சர்மா.

அவர் எப்போதும் எதிலும் ஒதுங்கிப் போகும் சுபாவமுடையவர். எந்த ராஜா

PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HANDS!!

★

USE

## ALMOND BENZOIN GLYCERINE HAND LOTION

★

# BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS,

12-E, CONNAUGHT PLACE,

**NEW DELHI.**

PHONE: 42170

எந்தப் பட்டணம் போனாலும் "தானுண்டு தன் பாடுண்டு" என்றபடி வாழ்க்கை நடத்து பவர். எதிலும், அதிக விருப் போ, வெறுப்போ அற்றவர். சங்கரி அப்படிப்பட்டவளல்ல.

நாணு வரும் தினத்தன்று அதிகாலையிலேயே சர்மாவை எழுப்பி ஸ்டேஷனுக்கு அனுப்பிவைத்தாள். டாக்ஸி வரும் வரை அவர்களை எதிர் பார்த்து வாசலிலேயே நின் ருள். நாணுவும் வந்து விட் டான் அவன் குடும்பத்துடன்.

வந்ததுதான் தாமதம். "ஏய் பாரதி, மசமசவென்று நிற் காதே. போய் குளித்துச் சீக் கிரம் சாப்பிடஏற்பாடு செய்து கொள். குழந்தைகளுக்கும் பசிக்கும். அழைத்துக்கொண்டு போ." என்று நாணு தன் முதல் ஆர்டரை மனைவிமீது பிரயோகித்தான்.

"பாரதி, நீ குளிக்கப்போ. நான் குழந்தைகளுக்கு உடுப்பு மாற்றி, உணவளிக்கிறேன்" — இது சங்கரியின் கோரிக்கை.

"மன்னி, உனக்கு அதெல் லாம் தெரியாது. அவள்செய்து விடுவாள்." – நாணு குறுக்கிட் டான்.

சங்கரிக்குச் சற்றுத் தூக்கிப் போட்டது. தாயில்லாப் பிள்ளை யான நாணுவை ஐந்து வயது முதற்கொண்டு வளர்த்து ஆளாக்கியது அவள்தான். சிறுவயதில் ஒரு நிமிடம்கூடத் தன்னைக் காணவிடில் அழ ஆரம்பித்து விடுவான் அவன். தான் எப்போதாவது பிறந் தகம் சென்ருலும்கூட அவனை அழைத்துக் கொண்டுதான் போவாள். ஊரில், அவள் சிநேகிதைகள் கூட அவளைப் பரிகசிப்பதுண்டு. "உன் மூத்த பிள்ளை என்ன சொல்கிருன்?" என்று.

அவனே இப்போது உனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒரே வார்த்தையில் அடித்துச் சொல்லிவிட்டான். கூடத்தில் நாணுவும் பாரதியும் பேசும் குரல் கேட்டது. "ஆமாம், நீ என்ன சாதிக்கிருய்" – இது நாணுவின் குரல் "மன்னி எதற்கும் முந்திக் கொண்டு வந்து விடுகிருளே" இது பாரதியின் பதில்.

"பிறகு, குழந்தைகளுக்கு உடம்பிற்கு வந்தால் என்ன செய்வாய்? கணக்குப்படி, மணிப்படி உணவு கொடுக்க அவளுக்கும் எனக்கும்......"

"என்ன செய்வது? மீறிக் கூற என்னுல் முடியுமா?"

"ஆமாம். நீ போய் அடுக் களையில் ஒன்றும் அதிகமாக உழைக்க வேண்டாம். அந்தப் பட்டிக்காட்டிற்கு நன்ருக உழைத்து உரமேறிய உடம்பு. எதையும் சமாளிக்கும். உன் உதவி ஒன்றும் தேவைப் படாது. நாம் நம்முடைய 'புரோக்ராமைக்' கவனிக்க வேண்டாமா? எவ்வளவு இடங்கள் சுற்றிப் பார்க்க இருக்கின்றன!"

ஒவ்வொரு வார்த்தையும் 'டாண், டாண்' என்று சங்க ரியின் காதுகளில் ஒலித்தது. பேசாமல் உள்ளே வேலை களைக் கவனிக்கச் சென்ருள்.

# ஒருபொழுதும்
# ஒத்துப்பார்க்காதீர்கள்...



உங்கள் குழந்தைகளை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் ஒத்துப் பார்த்தால் ஏமாற்றந்தான் ஏற்படும். அதே மாதிரி மெட்ரிக் முறையையும், பழைய சேர், வீசை முறையையும் ஒத்துப் பார்ப்பது வீண் வேலைதான். இதனால் உங்கள் நேரத்தை வீணடிப்பதுடன், நஷ்டமும் அடைவீர்கள்.

*(துரிதமான சேவைக்கும், நேர்மையான)*
*வர்த்தகத்திற்கும் பொருள்களை*

## மெட்ரிக்
## யூனிட்டுகளில்
### வாங்குங்கள்

ஏமாற்றம் அவள் மனத்தை அடைத்து நின்றது.

மறுநாள் காலை பிருந்தாவனம் போவதாய் ஏற்பாடு செய்து கொண்டிருந்தான் நாணு. இதுபோலவே அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் டாக்ஸியில் போவதும் வருவதுமாக ஒரு வாரம் கழித்தனர்.

பாலுவுக்குக்கூட அதிசயமாயிருந்தது. "என்னம்மா, நம் வீடு 'ப்ரீ போர்டிங் அண்ட் லாட்ஜிங்' மாதிரி தானே இருக்கிறது என்று கிண்டல் செய்தான்.

நாணுவின் போக்கே அதிசயமாயிருந்தது சங்கரிக்கு. ஆனால் அவள் வாய்திறக்கவில்லை. அவன் வந்தது முதல் இதுவரை தன் தமையன், அவர் குழந்தைகளுடன் உட்கார்ந்து சரிசமமாகப் பேசினதேயில்லை. தன் காரியமே கருத்தாக ஊர் சுற்றுவதிலும், தன் மனைவி குழந்தைகளுடன் குலாவுவதிலுமே காலத்தைக் கழித்தான். ஒப்புக்கு ஏதாவது கேட்டால் பதில் சொல்லுவான். ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் 'ஆபீஸர்' அந்தஸ்துக்கு ஊறு ஏற்பட்டு விடும் என்ற எண்ணமோ, என்னவோ!

ஊருக்கு அவர்கள் திரும்பும் தினம் நெருங்க நெருங்க சங்கரியின் துக்கம் சொல்ல இயலவில்லை. மனப் பளு அதிகரித்தது. ஆனாலும் எதையும் காண்பித்துக் கொள்ளாது மைத்துனன் குடும்பத்திற்குத் தன் கடமையினின்றும் வழுவாது உபசரித்தாள். அவனுக்கும், அவன் மனைவி குழந்தைகளுக்கும் பலதும் வாங்கிப் பரிசளித்தாள்.

நாணு, "இதெல்லாம் எதற்கு?" என்று சொல்லி ஏற்றுக் கொண்டான். ரயிலுக்கு எடுத்துப் போக நெய் மணக்கப் பூரிகள் பொரித்துப் பாத்திரத்தில் அடுக்கினாள்; "நாணுவிற்குச் சிறு வயது முதல் நெய் பூரி என்றால் உயிர்" என்று பாரதியிடம் கூறிக்கொண்டே. ஆனால் பாரதியோ, "ஐயோ! என்னிடம் முன்னாலேயே கூறக்கூடாதா. ரயிலில் எல்லாம் கிடைக்குமே. அவர் ஆறினதைக் கையால் கூடத் தொடமாட்டாரே" என்றாள். இது நாணு காதிலும் பட்டிருக்க வேண்டும். "பாரதி, நீ ஏன் அவளுக்கு முன்னாலேயே எச்சரிக்கவில்லை?" என்று அடித்துக் கூறினான். தான் ஆசையாகச் செய்த பூரிகள் கேட்பாரற்றுக் கிடப்பதைக் கண்ட சங்கரியின் இதயத்தில் தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது.

ஒரு வழியாக விருந்தினரை ஊருக்கும் அனுப்பியாகி விட்டது. சங்கரியின் பெண் உள்ளம் தாளாமல், போய்ச்சேர்ந்தவுடன் கடிதம் போடும்படி வற்புறுத்திக் கூறி வழியனுப்பினாள். ஆனால் ஒரு மாதமாகியும் அவள் எதிர்பார்த்த அக்கடிதம் வரவில்லை.

அன்று மாலை சர்மா ஆபிஸிலிருந்து வந்ததும், சங்கரி அவரிடம் ஒரு கடித உறையை

# HALLMARK
OF
# High Standard QUALITY




**DALMIA CEMENT (BHARAT) LIMITED**
DALMIAPURAM (MADRAS STATE)
Head Office : 4, SCINDIA HOUSE, NEW DELHI-I

நீட்டினுள். "யார், நாணுவிட மிருந்தா ?" என்றபடி அக்கடிதத்தைப் படித்தார்.

"என்ன விஷயம், கடிதம் யாரிடமிருந்து ?" என்று சங்கரி வினவினுள்.

"யாரிடமிருந்தா ? உன் மூத்த மைத்துனன் ராமுதான். அவனுக்கு இவ்வூருக்கே மாற்றலாகி விட்டதாம். குடும்பத்துடன் இன்னும் பதினைந்து தினங்களில் வருகிருனும். நம்மைச் சந்திக்கப் போவதைக் குறித்துச் சந்தோஷப்பட்டு எழுதியிருக்கிருன். வீடு ஒன்று பார்க்கும்படியும் எழுதியிருக்கிருன்.

"உம்... என்ன பதிலையே காணும் ? வேறு வீடு பார்க்க அவசியமில்லை, இங்கேயே ஒன்ருக இருக்கலாமென்று மன்னி அபிப்பிராயப் படுகிருள் என்று எழுதிவிடட்டுமா ?" என்ருர் சர்மா.

மீண்டும் மௌனம்.

"என்ன சங்கரி, அப்படியே சிலையாய் நின்று விட்டாய். நான் சொன்னது காதில் விழுந்ததா ?"

"ஹும். காதிலும் விழுந்தது. பாசத்தையும், பரிவையும் வாரி வழங்கி வளர்த்தவனே தலைகீழாக மாறிவிட்ட நிலைமைவந்துள்ளபோது இவரைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. முதலில் தரகரிடம் வீட்டிற்குச் சொல்லி வையுங்கள்" என்ருள் சங்கரி.

"என்ன சங்கரி, நீ தான் பேசுகிருயா ?...அல்லது..."

"ஏன், நானேதான் சொல்கிறேன் ! உலக நியதிக்குத் தக்கபடி அவரவர்கள் பெரியவர்கள் ஆகி, வயது வந்த பிறகு, குறித்த ஓர் அளவிற்குமேல் நாம் அவர்களிடம் எதையும் எதிர்பார்ப்பது அழகல்ல. அவரவர்களுக்கு மனைவி, குழந்தை என்று ஏற்பட்டபின் அவர்கள் வாழ்க்கையின் போக்கே ஒருவிதம்தான். 'தோளுக்கு மிஞ்சினுல் தோழன்' என்றபடி, நாமே, மரியாதையாய் விலகி நிற்பதுதான் நியாயம் போல் தோன்றுகிறது" என்று தன் மனதிலுள்ளதைக் கொட்டி விட்டாள் சங்கரி.

"அய்யே, அசடே, உனக்கு இது தெரிந்து மனப்பக்குவம் அடைய இத்தனை வருஷங்கள் ஆயிற்று. எப்பொழுதும் மனத்தை அலையவிடாமல் தாமரை இலைத் தண்ணீர் போல் உறவுகொண்டாடி வந்தால் உன்மாதிரி சஞ்சலமும், சந்தோஷமும், ஏமாற்றமும் மாறிமாறி அடையாமல் இருக்கலாம். நீ நாணுவிடம் அதிக ஆசை வைத்து அவன் உன்னை அலட்சியப் படுத்தி விட்டான் என்று வருத்தப்படாது இருந்திருக்கலாம். அவனையும் குறை கூறுவதில் நியாயமில்லை. உலக வழக்கமும் 'அதுதான்" என வேதாந்தம் பேசினுர் சர்மா.

கண்களில் ததும்பிய நீரைத் துடைத்தபடி உள்ளே சென்ருள் சங்கரி.

Consistent research has developed the USHA Sewing Machine into a superior product — with international repute. That's why women in over 50 countries — though differing in taste and their way of life, are unanimous in their choice of USHA. The reason : sewing on the USHA is a real pleasure. Thanks to its modern design, sturdy construction and trouble-free performance.
72,000 USHA Sewing Machines will be supplied to West Germany in the next three years in addition to the monthly shipments of 1,500 USHA Sewing Machines to U.S.A. and 1,000 to U.K. USHA takes pride that women in these highly developed countries have confidence in their quality and dependability—features that make USHA the first choice in India.

***Sew with ease—***
***Sew with***

**USHA**

**SEWING MACHINES**

*Women in over 50 countries sew with USHA including U. S. A., U. K. and W. Germany.*

**THE JAY ENGINEERING WORKS LTD., CALCUTTA-31**

JESM/G/423

# பாரதிதாசன்

'செயல்'

பாடுகின்ற பாட்டெல்லாம் விளங்கிடாத
பரஇன்பப் புகழ்பாடி அமைந்தபோது
பாடுகின்ற பாட்டெல்லாம் அறிந்திராத
பாட்டாக உரைதேடித் தேய்ந்தபோது
பாடுகின்ற பாட்டெல்லாம் பழக்கமான
பாமரரின் நடையினிலே அமையவேண்டிப்
பாடுகின்ற பாட்டெல்லாம் புதுமையாடப்
பாடிவைத்த பாரதியின் தாசனெங்கே? 1

வாடுகின்ற உழைப்பினிலே அழகுகண்டு
வாடுகின்ற வயிறுகாண மனதுநொந்து
வாடுகின்ற வாழ்க்கையெலாம் வாடவேண்டி
வாடுகின்ற கூட்டமெலாம் வாடல்நாடி
வாடுகின்ற நிலைகாண வாடிநின்று
வாடுகின்ற கவிஞருமே வாடிவிட்டார்
வாடுகின்ற தமிழன்னை கவிதைநாடி
வாடுகின்ற நிலையேனோ வாய்த்ததின்றே! 2

கன்னியவள் தமிழன்னை கதறுகின்றாள்
கவிவாணர் கவிச்சுவையாய் மாறிவிட்டார்!
கன்னிமனம் அலைபாய்ந்து காதலவர்தம்
கரம்நாடி ஒன்றிவிடும் காட்சியதுவாய்
கன்னலெழில் கவியரசர் பாரதியின்நற்
காட்சிபெறக் கலந்தாரோ தாசனாரும்?
பின்னையவர் கவிமரபு வாழ்ந்துநிற்கப்
பேர்கூறிச் செயலாற்ற எழுகுவீரே! 3

காலமெலாம் பாரதியின் புகழேபோலக்
கவிதையாக மாறிவிட்ட தாசனாரின்
காலமெலாம் கவல்கின்ற வாழ்வுமீண்டும்
கவிஞர்க்கு இல்லையென நிலையைஏத்தக்
காலமெலாம் கவிஞர்தமை ஊக்குவிப்போம்
காலமெலாம் கவியின்ப மனுபவிப்போம்
காலமெலாம் கவிபாடும் உள்ளம்மலர,
கவிகாக்க எடுத்திடுவோம் உறுதியின்றே! 4

FOR YOUR FAMILY TOO...



HOUSE OF EXQUISITE
DRY CLEANING...

BAND BOX

PRIVATE, LTD.

DYERS DRYCLEANERS
&
LAUNDERERS

H. O. 18/90 Connaught Circus, New DELHI

ALSO AT :-

NEW DELHI — 15-B, KHAN MARKET, ASHOKA HOTEL, DIPLOMATIC ENCLAVE, 177, SAROJINI MARKET

DELHI — CHANDNI CHOWK, KASHMERE GATE, AJMAL KHAN ROAD

# வடிவேல் முருகா

ராகம் : மார்க்கஹிந்தோளம் | தாளம் : ஆதி

பல்லவி

வந்தென்னை ஆள் வடிவேல் முருகா
[வந்தென்னை]

அ. பல்லவி

பந்தம் என்றுன்னை நான் சரண் அடைந்தேன்
தந்தருள்வாய் உன் பாதார விந்தம்
[வந்தென்னை]

சரணம்

எங்கு தேடியும் உன்னைக் காணமல் – மலை
எங்கு தேடியும் உன்னைக் காணமல் – நான்
தங்கும் இடம் தேடித் தனித்தே அலைந்தேன்
கருணையனே கார்த்திகேயனே
அருணசலம் போற்றும் ஆனந்தரூபா
[வந்தென்னை]

— வி. அருணசலம்.

With The Best Compliments

from

ZENITH TIN WORKS (P) LTD.,

BOMBAY

# மண் அடுப்பும் — மண்ணெண்ணெய் அடுப்பும்

குமாரி ஆர். ஜயந்தி

இடம்: தனவந்தர் வீடு.

ஸ்டௌ: [ஏளனமாக அடுப்பை நோக்கி] ஏ அடுப்பே! நலமோ? உன்னை ஏன் காணுவதேயில்லை. எங்கேயிருக்கிறாய்?

அடுப்பு: [பொறுமையுடன்] நான் ஈண்டுதான் உள்ளேன். நான் வயதான காரணத்தால் ஓய்வில் இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்? நலம்தானே!

ஸ்டௌ: என்னுடைய நலத்திற்கு யாதொரு துன்பமில்லை. ஆமாம் நீ ஓய்வில் இருப்பதாகக் கூறுகிறாயே, ஏன்வேறெங்கும் செல்லவில்லை?

அடுப்பு: நான் பழைய இடத்தைவிட்டு நன்றியை மறந்து வேறெங்கும் செல்லமாட்டேன். மேலும் எனக்கு எங்கே இடமுள்ளது? நீங்கள்தான் பல்வேறு உருவங்களில் எங்கும் தங்கியுள்ளீர்களே!

ஸ்டௌ: [பெருமிதத்துடன்] எங்களைத்தான் மக்கள் யாவரும் விரும்புகின்றனர். எங்களால்தான் அவர்கள் தங்கள் வேலையைச் சீக்கிரம் செய்கின்றனர். மேலும் நாங்கள் உங்களைப் போன்று அவர்களுக்குத் தொந்தரவை அளிப்பதில்லை. எனவே யாவரும் எங்களை விரும்புவதில் வியப்பு ஏதுமில்லையே!

அடுப்பு: ஸ்டௌவே, மிகவும் கர்வமடையாதே. எதற்கும் அளவுண்டு. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்' என நம் எஜமானி கூறுவதை நீ கேட்கவில்லைபோலும், [சிறிது நேரம் கழித்து] ஆமாம். உனக்கு எங்கே நல்லதைக் கேட்க இயலும்? நீ தான் காது செவிடாகும் வண்ணம் சத்தமிட்டு தலைவலியை உண்டாக்குகிறாயே!

ஸ்டௌ: [கோபமுடன்] ஏ கேடுகெட்ட அடுப்பே! நீ என்ன பேசுகிறாய்? நீ புகைந்து கண்ணே தெரியாமல் செய்கிறாயே? பேச்சு ஒரு கேடா? இப்பெரிய வீட்டில் நீ அனாதையாகத்தானே இருக்கிறாய். ஏதோ பெரியவள் என்று பார்த்தால் மிகவும் அதிகமாகப் பேசுகிறாயே. வாயை மூடிக்கொண்டு 'சிவனே' என்று கிட.

அடுப்பு: [புன்சிரிப்புடன்] நானா அனாதை? என்னை ஆதரிக்கவா ஆள் இல்லை! இந்த வீட்டு எஜமானி என்னையன்றி உன்னைத் தொடுகிறாளா?

ஸ்டௌ : பாவம் அந்த அம்மாள் எங்களைப்பற்றி அறிந்துகொள்ள வில்லை. எனவே தான் உன்னைக் கட்டிக்கொண்டு அழு கிருள். நீயும் கிழம். அவளும் கிழவி.

அடுப்பு : அவள் கிழவியானாலும் அவள்தானே எஜமானி ? உன்னை விரும்பும் உன் எஜமானி [என் எஜமானியின் மருமகள்] உன்னை உபயோகிப்பதால் என் எஜமானி அவளை எப்படி கோபிக்கிருள் ?

மேனி மினுக்குகிருய் – குதம்பாய் !
உனக்கு தூய்மையும் உண்டோடி
நீ, நித்தம் குளிப்பதுண்டோ – குதம்பாய் !
நெற்றிப் பொட்டுமிடு வதுண்டோ ?

உன்னை உபயோகிப்பதால் கடவுள் பக்தி, தூய்மை இவற்றிற்கு இடமில்லை. உன்னைச் சத்தம் செய்ய இயலுமா ? அப்படிச் செய்தாலும் நீ கோபித்துக் கொண்டு வேலை செய்யமாட்டாய். ஆனல் என்னைத் தினந்தோறும் என் எஜமானி எப்படி குளிப்பாட்டு கிருள் ? எனவே நான் தூய்மையாக உள்ளேன். இதை உன் எஜமானி அறிந்தால் உன்னைத் தொடக்கூடமாட் டாள். ஜாக்கிரதை.

ஸ்டௌ : ஏ அடுப்பே ! உன் எஜமானி இன்னும் சின்னுட்களில் கட்டையைச் சாய்க்கப் போகிருள். தூய்மையின் அவ தாரமே, கடவுள் பக்தியின் பிறப்பிடமே ! நீயும் அவளுடன் சென்று கடவுளையடைக ... நான்.......... [இச்சமயத்தில் சின்ன எஜமானி அங்கே வந்து ஸ்டௌ வைத் துடைக்கிருள்]

ஸ்டௌ : [பெருமையுடன்] அடுப்பே ! பார்த்தாயா ? நான் வீற் றிருக்கும் இடத்தை. எஜமானியின் பூப்போன்ற கரங் களில்.

[பின்னர் ஸ்டௌவைத் துடைத்த எஜமானி அதைப் பெட்டி யில் போட்டு பரண்மேல் வைத்து விடுகிருள். ஏனெனில் அவள் தன் மாமியாரின் வார்த்தைகளுக்கு மதிப்புக்கொடுக்கத் தொடங் கினள். எனவே அடுப்பைப் பற்றவைக்கிருள்.]

அடுப்பு : ஸ்டௌவே ! என்றும் 'பொறுத்தார் பூமி ஆள்வார்' எனவே பொறுமையுடைய நான் என் பூமியான இவ் வீட்டை ஆளுகிறேன். [ஸ்டௌ இதைக் கேட்கா ததைக் கண்ட அடுப்பு ஸ்டௌவுக்குக் கேட்கும் வண்ணம் இரைந்து] ஸ்டௌவே பார்த்தாயா ? என் றும் கர்வம் கூடாது. நடுவில் வந்த நீ சின்னுட்கள் ஆடம்பர வாழ்க்கையை அனுபவித்துவிட்டு பரணில் குடியேறினய். என்றும் நான் ஒரே நிதானமாய் இருக் கிறேன். எனவே நான் பழங்காலத்திலிருந்து இன்று வரை நிலையாக உள்ளேன். என்னை அசைக்க யாராலும் இயலாது. எனவே கர்வப்படாதே, பொறுமையை இழக்காதே ! போய்வா !!

[ஸ்டௌ ஏன் பதில் பேசுகிறது. அது தான் அடைந்த அவ மானத்தால் தலையைக் குனிந்து கொண்டு பெட்டிக்குள் அடக்கமாக, மௌனமாக வீற்றிருந்தது.]

***

# MEENAKSHI GROUP OF MILLS

**MADURAI (South India)**

*Manufacturers of :*

SINGLE YARN IN COUNTS Nf 14 TO Nf 84, CARDED AND COMBED, IN HANKS AND IN CONES FOR WEAVING AND HOSIERY FACTORIES AND GREY GADA. GREY AND BLEACHED MULLS, LONG - CLOTH, DYED CLOTH ETC.

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai, Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

NATION FIRST

EVERYTHING NEXT

*

*Space Donated*

*by*

REPUTED MANUFACTURERS OF

MOTOR CYCLES, SCOOTERS

AND

INDUSTRIAL ENGINES

AT MADRAS

# பொய்யா மனிதரும் பொய்யா மொழியும்

எம். வீ. நாராயணன்

கீதையைக் கொடுத்த கண்ணனையும், திருக்குறளைக் கொடுத்த வள்ளுவனையும் அறிந்தபின் வணங்காதோர் இல்லையெனக் கூறலாம். இருபதாம் நூற்றாண்டில் உலகில் திருக்குறள் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது. மக்கள் அதனைப் படித்து, கருத்தைப் புரிந்து போற்றினர். தமிழர் வாழும் இடமெல்லாம் தெய்வப் புலவனின் புகழ் ஒலிப்பதைக் கேட்கிறோம்.

ஆயினும் திருக்குறள் வழி வாழ்ந்து சிறப்புற்றோர் மிகச் சிலரே எனக் கூறலாம். திருக்குறள் படிக்காமலேயே குறள் வழி வாழ்ந்து மறைந்த பெருமை அண்மையில் காலமான நமது அன்புப் பிரதமர் நேருவையே சாரும்.

"உள்ளத்தாற் பொய்யாதொழுகின் – உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்றார் வள்ளுவர். அதன்படி தன் சிந்தனையில் கூட பொய்யை நினைக்காத நேரு அவர்கள் இன்று இவ்வுலகத்தில் உள்ள மக்கள் அனைவராலும் போற்றப்படுகிறார். தன் அருமை மகனின் மறைவால் இவ்வையம் முழுதும் கலங்குவது கண்டு பாரதத் தாய் கண்ணீர் வடிக்கிறாள். அதே சமயம் அவனது பெருமையை, அவன் 'சான்றோன்' என உலக மேதைகளெல்லாம் கூறுதல் கண்டு பெருமையில் விம்முகின்றாள். அவள் அறிவாள் – அவள் பெற்ற மைந்தன் கீதையும், திருக்குறளும் தோன்றிய மாபெரும் நாட்டைச் சேர்ந்தவன். வள்ளுவன் கூறிய ஒழுக்கத்தை இவ்வையம் நேரு அவர்களிடம் கண்டது. ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதியவர் அவர். பகைவனுக்கும் அருளும் அருள் மனம் படைத்தவர் அவர்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவன் வாக்கிற்கொப்ப இந்த நாட்டைத் துன்பம் சூழ்ந்தபோது தனது இனிய புன்முறுவலால் மக்களுக்கு நம்பிக்கையளித்தவர் நேருஜி.

ஏசுவையும், புத்தரையும், காந்தியையும் கண்ட உலகம் அவர்களது குணங்களின் கலவையையே நேருவிடம் கண்டது. நேருவின் நாட்டுப் பற்றுக்கு இணை இனி நாம்

காணப் போவதில்லை. தன்னுடலைத் தீக்கிரையாக்கிய பின் அந்தச் சாம்பலும் இம்மண்ணுடன் கலக்க வேண்டும் என்று கூறியிருக்கிற அவரது உள்ளத்தின் பெருமையை, பாசத்தை, அன்பை வர்ணிக்கச் சொற்கள் போதுமா? சொற்களால் சொல்லக் கூடியவையா அவை? நமது உள்ள எழுச்சியால், தூய்மையான கண்ணீரால் அல்லவா அவ்வாசகத்திற்கு நாம் பதில் கூறியிருக்கிறோம்.

தமிழ் வழங்கும் இலக்கியச் செல்வங்களுக்கு என்றுமே தன்னெஞ்சில் தனியிடம் கொடுத்திருந்தவர் நேருஜி.

சென்ற ஆண்டு ஜூலை 16-ம் நாள் காலை நான் அவருக்கு ஐந்து திருக்குறள்களை மொழி பெயர்த்துக் கூறினேன். குறட்பாக்களை விரும்பிக் கேட்ட அவர், தமிழையும், அதன் இலக்கிய வளத்தையும் பாராட்டினார். தவிர, தான் திருக்குறளைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருப்பதாகவும் கூறினார். நான் அவருக்கு அளித்த 5 பாக்களின் மொழி பெயர்ப்பையும் ஒரு முறை என் எதிரிலேயே படித்து மகிழ்ந்தார்.

பொய்யா மொழியின் கருத்துக்கேற்ப வாழ்ந்து காட்டிய பொய்யா மனிதரான நேருவின் புகழ் இவ்வையத்தில் பொய்யா மொழி போல் என்றும் அழியாமல் இருக்கும்.

★

Grams: MURSOKS

Phone: 51388

Regd. No. 141241

**WHITE HORSE SOAP**

**A Superfine Soap**

**For Silk and Linen Wash**

*MANUFACTURERS:*

D. BANGARU CHETTY,

NATIONAL INDUSTRIES,

220, T. H. Road, Madras-21.

*Distributors:* MURALI TRADING CO.,

111, Pidariar Koil Street, G. T. Madras-1.

The most intimate drink
Gold Coin
Real APPLE JUICE
Non-Alcoholic
Sparkling & Non-Sparkling
The apple, synonymous of health, energy and a rich source of Vitamins has now been bottled in liquid form. Prepared under most hygienic conditions from selected Himalayan apples Gold Coin Real Apple Juice is most delicious and refreshing. It is a treat for all ages in all the seasons.
DYER MEAKIN BREWERIES LTD. Mohan Nagar, (U. P.)

# 'புதிய பாரதி'

டி. என். சுகி சுப்பிரமணியன்

பாரதியாரின் கவிதைத் தொகுதி என்னிடம் இருந்தது; அதை எடுத்துப்போன இரசிகருடைய முகவரி நினைவில் இல்லை. எனவே, நண்பர் ஒருவரை அணுகி, "பாரதியார் கவிதை நூலைத் தாருங்கள் ஐயா! நான்கே நாளில் தந்துவிடுகிறேன் என்று இரவல் கேட்டேன். பாடிய வாய் பாலூறும் பாரதியார் பாடலை வைத்திருந்த அன்பர் என்ன சொல்ல வேண்டும்? தகாதது சொன்னார்.

"பத்துரூபாய் பணம் தருகிறேன்; பாரதியார் கவிதை நூலை மட்டும் கேட்டுவிடாதேயும். தரமாட்டேன்" என்றார்.

பணம் அவருக்குப் பெரிதன்று; பாரதியாரின் நூல் பெரிதாம். என் வீட்டிற்குப் பணம் கேட்டுவந்த நண்பரோ பாரதியார் கவிதை நூலையும் சேர்த்துக் கொண்டு போய் விட்டார்! என் நண்பர் பணம் தருகிறார்; பாரதியைத் தர மாட்டாராம்.

"அன்பரே நீங்கள் பத்து ரூபாய் பணம் கொடுக்க முன் வந்தது தங்களுடைய இளகிய உள்ளத்தைக் காட்டுகிறது. அந்த ரூபாயை பாரதி நூலுக்குள் வைத்துக்கொடுங்கள்."

"முடியாது."

"எனக்குப் பாரதி நூலை மட்டும் கொடுங்கள்."

"இயலாது வருந்துகிறேன் வேண்டுமானால் இருபது ரூபாய் பணம் தருகிறேன்" என்றார். யோசித்துப் பார்த்தேன். முடிவில் நண்பர் தருவதாகச் சொன்ன பணத்தை வாங்கிக் கொண்டு நேரே கடை வீதிக்குப் போனேன். "பாரதியின் கவிதை" நூலை வாங்கியவன் வீடு புகுந்தேன். நண்பர் இரவல்தர மறுப்பதின் காரணம், இரவல் பெற்ற நூலை அநேகம்பேர் திருப்பிக் கொடுப்பது பழக்கமில்லை. என்னையும் திருப்பிக் கொடுக்காத திருக்கூட்டத்துள் சேர்த்து விட்டார். எனக்குப் பதினெட்டு ரூபாயும் கவிதை நூல் (மலிவுப் பதிவு) ஒன்றும் கிடைத்தன. பணத்தைக் கொண்டுபோய் செலவழித்து விடுவேன் என்று எதிர்பார்த்தவர் ஏமாந்தார்.

பணம்!

இதுதான் பாரதியின் கவிதை நூல்; இதுதான் நான்

எழுதும் பேனு; இதுவே தெரு இதுவே கடைவீதி! இதுவே நீதி மன்றம். இதுவே செயல்; வான ஊர்தி. மூர்மார்க் கெட்டு, எழும்பூர் ரெயில் நிலையம், ரிசர்வ்பாங்கு யாவும் என்ன? பணம், காட்சிப் பொருள்களை உண்டாக்கு கிறது.

பணம் கிடைக்க வேண்டு மென்பதற்காகத்தான் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு படும் கூட்டம் உழைக்கிறது; பணத்தால் வயிற்று வலியும், நோயும் பெற்ற கூட்டமும் நம்முடன் வாழ்கிறது.

பணம். இதுதான் இந்நாள் குடும்பக் கட்டுப்பாட்டின் கார ணம். ஆதிநாள் ராமேஸ்வர பிரயாணம்? அதுவும் பணத் தால் பிறந்தது. பணம், இது தான் நம்மிடையே பிரம்மச் சாரிக் கூட்டத்தை உண் டாக்கி வைக்கிறது. இதுவே கலியாண ஊர்வலங்களை ஜாம் ஜாம் என்று மேள தாளத்துடன் நடத்தி வைக் கிறது, பணம், மனிதனை அற்ப ஞக மாற்றுகிறது; அதிசய மனிதனுகவும் சிருஷ்டிக்கிறது. யுத்தத்தை உண்டாக்குவதும் பணம். அரசியல்வாதிகளை உயர்த்துவதும் பணம்; அன்று டம் காய்ச்சிகளை வளர்ப்பதும் பணம். சட்டங்களைச் செய்வ தும் பணம்; சண்டித் தனம் செய்வதும் பணம். பணத்தால் பந்தயங்கள், பாசங்கள், குரோதங்கள், நேச முறிவுகள் நம்பிக்கைத் துரோகங்கள் அய்யைய்யோ அது செய்யும் அற்புதங்களும் அனந்தம். அது செய்கின்ற அயோக்கியத் தனங்களும் அனந்தம்.

பணம்...?

பாரதியின் கவிதையைப் பண உதவியால் வாங்கி வந்த வன், கவிஞரை மறந்து பணம் பற்றிய சிந்தனையில் லயித்து விட்டேன். நானும் மனிதன் தானே.

பாரதி நூலைத் தர மறுத்த வர் பணத்தைத் தந்தார். பணத்திற்குள் பாரதி நூல் அடக்கம் என்பதை அவர் அறியாமற் போனது விந்தை. பணத்திற்குள் பாரதி நூலும் அடங்கும்; பாரதிக்குள் பணம் அடங்குமா? பாரதியாரே பணம் பற்றி இதோ பேசு கிருர்:


BEST FOR

SOUTH INDIAN DISHES

**MADRAS HOTEL**

HOTEL & RESTAURANT

Connaught Circus,
New Delhi - I.

Phone: 40595

**கண்ணியம்**

வெள்ளைக்காரரை விரட்ட வேண்டும் என்பதில் வெகு மூர்த்தண்யமான முரட்டுத் தனம் காட்டுவாரென்றாலும் சிதம்பரம் பிள்ளை மிகவும் இளகிய மனமும் இனிய குணமும் உள்ளவர். நண்பர்களிடத்தில் வெகு நயமாகவும் நாகரிகமாகவும் நடந்து கொள்வார். அவருடைய வாதங்களில் அற்பத்தனமோ கண்ணியக் குறைவோ காண முடியாது.

— நாமக்கல்லார்.

"காந்தி பதினொரு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவதுவிரதமென்று சொல்லுகிறேன். அது யாதெனில் எப்பாடு பட்டும் பொருள் தேடு; இவ்வுலகத்தில் உயர்ந்த நிலை பெறு. இப் பன்னிரண்டாவது விரதத்தை தேச முழுவதும் அனுஷ்டிக்க வேண்டும்."

பாரதியும் என் கட்சியைச் சேர்ந்தவர். பணம் இல்லாவிட்டால் உயர்ந்த நிலை பெற முடியாது; வாழ்க்கையும் பாழ் என்பதை அறிந்தவர். நம் கண்முன்னே காணும் காட்சி நாகரிகங்கள் அனைத்தும் பணத்தால் உருவானவை. நமது மன நாகரிகம் அனைத்தும் கவிஞர்களால் உருவானவை. எனவே, பாரதியும் பணத்தைப் பற்றிப் பேசுகிறார். பணத்திற்கு அப்பாற்பட்ட பயனுள்ள கருத்துக்களையும் பேசுகிறார் கவிஞர் பாரதி, நமது மன நாகரிகத்தை உயர்த்தவந்த மகாகவி.

பணம் எத்தனை எத்தனை விதமாகக் காட்சிப் பொருள்களை உண்டாக்கவல்லதோ, அஃதே போன்று அத்தனை அத்தனை கனவுப் பொருள்களை உண்டாக்கவல்லது கவிதை.

சிறந்த கனவுகளையும், நனவுகளையும்' மன நாகரிகம் பேண வேண்டிய கருத்துக்களையும், சின்னஞ் சிறிய இடத்துக்குள், சிறு சிறு வரிக்குள்ளே எவ்வாறு எழுதி வைத்தார்? 'வானம் அளந்ததனைத்தும், அளந்திடும்' வண்தமிழை, நமது பாரம்பர்யத்தின் வீரத்தை, விவேகத்தை, காதலை, நாட்டுப் பற்றை, மதக் கொள்கைகளை கலாசாரத் தொடர்புகளை தேச ஐக்கியத்தை சிறுசிறு இடங்களில் மனோரஞ்சித மலர்களாகப் பயிரிட்டுப் போய் விட்டார் கவிஞர் பாரதி.

நான் வாங்கிய பாரதியின் கவிதை நூலுக்குப் "புதிய பாரதி" என்ற தலைப்புக் கொடுத்தேன். பாரதி என்றும் பழமையானவர்; என்றும் புதுமையானவர் என்பதையும் அறிந்துதான் "புதிய பாரதி" என்ற தலைப்புத் தந்தேன். நான் அவருக்குப் புதியவன்; எனவே, பாரதி எனக்கும் புதிய பாரதி ஆகின்றார்.

புதிய பாரதியில், புதிய மணமும் புதிய புதிய கருத்துக்களும் காணுகின்றேன். புதியவகை — மனத்தளவில் அவ்வப்போது ஒருவன்மாறுது

போனால் – மனிதன் மனிதனாக இருக்க முடியாது. அவன் வாழவே கூடாது. புதிய நோக்கம் புதிய விழிப்புடன் கவிஞர்களைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நமக்குப் புதிய விழிப்பைத் தருவார்கள். அவ்வாறு பார்க்கத் தெரியாதவர்கள் பத்தாம் பசலிகள்.

எவருமே நாம் இதற்கு முன்பு வாழ்ந்தது போல வாழாமல் புதிய நோக்கம் புதிய உத்வேகம் புதிய பாதையில் வாழ வேண்டுமென்ற ஆசையை உண்டாக்கிக் கொள்வதுடன் மனித மனத்தின் முன்னேற்றம்.

'புதிய பாரதி' என்னும் கவிதை நூல் எனக்குப் புதிய புதிய உண்மைகளைக் காட்டப் போகிறது ஏன் தெரியுமா? கோணங்கி பற்றி எழுத வந்த கவிஞர் பாரதி தமது பாடலுக்குப் "புதிய கோணங்கி" என்று தலைப்புத் தந்தார். கோணங்கி எப்போதும் புதிய மனத்தைத் தருகிறான்! புதிய தெம்புகள் தரும் சொற்களைப் பொழிகிறான். புதிய நம்பிக்கைகளைத் தருகிறான். கவிஞனும் என்றும் புதிய கோணங்கிதான். பாரதியும் என்றும் புதிய பாரதிதான்.

நம்மைப் புதிய பித்துக் கொள்ளத்தான் நாம் பழைய நூல்களைப் படிக்கிறோம். நிரந்தரமான மண்ணிலே புதிய வித்துக்கள் விழ விழ அவை முளைத்துக் கிளைப்பனபோன்று புதிய புதிய மனங்களை நமக்கு கவிதை நூல்கள் தருகின்றன; சிறந்த உரைநடை நூல்கள் நம் மனத்துள் புதுமைகளைச் சிருஷ்டிக்கின்றன. என் மனம் புதிய பாதையில் வளர்வதற்கு "புதிய பாரதி" துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஜெய் காளி!

❋

---

### திலகரிடம் விண்ணப்பம்

திலகர் அமிர்தசரஸ் காங்கிரஸ் போவதற்கு முன்னர் அவரது வருகையைச் சென்னை நாடியது. அவர் நாட்டமும் சென்னையை நோக்கியது.

திலகரைப் பிரம்பூரில் (17–2–1919) பார்க்கத் தேசபக்தர் சிதம்பரம் பிள்ளையும், சுப்பராய காமத்தும், யானும் வேறு சிலரும் சென்றோம். அக்காலத்தில் பம்பாய் மெயில் பிரம்பூரில் நிற்கும். சிதம்பரம் பிள்ளையும் நாங்களும் லோகமான்யரைக் கண்டோம்; அளவளாவினோம். சிதம்பரம் பிள்ளை, "இது தொழிலாளர் காலம்; தாங்கள் செல்வர் மாடியில் தங்கினால் ஏழை மக்கள் தங்களைக் காண இயலாது வருந்துவார்கள். ஆதலால் தாங்கள் எங்களில் ஒருவர் குடிலில் தங்குவதற்கு உளங் கொள்ளல் வேண்டும்" என்று பெருந்தலைவரிடம் விண்ணப்பஞ் செய்தார். "சிதம்பரம் எனக்கா விண்ணப்பம்? எனக்கு எந்தக் குடிசையாயிருந்தால் என்ன?" என்று பதில் பிறந்தது. எங்கட்கு ஆனந்தம் பொங்கியது.

— திரு. வி. க.

Suppliers of Cycles to the Armed Forces through the Canteen Stores Deptt., and to Railways, Posts and Telegraph and other Government Departments through the Director General of Supplies and Disposals.

# விடாக்கண்டன்

பூர்ணம் விசுவநாதன்

காட்சி 1

[சின்னப்பன் இன்றைக்கும் தொண தொணப்பு சோமு விடம் வசமாகச் சிக்கிக் கொண்டு திண்டாடுகிறான். வீட்டுக்குள் சாப்பாட்டுக்கு இலைபோட்டுக் காத்திருக்கும் பொன்னு, கணவனின் பசியை நினைத்துத் துடிக்கிறாள். சோமுவுக்கு இதைப்பற்றியெல்லாம் கவலையில்லை; அவனுக்குச் சில விஷயங்கள் இப்போதே தெரிந்தாகவேண்டும். சின்னப்பனை வாசல் திண்ணையில் நிறுத்திவைத்து, தான் தெருவில் நின்றுகொண்டு, துளைத்தெடுக்கிறான்.]

சோமு : நீ சொன்ன வார்த்தையே ஒனக்கு எப்பிடி நெனைவில்லாமல் போகும்ன்னேன்!... யோசிச்சுப்பாரு... 'டையம்' குடுக்கறேன்....

சின் : சோமு, நீ டைம் கொடுத்துப் பிரயோசனமில்லே. எனக்குக்கொஞ்சம்கூட நெனைப்பில்லே... நீயே சொல்லிரேன்...

சோமு : அப்படிச் சொல்றது என் 'டெக்னிக்' இல்லியே!... கொஞ்சம் 'க்ளூ' குடுத்தாவது எதிராளி வாய் மூலமாவே விசயத்தை வரவளிச்சிரமாட்டேனா?

சின் : சோமு, என்னை 'ஸஸ்பென்ஸ்'ல போட்டு வதைக்காதயேன்!... என்ன விசயம்னு சொல்லிரமாட்டியா?

சோமு : 'ஸஸ்பென்ஸ்'ன்னு நீ சொன்னதுனால ஓம்மனசில எவ்வளவு ஆவல் இருக்குதுன்றது தெரியுது... ஆனா தானாவே 'சடார்'னு ஞாபகப் படுத்திக்கிடற தெறமையைக் காணமே!... ஆல்ரைட்! நான் ஒரு 'க்ளூ' குடுக்கட்டுமா?... மூணு நாளைக்குமுன்னே நான் ஒன்னை மார்க்கெட்டிலேருந்து நீ திரும்பிவரப்போ பாத்துக் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தேனா இல்லியா?

சின் : கொஞ்ச நேரமா? இரண்டு மணி நேரத்துக்குமேல பேசிக்கிட்டிருந்தியே!

சோமு : அட அப்பிடியேதான் வச்சுக்கவேன்! அப்போகூட நீ கத்திரிக்காயையும் தக்காளிப் பளத்தையும் பைக்கடியில் போட்டு மேலே ரெண்டு தேங்காயை உருட்டிவிட்டிருந்தே; நான்கூட அதையெல்லாம் கீழே கொட்டச்சொல்லி......

சின் : (பொறுமையிழந்து) கீழே கொட்டச்சொல்லி, தேங்காய் ரெண்டையும் பையில் மொதெல்லே போட்டு, மத்த காகறிங்களை அதுமேலே வைக்கச் சொன்னே. இது நல்லா நெனைப்பிருக்கு... மேல சொல்லு.

சோமு : (விடாமல்) அப்பக்கூட, தெரு ஓரத்துல தேங்கிக் கடந்த அழுக்குத் தண்ணியில ஒரு எருமைமாடு படுத்துக்கிட்டு, தண்ணியைக் கலக்கி தெருவையெல்லாம் அசுத்தப் படுத்திக்கிட்டிருந்திச்சு அதெப்பாத்து, நான்கூட சனங்களோட அசாக்கிரதையைப் பத்தி ஒங்கிட்டச் சொல்லி வருத்தப்படலே ?

சின் : (பரிதாபமாக) சோமு, நீ சொல்ற ஒவ்வொரு விவரமும் எனக்கு நல்லா ஞாபகமிருக்குது... இப்பிடி, விசயத்தைச் சொல்லாம......

சோமு : சின்னப்பா, ஒனக்கு என் 'டெக்னிக்கு' தெரியாது. நம்ம ரெண்டுபேரும் பேசிக்கிட்டிருந்தப்போ 'சூள்நெலே' எப்பிடியிருந்திச்சுங்கறதை 'சடார்'னு ஒன் கண்ணெதிர்ல கொண்டுவந்து நிறுத்திருவேன்; பிற்பாடு மத்தவெவரங்களெல்லாம் அடிச்சுப்பெரண்டுக்கிட்டு ஒன் நெனைப்புக்கு வராமப்போயிருமா ?

சின் : சோமு, ஒன்னோடை 'டெக்னிக்கு' நல்லாப் புரிஞ்சுபோச்சு. நீ விசயத்தைச் சொல்லாம......

சோமு : (ரோசத்துடன்) நான்ஸென்ஸ்! 'நல்லாப் புரிஞ்சுபோச்சு'ன்னு எவ்வளவு துணிச்சலோடு பொய் சொல்லிட்டே ! என் 'டெக்னிக்'குல ஒரு சிறு பாயின்டை எடுத்து நான் வெளக்கறதுக்குள்ளே எல்லாம் புரிஞ்சிட்டதாச் சொல்றது வெறும் போக்கடாத்தனம் !... ஏன் பொய்சொல்லணும் ? என்னைக்குத்தான் நம்ம சனங்க ஒருத்தரோடொருத்தர் மனசைத் தறந்து பளகப்போறுங்களோ !... என்னைக்கேட்டா......

சின் : (தலையைப் பிய்த்துக்கொள்ளாத குறையாக) சோமு, விசயம் ஒரேயடியா வளந்து போச்சு. எங்கயோ ஆரம்பிச்சு இப்போ எங்கோ வந்து நிக்கறோம்... இன்னம் ஏதாவது சுத்துவளியில் நொளைஞ்சோமோ, வெளியிலே வர்ரதுக்கு வளி தெரியாமக் கொலைப் பட்டினி கெடக்கவேண்டியதுதான்... சோமு, சொன்னுக் கேளு, ஆரம்பிச்ச எடத்துக்கே திரும்பிப் போயிருவோம்.

சோமு : நீ எடக்காப் பேசறேல்லே ? ஆல்ரைட் ! திரும்பிப்போயிருவோம். 'வந்தவளியாவே' திரும்பிப் போவோம். உம், என்ன சொல்லிக்கிட்டிருந்தேன் ?

சின் : (அலறிப்போய்) ஐயோ சோமு, ஒன் கால்லே விளுந்து கெஞ்சரேம்ப்பா என்னை விட்டுரு; எனக்குப் பசி தாங்கலே. எம்மேல தயவுவச்சு விசயத்தை நேரடியாச்சொல்லிரமாட்டியா ?

# ‘HELP US TO HELP YOU’

●

“Cleanliness is next to Godliness”, according to an old adage. Clean surroundings radiate joy. More than that they help in controlling diseases. On Railway Platforms, in Waiting Rooms and in Carriages, etc., where people gather, it is of paramount importance to maintain proper hygienic conditions, to preserve the health of the passengers. You can help the Railways in this fight against diseases by:

**EXTENDING YOUR CO-OPERATION FOR KEEPING THE SURROUNDINGS CLEAN AND BY AVAILING OF THE SERVICES OF SANITARY STAFF PROVIDED AT STATIONS WHENEVER REQUIRED.**

●

# NORTHERN RAILWAY

With Compliments from

**People's Publishing House Pvt. Ltd.,**

Jhandewalan Estate, Rani Jhansi Road,
NEW DELHI-1.

Show Room :
2, Marina Arcade,
Connaught Place, New Delhi-1.

சோமு : (சலிப்புடன்) சேச்சே, ஒன் வாய் மூலமாவே எல்லாத்தையும் வரவளைக்கணும்னு நான் ஆசைப்பட்டதுக்கு இப்பிடி ஒரேயடியா மண்ணை அள்ளி வீசிட்டலேடா பாவி!... சரி போது, அன்னைக்கி மார்க்கெட் பக்கத்திலே நாம் சந்திச்சப்போ நான் என்ன சொன்னேன்? "என் கதைகளையெல்லாம் ஒங்கிட்டே சாவகாசமா படிச்சுக்காமிக்கணும் ஒன் வீட்டுக்கு வரவா?"ன்னு கேட்டேன்... அதுக்கு நீ...

சின் : (புரிந்துகொண்டு) ஓ ஓ, இப்போ நெனைப்பு வருது. மருநா நானே ஒன் வீட்டுக்கு வர்ரதாச்சொல்லியிருந்தேன். ஆனு...

சோமு : ஆனு ?

சின் : உம்... வீட்டிலே ஒரே வேலையாப் போச்சு. அதனலதான்

சோமு : (சட்டென்று) கெடையாது. நீ அன்னைக்கி சினிமாவுக்கு போனேங்கரதை, நான் நாலுபேரை வச்சிக்கிட்டு ரூபிக்கட்டுமா ?

சோமு : (சரணுக்தியடைந்து) சோமு, மன்னிச்சுக்க; ரொம்ப நாளா சினிமாவுக்கே போகலே, அதுனுலதான் (சட்டென்று) நீ ஒண்ணு செய்யேன், ஒன் கதைகளை எங்கிட்டகுடு; நானே படிச்சுப் பாத்துட்டு ரெண்டு நாளுல திருப்பிக் கொடுத்துர்ரேன்.

சோமு : அதுல என்ன பிரயோசனம்? நான் படிச்சுக் காட்டினு சரியானபடி 'ஸ்பிரிட்' கொறையாம படிப்பேன். கதாசிரியன் வாய் மூலமாவே கதையைக் கேக்கறது எப்படி, நீயா படிக்கறது எப்பிடி ?

சின் : (ஒன்றும் புரியாமல்) அப்போ, என்ன செய்யலாம் ?

சோமு : செய்யறது என்ன ? அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலைலெ எட்டு மணிக்கு என் கதைகளையெல்லாம் ஒரு கட்டாகட்டி எடுத்துக்கிட்டு நேரே இங்கேயே வந்துர்ரேன். சாப்பாடு இங்கயேதான். சாப்பாட்டுக்கு முன்னே ஒரு ஏளெட்டு 'ஸ்டோரி'களைப் படிச்சு ஒனக்கு வெளக்கிர்ரேன். பாக்கியையெல்லாம் சாப்பாட்டுக்குப் பிற்பாடு வச்சிக்கிடலாம். நமக்குத்தா ஒரு முளு நாளு இருக்குதே!

சின் : .........?

சோமு : அப்போ சரி, நான் கௌம்பறேன்... ஞாயிற்றுக்கௌமை காலை எட்டுமணி......

[போயே போய்விடுகிருன். கொலைக்காரன்! சின்னப்பன் மூச்சுத்திணறக் கொஞ்சம் நேரம் திண்ணையிலேயே நின்றுவிட்டு, தொய்ந்துபோய் வீட்டுக்குள் வருகிருன். அங்கே பொன்னு மூர்ச்சையடையும் நிலையில் சாப்பாட்டு இலைக்கருகே உட்கார்ந்திருக்கிருள்.]

சின் : பொன்னு... பொன்னு...!

பொன்னு: போனுனு இல்லியா படுபாவி ?

சின் : (உட்கார்ந்து கொண்டே) போறான் போறான்; இல்லாட்டி நான் உள்ளே வர்ரது எங்கே?

பொன்னு : (சலிப்புடன்) போதும் போதும், அவுரு ஒரு வேளை பொழுதுன்னு இல்லாம வந்து பேசிப் பேசித் தொளைக்கும்போது, பல்லைப் பல்லை யிளிச்சுக்கிட்டு நிக்றது! அவுரு போன பிற்பாடு இங்கே உள்ளே வந்து நின்னுகிட்டு விராப்புப் பேசறது!

சின் : பின்னே என்ன செய்யச் சொல்றே பொன்னு?

பொன்னு: (எழுந்து உணவு பரிமாறிய வண்ணம்) நான் என்னத்தைச் சொல்றது? அன்னைக்கி அவுரு சொன்னாருன்னு, அவுருகிட்ட கதை கேக்கதுக்காக அமக்களமாப் பொறப்பட்டவங்களாச்சே நீங்க! நான் தடுத்து சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிருக்காட்டி...

சின் : இப்ப, அய்யா அதுக்காகத்தான் எங்கூடச் சண்டை போட்டுட்டுப் போறாரு! வர்ர ஞாயித்துக்கெளமை காலை எட்டு மணிக்கு கதைகளையெல்லாம் ஒரு பாரவண்டியில போட்டுக்கிட்டு இங்கே வரப்போறானும்.

பொன்னு: (பயந்து) எதுக்கு?

சின் : எனக்குப் படிச்சுக் காமிக்கத்தான்......இன்னொன்னு: அவனுக்குச் சாப்பாடு இங்கேதானும்.

பொன்னு: ஆ!

சின் : சாப்பாட்டுக்கு முன்னே பத்து கதை, சாப்பிட்டுக்கிட்டே இன்னொரு பத்து கதை, சாப்பாட்டுக்குப் பிற்பாடு பாக்கி நூறு நூத்தம்பது கதை — இப்பிடி நாள் பூராவையும் இங்கயே ஜாலியாச் செலவளிக்கப் போறான்.

பொன்னு: (பரிமாறுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து நின்று) பார்த்துருவோம்.

சின் : (வியப்புடன்) எதை?

பொன்னு: அவுரு இங்கே வந்து கதை வாசிக்கறதை!...அன்னைக்கி நாம ரெண்டு பேரும் வீட்டைப் பூட்டிக்கிட்டு காலையிலே எங்க அத்தை வீட்டுக்குப் போகப் போறோம்...

சின் : (பதறி) ஐயையோ! சோமு என்னைக் கொன்னு போட்டுடுவான்...நான் சம்மதம்ங்கருப்ல சும்மா இருந்துட்டேனே பொன்னு!

பொன்னு: அதென்னமோ எனக்குத் தெரியாது. எங்க அத்தை மூணும் தெருவில இருக்காங்க; வருந்தி வருந்திக் கூப்பிடுறாங்க; அவுங்க வீட்டுக்கு ஒரு வாட்டி கூட சாவகாசமாப் போனதில்லே. கண்ட ஆளுகளுக்கெல்லாம் மணிக்கணக்கா நேரத்தை வீணடிக்கது!... அவுருக்கு வீடு சந்தோசமாயில்லேன்னு சந்நியாசம் வாங்கிக்கிடறது

தானே? மத்தவங்களை ஏன் இப்படித் தொளைச்சுத் துருவி யெடுக்கணும்?

சின் : பொன்னு, அவன் வரதாச் சொல்லியிருக்கும் போது, கதவைப் பூட்டிட்டுப் போனு அவன் ஒடிஞ்சே போயிருவான்...இதபாரு, நான் வேணும்னு அவன் கிட்ட இன்னைக்கே போயி ஞாயித்துக்கௌமை சவுரியப்படாதுன்னு...

பொன்னு: சும்மா இருங்க... ஒண்ணும் சொல்ல வேணாம். நமக்கு சவுரியப்படலைங்கதை அவரே தெரிஞ்சுக்கிடுருரு. இந்த மாதிரி ஆளுகளுக்கெல்லாம் இதுதான் சரி.

[சின்னப்பன் அயர்ந்தே போகிறுன்.]

காட்சி 2

[எப்படியோ ஞயிற்றுக்கிழமை வந்து போய்விடுகிறது. அன்று சோமு வந்தானு, பூட்டைப் பார்த்து என்ன நினைத்தான், ஒன்றுமே சின்னப்பனுக்குத் தெரியாது. சோமு தன் வாழ்விலிருந்தே விலகிவிட்டான் என்று சின்னப்பன் நினைக்கும்படியாக திங்கட்கிழமை பூரார்வும் எவ்வித விபரீத நிகழ்ச்சியும் இல்லாமல் சென்றுவிட்டது.

செவ்வாய்க்கிழமை காலை சாப்பாட்டை முடித்துவிட்டு சின்னப்பன் வீட்டின் நடு அறையில் வந்து உட்கார்ந்திருக்கிறுன். பொன்னு உள்ளே வேலையாயிருக்கிருள். தற்செயலாக அறையின் ஜன்னல் வழியாக வெளியே பார்க்கும் சின்னப்பன் தெருவில் சோமு அதைக் கடந்து விட்டு வாசலை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டு துடிதுடித்துக் கொண்டு உள்ளே ஓடுகிறுன். பொன்னு பாதியிலேயே எதிர்ப்படுகிருள்.]

சின் : (பரபரப்புடன்)பொன்னு. அந்தப் படுபாவி வர்ரான்...

பொன்னு : அப்படியா ? எங்கே ?

சின் : பக்கத்துச் சந்து வளியா நம்ம ஜன்னலைத் தாண்டிக்கிட்டு வாசப் பக்கம் வந்துகிட்டிருக்கான். இப்ப தட்டுவான் கதவை.

(சொல்லி வாய் மூடவில்லை, சோமு தட்டுகிறுன்.)

பொன்னு : (குரலைத் தாழ்த்தி) நீங்க இங்கயே இருங்க. நான் போய் நீங்க வீட்டுலே இல்லேன்னு சொல்லிட்டி வந்துர்ரேன்.

(பரபரப்புடன் வெளியே ஓடுகிருள். சின்னப்பன் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓர் ஓரமாய் ஒளிந்து கொள்கிறுன். கதவு திறக்கும் சத்தமும், பொன்னு

ஏதோ சொல்வதும், சோமு ஏதோ கேட்பதும், பிறகு பொன்னு ஏதோ பதில் சொல்வதுமாகக் கொஞ்ச நேரம் சின்னப்பனின் காதில் வந்து விழுகிறது. கடைசியில் பொன்னு கதவைத் தாழிட்டு விட்டு வெற்றியுடன் உள்ளே வருகிருள்.]

சின் : (ஆவலுடன்) என்ன, போயிட்டாரு ?

பொன்னு : (கர்வமாக) போகாம ? ஞாயித்துத் கௌமையைப் பத்திக் கேட்டாரு, மூணும் தெருவில் அத்தைக்கு ஒடம்பு சொகமில்லேன்னு சேதி வந்துட்டதுனலே திடீர்னு வீட்டைப் பூட்டிக்கிட்டுக் கௌம்ப வேண்டியதாச் சுன்னு சொன்னேன். நம்பிட்டாரு...ஆனு...

சின் : (கலவரத்துடன்) ஆனு என்ன ?

பொன்னு : இன்னைக்கி சாயங்காலம் ஒங்களை அவுரு வீட்டுப்பக்கம் வரச்சொல்லியிருக்காரு...

சின் : ஆ !

பொன்னு : இன்னி ராவைக்கு நீங்க அங்கேயே சாப்பிடலாமாம். ராப்பூராவும் ஒக்காந்தாவது எல்லாக் கதையையும் பாத்துரலாம்னு சொன்னுரு... இப்ப ரெண்டு நாளுக்குள்ர புதுசா ஒரு பெரிய நாவல் எளுதி முடிச்சிருக்காராம்; அதையும்...

சின் : (கதறி) பொன்னு, நான் போலீஸ் ஒதவி கேட்டாக் கெடைக்குமா ?

பொன்னு : ஒங்களை மாதிரி ஆளுங்களுக்கு போலீசால ஒதவி செய்ய முடியாது. இதெல்லாம் தலைக்கு மிஞ்சி போயிட்ட கேஸு !

சின் : பொன்னு, நீ கூட என்னைக் காப்பாத்தமாட்டியா ?

பொன்னு : நான் என்ன செய்ய முடியும்? அந்த ஆளோட உறுதியைப் பாத்தா எனக்குக்கூட பயமாத்தான் இருக்குது...

சின் : (கோபாவேசத்துடன்) முடியாது, இவன் கொடுமையை இனிமே நான் தாங்கமாட்டேன். இன்னி ராவைக்கு என்னல் போகமுடியாது. என்னவேணும் னலும் ஆகட்டும், பரவாயில்லே.

பொன்னு : ஆகறதென்ன ? மறுபடி நாளைமொத ஒங்களை வந்து தேடித்தேடி உயிரை வாங்குவாரு...

சின் : பாப்போம் இவன் வாங்கறத்தை... பாவிப்பய !... இப்பிடித் தொண தொணத்தாத்தான் இவன் உசிரு நிக்கும்னு, அட ஒரு மாசத்துல ஒரு குறிப்பிட்ட நாளுல ஒரு குறிப்பிட்ட மணியில மட்டும் வந்து என்னைப் பேசிப் பேசிக் குத்துசிராப் போட்டுட்டாலும் பரவாயில்லே.

அதுக்கு எளுத்து மூலமா ஒடன்படவும் தயார்... ஆனா இப்பிடி எந்த நிமிசம் இவன்கிட்டச் சிக்கிக்கிடுவோ மொன்னு பயந்து நடுங்கிக்கிட்டு இது என்ன பொளைப்பு!

பொன்னு : இவ்வளவு தூரத்துக்கு எடம் குடுத்துட்டு, இப்போ நொந்துகிட்டா என்ன பிரயோசனம்?... இனிமே தப்பிக்க முடியும்னு எனக்குத் தோனலே...!

சின் : (திடீரென்னு) பொன்னு, இந்தப் பயலைக் "கம்ப் ளீட்டா" இந்தப் பக்கமே வரவுட்டாதபடி செய் துரட்டா?

பொன்னு : ........!

சின் : இப்பவே ஒரு பெரிய லெட்டர் எளுதி அவன் அட்ர சுக்குப் போட்டுரப் போறேன். நேர்ல சொல்ல தைரிய மில்லாமைத்தானே தெணறிப் போறேன். லெட்டர்ல நெனச்சப்படி வளாசி ஆளையே உருத்தெரியாமே அடிச் சிரமாட்டேன்! அவன் அப்பிடியே நாந்துகிடணும்... இதோ இப்பவே.....

பொன்னு : (குறுக்கிட்டு) லெட்டர்கூட நாளைதானே போய்ச் சேரும்? இன்னிராவைக்கி.....

சின் : (அலட்சியமாக) கெடக்குது! இன்னிராவைக்கி நான் ஏன் வரலைங்கரத நெனச்சு அவன் நாளைக்கு மண் டையை கொளப்பிக்கிட்டிருக்கும் போதே என் லெட் டரு போய்க் குதிக்கட்டும்... (உற்சாகத்துடன் பேனா வையும், காகிதத்தையும் தேடி எடுத்து) ஒழிஞ்சான் ஆளு, இத்தோடு! (எழுத உட்கார்ருகிறான்.)

காட்சி 3

[கடிதம் சோமுவின் கைக்குக் கிடைத்து இன்று இரண்டு நாளாகிவிட்டது. மூச்சுப் பேச்சில்லை. சின் னப்பனின் கொண்டாட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்? வீட்டில் பொன்னுவுடன் ஒரே அமர்க் களமாக அரட்டையடித்துக் கொண்டிருக்கிறான்.]

சின் : (வீராப்புடன்) எப்படி, அய்யா வேலை?... ஆளு, அப்படியே அசந்து பூட்டானே! ஹும், இந்தமாதிரி பயலுகளுக்கெல்லாம்...

பொன்னு : ஆனா, எனக்கென்னமோ நீங்க அவ்வளவு தூரம் வசவும் திட்டும் அள்ளி வீசி லெட்டரு எளுதியிருக்கக்கூடா துன்னு தோணுது.....

சின் : பொன்னு! ஒனக்கு ஒலக அனுபவம் பத்தாது. இவங் கல்லாம் இவ்வளவு திட்டி எழுதாட்டி ஒதுங்கிப் போக மாட்டானுங்க.... படு இந்தப் பயலுங்க, தெரியுமா?

பொன்னு : எனக்கென்னமோ ஒருமாதிரிப் பயமாத்தான் இருக்குது

சின் : இதுல பயப்படறத்துக்கு என்ன இருக்குதுன்னேன் !

பொன்னு : நீங்க உண்மையர்வே அவதிபட்டதுனுல எளுதிட்டீங்க, சரித்தான், ஆனு இவ்வளவுத் தூரம் ஒருத்தரைப்பத்தி நீங்க எளுதறத்துக்குச் சட்டம் எடம் குடுக்குமா ? அவரு திடுதிப்புனு கோர்ட்டுக்குப் போய் நிண்ணுட்டார்னு என்ன செய்வீங்க ?

சின் : (திடுக்கிட்டு) ஆ ! அப்பிடிக் கூடச் செய்துருவானே?... ஒரு வேளை......

பொன்னு : எனக்குச் சந்தேகம் வர்ரதுனுல சொல்றேன்... அப்பிடியெல்லாம் பிடிபட்டுர மாட்டோம்ங்கற கவலை ஒங்களுக்கில்லாட்டி எனக்கும் இல்லே.

சின் : (கலவரத்துடன்) ஐயோ பொன்னு, இப்ப நெசமாவே கவலைப்பட ஆரம்பிச்சிட்டேனே !... எளுதும்போது உற்சாகமாத்தான் இருந்திச்சி! இப்ப நீ சொன்ன பெறகு மனசு என்னல்லாமோ நெனைக்குதே !

பொன்னு : வாய் வார்த்தையாப் பேசிட்டாக் கூடிக் கவலையில்லே. எளுத்து மூலியமா அவுரு கையிலே சிக்கிரிச்சேன்னு நெனச்சாத்தான்......

சின் : பொன்னு, அந்த லெட்டரை அவன்கிட்டேருந்து எப்பிடியாவது பரிச்சிரணுமே! வேறவளியில்லே......

பொன்னு : (நொடிப்புடன்) உம் உம், அதையும் செய்துருங்க, ஏற்கனவே உள்ள குத்தத்தோடு, திருட்டுக் குத்தமும் சேந்துக்கிடட்டும்...

[அவள் பேசி முடிவதற்குள் வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது, உடனே பொன்னு, குரலையடக்கும்படி சின்னப்பனிடம் ஜாடைக் காட்டிவிட்டு, வாசற் பக்கம் செல்லுகிறுள். சின்னப்பன் மறைவிடத்தில் பதுங்கிக்கொள்கிறுன். நல்லவேளை சின்னப்பனே போய்க்கதவைத் திறக்காமலிருந்தான். ஏனென்றுல் வாசலில் வந்திருப்பது சோமுவேதான். பொன்னுவிடம் அவன் ஏதோ கேட்பதும், பொன்னு ஏதோ பதில் சொல்வதும் தெளிவில்லாமல் வந்து காதில் விழுகிறது. சிறிது நேரத்தில் பொன்னு கதவை தாழிட்டுவிட்டு உள்ளே வருகிறுள்.]

சின் : (ஆவலுடன்) யாரு சோமுதானே ?

பொன்னு : ஆமாம் அவரேதான்...... படுகோவத்திலே வந்தாரு நீங்க வெளியே போயிருக்கதாச்சொன்னேன். "முந்தாநா ஏன் வரலே, போகலே"ன்னு ஒண்ணுமே கேக்கலே அவுரு. நீங்க இல்லேங்கது தெரிஞ்சதும் கொஞ்சம்

SCINDIA

SHIP YOUR CARGO BY
SCINDIA VESSELS

OUR OVERSEAS SERVICES EXTEND TO U. K., CONTINENT, SCANDINAVIAN PORTS, WEST AFRICA, U. S. S. R., U. S. A. AND GREAT LAKES/EASTERN CANADIAN PORTS.

OUR COASTAL SERVICES COVER THE COASTLINES OF INDIA, WEST AND EAST PAKISTAN, CEYLON AND BURMA.

CABLE

OVERSEAS : *SAMUDRAPAR*
COASTAL : *JALANATH*

PHONE: 2 6 8 1 6 1 (12 Lines)

SHIPMENTS BY SCINDIA SHIPS HELP INDIA
TO SAVE AND TO EARN FOREIGN EXCHANGE

THE SCINDIA STEAM NAVIGATION CO., LTD.

SCINDIA HOUSE, BALLARD ESTATE, BOMBAY.
DELHI OFFICE : 60, JORBAGH, NEW DELHI-3.

தயங்கி நின்னுட்டு, "அவரு எழுதின லெட்டரு வந்து சேர்ந்துதுன்னு அவருகிட்ட சொல்லிருங்க" — அப் பிடின்னு சொல்லிவிட்டுப் போயிட்டாரு.

சின் : அப்பிடியா ?

பொன்னு : போகும்போதே, பெறகு வந்து பாக்கிறதாவும் சொல் லிட்டுப் போனாரு... (சின்னப்பன் பேச ஆரம்பிப்பதற் குள்) நீங்க அனுப்பின லெட்டரு அவுரு சட்டைப் பையிலே இருந்துதுன்னு நெனைக்கறேன்...

சின் : (பதற்றத்துடன்) பொன்னு, அந்த லெட்டரை வச்சுக் கிட்டு என்னை விளாசித் தீத்துரலாம்ங்கற ஐடியாவோடு தான் அவன் வந்திருக்கிறான். நல்லவேளைத் தப்பிச் சேன்... மொகம் எப்பிடியிருந்திச்சு ? கோபமா வந்தானா ?

பொன்னு : அந்த ஆளு பேசின விதத்தைப் பாத்தா ஒரே கோவத் தோடு வந்திருந்தது கணக்காத்தான் தோணிச்சு... நீங்க இனிமே அவுரு கண்ணுல படவே வேணும்... அதான் சரியானவளி. ரெண்டுபேரும் ஒரே ஆபீஸ்ல வேலை பாக்கலைங்கதுனால இது அவ்வளவு கஸ்டம் இல்லே... அவுரு இங்கே வந்தா நான் பார்த்துகிட றேன்; நீங்க வெளியே போயிருக்கரதாச் சொல்லி...

சின் : ஆனா பொன்னு, நீ சொன்னாப்ல அவன் கோர்ட்டுல போயி....

பொன்னு : அதைப்பத்தி இப்ப மொதவே பயந்துகிட்டிருந்தா என்ன ஒபயோகம் ?

சின் : பொன்னு, ஏன்டா லெட்டரு எழுதினோம்னு இப்ப கடந்துதவிக்கறேன்... இந்தத் தவிப்பைப் பாக்கும் போது, அவன் கதைகளையும, வளவளப் பேச்சையும் கேட்டு அவதிப்படறது எவ்வளவோ மேலுன்னு தோணுது.

பொன்னு : யோசிச்சுப் பாக்கும்போது எனக்குகூட அப்பிடித்தான் தோணுது. சட்டவிரோதமா என்னத்தையோ செய்து போட்டு நீங்க இப்பிடி மாட்டிக்கிட்டிருக்கதைப் பாத்தா...

[இப்படியாக சின்னப்பனின் கலவரம், விசுபரூபம் எடுத்து அவனை வாட்ட ஆரம்பிக்கிறது.]

காட்சி 4

[ஒரு வாரம் கழித்து... சனிக்கிழமை பிற்பகல்... சோமு இதற்குள் ஐந்தாறு தடவை சின்னப்பனைத் தேடிக்கொண்டு வந்து போய்விட்டான். அத்தனை தடவையும் அவன் கண்ணில் படாமலே சின்னப்பன்

தப்பிவிட்டான். ஒவ்வொரு தடவையும் அந்தக் கடிதம் சோமு சட்டைப்பையில் இருந்ததாக பொன்னு சொல்லுகிருள்... இன்று சின்னப்பன் அரை நாள் லீவை அனுபவிப்பதற்காக ஆபீஸி லிருந்து விரைவாக வீடு திரும்பிவிட்டான். உள்ளே அவனும், பொன்னுவும் பேசிக் கொண்டிருக்கும் போது, வாசற்கதவு தட்டும் சத்தம் கேட்கவே, வழக்கம்போல் சின்னப்பன் மறைந்துகொள்கிருன்; பொன்னு வந்து கதவைத் திறக்கிருள். வெளியில் தபால்க்காரன் நிற்கிருன்.]

தபால் : அய்யாவுக்கு மணியார்டர் வந்திருக்கு...

பொன்னு : (விழுந்து விழுந்து சிரித்தவாறே உள்ளே பார்த்து) பயப்படவேண்டாம்; தபால்க்கார ஆளுதான். மணியார்டரு வந்திருக்குதாம். வாங்க...

[உள்ளிருந்து சின்னப்பன் தயக்கத்துடன் வருகிருன். தபால்க்காரனை பார்த்தவுடன் தயக்கம் தைரியமாய் மாறுகிறது. வேகமாய்வந்து அவன் மணியார்டர் பாரத்தைத் தபால்க்காரனிடமிருந்து வாங்கிப்பார்ப் பதற்கும் சோமு கையில் ஒரு பெரிய காகிதக்கட்டுட னும், பையில் சின்னப்பனின் கடிதத்துடனும் வேக மாகப் படியேறிவருகிருன். எங்கிருந்துதான் வந்தானே, தெரியாது]

சோமு : (வரும்போதே நான்தாண்டா அஞ்சுரூபா அனுப்பி யிருக்கிறேன், வாங்கிக்க...(சின்னப்பனும் பொன்னுவும் திடுக்கிட்டு தலைநிமிர) வீட்டுக்குள்ள இருந்துகிட்டே இல்லேன்னு சொல்லியனுப்பற அயோக்கிய பயலே யெல்லாம் வெளியே வரவளிக்கதுக்கு நான் ஒபயோகிக் கற 'டெக்னிக்கு' இது... உம் உம், மணியார்டரை வாங்கி என் கையிலேவே குடுத்துரு... தபால் ஆளே ஏன் காக்கப் போடறே ?

[சின்னப்பன், நடுங்கும் கையால் கையெழுத்துப் போட்டு ரூபாயை வாங்கி சோமுவிடம் கொடுக் கிருன். சோமு அதைவாங்கிப் பையில் போட்டு கொண்டுவிட்டு, பையிலிருந்து ஓர் அரை ரூபாய் நாணயம் எடுத்து தபால்க்காரனிடம் நீட்ட, தபால்க் காரன் அதை வாங்கிக் கொண்டு நன்றியுடன் வெளி யேறுகிருன். சின்னப்பனும், பொன்னுவும் திகைத்து நிற்கிருர்கள்.]

சோமு : (சின்னப்பனிடம் நெருங்கி வந்து) ஏண்டா, இவ்வளவு தான் செய்வியா, இதுக்குமேலவும் செய்வியா ?.... (சின்னப்பன் தலைகுனிந்து நிற்க) நீயெல்லாம் மனுசன் தானு ?...உம்?... என்னை இவ்வளவுதானு அவமானப் படுத்த முடியும்?...

சின் : (மென்று விழுங்கிக்கொண்டு) சோமு, ஏதோ தெரியாத் தனமா?...

சோமு : (ஆவேசத்துடன்) தெரியாத்தனமா ?...... டேய், ஒங்கிட்டவந்து பேசிப் பளகி, நான் என் கதைகளே யும் வாசிச்சுக் காண்பிச்சது ஆசைப் பட்டுட்டதுனுல் என்னே ஒரு 'பிஸாத்துப் பய'ன்னு நெனச்சிட்டியா? (கண்களில் அனல்பறக்க) டேய் சின்னப்பா, நான் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவண்டா. நெனச்சா ஒன்னேடு சேத்து இந்த ஊரையே ஒரு கலக்குக் கலக் கிடுவேன். (மற்ற இருவரும் பதறுகிருர்கள்.) உம் உம்? செய்யறதையும் செஞ்சுபோட்டு, நீ வீட்டுக் குள்ள இருந்துக்கிட்டே இல்லேன்னு சேதி சொல்லி யனுப்பினியே, ஒன்னே அப்பிடியே... (பல்லேக்கடிக் கிருன்.)

சின் : (துடித்துப்போய் சோமுவைக் கையெடுத்துக்கும்பிட்ட வண்ணம் நேரடியாகவே) சோமு, ஒன்னே நான் என் உயிருக்குயிரான சினேகிதனு மனசில நெனச்சிருக் கேன். ஒன் எழுத்துல எனக்கு மதிப்பு இல்லேன்னு நெனச்சிராதே.

பொன்னு : (தானும் கூடவே) அதை நிங்க படிச்சுக்கேக்கணும்ங் குதுல அவங்களுக்கு ஒரே ஆசை...

சின் : (விடாமல்) நல்லதைத் தெரிஞ்சுக்கிடறதுலயும், அறிவு வளர்ச்சியிலயும் எவ்வளவோ ஆவலும் ஆசையும் இருந்தும், ஒன் கதைகளேப் புரிஞ்சுகிற புத்திக்கூர்மை எனக்கு இருக்குமோ இருக்காதோங்கற பயத்துனுலயே ஓடி ஓடி ஒளிஞ்சுக்கிட்டிருந்தேன்...

பொன்னு : (பக்கவாத்தியம் போல) நான்கூடச் சொன்னேன், அப்பிடியெல்லாம், புரிஞ்சுக்கிடறதுக்கு முடியாத படிக்கி நீங்க எளுதமாட்டேங்கன்னு...

சின் : அட, சந்தேகம் வந்தா ஒங்கிட்டவே கேட்டுக்கிட லாமே! (சிரிக்கிருன்.)

சோமு : (தன் காதுகளேயே நம்பாமல், சரசரவென்று இறங்கி வந்து) டேய் சின்னப்பா, ஒருவாட்டி படிக்கும்போதே சடார்னு புரிஞ்சுக்கிடறமாதிரி "மக்கள் மொழி"யில எழுதற சாதாரண எழுத்தாளன் தான் நான்... அதா வது, மேலெழுந்தவாரியாப் பாக்கறவனுக்கு... ஆனு, கொஞ்சம் உன்னிப்பாத் திறனய்வு பண்ணக்கூடிய வனுக்கு, ஒவ்வொரு வாட்டி படிக்கும்போதும் ஒவ் வொரு அர்த்தம் தென்படும்... அதுதான் என் 'டெக் னிக்கு'...இப்பவேருன்னும் வேண்டாம், "தேங்காய்ப் பூ பனியன்" ங்கற பேர்ல ஒரு ஒப்பில்லாத குறுநாவல் எழுதியிருக்கிறேன், அதை மட்டும் நீங்கரெண்டுபேரும்

மூனுவாட்டி கேட்டீங்கன்னு, மூனுவாட்டியும் வெவ் வேற மாதிரிப் புரியும்.

பொன்னு : (கொஞ்சம்கூட விவரம் தெரியாமல், செயற்கை ஆவல் காட்டி) ஐயோ, அதைச் சிக்கரமே ஒங்கவாயால கேட்டா எவ்வளவு நல்லாருக்கும்!

சின் : ஆமா!

சோமு : அப்பிடியா? நான் இதையெல்லாம் எதிர்பார்த்துத் தானே, எல்லாத்தையும் கையோடு எடுத்துவந்திருக் கறேன்? (கையிலுள்ள காகித மூட்டையைக் காட்டு கிறான்.) உள்ளே வந்து இப்பவே படிச்சுக் காமிக் கட்டுமா?

பொன்னு, சின் : (செயலற்றுப் போய்) ஓ! தாராளமா!

[அவ்வளவுதான்...சோமு உள்ளே பாய்ந்து வந்து முன் அறையில் கிழே'சளப்'பென்று உட்கார்ந்துவிடு கிறான். சின்னப்பனும், பொன்னுவும் வேறு வழியில் லாமல், ஒருவரையொருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே, சோமுவின் எதிரில் உட்காருகிறார்கள்.]

சோமு : (காகிதக் கட்டைப் பிரிக்கப் போனவன்) உம்ம்? வீட்டுக்குள்ளவே இருந்துக்கிட்டு.. என்ன சாலாக்கு!

சின் : (குழைந்து) ஏதோ தெரியாத்தனமா...
(கட்டைப் பிரித்துக்கொண்டே) எல்லாத்துக்கும்மேல, ராவைக்கு பன்னண்டு மணிவரையில என்னைக் காக்கப் போட்டுட்டு, மறுநா ஒரு லெட்டரு அனுப்பினயே... உம்?... உள்ளூர்ல இருக்கறவனுக்கு...

சின் : (நடுநடுங்கி) சோமு, அதுல நான் எழுதினதையெல் லாம் நீ எப்பிடியாவது மறந்துரணும்...

சோமு : எப்பிடி மறக்கறது?

பொன்னு : (கலவரத்துடன்) இல்லே, நீங்க மறந்துதான் ஆகணும்...

சோமு : (கட்டிலிருந்து குறுநாவலைத் தனியாய் எடுத்துவைத்து விட்டு) அந்த லெட்டரைப் படிச்சாவுல்லே மறக்கதுக்கு!

சின், பொன்னு : (திகைப்புடன்) படிக்கலியா?

சோமு : (தலையை ஆட்டிக்கொண்டே) ஊஹூம், அதை நான் ஏன் படிக்கணும்? அன்னிராவைக்கு வராம இருந் துட்டு, நொண்டிச்சாக்குச் சொல்லி மன்னிப்புகேட்டு

நீ லெட்டரு எழுதறது, நான் அதை வேலைமெனக் கட்டுப் போய்ப் படிக்கறதா ? ஒன் கையெழுத்தைக் கவர்மேல பாத்த ஒடனேயே அப்பிடியே இந்தப் பையிலே வச்சவன்தான். ஒன்னை நேர்ல பாத்து ஒன் மூஞ்சியிலயே வீசிறணும்னுதான் ஏழுவாட்டிவந்தேன். இப்ப எட்டாவது வாட்டிதான் அதுக்கு வாய்ப்புக் கெடைச்சிச்சு.

[சட்டைப்பையிலிருந்து சின்னப்பன் எழுதிய கவரை எடுத்துக் கீழே வீசுகிறான். சின்னப்பனும், பொன்னுவும் அதைப் பாய்ந்து எடுத்துப்பார்க்கிறார்கள். கவர் பிரிக்கப்படாமல் அனுப்பியபடியே இருக்கிறது. இருவர் கண்களும் மேலே நோக்கி ஆண்டவனுக்கு நன்றி கூறுகின்றன... அதேசமயம் சோமு கணீரென்ற குரலில் குறுநாவலை வாசிக்க ஆரம்பிக்கிறான். மற்ற இருவர்முகமும் உடனே தொங்கிப்போகிறது.]

(திரை)




For a
heavenly
Abode
in the
Grape Gardens
ASSOCIATED ARTISTS 2566
IN YOUR OWN
ORCHARD
Drink the nector of
Nature and forget
the toil and anguish
of the day, amidst
the Hanging Bunches
of Grapes in "Alcove"
just a 20 minutes drive
from Connaught Place
For more light knock at
THE
ALCOVE
GRAPE GARDENS
greater delhi planners pvt ltd.
FLAT 3, SHANKER MARKET, NEW DELHI-1 PHONE : 46715

# கிழவியும் குமரனும்

ஜே. வி. ஆர்.

வயது முதிர்ந்த மூதாட்டி தோளில் ஒரு மூட்டையுடனும் கையில் ஒரு தடியை ஊன்றிக் கொண்டும் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருக்கிருள். நல்ல வெய்யில்! (தனக்குள்) கதிரோனே! என் முதுமையும், தள்ளாமையும்கூட உனக்குப் புலப்பட வில்லையா? ஏன் இவ்வளவு உக்கிரத்துடன் என்னை வாட்டி வதைக்கிருய்? அல்லது முன்னொரு காலத்தில் என்னைப் போன்ற பெண் ஒருத்தி உன்னை உதிக்கக்கூடாது என்று சாபமிட்டதை நினைத்துக் கொண்டு, பெண் வர்க்கத்தைச் சேர்ந்த என்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிருயா? எவ்வளவு நீண்ட பிரயாணம்? பிரயாணத்தின் எல்லையையே அடைந்து விட்டேனே, தெரியவில்லையே? பசிவேறு காதை அடைக்கிறது. தாகமோ நெஞ்சை வரட்டுகிறது, ஆஹா! நல்லவேளை...... இந்த மரத்தின் கீழ் சற்று இளைப்பாறலாம்.

"முருகா" "முருகா" என்றவாறு அமருகிருள்.

ஒரு குரல் : பாட்டீ...... பாட்டீ......

கிழவி : என்ன! ஆச்சரியம்! யாழினும், குழலினும் இனிதான இம்மழலை இன்பத் தேனைப்போல் என் காதில் வந்து பாய்கிறதே! இது என்ன கனவா அல்லது நனவா? இந்தக் குரல் எங்கிருந்து வருகிறது? முருகா...... (மீண்டும்) பாட்டீ ......பாட்டீ.

கிழவி : ஆகா! யார் என்னை அழைப்பது? (சுற்றுமுற்றும் பார்க்கிருள்.)

குரல் : யார் அழைப்பதா? என்ன பாட்டீ சற்றுமுன்புகூட என்னை நீ அழைத்து விட்டு உன்னை யார் அழைப்பது என்கிருயே!

கிழவி : நீ யாரப்பா? எங்கிருக்கிருய்?

குரல் : இத்தனை நாள் கீழேயே செலுத்தி வந்த உன் பார்வையைச் சற்று மேலேதான் செலுத்தக் கூடாதா?

கிழவி : (மேலே கூர்ந்துகவனிக்கிருள்) பால் மணம் சிறிதும் மாருத பாலகனுன நீ இந்தச் சிறுவயதில் மரத்தின் மேல் ஏறி என்ன செய்கிருய்?

குரல் : நானு! பழம் தின்று கொண்டிருக்கிறேன் பாட்டி உனக்கும் வேணுமோ?

கிழவி : நீ யார் ? எங்கிருக்கிறாய் ? உன் பெற்றோர்கள் யார் ?

குரல் : நான் யாரா ! மறந்து விட்டாயா பாட்டி ? எப்பொழுதும் என்னையே நினைத்துக் கொண்டிருப்பாயே ! வயதாய்விட்டால் மறந்து விட்டாய் போலும் ! பரவாயில்லை நான் இருக்குமிடம் உனக்குத் தெரியாது ! நான் எங்கும் இருப்பேன் உன்னை எனக்கு நன்றாய்த் தெரியும்.

கிழவி : என்னமோப்பா ? மறந்துவிட்டேனே என்னமோ ? உன் பெயர் என்னப்பா ?

குரல் : என்னை என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கூப்பிடுவார்கள். ஆனால் இங்கிருப்பவர்கள் என்னைக் குமரன் என்று அழைப்பார்கள்.

கிழவி : இது என்னப்பா ! நீதான் பால குமரன் என்று தெரிகிறதே ! அது ஒரு பெயரா ! சரி நீ இருப்பது எங்கே ?

குரல் : அதோ தெரிகிறது பார், வேங்கை மரம் ! அதுதான்......

கிழவி : என்ன வேங்கை மரமா ? நீயா ? ஓஹோ ? அதனருகில் உன் வீடு இருக்கிறது என்கிறாயோ ? உன் பெற்றோர்கள் யார் ? அவர்கள் பெயர் என்ன ?

குரல் : எங்கம்மா பேரு " காளி "ன்னு சொல்லுவாங்க. எங்கப்பாவிற்குக் 'கூத்தாடி சிவம்'னு பேரு. என் தாயார், அதோ தெரிகிறதே அந்த மலைமேல் உட்கார்ந்து எப்பொழுதும் கண்ணை மூடிக்கொண்டு எங்கப்பாவையே நினைத்துக் கொண்டிருப்பாள். பெரிய கோபக்காரி ! கோபம் வந்தால் " காளி"யேதான் !

கிழவி : அப்படியா ! உன் தந்தை ?

குரல் : அவர்தான் ஒரு கூத்தாடி என்று சொன்னேனே ! எப்பொழுதும் சாம்பலைப் பூசிக்கொண்டு தா......தை என்று குதித்துக் கொண்டும், ஆடிக் கொண்டும் இருப்பார் ! கோபத்தில் அவரும் சளைத்தவரல்ல. பார்வையாலேயே நாசம் செய்துவிடுவார்.

கிழவி : நீ ஏன் அவர்களைவிட்டு இங்கு வந்திருக்கிறாய் ?

குரல் : எனக்கு வீடே பிடிக்கவில்லை பாட்டி ! என் பெற்றோர்களுக்கு என்னைவிட என் அண்ணனிடம்தான் பிரியம் அதிகம். ஒரு தரம் உனக்குப் பழம் வேண்டுமா என்று கேட்டு என்னை ஏமாற்றி விட்டு அண்ணனுக்குப் பழத்தைக் கொடுத்து விட்டார்கள். அப்பொழுதே கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு ஓடி வந்துவிட்டேன். நீ மட்டும் என்னவாம் ? நீயும் எங்க அண்ணன் கிட்டே தானே வரம் கேட்டே ?

# இந்திய மொழிகளில் உங்கள் தந்திகள்

ஏந்த
இந்திய மொழியிலும்
நீங்கள் தந்தியை
அனுப்பலாம்
ஆனல்
தந்திச் செய்தி
தேவநாகரி எழுத்தில்
எழுதியிருக்க வேண்டும்.

ஆங்கிலத்திம் அனுப்பப்படும், வாழ்த்துத் தந்திகள். (வாழ்ந்து வாக்கியங்கள் இந்தியில்), டீலக்ஸ் தந்திகள், பத்திரிக்கைச் செய்தித் தந்திகள், உயிருக்கு ஆபத்தான செய்திகள் அடங்கிய அவசரத் தந்திகள், போனே கிராம்கள், சுருக்கமான தந்தி விலாசங்களை பதிவு செய்துகொள்ளுதல், போன்ற தந்தி வசதிகள். தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டவைகளுக்கும் கிடைக்கின்றன.

இவ்வசதி 2000 தந்தி
காரியாலயங்களில் கிடைக்கிறது.

தபால் தந்தி இலாகா

OA 63/473

கிழவி : என்ன ? வரமா ? என்னப்பா நீ என்னவெல்லாமோ சொல்கிறாயே ? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. அது சரி, இந்தக் காட்டில் தனியாக இருக்க உனக்குப் பயமாயில்லையா ?

குரல் : பயம் என்பதே என்னவென்று எனக்குத் தெரியாது பாட்டீ ?

கிழவி : சிங்கங்கள் இருக்குமே !

குரல் : என் மாமா ஒரு தடவை சிங்க வேஷம் போட்டார். எல்லோரும் நடு நடுங்கிவிட்டார்கள். அசல் சிங்கம் அவர் முன்னால் எங்கே ?

கிழவி : புலிகள் வசிக்குமிடமாச்சே ?

குரல் : என் அப்பா புலியைக்கொன்று அதன் தோலை ஆடையாகக் கட்டிக்கொண்டு விடுவார். பாம்பையெல்லாம் எடுத்துத் தலையிலும், கையிலும், காலிலும் போட்டுக்கொண்டு ஆடுவார்.

கிழவி : அப்படீன்னு அவர் ஒரு பைத்தியமா ?

குரல் : அப்படிக்கூட அவருக்கு ஒரு பெயருண்டு ! நானே அவருக்கு நிறைய உபதேசம் செய்திருக்கேன் !

கிழவி : அது சரி, யானை இருக்குமே ?

குரல் : என் அண்ணனே பெரிய யானை !

கிழவி : பெரிய பெரிய் குரங்குகள் இருக்குமே ?

குரல் : பாட்டீ எங்க மாமாவிற்குக் குரங்குகள் எல்லாம் தாசானு தாசர்கள்.

கிழவி : சரிதான் ! உண்மையிலேயே நீ பெரிய தைரியசாலிதான். இந்தக் காட்டில் ஆகாரத்திற்கு என்ன செய்கிறாய் ?

குரல் : அதுவா அது ஒரு ரகசியம் !

கிழவி : என்னிடம் சொல்லக் கூடாதா ? நான் யாரிடம் சொல்லப்போகிறேன் ?

குரல் : இந்தக் காட்டிலுள்ள காய்கனிகளைத் தின்பேன். அது தவிர... அது தவிர... பாட்டி, யாரிடமும் சொல்லக்கூடாது.

கிழவி : இல்லை... இல்லை...

குரல் : என்னிடம் மிகவும் பிரியமுள்ள வேடுவப் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவள் எனக்கு தேனும், தினைமாவும் கலந்து கொண்டு வந்து தருவாள் ? ஆஹா ! என்ன ருசி தெரியுமா !

கிழவி : அப்படியா ! பலே பேர்வழியாய் இருக்கிறாயே ! ஆமாம் அவள் பெயர் என்ன ?

குரல் : அவள் பெயர் வள்ளி, பாட்டி. நான் பெரியவனானதும் அவளைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறேன். இந்த இரகசியம் யாருக்கும் தெரியக் கூடாது ஜாக்கிரதை! ஆமாம், இவ்வளவு நேரம் என்னைப் பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டு வந்தாய். உனக்கு பசி தாகம் ஒன்றும் இல்லையா ?

கிழவி : அதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. உன்னைக் கண்டதும் என் அகோரப்பசி பாதி தீர்ந்துவிட்டது. உன்னுடன் பேசிக்கொண்டிருந்ததில் அது போன இடமே தெரிய வில்லை ?

குரல் : போ பாட்டி! வயதாகிவிட்டதல்லவா ? உனக்குப் பசி முற்றிப் போய் மந்தித்து விட்டது போலும்! இந்தா, இந்தப் பழங்களையாவது சாப்பிடு. இந்த மரத்தில் நல்ல கனிந்த நாவல் பழங்கள் இருக்கின்றன. இங்கிருந்தவாறே மரத்தை உலுக்குகிறேன். கீழே உதிரும் பழங்களைப் பொறுக்கிச் சாப்பிடு.

கிழவி : அப்படியே ஆகட்டுமப்பா.

குரல் : அது சரி, உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா ? சுடாதப் பழம் வேண்டுமா ?

கிழவி : என்ன ஆச்சரியம்! மரத்திலிருந்து விழும் பழங்களில் சுட்ட பழம் வேறு, சுடாத பழம் வேறு ? நல்ல வேடிக்கையப்பா! எனக்குச் சுடாத பழமே கொடு போதும்.

[மரத்தை உலுக்குகிறான். பழங்கள் உதிர்கின்றன. கனிந்த பழங்கள் கீழே மண்ணில் உதிர்ந்ததும் அவைகளைப் பொறுக்கி அவைகளின் மேலுள்ள மண்ணை வாயால் ஊதுகிறாள் கிழவி.]

குரல் : ஏன் பாட்டி ? சுடாத பழம் வேண்டுமென்று கேட்டுவிட்டுச் சுட்ட பழங்களைப் பொறுக்கி ஊதுகிறாயே பழம் ரொம்ப சுடுகிறதா ?

கிழவி : என்ன ஆச்சரியம்! மூவேந்தர்களையும் எண்ணற்றக் கவிஞர்களையும் தலை குனியச் செய்த என்னை இந்தச் சிறுவன் வார்த்தைகளால் ஏமாற்றி விட்டானே! என்னையே தலை குனிய வைத்துவிட்டானே! ஏனப்பா உண்மையில் நீ யார் ?

குரல் : இன்னுமா தெரியவில்லை பாட்டீ! நீயே சொன்னாயே பால குமரன் என்று. இதோ நன்றாகப் பார்.

கிழவி : ஆஹா! முருகா! என்னே உன் பெருமை! என்னை தடுத்தாட்கொள்ள இச்சிறுவன் வேடம் பூண்டு வந்தாயோ! என் வாழ்க்கைப் பிரயாணத்தின் எல்லையை அடைந்தேவிட்டேன் என்னைவிட பாக்கியசாலி யார் ?

முருகா......முருகா......முருகா......

"JAYANT"
SELECT PROPER PACKAGING
FOR
GLASS INDUSTRIES

*First of its kind in India Pioneer Manufacturers of:*
EMBOSSED CORRUGATED PAPER IN SHEETS AND ROLLS, SPECIAL PACKAGING FOR GLASS INDUSTRIES

*Pioneer Manufacturers of*
CORRUGATED PAPER ROLLS AND BOARDS.

*Write for sample:*

JAYANT CORRUGATING INDUSTRIES,
30, WESTERN INDIA HOUSE,
SIR P. M. ROAD, FORT,
BOMBAY 1 BR.

Phone: Office: 253145 & 252478.
Factory: 68237 & 68238.

*With the best compliments*
*of*

AMARJOTHI MOVIES
15, G. N. CHETTY STREET,
MADRAS-17.



வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

கௌரவ செயலாளர்
திரு. ஏ. பி. சி. வீரபாகு பிள்ளை, எம். எல். ஏ.

★



கல்லூரி முதல்வர்
பேராசிரியர் அ. சீனிவாசராகவன்

நாணல் – புனைபெயர்



# கடிகாரம்

சிறிய பெரிய கையுண்டு
சின்னச் சின்ன எண்ணுண்டு
கையை முன்னால் சுற்றிடுவேன்
கணக்காய் என்னைக் காட்டிடுவேன்

வீடுகள் தோறும் இருந்திடுவேன்
வீதிகள் தோறும் நின்றிடுவேன்
கையில் பையில் தங்கிடுவேன்
கப்பல் காரில் சென்றிடுவேன்

பற்பல மக்கள் உலகினிலே
பயிலும் மொழியோ மிகப்பலவாம்
ஒன்றும் பொதுமொழி நான்சொல்வேன்
உலகுக் கெல்லாம் மணிசொல்வேன்

வாழ்வில் ஊக்கம் கற்பிப்பேன்
வதங்கித் தயங்கா திருவென்பேன்
முன்னே முன்னே செல்லென்பேன்
முடிந்த நாளை மறவென்பேன்

என்னைப் போல உழைப்போர்கள்
என்றும் நாட்டைக் காப்பார்கள்
நன்றாய் உலகில் இருப்பார்கள்
நானிலம் போற்ற வாழ்வார்கள்

— வண்ணமுத்து

PILOT PEN * PILOT PEN * PILOT PEN * PILOT PEN

With the
Best
Compliments of

THE PILOT PEN COMPANY (INDIA) PTE., LTD.,
"CATHOLIC CENTRE" ARMENIAN ST.,
POST BOX NO. 1394
MADRAS-1.

PILOT PEN * PILOT PEN * PILOT PEN * PILOT PEN

## A BOUQUET — EVER FRESH

Freshness in news and treatment alike, fragrance in pictures and stories meant for the family, make the Swadesamitran appeal perpetual and spontaneous. For the discriminating, it offers news and views culled to effect - a Bouquet that blends old and new. As the first and most reputable newspaper in Tamil, Swadesamitran continues to retain its vitality and power to please.

**THE SWADESAMITRAN, MADRAS**

# சைக்கிள் வண்டி

*

இரண்டு சக்கர வண்டி
இரும்பா லான வண்டி
மிதித்தே ஓட்டும் வண்டி
மிகவும் சின்ன வண்டி !

சந்தில் பொந்தில் செல்லும்
சாலை நெடுகச் செல்லும்
பகலும் இரவும் செல்லும்
பலரும் ஓட்டும் வண்டி !

குதிரை எருது துன்பம்
குறைக்க வந்த வண்டி
நிதமும் தீனி கேளா
நேர்த்தி யான வண்டி !

ஓட்டப் போட்டி ஓடும்
உலகம் சுற்ற உதவும்
நாட்டில் எங்கும் காணும்
நல்ல சைக்கிள் வண்டி.

— வண்ணமுத்து.

# சான்றோன் வ. உ. சி.

அகிலன்

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் 'சுடர்' வ. உ. சி. மலராக ஒளி விடுவதறிந்து மகிழ்ச்சியுறு கிறேன். தில்லித் தமிழ்ச் சங்கம் நமது கலாச்சாரப் பண் பாட்டு நிலையமாக இருந்து தலைநகரத்தில் இயங்கி வரு கிறது. ஊக்கத்துடனும் உற் சாகத்துடனும் அன்பர்கள் கூடிப் பணியாற்றுவதை நான் அண்மையில் நேரில் கண்டு பெருமையுற்றேன். தமிழ் மொழி பேசுவோர் பெருமை யுறக்கூடிய சங்கம்.

வ.உ.சி. யின் தியாக வாழ்வு நம் நாட்டிலுள்ள அனைவரும் போற்றிப் பின்பற்றக்கூடியது. அவர் அரசியலில் தியாகி; இலக்கியத்தில் சான்றோர்.

சான்றாண்மை மிக்க அந்த வீரரின் புகழ் தலை நகரத்தி லிருந்து பரப்பப்பட வேண்டி யதுதான். கன்னியாகுமரியி லிருந்து இமயம் வரையிலுள்ள எல்லா மக்களின் நலனுக்காக வும் அவர் போராடியவர். உழைப்பாளர்களின் தலைவர்; ஏழைகளின் நண்பர்.

தமது வருவாய் மிகுந்த தொழிலால், தமது செல்வாக் கால், திறமையால் அவர் பொருள் குவிக்க நினைத்திருந் தால் எவ்வளவோ குவித்திருக் கலாம். ஆனால் அவர் மக்க ளிடமுள்ள அன்பால் சிறைக் குச் சென்றார்; செக்கிழுத்தார்; உடல் நலிந்து உளம் நலிந்து உயிர் துறந்தார்.

நமக்குப் பொருள் வளம் மட்டிலும்இருந்தால்போதவே போதாது. மன வளமே நம் முடைய இன்ப வாழ்வின் அடிப்படை. நாட்டின் ஒவ் வொரு துறையிலும் மனவள முள்ள சான்றோர்கள் பெருக, வ. உ. சி. போன்றவர்களின் வாழ்க்கை வழிகாட்டக் கூடிய தாகும்.

நாடு நமது பெருந்தலைவர் நேரு அவர்களைப் பிரிந்து வாடும் இச்சமயத்தில், நமது பழம் தலைவர்களில் ஒருவரின் நினைவாக இம்மலர் கொண்டு வருவதை நான் வரவேற்று வாழ்த்துகிறேன்.

---

**புரட்சி வீரர்**

சிதம்பரம் பிள்ளையை நான் நன்கறிவேன். மாசு மரு வற்ற தேசபக்தர். கள்ளமற்ற நெஞ்சுடையார். அவரது வீரப் புரட்சியை இப்போது நினைத்தாலுங்கூட எனக்கு உணர்ச்சி மேலிடுகிறது. — சேலம் சி. விஜயராகவாச்சாரியார்.

With the best compliments of

# AMRUTANJAN LTD.

*Makers of*

AMRUTANJAN

**Pain Balm,**
**Anoleum,**
**Inhaler,**
**&**
**Gripe Mixture**

*With best compliments from*

# SHARDA MACHINERY CORPORATION

(*Head Office:* **NEW DELHI.**)

*Factory:*

**Trunk Road - Chromepet - Madras-44.**

*Makers of*

## PINE & EVEREST SEWING MACHINES

*THE BEST THAT YOU CAN BUY*

# WAGON BUILDERS TO INDIAN RAILWAYS

- GENERAL AND SPECIAL STRUCTURALS
- DESIGNS
- TANKS
- AIR VESSELS
- PRESSED AND WELDED WORK

*Wagon building in collaboration with*

**M/s. Metropolitan-Cammell Carriage & Wagon Co., Ltd.,**

BIRMINGHAM-8.

# SOUTHERN STRUCTURALS LIMITED

**GDC Building, Cathedral Road, MADRS-6.**

Factory: **Pattabhiram**, Southern Railway.

# எலியும் உலர்த்திற்ரும்!

தி. கோ. அனந்தசுவாமி

இவ்வாண்டு மலரில் சொல் ஓவியங்கள் எழுதி பொது ஜனக் கதிரவன் கண்ணில் பட அழைக்கப்பட்டவர்கள் பலர் இந்தச் சுடருக்கு ஒளி யூட்டியிருக்கிறார்கள். அவர் களில் பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டத்தினர் என்று நண்பர் ஐம்புநாதன் சொல்வது எனக்கும் தெரியும். நானும் எழுதுவதற்கு உரிமை உள்ளவன்தான். 1908 ஆம் வருடம் மார்ச் மாதம் 12 – 13 தேதிகளில் திருநெல்வேலிப் பாலத்துக்கு அண்மையிலிருக்கும் கைலாசபுரத்தில் இருந்தவன். தைப்பூச மண்டபத்தில் நடந்த கூட்டத்தைப் பார்த்தவன்; வந்தேமாதர கோஷத்தைக் கேட்டவன். கூட்டத்தின் விளைவாக நடந்த கலகத்தன்று பள்ளிக்கூடத்திலிருந்து உபாத்தியாயர்கள் சொன்னபடி நேரே வீட்டுக்குச் சென்றவன். என் நினைவிலிருக்கும் சில சம்பவங்களைப் பற்றித்தான் எழுத முடியும்; வ.உ.சி. யைப்பற்றி எழுத எனக்கு வயது போதாது.

கலகத்தன்று கல் வீச்சில் நிபுணர்கள் பலர் தங்கள் கைத்திறனைக் காட்டினார்கள். திருநெல்வேலிச் சாலையில் இருந்த விளக்குகள் பல உடைந்தன. அன்றிரவு பாதசாரிகளுக்கு மிகுந்த தொல்லை ஏற்பட்டது. இந்து காலேஜுக்கு தீதொன்றுமில்லை—அதனுடைய தலைவர் ஹெர்பெர்ட் சாம்பியன் தலை தப்ப ஓடினது எல்லோருக்கும் தெரிய வந்தது.

எங்கள் வீட்டில் நடந்ததை இன்று நினைத்தால் சிரிப்பு வருகிறது. அன்றோ பயத்தை உண்டாக்கியது. பதின்மூன்று வயதுப் பையனொருவன் கோவிலுக்குப் போய் தேங்காய் மூடிகளை மடியில் வைத்திருந்தான். அவன் மடியிலிருப்பது கல்லோ குண்டோ என்று நினைத்து போலீசார் அவனைச் சுட்டதாக வதந்தி. என் தகப்பனாரிடம் யாரோ ஒரு நண்பர் 'உங்களுடைய பையன் போல் இருந்தது' என்று சொன்னார் போலும். என்னுடைய நேர்மூத்த தமயன்

வயது 13. என் தகப்பனர் வழக்கறிஞர். அவர் கொக்கிரகுளம் கோர்ட்டிலிருந்து ஓடோடியும் வீட்டுக்கு வந்தார். என்னுடைய தமயன்கள் இருவரும் வீட்டிலில்லை. தகப்பனருக்கு கோபக்கனல் மூண்டது. என் தாயாருக்கும் என்ன நடக்குமோ என்று நடுக்கம். 13 வயது மகன் எப்படியாவது வீடு வந்து சேர வேண்டுமே—தகப்பனர் கோபத்துக்காளாகி அடி வாங்கக் கூடாதே என்று இறைவனை வேண்டினுள். என் தமயனும் வெகு நேரத்திற்குப் பிறகு வந்து சேர்ந்தான் – காயமுமில்லை, கட்டுமில்லை! ஆனுல் என் தகப்பனர் கேட்ட கேள்விகளுக்குச் சரியாக பதில் சொல்லவில்லை. சரி — 'இன்றைக்கு அண்ணுவுக்கு நல்ல பூசை கிடைக்கும்' என்று நான் நினைத்தேன். என் தகப்பனருக்கோ என் தமயன் கூட்டத்தில் போயிருப்பான் என்று சந்தேகம். அடிக்கவில்லை. அவனை வீட்டிலேயே இருக்க உத்திரவிட்டார். அதற்குக் காரணம் எங்கள் கிராமத்திலிருந்த என் தகப்பனருடைய ஆப்த நண்பர் ஒருவர் தற்செயலாய் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் என் தமயனையும் மற்றும் சிலரையும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வேளையில் கிராமத்திலேயே கண்டதாகச் சொன்னுர். என் தகப்பனர் கோபம் தணிந்தது. வழக்கறிஞர் அல்லவா? "அலிபி" (குற்றம் நடந்தவேளையில் குற்றவாளி வேறு ஒரு இடத்தில் இருந்தான் என்னும் வாதம்) ஏற்கத்தக்கதாயிருந்தால் கிரிமினல் கேசில் எதிரிக்கு விடுதலை கொடுக்க வேண்டாமா?

'அலிபி'யைப் பற்றிச் சொன்னதும் மற்ருெரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. திருநெல்வேலிக் கலக சம்பந்தமாக நடந்த கிரிமினல் கேசில் ஒரு எதிரி கே. ஜி. லோகநாதய்யர் என்ற பள்ளிக்கூட ஆசிரியர். என் தகப்பனர் கிரிமினல் கேசுகளில் எதிரிபக்கம் வழக்காடுவது உண்டு. ஆனுல் ராஜீய வழக்குகளில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. லோகநாதய்யருடைய பக்கம் சாட்சியாகவாவது வர வேண்டும் என்று அவருடைய உறவினர்கள் என் தகப்பனரைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் "லோகநாதன் கலகம் நடந்த வேளையில் என்னுடன் உணவருந்திக் கொண்டிருந்தான்" என்று சொல்ல வேண்டும் என்ருர்கள். என் தகப்பனர் உண்மையில் அந்தச் சமயத்தில் ஜில்லா கோர்ட்டில் வழக்காடிக் கொண்டிருந்தார். ஆகையால் "நான் சாட்சி

யாக வரமுடியாது'' என்று மறுத்து விட்டார். மறுப்பின் பயனுக அந்த நாள் பிரபல வக்கீல் திரு. கே. ஆர். குருஸ்வாமி அய்யர், தூத்துக்குடி. விசுவநாதய்யர் முதலியவர்களுடைய கோபத்துக்குப் பாத்திரமானுர். சில வருஷங்களுக்குப் பிறகு இன்னல்களையும் அனுபவித்தார்.

மற்றவர்கள் எல்லாம் யானைக்கொம்பன் (திருநெல்வேலி மாவட்டத்து சிறந்த நெல்) உலர்த்தியிருக்க இவர் எதற்காக எழுதியிருக்கிறுர்? என்று சிலர் சொல்லலாம். "எல்லோரும் நெல் உலர்த்த எலி வாலை உலர்த்திற்றும்" என்ற பழமொழியை நினைக்கலாம். நினைக்கட்டுமே — வாலுக்குள்ள இடத்தில் தானே கட்டுரைக்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்?

★

# மழை

மழையே மழையே வா வா வா
மாநிலம் செழிக்க வா வா வா
உழவர் உழைத்துப் பயிர்செய்ய
உலகோர் உணவை உண்டுய்ய!

மலர்கள் மலர்ந்து மணங்கமழ
மங்கையர் சூடித் தினம்மகிழ
மலையும் காடும் அடர்ந்தோங்க
மடுவும் ஆறும் நீர்பொங்க!

மாரி! பசியை ஒழித்திடுவாய்
மாடு பசுவை வளர்த்திடுவாய்
காரின் உருவம் நீபோக்கிக்
கடுகி வாராய் தரைநோக்கி!

— வண்ணமுத்து.

# ENGINEERING EDUCATION

## FOR EMPLOYED & UNEMPLOYED

### MATRICS - INTERMEDIATES - GRADUATES

**You can improve your prospects after passing one of the following courses. Join local classes or study through Postal Training. Practical facilities available. Evening classes for employed. Hostel available.**

COURSES OF STUDY

**A.M.I.E. (India):** Recognised by Govt. of India and Union Public Service Commission for Employment purposes equal to B. E. Degree in Civil/Mechanical /Electrical/Chemical/Mining/Tele comm. Engineering (Duration for Matrics four years and for I Sc. or B.Sc., or Engg. Diploma Holders—three years) Apprenticeship arranged.

**A.M.Ae.S.I.:** Associate Membership Aeronautical Society of India. Recognised by Govt. of India for recruitment to superior posts and services in Aeronautical Engg (Gazetted Posts such as commission in Indian Air Force). Starting Salary Rs. 350 to 450 with future prospects. Duration for Matrics/Intermediates/Graduates in Arts or Commerce 3 years. For I.Sc., B.Sc., two years.

**Govt. Diploma in Architecture:** of Maharashtra Govt. (iSr J. J. School of Arts Bombay). Candidates passing this course can get starting salary of Rs. 350/- per month. Most suitable for Matrics/Intermediates/Graduates with any subject or Division. Employment assured. Employed or Unemployed Boys or Girls of any age can get admission without any restriction. Please remember there will be no admission in this course from next year onwards unless extended further by Examining authority.

LCE, LME, LEE. Govt. Diplomas in Civil, Mechanical, Electrical Engg.

**City & Guilds Electrical Engg. Course:** Recognised by Govt. of India, Duration Two Years for Matrics with any subjects or Division. One Year to F.Sc. & B.Sc or Matrics working in Electrical Departments or workshops.

**Govt. Electrical Supervisor Examinations** (Duration Six months).

**Diploma Courses:** In Civil/Mechanical/Electrical/Automobile/ Radio/Structural Engg./Refrigeration Servicing/Overseer Civil/ Mechanical/Electrical, Draughtsman (Civil/Mechanical) Covering City and Guilds (London) or Andhra/Kerala Govt. Tech. Exams. Syllabus.

**Technicians Courses:** (Duration **Six Months each**) 5th & 6th Class pass or undermatrics can get admission in Motor Mechanic. Radio Mechanic, Turner, Fitter. Diesel Engine Mechanic Electrician Courses.

**Short Term Courses:** (Duration 4 to 12 Weeks) Transistor Pocket Radio Mechanic. Tracer, Welder, Wireman, Armature Winder, Driver, (for Truck, Bus, Car, Autorickshaw). Telephone Operator, Telegraphist.

For further details please study prospectus which can be had from Head Office on cash payment or by sending Re. 1-50 nP. (Rupee one and fifty nP. only) Postal Order or Money Order to :—

## Principal ASIA ENGINEERING INSTITUTE

**Head Office: Asia House, 21, Daryaganj, DELHI-6.**

Established 1957 — Telephone: 274563

WE MAY DIFFER...
BUT THE FACT IS
RACMANN
DEPENDABLE
Springs
have all the qualities we possess— strength, sturdiness, durability and dependability!
RACMANN
Manufacturers:
RACMANN KOSHATKINN REGD.
53, INDUSTRIAL AREA, NAJAFGARH ROAD,
NEW DELHI.-15
RK-NP-38

# நன்றி...

நமது 'சுடர்' 13-வது மலர், வ. உ. சி. மலராக வெளிவருகிறது. அதற்கேற்ப 'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சி. அவர்களைப் பற்றிப் பல பெருமக்கள் வழங்கிய கருத்தோவியங்கள் மலரில் அடங்கியுள்ளன. வேறு பல கட்டுரை, கதை, கவிதைகளும் மலருக்குச் சிறப்பைத் தருகின்றன.

மலருக்கு வேண்டிய எழுத்தோவியங்களும், விளம்பரங்களும் சேகரிப்பதில் துணை நின்றவர்கள் பலர். அவர்களில் திருவாளர்கள் ஆர். வேங்கடேசன், பாலன், சேது கிருஷ்ணமூர்த்தி, குருசாமி, ஆர். எஸ். வெங்கடேசன், வி. பார்த்தசாரதி, மணியன் ஆகியோரின் பணி குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தினரும், வாணிகத்துறைப் பெருமக்களும் வழக்கம்போல் விளம்பரங்கள் தந்து உதவியுள்ளார்கள்.

திரு. தி. கோ. அனந்தசுவாமி அவர்களும், திரு. கே. எஸ். ஜம்புநாதன் அவர்களும் சுடருக்கான வேலைகளைச் சென்னையில் உற்சாகமாகக் கவனித்து வந்தார்கள்.

திரு. வ. உ. சி. சுப்பிரமணியன் அரிய புகைப்படமும் கடிதங்களும் தந்துதவினர்.

வழக்கம்போல் சுடரை அழகாக அச்சிட்டு உதவியவர் இமயப் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள்.

தில்லித் தமிழ்ச் சங்கப் பணிகளில் முக்கியமான ஒன்றாகிய இச்சுடர் வெளியீட்டில் துணை நின்ற மேற்கண்ட அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்; உளங்கனிந்த நன்றி.

— தில்லித் தமிழ்ச் சங்கச் செயற்குழு.

சென்னை-600090.

வரவேற்பு அறையின்
எழில்மிக்க தோற்றம்

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணிகள்

ஆடைக்கும், அலங்காரத்திற்கும்

எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.

34/1-A, பாந்தியன் சாலை, எழும்பூர் சென்னை-8.




# GEMINI PICTURES CIRCUIT

PRIVATE LTD

## FAMOUS FOR EFFICIENT DISTRIBUTION OF MOTION PICTURES

**151, MOUNT ROAD MADRAS-2**

*REGIONAL OFFICES AT*

BOMBAY · CALCUTTA · NEW DELHI · JAIPUR
BHUSAVAL · SECUNDERABAD · BANGALORE · MADURA
& ERNAKULAM


WRAPPER PRINTED AT GNANODAYA PRESS, MADRAS-1